# ஆழ்வார்களை ஆராதிப்போம்

(பன்னிரு ஆழ்வார்களின் திவ்ய சரிதம்)



இந்திரா சௌந்தர்ராஜன்

# ஆழ்வார்களை
# ஆராதிப்போம்

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்
எண். 13, சிவப்பிரகாசம் தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : *91-44-24341559*
email:- enquiry@thirumagalnilayam.com
website:- www.thirumagalnilayam.com

முதற் பதிப்பு : ஏப்ரல், 2013
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 2014

உரிமை : ஆசிரியருக்கு ©

**திருமகள் நிலையம் வெளியீடு**

| | | |
|---|---|---|
| TITLE | : | AZHVARGALAI ARATHIPPOM |
| AUTHOR | : | INDIRA SOUNDARRAJAN |
| SECOND EDITION | : | DECEMBER, 2014 |
| PAPER | : | 18.6 N.S. BOOK PRINT |
| TOTAL PAGES | : | IV + 204 = 208 |

Available at:
**THIRUMAGAL NILAYAM**
Sucons Appartments,
First Floor, No.13, Sivaprakasam Street,
T.nagar, Chennai - 600 017.
Phone : 044 - 24342899, 24327696
Fax : 91 - 44 - 24341559
E-mail : enquiry@thirumagalnilayam.com
website : www.thirumagalnilayam.com

**விலை ரூ.135/-**

**திருமகள் நிலையம்**
"சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்"
முதல் மாடி எண்.13, சிவப்பிரகாசம் தெரு,
தி.நகர், சென்னை–600 017.
தொலைபேசி எண் : 2434 2899, 24327696
பேக்ஸ் எண் : 91–44–24341559

Typesetting : **AMARAVATHI GRAPHICS,**
Chennai -83, Cell : 9444169725
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5. ☎ 28446891

# மதிப்புரை

R. முரளீதர பட்டர்
அர்ச்சகர்
திருவரங்கம் பெரியகோயில்

14, வடக்குத் சித்திரை வீதி
திருவரங்கம் 620 006
திருச்சி மாவட்டம்

திருவருள் கூடி நிற்க, எழுத்தினால் இறைசுவையூட்டிய திரு. இந்திரா சௌந்தர்ராஜன் அவர்களின் 'ஆழ்வார்களை ஆராதிப்போம்' எனும் இந்நூல் வைணவத்திற்கு இடப் பட்டுள்ள ஒரு இரத்தின சூரணம்.

இந்நூலில் இதன் ஆசிரியர் ''ஆழ்வார்கள்'' என்னும் ஆழ்கடலில் கடுமையாக மூழ்கி, சிறந்த சிரத்தைக் கொண்டு நன்முத்துக்களுக்கு ஒப்பான மிகச் சிறந்த செய்திகளை நமக்கு ஈந்திருக்கின்றார். பல சூக்குமங்களைத் தெளிவுறச் சொல் கின்றார். பலவிடங்களில் தம் அபாரமான ஜோதிட ஞானத் தினைக் கொண்டு ஆராய்ந்து அரிய பல செய்திகளைக் கூறுகின்றார்.

ஆரம்பத்தில் மதங்களைப் பற்றிக்கூறி, படிப்படியாக நம்மை ஆழ்வார்களிடத்தில் கொண்டு சேர்க்கின்றார். கொண்டு சேர்த்தவிதம் மிகவும் தர்க்கரீதியானது (Logical). பல குழப் பங்களுக்கு, மிகத் தெளிவோடு விடை கொடுத்திருக்கின்றார்.

உதாரணத்திற்கு, மதுரகவியாழ்வார் பற்றிக் கூறுகையில், அவர் நம்மாழ்வாரின் யோக நிலையினை, ஒரு சிறு கல் எறிந்து கலைத்ததாக, பல வைணவப் பெரியார்கள் கூறும்போது, என் மனம் வருந்தும். எந்த ஒரு சான்றோரும் இம்மாதிரி செய்வார்களா...? என்று நினைப்பேன். இவரது சிந்தையிலும் இந்த தாக்கம் தெரிகின்றது...! ''தன் கைவசம் இருந்த திருத்துழாயை சடகோபரையே அந்த நாரயணனாகக் கருதி அர்ச்சிப்பது போல மேலே தூவவும் சடகோபரின் விழிகளும்

*திறக்கின்றன...!'' என்ற வரிகள் இவரது சீரிய சிந்தனையினைத் தெளிவுப்படுத்துகின்றன. என்னை பூரிக்கச் செய்தன...!*

*ஒரு எழுத்தாளருக்கு, உள்ளத்தில் கதையின் கரு தெளிவானால், எழுத்து எனும் ஜனனம் மிகவும் சுகமே...! அந்த விதத்தில் இவரது படைப்புகள் அனைத்தும் குளிர்ந்த தெள்ளிய நீரோடைகள்...! 'ஆழ்வார்களை ஆராதிப்போம்' என்னும்- இந்நூல் என் கையில் கிடைத்த சில நாட்களுக்குள் பலமுறை படித்து விட்டேன். அலுக்கவேயில்லை. அலுப்புத் தராத எழுத்துக்கள் ஜீவிதமானவை. உயிரோட்டம் உள்ளவை...! ஆன்மீக உணர்வினை அள்ளி வந்துள்ள இந்நூல் ஒரு புனிதமான ஜீவிதம்...! ஆங்காங்கு இந்நூலில் காணப் பெறும் ஸ்ரீவைகுந்தன் - மஹாலெட்க்ஷ்மீ சம்பாஷணைகள் இந்நூலாசிரியரின் உள்ளம் புகுந்து அவன் நடத்திக்காட்டிய நாடகம்...! இவர் தர்க்கரீதியாக நிறைய சிந்தித்து இருக்கின்றார்...! நிறைய கேட்டும், படித்தும், தமக்குத்தாமே கேள்விகள் எழுப்பி, தாம் தெளிந்தபின்பு நமக்குத் தெரிவித் திருக்கின்றார்...! இதில் எழுத்துக்கள் எல்லாம் சித்து புரிகின்றன...! நம் சிந்தைகளை உலுக்கி சிலிர்க்க வைக்கின்றன...!*

*மொத்தத்தில்...!*

***எழுத்து வடிவில் ஆழ்வார்களை மீண்டும் நடமாட வைத்து, எப்படித்தான் எழுதினாரோ...! பாராட்டுக்கள்...***

*மிக்கத் தோழமையுடன்,*
**R. முரளீதர பட்டர்**

*திருவரங்கம்*
*01.03.2013*

# என்னுரை

ஒரு எழுத்தாளராய், பின்னர் காலத்தால் நூற்றுக்கும் மேலான நாவல்களைப் படைத்த நாவலாசிரியனாய் வளர்ச்சி கண்ட என்னை நான் எனும் செருக்கறுத்து 'அடியேன்' என்றாக்கிய பெருமைக்குரியது இந்த ஆழ்வார்களை ஆராதிப் போம் என்னும் நூல்.

தீவிர வைணவ குலத்தில் வந்த என்னுள் சற்று தாமத மாகவே ஆழ்வர் பெருமக்கள் என் மனதை ஆட்கொண்டனர். வளர்ந்த சூழலும் பணியின் போக்கும் அதற்கு காரணங்களாகி விட்டன.

ஒரு வாசிப்பாளன் என்னும் முறையில் பரந்த பார்வையோடு நான் நாயன்மார்கள் குறித்தும், அருணகிரி நாதர் முதல் அவ்வை வரை வாசித்து அனுபவித்தவன். யோசித்தும் பேசியவன்.

இவ்வரிசையில் ஆழ்வர் பெருமக்களின் பக்திப் பிரயாசையும், அவர்களின் பாடும் என் நெஞ்சை நெகிழ்த்தியது. இப்பன்னிருவருக்குள் நான் பெரிதும் தோய்ந் திட எனக்கான வைணவ வழித் தோற்றமும் ஒரு பெரும் காரணமாயிற்று! ஞான ஆலயம் என்னும் இதழில் ஒரு தொடராய் இப்பன்னிருவரை நான் விரிவாய் எழுதிட வாய்ப் பும் கிட்டியது. இது அந்த நாரணன் பேரருளே!

இப்பன்னிருவர் பாட்டையும் ஒரு எழுத்தாளனுக்குள்ள கதை சொல்லும் உத்திகளோடு மட்டுமின்றி யதார்த்த முரண்பாடுகள் இல்லாத படிக்கும் எழுதப் பெரிதும் பாடுபட்டேன். அதே சமயம் காலத்தால் அழியாப் புகழும் வாழ்வும் பெற்ற அவர்களின் வாழ்வு குறித்து தப்பித் தவறியும் ஒரு தவறு நிகழ்ந்து விடக் கூடாது என்றும் முனைந்தேன்.

இத்தொடரை நூலாக்கும் இவ்வேளையில் இதன் மதிப்புரைக்காக நான் நான் பல வைணவப் பெருமக்களை சிந்தித்தேன். அவ்வேளையில் திருவரங்கத்து அரங்கன் குறித்து சக்திவிகடனில் செம்மையாய் எழுதிய எனது நண்பரும் அன்பருமான திரு முரளீதர பட்டர் அவர்கள் எனக்குள் மிக

உற்றவராய் தோன்றினார். இதன் பின்னே பெரும் காரணமும் உள்ளது. பன்னிருவரும் பெரிதும் போற்றித் துதித்த அந்த நாரணணினின் திவ்ய தேசத் திருக் கோயிலுள் திருவரங்கமே முதல் பெரிய கோவிலாய் ஆழ்வார் பெருமக்கள் ஆழ்ந்து துதி செய்த கோவிலாய் உள்ளது. அந்தச் சந்நிதியுள் அரங்கனைத் தொட்டுச் சேவை செய்யும் பெரும் பாக்யமுடைய ஒருவரான முரளீதர பட்டர் இந்நூலின் மதிப்புரைக்கு மிக பொருத்தமானவர் என்று என் மனது எண்ணியது. திரு முரளீதர பட்டரும் இதற்கான மதிப்புரையை அன்புடன் வழங்கிய தோடு நூலின் செம்மைக்கு சில ஆலோசனைகளையும், திருத்தங்களையும் மிகப்பணிவான முறையில் கூறினார். அதேபோல் பெரும் வைணவப் பற்றுடையவரும் ஆழ்ந்த நேயமுடையவருமான திரு. R.V. ஸ்வாமி என்னும் அன்பர் இந்நூலின் கண் என்னையும் அறியாது வெளிப்பட்டிருந்த சொற்பிழைகளையும் சில கருத்துபிழைகளையும் பெரும் பிரயாசையுடன் எனக்குத் தெரிவித்து இந்த நூலானது ஸ்ரீவைஷ்ணவத்துக்கு ஒரு அணியாய்த் திகழ்ந்திட உதவினார்.

குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் எனும் பெயர் குறித்த வில்லாளன் கதை ஒரு கற்பனை என்பதையும் மோட்சகதிக்கு ஒரே வழி வைணவம் மட்டுமே என்பதையும் அவர் மிக அழுத்தமாக கூறியது அவரது தீவிரப் பற்றுதலை எனக்கு உணர்த்தியது.

என்னை எழுதப் பணித்த எம்பெருமானே இவர்கள் மூலமாய் செம்மைப்படுத்தவும் உதவினான் என்று கருதுகிறேன். இதனையும் மீறி எங்காவது பிழையிருப்பின் அடியேனைப் பொருத்தருள வேண்டுகிறேன்.

ஞான ஆலயம் ஆசிரியர் திருமதி மஞ்சுளா ரமேஷ் அவர்களுக்கும், மதிப்புரை நல்கிய திரு முரளீதர பட்டர் அவர்களுக்கும், திருத்தங்கள் காண உதவிய திரு. R.V. ஸ்வாமி அவர்களுக்கும் என் பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

*10.3.2013* பணிவன்புடன்
*மதுரை - 3* இந்திரா சௌந்தர்ராஜன்

# ஆழ்வார்களை ஆராதிப்போம்

## 1

இந்துக்களாகிய நமக்கு, அதிலும் பரத கண்டத்தில் பிறப்பெடுக்கக் கொடுத்து வைத்திருக்கும் நமக்கு குறிப்பாக கூரிய தென்பாகத்தில் பிறந்து வளர்ந்திருக்கும் பாக்யம் பெற்ற நமக்கு மோட்ச கதியை எட்டிப் பிடிப்பதற்கு ஆறு வழிகள் உள்ளன என்பது ஆதிசங்கரர் கூற்று. ஆனால் வைணவம் ஒன்றே முக்திக்கு வழி - என்பதே ஆழ்வார்களின் உறுதியான கருத்தாகும்.

ஒரு ஊருக்குப் பல வழிகள்... அந்த பல வழிகளும் அந்த ஊரின் மையத்தில் முடிவது போல இந்த ஆறு வழிகளுமேகூட நம்மை இறைவனிடம் கொண்டு சேர்ப்பித்து விடுகின்றன என்போரும் உண்டு.

'வைணவம், சைவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரம்' எனும் அந்த ஆறு வழிகளில் மூன்று வழி முறைகளே இன்று பிரதானமாக திகழ்கின்றன. அதிலும்கூட இரு வழிகளில் செல்வோரே அதிகம்.

அவை வைணவம், சைவம் ஆகும்!

எந்த வழியில் நாம் செல்வது என்று யோசிக்க வேண்டிய வேலையே நமக்கு இல்லை. நாம் எந்தக் குடியில் எவர் வயிற்றில் இந்த மானுட ஜென்மம் கண்டோமோ அந்தக் குடி வழியே நம் வழியாகும். எனவே எதில் செல்வது என்கின்ற குழப்பமெல்லாம் நம்மில் எவருக்கும் இருக்க வாய்ப்பு இல்லை.

நம் குலதெய்வம் எதுவாயினும் அதுவே நம் முதல் தெய்வம். நம் முன்னோர்களின் வழியே நமது வழி... அதில் அவர்கள் வகுத்துத் தந்த விதிமுறைகளை ஈடுபாட்டோடு பின்பற்றி இந்தப் பிறப்பை கடந்தாக வேண்டியதே நமது கடமையாகும்.

இதனூடே நம் வழி நீங்கலாக உள்ள மற்ற ஐந்து வழிகளின் சிறப்பையும் தன்மையையும் அறிந்து வைத்துக் கொள்வதும் நம் மனதை விசாலமாக்கும். அது நம் சான்றோர் களின் மீது மதிப்பையும் மரியாதையையும் அதிகரிக்க வைக்கும். இறுதியில் முற்றான உண்மை தெளிய இந்த அறிதல் பெருமளவில் கை கொடுக்கும்.

ஒரு படி மேலே சென்று மற்ற மதங்கள் பற்றியும்கூட அறிந்து கொள்ள முயலலாம். தவறேயில்லை. எல்லாமே நம்மை கூர்மைப்படுத்தும். இதனால் குழப்பம் நேராதா என்று ஒரு கேள்வி எழலாம். சிலர் வரையில் குழப்பமும் நேரிட்டிருக் கலாம். ஆனாலும் அது நல்லதொரு தெளிவில்தான் முடிவடையும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன் வரை விஞ்ஞானம் என்பது பெரிதாக வளர்ந்திராத நிலையில் மின்சாரமும் கண்டறியப் பட்டிராத ஒரு காலத்தில் மனித சமுதாயம் இருந்ததற்கும், இன்று மனித சமுதாயம் இருக்கும் விதத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது.

அன்றும் இன்றும் மாறாததாக உள்ளவை பஞ்ச பூதங்களின் வினைப்பாடுகளும், மனித உறவு முறைகளும் மட்டும்தான்... மற்றபடி எல்லாமே மாறி விட்டது. இனியும் மாறும்! அதுதான் இயற்கை விதி. இந்த மாற்றங்களில பிரதானமாய் ஒரு மாற்றம் ஏற்பட்டதை கூர்ந்து கவனித்தால் உணரலாம். தனி மனிதர்களின் சர்வாதிகாரம் என்பது கிட்டத்தட்ட ஒழிக்கப்பட்டு விட்டது. இன்று சிலரிடம் அது இருக்கலாம். ஆனால் அவர்கள்கூட அதை நேரிடையாகவும் வெளிப்படையாகவும் காட்டி செயல்பட முடியாது.

வீட்டுக்குள் நம் குடும்பத்துக்குள் மட்டும்தான் நாம் நம் விருப்பு வெறுப்புகளை விருப்பம்போல காட்டிட முடிகிறது.

வாசல் தாண்டி விட்டால் ஊரை உத்தேசித்து நம்மை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நம் தனி ஒருவருக்காக ஒரு நாடார் மளிகைக் கடை வைக்கவில்லை. நம் தனி ஒருவருக்காக காய்கறி மார்க்கெட் இயங்கவில்லை. அகண்ட சாலைகள், அதில் ஓடும் வாகனங் கள், கடைகண்ணிகள், பொழுதுபோக்கு அம்சங்கள் எல்லாமே ஒரு குறிப்பிட்ட குடும்பம், குறிப்பிட்ட சாதி, குறிப்பிட்ட மதத்தவர்க்கு மட்டுமே என்கிற நிலைக்கு வெளியேதான் உள்ளது.

இதை ஒட்டு மொத்தமாக்கி சமுதாயம் என்று கூறுகிறோம். ஆம்... இன்று எல்லாமே எல்லாருக்குமே சொந்தம்!

மதமாச்சரியம் கொண்டாலோ, சாதிக்குள் ஒடுங்க எண்ணினாலோ நம்மால் இயங்க முடியாது. நூறு ஆண்டு களுக்கு முன்னால் அப்படி ஒரு நிலை கிடையாது. ஒருவித வர்ணாஸ்ரம முறை அப்போது இருந்தது. 'நான் பெரியவன் - நீ சிறியவன் - உன்னை தீண்டக் கூடாது. நீ அங்கே நடக்கக் கூடாது. இங்கே நிற்கக் கூடாது' - போன்ற தனிமனித வக்ரங்களுக்கு அப்போது மிகவே சக்தியும் இருந்தது. வக்ரம் கொண்டவர்கள் அதை தங்கள் பேரதிர்ஷ்டம் என்று மூடத்தனமாய் எண்ணிக் கொண்டனர். அது இல்லாதவர்கள் தாழ்வு மனப்பான்மையோடு தத்தளித்தார்கள். இதனால் குழுக்களாய் பிரிந்து தங்கள் சார்புடையவர்களோடு கலந்து செயல்பட்டு ஆறுதல் தேடிக் கொண்டனர்.

அதனால்தான் சமயங்களில் கூட காட்டுச் சமயம், நாட்டுச் சமயம் என்று இரண்டு உருவானது. நாட்டுச் சமயம் ஆசார பூர்வமாக ஆகம சாஸ்திரம் அதற்கான விதிகளை உருவாக்கிக் கொண்டு மனிதர்களிடையே பலவித தரப்பாடு களை உருவாக்கியது. அதில் பலமான பொருள் உள்ளவை மட்டுமே இன்றுவரை தப்பிப் பிழைத்து வருகிறது. மற்றவை சுவற்றுச் சுண்ணாம்பு போல காலத்தால் பழுப்பேறி போய் உதிர்ந்து உருத் தெரியாமல் போய் விட்டது. உதாரணத்திற்கு இன்று ஆலயக் கருவறைகளில் பிராம்மணர்கள் மட்டுமே நுழைந்து ஆகமப்படி பூஜை செய்ய முடியும் என்பதைக் கூறலாம்.

இன்று வரை ஆகமம் மாறவில்லை. ஆனால் மற்ற சாதியினரும் கருவறைக்குள் நுழைந்து பூஜிக்கலாம் என்று அரசாங்கம் சட்டம் போட்டு விட்டது. அன்று கட்டுக் குடுமியோடு கச்சம் உடுத்தி, ஒரு நாளைக்கு மூன்று முறை குளித்து மூன்று முறை சந்தியா வந்தனம் செய்து, பலகையை தலைக்கு வைத்து ஓலைப்பாய் மேல் படுத்து ஆலயப் பணி செய்தவர்கள் கூட இன்று மாறிப் போய்விட்டனர். பல ஆலயங்களில் பிராம்மண குருக்களே கிராப் தலையோடுதான் காட்சி தருகின்றனர். மொபட்டில் பயணிக்கின்றனர். கோயில் பணியோடு வேறு சில தொழில் முயற்சிகளில் கூட ஈடுபடுகின்றனர்.

காட்டுச் சமயமும் கடா வெட்டும், சாராய நிவேதனம், உறுமி மேளம், சாமியாட்டம் என்று தனக்கான இலக்கணங் களோடு திகழ்ந்து வந்தது. அதிலும் கூட இன்று பெரிய அளவில் மாற்றங்கள். இந்த சமயத்தை பின்பற்றுபவர்கள் கல்வி கேள்விகளில் மேலே செல்லச் செல்ல அவர்கள் சிந்தனையும் விரிவடைந்து, 'கடவுளை இப்படி மென்மை யற்ற முறைகளில் அணுகத் தேவையில்லை. இந்த முறைகளை அவர்கூட விரும்ப மாட்டார்' என்று பேசத் தொடங்கி விட்டனர்.

மொத்தத்தில் மனித இனம் எண்ணிக்கையில் கோடி கோடியாக அதிகரிக்கும் போது மனித சக்தி அதிகரித்து அது உடலுழைப்பு, அறிவுழைப்பு என்று இரண்டு கூறாக பிரிந்து சமுதாயத்தையே மாற்றிக் கொண்டு வருகிறது.

இஸ்லாமிய தேசத்து பெட்ரோலெடுத்து கிறித்தவ தேசத்து விஞ்ஞான முயற்சிகளோடு கலந்து நம்மவர்களின் உழைப்பாலேதான் இன்று நாடே இயங்கி வருகிறது.

நாம் உண்ணும் ஒரு கவளச் சோற்றுக்குள் ஐன்ஸ்டீனில் இருந்து ஐய்யாசாமி வரை ஒளிந்துள்ளனர். அரிசியோ பருப்போ விளைவது ஒரு இடத்தில், அதை வைப்பது ஒரு இடத்தில், விற்பது ஒரு இடத்தில்... இந்த இடங்களுக்குள் எல்லா சாதியினரின் உழைப்பும், எல்லா மதத்தவரின் கலப்பும் இருக்கிறது.

இதை இத்தனை தூரம் கூறிடக் காரணம் இருக்கிறது. ஆன்மிகத்தில் பக்தியில் நாட்டமுள்ள சிலரிடம் 'தங்கள் வழிமுறையே தலை சிறந்தது - தங்கள் தெய்வமே மேலான தெய்வம்' என்னும் எண்ணம் இன்றும் காணப்படுகிறது. அவர்கள் நூற்றாண்டுகளுக்கு முன்பு நிலவிய மனப் பான்மையை அப்படியே தொடர்கிறவர்களாக உள்ளனர்.

இப்படி ஒரு சமுதாயத்தில் எல்லோருடைய அறிவு மற்றும் உழைப்பால் உருவான நலன்களுக்கு நடுவில் வாழ்ந்து கொண்டு தனது ஆன்மிக வழி மட்டுமே சிறந்தது என்று கருதுவது சரியல்ல.

'பொதுவில் ஆன்மிக வழி சிறந்தது - அதில் என் வழி என் வரையில் சிறந்தது' என்பதே உயர்ந்த நிலைப்பாடாகும். அவரவர் வழியில் அயர்வின்றி செல்ல வேண்டும். அதே சமயம் மாற்றார் வழியை துளியும் குறை கூறக் கூடாது.

காஞ்சிப் பெரியவர் வாழ்வில் ஒரு சம்பவம் -

ஒரு வெள்ளைக்கார கிறித்தவர் பெரியவர் முன்னிலை யில் இந்து மதத்திற்கு மாற முன்வந்தார். அதற்காக காத்திருந்தபோது இந்துவான ஒருவர் வேறு மதத்திற்கு செல்ல விரும்பி அந்தக் கருத்தைப் பெரியவரிடம் கூறி விடை பெற வந்திருந்தார். பெரியவர் வெள்ளைக்காரரின் மனத் தடுமாற்றத்தை புரிந்து கொண்டு,

''உள்ளங்கைக்குள் இருப்பதையே உணராத நீ தொலைவில் இருப்பதைத்தானா உணரப் போகிறாய்? இது ஒரு அசூயை... மேரியோ, மாரியோ நாம் உறுதியாக பற்றிக் கொள்வதிலும் உண்மையாக ஈடுபாடு காட்டுவதிலும்தான் எல்லாமே உள்ளது.

உடம்புக்கு, உண்ணும் பொருட்களால் சக்தி கிட்டுகிறது. மனதுக்கு பற்றிக் கொள்வதால்தான் சக்தி. எனவேதான் சக்தி இங்கே பக்தி என மாறி விட்டது'' என்று பக்திக்கும் பாதைக்கும் பொருள் கூறி, ''அவரவர் பாதையை அவரவர் பிறப்பே தீர்மானித்து விட்ட நிலையில் தடுமாற்றமும் பெரிது சிறிது குழப்பங்களும் எதற்கு?'' என்று கேட்டாராம்.

இதனால் மதம் மாற வந்த அந்த இந்துவும் எதுவும் பேசாமல் மனம் மாறி திரும்பிச் சென்றாராம். பக்தி குறித்தும் வழிப்பாதைகள் குறித்தும் சிந்திக்கும் போது இப்படி பல எண்ணங்கள் நமக்குள் எழும்புகின்றன. முற்றான தெளிவு கொண்டவர்களே ஆழ்வார்களாய், நாயன்மார்களாய் காலத்தை வென்று இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை நாம் பிழையின்றி அறிந்து கொள்வது அவசியமல்லவா?

ஆழ்வார்கள் என்ற சொல்லுக்கு பலவிதமாய் பொருள் கொள்ளலாம். தங்கள் பக்தித் திறத்தால் இறைவனை ஆண்டவர்கள் என்பதே மருவி ஆள்வர், ஆழ்வார் என்றானதாக சிலர் கூறுவர். தொல்காப்பியம் கூறும் இலக்கணத்தோடு இந்த சொற்களிடம் வந்தால் அதை இவ்வாறு மாற்ற இடமில்லை என்றாகிறது.

இன்னொரு சாரரோ சதா அந்த மாலவன் நினைப்பிலேயே ஆழ்ந்து போனவர்கள் - எனவே ஆழ்ந்தவரே ஆழ்வார் ஆயினர் எனும்போது அதன் விளக்கம் பொருத்தமாகப் படுகிறது.

ஆழ்வார் எனும் பெயரே நம்மை பலவாறு ஆழ்ந்து சிந்திக்கச் செய்வதை என்னென்பது?

இப்படி மாலவன் பக்தியில் ஆழ்ந்தவர்கள் கோடி கோடி பேர் இவ்வுலகில் இருப்பினும் இக்கோடியினரில் ஒரு 12 பேர் ஏதோ ஒரு வகையில் விஞ்சிச் சென்றுள்ளனர். அதனாலேயே வரலாறும் அவர்களை அழுத்தமாக பதிவு செய்து கொண்டு விட்டது.

இவர்கள் பக்தியால் விளைந்ததுதான் வைணவப் பெருஞ்செல்வமான 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்!'

நற்றமிழ் மணக்கும் நலமான பாடல்களில் ஒரு பெரும் திரட்டு அது. அதோடு தொடர்புடைய பன்னிருவரில் முதல் மூலவர்களான 'பொய்கையார், பூதத்தார், பேயார்' எனும் மூன்று ஆழ்வார் பெருமக்களைப் பற்றி முதலில் சந்திப்போம்...

**'வையம் தகழியாக வார்கடலே நெய்யாக**
**வெய்யக் கதிரோன் விளக்காக - செய்ய**

சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே’

*- என்று பொய்கையாழ்வார் பாடிய பாடலுக்கு நம்முடைய வாழ்வில் தோன்றும் இடர்களை நீக்கும் சக்தியும் உண்டு.*

‘அன்பே தகழியாக ஆர்வமே நெய்யாக
இன்புரு சிந்தை இடுதிரியா - நன்புகழ்சேர்
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்’

*- எனும் பூதத்தாழ்வார் பாடலுக்கு நம் வாழ்வில் தோன்றும் மனத் துயரத்தை நீக்கும் சக்தி உண்டு.*

‘திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கினறும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று’

*- என்னும் பேயாழ்வாரின் பாடலோ நமக்கு எல்லாவித முற்றான வெற்றிகளையும் அளித்திடும்...*

*எப்படி? எதனால்?*

## 2

*பன்னிரு ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் மூவரின் திருவந்தாதிப் பாடல்களில் மூன்று பாடல்களை கண்ணுற்ற நிலையில் ஆழ்வார்களுக்கான ஆராதனை தொடர்கிறது...*

*வைணவ உலகம் பொய்கையாரைத்தான் முதல் ஆழ்வாராக உணர்ந்திருக்கிறது. பொய்கையார் பற்றி சிந்திக்கும் போதே பூதத்தாரும், பேயாழ்வாரும் இணை சேர்ந்து கொள்கிறார்கள்.*

*இதனால் முதல் மூவர் என்று இந்த மூன்று பேரைத்தான் முன் நிறுத்துகிறது. ஒரு ஆச்சர்யம் போல இவர்கள் அயோனிஜர்களாக இருப்பதும் சிந்திக்க வைக்கிறது.*

*அயோனிஜர்கள் என்றால் ‘தானாய்த் தோன்றியவர்கள்’ என்று பொருள். இந்த உலகில் உள்ள அவ்வளவு உயிர்களும்*

ஒரு தாய் தகப்பன் உறவாலே யோனி வழியாக வந்தவைகளே... அயோனி எனும்போது அங்கே யோனிக்கு இடமேயில்லை.

இது சாத்தியமா... இப்படிக் கேள்விப்பட்டதே இல்லையே என்று கேள்விகள் எழலாம். ஆண்டாள் துளசி மாடத்தில் கிடந்து கண்டெடுக்கப்பட்டவள்தான். இவளும் ஒரு அயோனி.

பொய்கையார் காஞ்சியில் உள்ள திவ்ய க்ஷேத்ரமான திருவெஃகா எனும் ஸ்தலத்தில் உள்ள கோவிலின் திருக்குளத்தில் தாமரை மலர்களுக்கு இடையே தோன்றியவர் என்கின்றன, இவர் பற்றிய குறிப்புகள்.

இந்த திருவெஃகா என்னும் தலத்தில் உறையும் பெருமாளுக்கு யதோத்காரி என்று சமஸ்க்ருதத்திலும், 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்று தமிழிலும் திருநாமம் உள்ளது.

இந்தப் பெருமாள் சொன்ன வண்ணம் எதைச் செய்தான்? எதனால் இவனுக்கு இந்தப் பெயர் வந்தது என்பதற்குப் பின்னாலே அழகிய செழுந்தமிழ்ப் பாடல் ஒன்றும் புலவர் ஒருவரின் பக்தி சிறப்பும் ஒளிந்திருக்கிறது. அதை பிறகு பார்க்கலாம்.

இப்படி செழுந்தமிழில் சொன்ன வண்ணம் செய்த பெருமாளின் திருக்கோயிலில் பொய்கையில் உதித்தவர் பொய்கையார் என்பதே ஒரு தனித்த சிறப்போடு இருக்கிறது. சித்தார்த்தி வருடத்தில் ஐப்பசி மாதத்தில் திருவோண நட்சத்திர நாளன்று இவர் அவதரித்தார்.

திருவோணம் அந்த திருமாலுக்கு உரிய நட்சத்திரமும் கூட... அந்த நட்சத்திரத்தில் அவனே இந்த உலகில் பக்தி நெறியை தழைக்க வைக்க பொய்கையில் தோன்றி வந்தான் என்றும் சிந்திப்பவர்கள் உண்டு.

இவரது பெயர் காரணப் பெயராகவே உள்ளது. பொய்கை தந்தவர் என்பதால் பொய்கையார்! இவரோடு இணை வைத்து சிந்திக்கப்படும் பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் கூட காரணப் பெயர் கொண்டுதான் காட்சி தருகிறார்கள்.

நாமகரணம் செய்யப் பெற்றவர்கள் என்று இருந் திருந்தால் செய்திருப்பார்கள். அயோநிஜர்களை அவர்களின் உருவத்தை வைத்தோ இல்லை குரலை வைத்தோ அதுவுமில்லை அவர்களின் குணங்களை வைத்தோதான் நாம் அறிய முடிகிறது. அப்படி அறிய முடிந்த விதமே அவர்களின் பெயராகி விடுகிறது.

இந்த நிலைப்பாடு ஆழ்வார்களான இவர்களிடம் மட்டு மில்லை. பல சித்தர்கள் வரையிலும் இதுதான் நிலை. பாம்பாட்டி சித்தர், குதம்பைச் சித்தர், பிராந்தர், சிவவாக்கியர், பட்டினத்தார் என்கிற அவ்வளவு பெயர்களும் காரணப் பெயர்களே!

நாயன்மார்களிடமும் இதுதான் நிலைப்பாடு! இயற்கை யார், மெய்ப்பொருளார், குங்குலியக்கலயர், அரிவாட்டாயர், சாக்கியர், சுழற்சிங்கர் என்று பல நாயன்மார்கள் அவர்களின் குணம், செயல் போன்றவற்றாலேயே குறிக்கப்படுகிறார்கள்.

இது ஒரு வகையில் அவர்களை நாம் எளிதில் நினைவு கொள்ளவும் உதவுகிறது. எங்கே ஒரு பொய்கையை பார்த்தாலும் அதில் தாமரை மலர்களை பார்த்தாலும் நமக்குப் பொய்கையார் நினைவு தோன்ற வேண்டும். அந்த மாலவன் மேல் பக்தி செய்து நெய்யாய் உருகிய அவரது உருக்கமும், அந்த தாமோதரன் எப்படிப்பட்டவன் என்று அவர் சிந்தித்த விதங்களும் நம்மையும் உருக வைத்து சிந்திக்க வைக்க வேண்டும் என்பதே இதன் சூட்சுமமாக இருக்கிறது. பொய்கையார் காலம் எது என்பதிலே ஒரு குழப்பம் ஏற்பட்டு பின்னர் தோராயமாக கி.பி. 575-இல் இருந்து, 610 வரை இருக்கலாம் என்கிற முடிவிற்கு வந்துள்ளனர்.

பொய்கையார் மட்டும் அல்ல பூதத்தாரும் பேயாழ்வா ரும் கூட இவரது சம காலத்தவர்களே...! இம்மூவருக்கும் பரஸ்பர தொடர்பு இருந்து இவர்கள் ஒன்றாகவே அந்த மாதவனைச் சிந்தித்து பாடியிருக்கிறார்கள்! இதற்கு சான்றாக ஒரு சம்பவத்தை சொல்வார்கள். மூர்க்கமாக ஆராய்ந்தால் இந்த சம்பவம் ஒரு புனைகதை போல் தோன்றக் கூடும். ஆயினும் பக்தி உணர்வோடு பார்க்கும்போது இதனுள் மனித

சமுதாயத்திற்கு அவசியமான ஆழ்ந்த ரகசியக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன.

அந்தச் சம்பவத்தையும் பார்த்து விடுவோம்...

திவ்ய தேசத்தில் திருக்கோவிலூரைப் பற்றி நமக்கு எல்லாம் தெரியும். இங்கே எம்பெருமான் திரிவிக்ரமனாக விண்ணையும் மண்ணையும் அளந்த கோலத்தில் காட்சி தருகிறார்.

இப்பெருமானை பொய்கையாழ்வார் தரிசனம் செய்து விட்டுக் கிளம்புகிறார். வழியில் மழை பிடித்துக் கொள்ளவும் அருகில் உள்ள ஒரு முனிவருடைய ஆசிரமக் குடிலுக்குள் ஒதுங்குகிறார்.

சிறிய குடில். ஒருவர் தாராளமாக படுத்துறங்கலாம். பொய்கையாரை அலைந்த களைப்பு தரையில் கிடத்துகிறது. சற்றைக்கெல்லாம் பூதத்தாழ்வாரும் தரிசனம் மு'டிந்து அதே ஆசிரமக் குடிலுக்குள் ஒதுங்குகிறார். உள்ளே இருக்கும் பொய்கையாரைப் பார்த்து, ''அடியேன் வந்திருக்கிறேன் மழைக்கு அடைக்கலமாய்! இடமிருக்கிறதா?'' என்று கேட்கிறார்.

அந்த நாளில் அடியவர் என்றால் அவரை இறைவனாகவே கருதும் பண்பும் அன்பும் சான்றோர்களிடம் மிகுந்திருந்தது. அது பொய்கையாரிடம் மட்டும் இல்லாமல் போகுமா?

''தாராளமாய் வாருங்கள். இங்கே ஒருவர்க்குத்தான் படுக்க இடம். ஆனால் அதில் இருவர் அமர வழியுண்டே? எனவே தாராளமாய் வாருங்கள்...'' என்றார். சொன்ன கையோடு பொய்கையார் எழுந்து அமர்ந்து கொண்டு விட பூதத்தாழ்வார் அவரை வணங்கியவராக அவரது அருகில் அமர்ந்தார்.

சூழலிலும் இருள் சூழத் தொடங்கியது. பூதத்தாழ்வார் தன்னை அறிமுகம் செய்து கொள்ளத் தொடங்கினார். ''கனிந்த உமது பேச்சிலே பொய்கையின் சிலுசிலுப்பை உணர்கிறேன். பார்க்க பருத்து பூதம் போல் இருக்கும் என்னை பூதத்தாழ்வான் என்பார்கள். கடல் மல்லை என் ஊர். தலசயனன் என்

இறைவன் - அவனது அர்ச்சாவதார ரூபங்களில் ஒன்றான திரிவிக்ரம கோலத்தை தரிசிக்க இங்கே வந்தேன். வந்த இடத்து மழை என்னை உம்மோடு இணைத்து விட்டது'' என்றார்.

''அடியேன் பொய்கையில் பிறந்த பொய்கையான். காஞ்சி மாநகரத்து திருவெஃகாவை சேர்ந்தவன். சொன்ன வண்ணம் செய்தவன் என் இறைவன்'' என்று கூறி தனது அறிமுகத்தை முடித்துக் கொண்டார் பொய்கையார்.

'ஆஹா பொய்கையோடு பூதம் கூடியிருக்கிறது என்ன ஒரு பாக்யம்' என்று பூதத்தாழ்வார் மகிழும் போது அந்த ஆசிரமக் குடில் வாசலில் மூன்றாவதாக ஒரு உருவம் வந்து நின்றது.

''உள்ளிருப்பது யார்... அடியேன் உள்ளே வரலாமா'' என்று அந்த உருவமும் வினவியது.

திருமண்காப்பு தரித்திருந்த போதிலும் இருண்டுவிட்ட நிலையில் கரிய பேய் போல அவரைக் கண்ணுற்ற பொய்கையாரும் பூதத்தாழ்வாரும் ஒரு வினாடி சிந்தித்து விட்டு ''ஒருவர் படுத்துறங்க முடிந்த இந்த இடத்தில் இருவர் அமர முடிந்து அமர்ந்திருக்கிறோம். நிற்கும் பட்சத்தில் மூவருக்கு இங்கே இடமுண்டு - நிற்கும் பட்சத்தில் தாராளமாய் உள்ளே வருக'' என்று அழைப்பு விடுத்தனர்.

''தனித்து மழையிலும் குளிரிலும் நின்று உடலின் இந்த உபாதை குறித்து சிந்திப்பதற்கு, தங்களைப் போன்ற அடியாரோடு கூடி கதகதப்பாய் நின்று கொண்டு இறைவனை நினைப்பதே உத்தமம். எனவே நான் உள்ளே வருகிறேன்'' என்று பேயாழ்வார் அவர்களை நோக்கி உடம்போடு உடம்பு உரச நின்று கொண்டார்.

''அப்படியே அடியேனது திருநாமம் பேயன் என்பதாம். எனக்கு அகத்தழகே பெரிது - புற அழகைப் பற்றி சிந்தியாதலின் நான் அதனாலேயே பேயனென்றாகி விட்டேன். எனக்கு தாய் தந்தை எல்லாம் அந்த நீலமேக கார் வண்ணனே. தொண்டை மண்டலத்து மயிலையில் உதித்தவன் நான்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

பூதத்தாரும், பொய்கையாரும் கூட தங்களை அவருக்கு அறிமுகம் செய்து கொண்டனர். இவர்கள் மூவருக்கும் இடையில் ஓர் அதிசயமான ஒற்றுமையும் உண்டு. மூவருமே ஐப்பசியில் அவதரித்தவர்கள். வருடமும் மூவருக்கும் சித்தார்த்தி வருடமே... அடுத்து பொய்கையார் வளர்பிறை அஷ்டமியில் திருவோணத்தில் பிறந்தவர். மறுநாளான நவமியில் அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர் பூதத்தாழ்வார். அதற்கும் மறுநாளான தசமியன்று சதய நட்சத்திரத்தில் பிறந்தவர் பேயாழ்வார்.

இந்த மூவரையும் ஆசிரமக் குடில் மழையைச் சாக்கிட்டு இணைக்கிறது. மூவரும் விண்ணளந்த விக்கிரமனைச் சேவித்த கையோடு கூடியிருக்கிறார்க்ள.

தவறு, கூட்டியிருக்கிறான் அந்த விக்கிரமன்.

முழு இருட்டு அங்கே சூழவும், மூவரிடையே ஒருவரை ஒருவர் கண்ணாரக் காண இயலவில்லையே என்றும் ஏக்கம் சூழ்கிறது.

அப்போது மூவர் மட்டுமே நிற்க முடிந்த அங்கே நான்காவதாய் ஒருவர் இருப்பதையும் அவர்கள் உணர்கின்றனர்...

யார் அது?

எப்படி சாத்யம் இது?

அந்த நாலாமவனிடம் எதனால் மௌனம்...?

அவன் எப்படி வந்தான்...? கேள்விகள் முளை விடும்போது கஸ்தூரி வாச மணம் கமகமக்கிறது. ஒருவரோடு ஒருவர் உரசிக் கொள்ளும்போது திருச்சங்கும் சக்கரமும் மேலே படுவது போல் ஒரு உணர்ச்சி.

மூவருக்குள்ளேயும் மின்வெட்டு!

''எம்பெருமானே... இது என்ன பாக்யம்! எம்மிடையே நீயா!'' - பொய்கையாருக்குள் பொங்கி எழுகிறது கேள்வி. கண்ணைக் கரிக்கும் இருளோ மாய்மாலம் செய்கிறது. அதை விரட்டவும், தங்களிடமுள்ள நான்காமவனை காணவும் விரும்பி அப்போதே பாடத் தொடங்குகிறார்...

*அதுதான் முதலாம் திருவந்தாதியில் இடம் பெற்ற -*

**'வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்யக் கதிரோன் விளக்காக - செய்ய**
**சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை.**
**இடராழி நீங்குகவே' என்று...**

*இப்படி நூறு பாடல்கள் பாடவும் புறஇருள் உடனே நீங்கிற்று. இன்றும் இப்பாடலை உருக்கமாய் பாடுவோர் இல்லத்தில் துயர இருள் சூழ்ந்திருந்தால் அது பொடிப் பொடியாகி விடும்.*

*புற இருள் அகன்றும் அந்த நான்காமவனை புறக் கண்ணால் காண முடியவில்லை. ஆனால் அவன் உடன் இருப்பது அந்த நசுக்கத்தில் புலனாகிறது.*

*பார்த்தார் பூதத்தாழ்வார் -*

**'அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருசிந்தை இடுதிரியா - நன்புகழ் சேர்**
**ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்''**

*- என்று தன் பங்குக்கு நூறு பாடல்கள் பாடினார். இதனால் அக இருளும் அகன்றது. மனதுக்குள் சலனம் - குழப்பம் உடையவர்கள் இந்த திருவந்தாதிப் பாடலை பாடிட உள்ளம் ஒளிபெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.''*

*புற இருள், அக இருள் நீங்கவும் இறைவனும் அவர்களுக்குக் காட்சியானான். எப்பேர்ப்பட்ட பாக்யம்? அரிய காட்சி அல்லவா?*

**'திருக்கண்டேன் - பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்.**
**என்னாழிவண்ணன் பால் இன்று'**

*- என்று பேயாழ்வார் அந்த அரிய தரிசனக் காட்சியை பரவசத் தோடு பாடி அவரும் நூறு பாடல்களைப் பாடி முடித்தார்.*

*மூவருக்கும் 'காட்சியளித்த அந்த விஷ்ணுபதி செழுந்தமிழில் முன்னூறு அந்தாதிப் பாடல்கள் கிடைக்க வழி செய்தான்.*

செம்மாந்த ஞானியர் - 'பொய்கை - பூதம் - பேயார்' ஆகிய இம்மூவரையும் கல்வி செல்வம் வீரமாகக் கருதுவர். ஒரு படி மேலே போய் அன்பு பக்தி சரணாகதி எனும் மூன்றையே இவர்கள் உட்பொருளாய் கொண்டிருப்பதாகக் கூறுவர்.

இதையும் கடந்த பொருளொன்று உண்டு!

அது...

# 3

**ஆ**ழ்வார்களில் முதல் மூவர்களான பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும், பேயாழ்வாரும் சம காலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமல்ல - இவர்கள் பிறப்புக்குப் பின்னாலே ஆச்சரிய மூட்டும் ஜாதகத் தொடர்பும் காணப்படுவதுதான் விந்தை.

இதில் பொய்கையாரின் திருநட்சத்திரம் திருவோணம். இந்த நட்சத்திரத்துக்கான அதிபதி சந்திரன் ஆவான்! பூதத்தாழ்வாரின் திருநட்சத்திரம் அவிட்டம் - இதன் அதிபதி செவ்வாய் எனும் அங்காரகன் ஆவான்! பேயாழ்வாரின் திருநட்சத்திரம் சதயம் - இதன் அதிபதி ராகு ஆவான். இந்த மூன்று கிரகங்களும் ராசிக் கட்டங்களில் மகர கும்ப வீடுகளாக உள்ளன. இந்த வீட்டிற்கு அதிபதி சனியாவான். சனியின் வண்ணம் நீலம். அந்த மாயவனும் நீலவண்ணனே!

அதாவது மூவருக்கும் ராசியாதிபதி ஒருவனே... நட்சத்திரங்களிலும் அவர்களின் குணம் எதிரொலிக்கிறது. பொய்கையாரின் திருவோணத்துக்கு அதிபதி சந்திரன். பொய்கை மலர்கள் சந்திரனாலேயே மலர்ந்து மணம் வீசுகின்றன.

பூதத்தாழ்வாரின் அவிட்ட நட்சத்திரத்துக்கு அதிபதி செவ்வாய். வலிமைக்கு இவனே காரணம்.

பேயாழ்வாரின் சதய நட்சத்திரத்துக்கு அதிபதி ராகு. கரிய நிறத்தவன் இவன்.

அதாவது 'மலரினும் மெல்லிய தன்மை, பக்தியில் உறுதி, இருளை நீக்கும் நோக்கம்' என்கிற மூன்றையும் இவர்கள் தங்கள் அம்சங்களாக தங்களுக்குள் கொண்டிருந்ததை சூட்சுமமாக உணர வேண்டும்.

இம்மூவருக்கும் பின்னாலே இப்படி நாம் சூட்சுமமாய் அறிய வேண்டியவை பல உள்ளன. இதில் பொய்கையாரின் ஒரு பாடல் சைவ வைணவப் பிணக்கை கேலி செய்வது போல் உள்ளது.

'பொன் திகழும் மேனிப் புரிசடை அப்புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேனும் ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்'

- என்கிற பாடல் 'பொன்னர் மேனியனான அந்தக் கயிலையானும், நின்று உலகை அளந்த விக்கிரமனான திருமாலும் வடிவில் இருவராகக் காட்சி தருகின்றனர். ஆனால் உண்மையில் இருவரும் ஒருவரேயாவர்' என்கிற பொருளைச் சொல்கிறது. இதை வைத்துப் பார்க்கும்போது இவர்கள் வாழ்ந்த காலத்திலும் சைவம்தான் பெரிது, வைணவம்தான் பெரிது போன்ற தர்க்க வாதங்களும், பிணக்குகளும் இருந்திருக்க வேண்டும்.

பொய்கையார் தன் பாடலால் இவர்களைப் புறந்தள்ளுகிறார். இப்படிப் பாடிய பொய்கையாழ்வாரே இன்னொரு பாடலில் அந்த விஷ்ணுவைத் தவிர நான் வேறெவரையும் வணங்க மாட்டேன் என்கிறார்.

"நயவேன் பிறர் பொருளை நள்ளேன் கீழாரோடு
உயவேன் உய்ந்தவரோடு அல்லால் - வியவேன்
திருமாலை யல்லது தெய்வமென்றேத்தேன்
வருமாறென் நம்மேல் வினை?"'

- 'பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல், கீழான குணம் கொண்டவர்களோடு சேராமல், பெரியாரோடு மட்டும் இணங்கி திருமாலை மட்டும் தொழுது' என்று இவர் சொல்லும்போது முன் பாடிய பாட்டின் பொருளுக்கும் இதன் பொருளுக்கும் பேதமும் பிணக்கும் தெரிகிறதல்லவா?

மேலோட்டமாகப் பார்த்தால் அப்படித்தான் தெரியும். கூர்ந்தும் ஆழ்ந்தும் பார்த்தால் பொய்கையாரின் சிறப்பு பளிச்சென்று தெரியும். அந்தத் திருமாலும், ஈசனும் வடிவத்தால் வேறானாலும் இருவரும் ஒருவரே... எனவே நான் திருமாலைத் தொழுதாலே போதும் அது அந்த ஈசனுக்கும் உரியதாகி விடும்... தனியே அவனை தொழுதிடத் தேவையில்லை. அவசியமுமில்லை என்பது இதனுள் அடக்கம். அடுத்து பலவாறன்றி ஒன்றே ஒன்று என்று இருப்பதே ஞானியர் தன்மை.

லௌகீகத்தில் உழன்றபடி இருப்பவர்களுக்கும் அறியாமை மற்றும் ஆற்றாமையில் இருப்பவர்க்கும் பல தெய்வ நாட்டமும் வழிபாடுகளும் இருக்கும்.

அதிலொன்றும் பெரிய பிழையில்லை! ஒரு கட்டத்தில் இவர்களும் எல்லா நதிகளும் கடலில்தான் சங்கமிக்கின்றன என்பது புரிந்து ஒரு தெய்வத்திடம் ஒன்றி விடுவர்.

ஒரு வகையில் பல தெய்வப் பார்வையும் அந்த தெய்வங்களின் கருணை, வீரம் இவைகளை அறிவதும் கூட சிறந்த ஒரு வழிமுறைதான். பிறக்கும்போதே எவரும் ஞானியாய் பிறந்து விடுவதில்லை. அம்மட்டில் ஒரு பிரகலாதன்தான்... ஒரு ஞான சம்பந்தன்தான் வரலாற்றிலேயே கண்ணில் படுகின்றனர். துருவனையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மற்றபடி பிறந்து வளர்ந்து அல்லல் பல பட்டு வாழ்வின் இன்ப துன்பங்களில் சிக்கிச் சிதைந்து மெல்ல மெல்ல கடைத்தேறுவதே மனித வாழ்வாகும். இப்படி ஒரு வாழ்வில் உள்ளவர்களை ஆற்றுப்படுத்தி அவர்கள் போக்கில் போய், பின் அவர்களை பேரறிவாளர்களாய் ஆக்குவது நமது இந்து மதம் மட்டுமே.

இவர்கள் சிறுகச் சிறுக அறிந்த பல தெய்வ விஷயங்களிலும் ஒரு நாள் தானாக இவர்களை தெய்வம் ஒன்றென்று உணரச் செய்து விடும்.

அல்லாவிட்டாலும் பாதகமில்லை. இவர்கள் வழிபட்ட தெய்வம் எதுவாக இருப்பினும் அதனுள் இருப்பவனும் மாலே!

ஒன்றையறிவதும், ஒன்றில் உறைவதும், ஒன்றே நன்றாய் ஒன்றென்றிருப்பதுமே ஞானியர் தன்மை!

அத்தன்மைதான் முதலாழ்வார்கள் எனப்பட்ட மூவரிடமும் காணப்பட்டது.

இவர்களின் திருவந்தாதிப் பாடல்களை பாடப்பாட நமக்குள் மேலும் மேலும் பல ஞான மலர்கள் மலர்ந்திடும்.

இம்மூவரைத் தொடர்ந்து அடுத்து நாம் ஆராதிக்கப் போவது திருமழிசையாழ்வாரை... பன்னிருவர் வரிசை இப்படித்தான் செல்கிறது.

முதல் மூவர் 'அயோநிஜர்கள்' என்றால் இவரோ நம்மைப் போல யோநிவழி வந்தவர்... இவர் பிறப்புக்கு பின்னாலே நாம் சூட்சுமமாய் உணர வேண்டிய பல செய்திகள் இருக்கின்றன.

இன்று தொண்டை மண்டலமாகிய சென்னைக்குப் பக்கத்தில் உள்ள திருமழிசையைச் சேர்ந்தவர் என்பதால் திருமழிசையாழ்வார் என்று அழைக்கப்படும் இவரது காலமும் முதல் மூவரின் காலமான ஆறாம் நூற்றாண்டுக் காலமே...! முதல் மூவரோடு இவருக்கும் நல்ல சத்சங்கம் இருந்திருப்பதை வரலாற்றைப் பார்க்கையில் உணர முடிகிறது. ஒரு வகையில் இவர் பேயாழ்வாரின் சீடரும் கூட!

முன்னதாக இவர் காலத்தில் சமணமும், பௌத்தமும் கூட பெரிதாக கோலோச்சிக் கொண்டிருந்தன. அவர்களின் இறைக் கொள்கையால் கவரப்பட்டு சில பல காலம் இவர் சமணச் சிந்தனைகளோடும், பௌத்த பார்வைகளுடனும் இருந்திருக்கிறார். இப்படி இருந்தவருக்குள் ஒரு பூரண தெளிவில்லை.

பொதுவில் நம் ஆன்மிகத்தில் ஆழமாய் ஒரு கருத்து உண்டு. 'குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை' என்பதுதான் அது. எனவேதான் நாம் இந்த மண்ணுக்கு வரக் காரணமான தாய் தந்தைக்குப் பின் குருவை நமக்கு வழிகாட்டியாக்கி பிறகே அவர் மூலமாக இறையை உணர நம்மவர்கள் வழி செய்தார்கள்.

இந்த குரு முகத்தைப் போற்றாத மதங்கள் இல்லை. முகம்மது நபியையும், யேசு நாதரையும் இறை தூதராகச் சொன்னாலும் உண்மையில் அவர்கள் குரு வடிவானவர்களே.

நம்மிலும் சைவத்திலாகட்டும், வைணவத்திலாகட்டும், இல்லை சாக்தம், கௌமாரம். காணாபத்யம், சௌரம் என்கிற மற்ற பாதைகளிலாகட்டும் குருக்களின் வழிகாட்டுதலோடு தான் நம் ஆன்மிகப் பயணம் சென்றபடி இருக்கிறது. 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!' என்று அருணகிரிநாதர் அந்த முருகப் பெருமானையே குருவாகப் போற்றுவதையும் பார்க்கலாம்.

குரு என்னும் சொல்லுக்கு 'இருளை நீக்குபவர்' என்பது பொருள்.

திருமழிசையார் வரையிலும்கூட அவர் மன இருளைப் பேயாழ்வாரே நீக்கினார் என்பதற்கு சான்றாக பல கதைகளும், சம்பவங்களும் காணக் கிடக்கின்றன.

அதற்கு முன் திருமழிசையாரின் பிறப்பு பற்றி பார்த்து விட வேண்டும் -

பார்க்கவ முனி என்பவருக்கு தேவலோகப் பெண் ஒருத்தியாலே தவம் கலைந்து போனது. விசுவாமித்திரர் மேனகையிடம் விழுந்தது போல அப்பெண்ணழகில் மயங்கி விட்டார். அவளும் முனிவரின் இச்சைக்கு இணங்கி இணைந்தாள்.

அதாவது தவமும் தேவமும் கலந்தது. அந்த கலப்பில் தோன்றியது ஓர் உயிர்! இந்த உயிரை பிள்ளைப் பேறில்லாத திருவாளன் என்பவன் (அக்காலத்தில் தாழ்ந்த சாதியாகக் கருதப்பட்டவன்) தனக்கான பரிசாக அடைந்தான்.

சில பிறப்பின் மூலங்கள் மேலோட்டமாக பார்த்திட ஒரு பொருளைக் கொண்டிருக்கும்... ஆழ்ந்து பார்த்தால் அது வேறு ஒரு பொருள் தரும். இன்றைய நமது வாழ்வியல் பார்வையில் ஒரு முனிவரின் மனக்கட்டுப்பாடு உடைந்து போனதால் இந்த உயிர் பொறுப்பின்றி பிறந்தது போல தோன்றும். ஆனால் விதிவசம் எனும் கர்ம நோக்கில் இதைப் பார்க்கும் போது

தேவமும் தவமும் இணைந்த ஒன்று. பிள்ளைப் பேறில்லாத ஒரு எளிய சாதியிடத்தவனிடம் வந்து சேரக் காரணம் வேண்டுமே?

இப்படி திருவாளனை வந்து சேர்ந்த அந்தப் பிள்ளை முதல் பயனாக திருவாளனின் பிள்ளைப் பேறின்மையைப் போக்குகிறது. திருவாளன் மனைவி கருத்தரிக்கிறாள்!

இன்றும் பிள்ளைப் பேறில்லாதவர்கள் இதுபோல் ஒரு பொதுப் பிள்ளையை தம் பிள்ளை என்று தத்து எடுத்துக் கொண்டு விடும்போது அவர்களின் உடற்கட்டில் நிலவி வந்த ஒரு வகை இறுக்கம் தளர்ந்து அதனால் யோனியில் அடைப்பும் நீங்கி அவர்களுக்குப் பிள்ளைகள் பின்னாளில் பிறப்பதைப் பார்க்கிறோம்.

அம்மட்டில் பொதுப்பிள்ளைகளுக்கெல்லாம் முன்னோடியாக திருமழிசையாரைச் சொல்லலாம். எப்படிப் பிறந்திருந்தாலும் சரி - திருமாலைப் பற்றிக் கொண்டு விட்டால் அவர்கள் பிறப்பும் சரி, வாழ்வும் சரி ஊரும் உலகும் எப்போதும் போற்றித் துதிக்கும் ஒன்றாகிவிடும்.

அதற்குச் சான்று திருமழிசையார்!

திருவாளன் மகனாக வளர்ந்த திருமழிசையாருக்கு சகோதரனாக வந்து சேர்ந்தவர் கனிக்கண்ணன். இந்த கனிக்கண்ணன் திருமழிசையாருக்கு பால் கொடுத்த குழந்தையில்லா தம்பதிகளுக்கு பிறந்தவர்.

அண்ணனும் தம்பியும் ஒன்றாய் வளர்ந்தனர். தேவமும் தவமும் அண்ணனாகிய திருமழிசையாரிடம் நன்றாகவே வேலை செய்தது.

'கண்ணாரக் காண்பது
காதாரக் கேட்பது - பின்
தீர ஆய்வது

- என்கிற மூன்று நிலைகளிலும் திருமழிசையார் சிறந்து விளங்கினார்.

இருப்பினும் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர் என்கிற ஒரு அழுத்தம் இவர் மேல் இருந்து இவரை அமுக்கப் பார்த்தது. ஆனால் அதனாலேயே இவர் வீறு கொண்டு எழுந்தார்.

சராசரித் திறமையோடு இருந்து கொண்டு அந்த அழுத்தத்தை வெல்ல முடியாது என்பதை புரிந்து கொண்ட இவர் பெருந் திறமைகளை அடைய முடிவு செய்தார். 'யந்த்ர மந்த்ர தந்த்ரம்' என்னும் முக்கலையிலும் பெரிதும் தேர்ந்தவரானார். அதற்காக எதையும் செய்கிறவராகவும் இருந்தார்.

இவ்வேளை வரை இவர் மாலவன் பெருமையையோ, ஹரியே சரி என்றோ பெரிதாய் உணரவில்லை. உரிய தருணத் தில் இவரை ஆட்கொள்ளக் காத்திருந்த அந்த நெடுமாலும் இவர் கண்களில் பேயாழ்வாரைப் படுமாறு செய்தான். பற்றிக் கொண்டது குருவருள் என்னும் நெருப்பு... பிறகென்ன? ஆன்ம ஒளி பல சாகசங்களை செய்ய ஆரம்பித்தது...

## 4

திருமழிசையாரைப் பற்றி சிந்திக்கும்போது பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாய் அவரது பிறப்பு குறித்த செய்திகளில் ஒரு ஆணித்தரமான தெளிவில்லை.

பார்க்கவ முனிவருக்கும், கனகாங்கி எனும் தேவமங்கைக் கும் பிறந்த இவர் - பிறந்த வேளையில் பிண்டமாய் இருந்தார் என்றும் அதனாலேயே இவரை ஒரு புதருக்குள் கனகாங்கி வீசி எறிந்தாள் என்னும் ஒரு கருத்து.

அவ்வேளையில் அதைக் கண்ணுற்ற பரமபதியான அந்த விஷ்ணுபதி திருமகளோடு அங்கு வந்து அந்த பிண்டத்தைத் தொட்டு எடுக்கப் போய் அதற்கு உயிர் வந்து ஒரு குழந்தையாக அது அழத் தொடங்கியதாகவும், ஞானசம்பந்தருக்கு அன்னை உமை அமுதூட்டியது போல இக்குழந்தைக்கும் திருமகள் அமுதூட்டினாள் என்றும் ஒரு செய்தி.

அதன் பிறகு திருவாளன் கண்களில் குழந்தையைப் படுமாறு செய்துவிட்டு மாலும் மங்கையும் விலகினர் என்பர்...

ஆயிரமாயிரம் பிள்ளைகள் பூமிதனில் பிறக்கின்றனர். அவர் களில் பிண்டமாய் குறைப் பிரசவம் ஆகும் குழந்தைகளும் உண்டு. அவர்களுக்கெல்லாம் கிட்டாத அந்த மாலின் பெருங்கருணை, திருமழிசைப்பிரானுக்கு மட்டும் எப்படிக் கிட்டியது என்று ஒரு கேள்வி இதனால் எழுகின்றது.

இதற்கு விடையாக இவர் பிறந்த வேளையைச் சிலர் சுட்டுகின்றனர். சித்தார்த்தி வருடம் தை மாதம் 28-ஆம் தேதி கிருஷ்ணபட்சத்தில் பிரதமை திதியில் மக நட்சத்திரத்தில் இவர் பிண்டமாய் பிறந்தார். அன்று ஞாயிற்றுக்கிழமை...

இந்த நாளில் இவர் பிறந்த நேரப் புள்ளிக்கு பின்னாலே பெரும் சிறப்பிருக்கலாம் என்பது சிலரது கருத்து. ஒரு வகையில் அது உண்மையும் கூட.

இவ்வுலகில் பிறக்கும் எவராயிருப்பினும் அவரது பிறந்த நாளும் நேரமும் தெரிந்தால் போதும். அதை வைத்து அவர்களது முன் ஜென்ம வினைகளையும் ஜோதிடக் கணக்கு மூலம் கூட்டிக் கழித்தும் வகுத்துப் பெருக்கியும் அடைந்துவிட முடியும்.

வயிற்றுக்குள் கருப்பிண்டமாய் உருக்கொள்ளத் தொடங்கிடும் போதே கணக்கு தொடங்கி விடுகிறது. இந்நாளில் இந்த நேரத்தில் பிறப்பு என்பதில் இருந்து பிறந்த உயிருக்கான ஆயுள் காலம் என்பதும், இத்தனை ஆண்டுகள்தான் என்பது வரை அதில் புதைந்தே இருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து அறிய ஜோதிட ஞானம் மட்டும் இருந்தால் போதாது. இறைவனின் பேரருளும் வேண்டும். ஏன் என்றால் அது பிரம்ம ரகசியம்! ரகசியங்களை ஜோதிடர்களால் யூகிக்க இயலும். குத்து மதிப்பாய் கணக்கு போட்டு கூறவும் இயலும். ஆனால் வினாடி சுத்தமாக அறுதிவிட்டு மட்டும் கூற முடியாது. அப்படிக்கூற முடிந்தால் அது ரகசியமும் கிடையாது.

எனவே திருமழிசையாருக்கு அந்தத் திருமாலின் கருணையும் வாத்சல்யமும் கிட்டியதற்கு முன்ஜென்மத்தில் அவர் அந்தத் திருமாலுக்குப் பெரும் பணிவிடைகள் செய்தது கூட ஒரு காரணமாய் இருக்கலாம்.

பத்ராசல ராமதாசரின் வாழ்வில் ஒரு சம்பவம். ஊர் மக்கள் தந்த வரிப்பணத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டிய தாசில்தார் பதவியில் இருந்தவர் அவர் - ஆனால் அந்த வரிப்பணத்தைக் கொண்டு பத்ராசலத்தில் ஒரு குன்று மேல் இருக்கும் சிதிலமடைந்த ராமர் கோயிலை சீரமைத்து குடமுழுக்கும் செய்கிறார்.

ஒரு ஊரில் ஆலயமானது சிறப்பாக இருந்தால் ஊர் மக்கள் நன்றாய் வாழ்வார்கள். மழை வளமும் சிறப்பாக இருக்கும் என்பதெல்லாம் ராமதாசரின் கருத்து.

ஆனால் இதை அரசனின் அனுமதி பெறாமல் தன்னிச்சையாக அவர் செய்து விட்டதுதான் பிழை. பின்னர் ராமதாசரின் செயல் பற்றி அறியும் அரசன் தானீஷா, ராமதாசரை சிறையில் அடைக்கிறான். ஒரு நாள் இரு நாள் அல்ல... பனிரெண்டு வருடங்கள்! அதுவும் சாதாரண சிறைவாசமல்ல. கடுஞ்சிறை வாசம். சிறையில் ராமதாசர் புழுவாய் துடிக்கிறார். அவரை காவலர்கள் சித்ரவதை செய்கின்றனர். தினமும் அவரும் ''ராமா ராமா'' என்று ராமனை எண்ணியே துடிக்கிறார்.

கோயில் கட்டியதற்கு இப்படி ஒரு தண்டனையா?

தானீஷா சட்டப்படிதான் செயல்பட்டிருக்கிறான். அவன் செயலில் பிழை இல்லை. ஆனால் தர்மப்படி ராமதாசர் செய்த நற்கருமத்துக்கு அந்த ராமன் துணை நிற்க வேண்டுமல்லவா?

பனிரெண்டு ஆண்டுகள் ராமதாசரை சிறையில் துடிக்கச் செய்துவிட்டு பிறகே அவன் அவரை விடுவிக்கிறான். அதுவும் சீதாபிராட்டியே மனம் பொறுக்காமல் ராமனிடம், ''உங்கள் பக்தனை இப்படியா துடிக்க விடுவீர்கள்?'' என்று கேட்ட பிறகு...

ஆனால் காரணம் இல்லாமல் இல்லை.

முற்பிறப்பில் ராமதாசர் ஒரு கிளியை கூண்டில் அடைத்து அதை பசியாலும் தாகத்தாலும் தவிக்க விட்டிருக்கிறார். அதன் சிறகுகளை வெட்டி விட்டும், அதை ஊசியால் குத்தியும் துன்புறுத்திய பாவமே இப்பிறப்பில் அவருக்கு இப்படி ஒரு

தண்டனை. அதே சமயம் அவர் செய்த சில நற்கருமச் செயல்கள் காரணமாக ராமபக்தி அவருக்கு ஏற்பட்டது.

எப்போதும் தீதும் நன்றும் பிறர் தந்திட வருவதில்லை. நம் செயலாலே நாமேதான் உருவாக்கிக் கொள்கிறோம். அதுபோல திருமழிசையாரின் முன் ஜென்ம வினைப்பாடே. அவர் பிண்டமானதற்கும் சரி, பின் திருமாலின் பெருங் கருணைக்கு ஆளானதற்கும் காரணமாய் இருக்க வேண்டும்.

''ஆதிமூலமே...'' என்று கதறிய கஜேந்திர யானைக்கே ஓடி வந்தவன் அந்த வைகுண்டபதி. ஓடி வருவதால் கூட தாமதம் ஏற்படலாம் என்பதன் பொருட்டு பறந்து வரவே கருடனை தன் வாகனமாய் கொண்டிருப்பவன்.

எனவே அவன் திருமழிசையாரை பிண்டமாக இருக்கும்போதே ஆட்கொண்டதன் பின்புலத்தில் நிறைய சூட்சுமங்கள் இருக்கின்றன.

அந்த சூட்சுமங்கள் திருமழிசையாரின் வாழ்நாள் முழுக்கவே தொடர்ந்ததுதான் ஆச்சர்யம்.

பிண்டமாய் பிறப்பெடுத்து, பின்னர் பெருமானின் பெரும் கருணையால் முழுப் பிள்ளையாகி, அதற்கும் பின் ஒரு (அக்கால கருத்துப்படி) குலத்தில் தாழ்ந்தவனுக்கு வளர்ப்பு பிள்ளையாகி, அப்படி வளரும்போதே பல அற்புதங்களையும் நிகழ்த்துகிறார்.

அதோடு மானுடப் பிறப்புக்கு முழுமையான கடைத்தேற்றம் எதில் என்பதற்கு சான்றாகவும் திகழ்கிறார்.

அதுதான் திருமழிசையாரிடம் காணும் தனிச் சிறப்பு. மற்ற எந்த ஆழ்வார்களிடத்திலும் காணப்படாத சிறப்புகள் அல்லது வித்யாசமான அமைப்பு இவரிடம் மட்டுமே காணப்படுகிறது.

மாலின் கருணையால்தான் முழுப் பிள்ளையானார். ஆனாலும் 'மாலே சாலவும் நன்று' என்பதை அவர் அறிந்து கொண்டு குருவாகிய பேயாழ்வாரை இவர் சந்தித்த பிறகே...

அதற்கு முன்பாக சைவம், சமணம், பௌத்தம் என்று அன்று காஞ்சி நகரில் வழக்கில் இருந்த சகல பாதைகளிலும் இவர் பயணித்திருந்ததை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவ்வப்போது ஒரு பாதை இவரை ஈர்த்தது. அதில்தான் மேலான உண்மை இருப்பது போல இவருக்குத் தோன்றியது. ஆனாலும் எதிலும் ஒரு முழு நிறைவு கிட்டவில்லை.

ஆனால் இவருக்கு சில சித்துக்கள் வசப்பட்டு விட்டிருந்தன. அதைக் கொண்டு இவர் பல சாகசங்களையும் நிகழ்த்தினார்.

சித்துக்களிடம் ஒரு ஆபத்தும் எப்போதும் உண்டு! அது மாயா சக்தியின் முதல் பிள்ளை மாதிரி! சாகசங்கள் புரிய வைத்து அதனால் ஏற்படும் நன்மை தீமைகளுக்கான பாவ புண்ணியங்களையும் வழங்கி சித்துக்கள் புரிபவரைத் தொடர்ந்து உலக பந்தத்திலேயே வைத்து விடும்.

சித்து புரிந்தவர் உலகின் பெரும் கைதி ஆகி விடுவார். மேலான முக்தி என்பதே அவருக்கு இல்லாத ஒரு நிலை தோன்றிவிடும்.

எனவேதான் பல சித்தர் பெருமக்கள் தப்பித் தவறியும் தாங்கள் அறிந்த சித்த சக்திகளை பயன்படுத்தி எவரையும் கவரவோ அல்லது எவருக்கும் உதவவோ செய்யாமல் அமைதி யாகவே காலத்தை கழித்திருந்தனர்.

திருமழிசையாருக்கும் பேயாழ்வாருக்கும் சந்திப்பு நிகழும் வரை இந்த சித்து விளையாட்டுப் பெருமிதங்கள் இருக்கவே செய்தது. ஆனால் பேயாழ்வார் இவரை ஆட் கொண்ட பிறகு அப்படியே மாறிப் போனார். அவ்வளவையும் விட்டொழித்து 'திருமாலே பெருந்தெய்வம்.' 'அவன் திருவடி ஒன்றே உய்யும் வழி' என்று தான் மட்டும் உணராது உலகிற்கும் உணர்த்தினார்.

அதற்குச் சான்றாய் இவரது திருவந்தாதிப் பாடல் ஒன்றும் காணக் கிடைக்கின்றது.

> "அறியார் சமணர். அயர்த்தார் பவுத்தர்
> சிறியார் சிவப்பட்டார் செப்பின் - வெறியாய
> மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்
> ஈனவரே யாதலால் இன்று."

- திருமழிசையார் இப்படிப் பாடும் முன்னர் அவர் புரிந்த சித்துக்களையும், பின் அவர் பேயாழ்வாரை கண்ணுற்று

அவரால் ஞானம் பெற்றதையும் அடுக்கடுக்காகப் பார்ப்பதே நன்று.

அப்போதுதான் திருமழிசையாரை நாம் முழுமையாகவும் செறிவோடும் விளங்கிக் கொள்ள முடியும்.

இவரது சித்துக்களில் பெரிதும் கவனிக்க வைத்த சித்து முதுமையை வெற்றி கொண்ட 'நித்யயௌவ்வனம்' என்னும் சித்தாகும்.

தனது இல்லத்துக்கு தினமும் வந்து பால் தரும் வேளாளன் ஒருவன் முதுமை காரணமாக நோயுற்று அந்த நிலையிலும் கடமையைச் செய்யப் போராடிய செயல் இவர் மனதை இளகச் செய்தது. அவன் தனக்கு அளித்த பாலில் இவர் நித்யயௌவனத்துக்குரிய ஒரு குளிகையைச் சேர்த்து தந்து அவனைக் குடிக்கச் செய்தார். ஒரு மண்டல காலம் இது நிகழ்ந்ததில் அவனது முதுமையும் தள்ளாமையும் நீங்கி அவன் தன் பழைய வாலிப முறுக்கினைப் பெற்றான். இதைக் கண்டு ஊரே வியந்தது. இதை கற்பனை என்பாரும் உண்டு.

அதே போல் வேத வியாசங்களை குரு குலத்துக்கு சென்று கல்லாமலே ஒருவர் அதைக் கூறிடும் போது காதால் கேட்ட மாத்திரத்தில் மனதில் பதித்துக் கொள்ளும் சிறப்புடையவரா யிருந்தார். இதனால் இவருக்குள் வேதங்கள் அதன் சாரங்கள் அவ்வளவும் புதைந்திருந்தன. இதற்கு சான்றாக ஒரு சம்பவத்தையும் வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

ஒருநாள் அந்தணர் ஒருவர் யாக குண்டம் அமைத்து வேதம் ஓதி வழிபாடு செய்தபடி இருந்தார். அதைக் கேள்விப்பட்டு அந்த அந்தணரின் வீட்டுக்குச் சென்று அந்த வேள்வியிலும் பங்கு கொள்ள விரும்பினார். ஆனால் இவரை தாழ்ந்த குலத்தவராக கருதி அந்த அந்தணர் இவரை வேள்வி யில் பங்கு கொள்ள அனுமதிக்கவில்லை. திருமழிசைபிரானும் அங்கிருந்து புறப்பட்டு விட்டார். ஆனால் அந்த அந்தணரால் அதன்பின் வேள்வியைத் தொடர முடியவில்லை. அவருக்கு வேத மந்திரம் மறந்து போயிற்று. வாசல் வரை வந்து விட்ட திருமழிசையார் அவருக்கு மந்திரத்தை நினைவு படுத்த விரும்பினார். அந்தணர் அல்லாத ஒருவர், குருவருள்

பெற்றிடாத ஒருவர் வேத மந்திரங்களைக் கூறுவது பாவமாகும். இதையும் திருமழிசையார் அறிந்திருந்த படியால் தன் வாயாலே அதை கூறாமல் ஒரு கறுப்பு நெல் மணியை எடுத்து அதன் உமியை உரித்துக் காட்டிட, அதைக் கொண்டு யஜுர் வேதத்தில் ஒரு வரியான 'க்ருஷ்ணானாம் வரீஹீனாம் நக, நிர்பிந்தம்' எனும் வரியை ஞாபகத்தில் அடைந்த அந்தணரும் திருமழிசையார் தாழ்ந்த குலத்தவராய் இருப்பினும் உயரிய சிந்தை உடையவர் என்பதைக் கண்டு கொண்டு பின் அவரையும் அந்த வேள்வியில் பங்கு கொள்ளச் செய்து அவரை வணங்கிச் சிறப்பு செய்தார் என்பர்.

ஆன போதிலும் இப்போதெல்லாம் கூட இவர் திருமாலே தனிப் பெருந்தெய்வம் என்பதை அறிந்திட வில்லை.

தந்தையின் மூங்கில் பிரம்பறுக்கும் தொழில் நிமித்தம் காட்டுப் பகுதிக்குச் சென்றதில் அங்குள்ள சித்தர் பெருமக்களிடம் நட்பு ஏற்பட்டு மூலிகை ரகசியங்கள் தெரிய வந்தன.

காஞ்சி நகரில் வாழ்ந்தபடியால் வேத கோஷங்கள் காதில் விழுந்தே மனதில் நுழைந்தும் விட்டன.

திருமால் புகுந்தது எப்போது?

பேயாழ்வாரின் தரிசனத்துக்கும் - அவராலே ஏற்பட்ட அனுபவத்துக்கும் பிறகுதான்...

அது...?

## 5

தனது ஆன்மீகத் தேடலில் பல வழிகளில் சென்ற திருமழிசையார் சில காலம் பரம சிவபக்தராகவும் திகழ்ந்திருக்கிறார். அந்த நாளில் இவரை 'சிவவாக்கியர்' என்று அன்று வாழ்ந்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பதினெட்டு சித்த புருஷர்களில் ஒருவரான சிவவாக்கியருக்கு இவருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

அந்த சிவவாக்கியர் பிறந்து விட்ட நிலையில் 'குவா குவா' என்று அழாமல் 'சிவா சிவா' என்று அழுது, பிறந்து விட்ட பிஞ்சு நிலையிலேயே தனது சிவ பக்தியை காட்டி விட்டவர். பின் படிப்படியாக ஞானம் பெற்று 'இறைவன் வெளியே இல்லை - நம்முள்ளே அவன் இருக்கிறான். வெளியே அவன் இருப்பதாகக் கருதும் வரை நம்முள் அவன் இருப்பதை உணர முடியாதவர்களாகவே நாம் இருப்போம்' என்னும் தானுணர்ந்த கருத்தை 'நட்ட கல்லை சுற்றி வந்து நாலு புட்பம் சாத்தியே' எனும் பாடல் மூலமாக பட்டவர்த்தனமாகவும் எடுத்துக் கூறியவர்.

எனவே அவர் வேறு, இவர் வேறு என்பதில் சந்தேக மில்லை. பலப்பல மார்க்கங்களிலும் திருமழிசையார் பயணப்பட்டதால் சைவமும் அதில் ஒன்றாய் விளங்கியது. ஆயினும் மற்ற மார்க்கங்களில் இவருக்குக் கிட்டாத ஒரு சிறப்பு சைவ மார்க்கத்தில் இவர் ஈடுபட்டபோது இவருக்குக் கிடைத்ததை இவரது வாழ்க்கையை அலசிப் பார்க்கையில் அறிய முடிகிறது.

அதுதான் அந்த ஈசனின் தரிசனம்!

அது தரிசனம் மட்டுமல்ல... ஒரு வழி காட்டுதலும் கூட...! சைவ வைணவ பேத உணர்வுகள் உடையோர் நின்று கவனிக்க வேண்டிய தருணமாகவும் அது இருப்பதை உணர முடிகிறது.

புதரில் பிண்டமாய் கிடந்தவர் லக்ஷ்மி நாராயணனின் கருணையாலே பிண்டங் கடந்து பிரம்பாளன் பிள்ளையா கிறார். பின் பிண்டமாய் இருக்கும்போதே பருகிய வைகுண்ட பதியின் ஞானப்பால் வழி நடத்திட, அரும் பெரும் சித்துக்கள் எல்லாம் சாதாரணமாய் வசப்படுகின்றன. அது அளித்த சுதந்திரத்தாலே மாயா உலகில் பாட்டை போட்டிருக் கும் அத்தனை ஆன்மிகப் பாதைகளிலும் பயணமும் செய்கிறார்.

ஒன்று இரண்டாக இருப்பதும் - இரண்டை உணர முற்படுங்கால் அது ஒன்றென்றே அறிவதும் தானே பட்டறிவு?

ஆனால் அந்த பட்டறிவு பிரகலாதன் வரையில் கருவி லேயே நாரதரால் புகட்டப்பட்டது. திருமழிசையாருக்கோ

வாழ்ந்து பார்த்தே பெற்றுக் கொள் என்று அந்த மாயவன் விட்டு விட்டான்.

அப்படிப் பெற்றுக் கொள்ள முனையும்போது தான் சைவ சித்தாந்தமும் அவரைக் கவருகிறது. எனவே சில காலம் அவர் சிவச் சிந்தையோடு பஞ்சாட்சரம் ஜெபிக்கவும் செய்கிறார்.

அந்த ஈசன் இதயம் மட்டும் என்ன இரும்பால் ஆனதா என்ன? மார்க்கண்டேயனுக்காக ஓடி வந்தவன் அல்லவா அவன்? பிட்டுக்கு மண் சுமந்தவன் - அதனால் பிரம்படியும் பட்டவன், திருமழிசையாரை மட்டும் கைவிட்டு விடுவானா என்ன...?

ஆனால் திருமழிசையாரை அவன் தனது பஞ்சாட்சரத்தை ஜெபித்த போது வந்து ஆட்கொள்ளவில்லை. மாறாக பஞ்சாட்சரம் கடந்து, பேயாழ்வாரால் அஷ்டாட்சர மந்திர உபதேசம் பெற்று - அந்த அஷ்டாட்சரத்தை ஜெபிக்கும்போது வந்து தரிசனம் தந்து பட்டமும் தந்து செல்கிறான்.

எப்படிப்பட்ட பட்டம்?

'பக்திசாரன்' என்னும் நிகரில்லா பட்டம்!

இதை இருவிதமாகப் புரிந்து கொள்ள வேண்டும். தனது நாமத்தை சொல்லித் துதித்த தவத்துக்கு அருள வேண்டிய கடப்பாடு அந்த ஈசனுக்கு இருக்கிறது. அதே சமயம் திருமழிசையார் அப்போது குருவருள் பெறாமல் தன்னிச்சை யாய் தான் தவத்தில் இருக்கிறார். குருவருள் துணைபுரிய இறையருள் வேண்டுதலே பின்னும் சிறந்த செயலாகும். ஆதலால் பஞ்சாட்சரத் தவத்தின்போது அதை கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்குப் பலனாகவே குருவாய் பேயாழ் வாரை திருமழிசையாரை நோக்கி அனுப்பிவிக்கிறார். பேயாழ் வாரும் சரி, மற்ற இருவர்களான பூதத்தாரும், பொய்கையாரும் சரி, சைவ வைணவ பேதத்துக்குள் சிக்காதவர்கள்.

'ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான் – மார்விடந்தான்
நீற்றான் நிழல் மணி வண்ணத்தான் – கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான், நீள்முடியான்
கங்கையான் நீள் சுழலான் காப்பு'

- என்கிற திருவந்தாதிப் பாடல்,

*அந்த ஈசனையும் விஷ்ணுபதியையும் மாற்றி மாற்றியே வந்தனை செய்கிறது.*

**"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்**
**சூழரவும் பொன் நாணும் தோன்றுமால் - சூழும்**
**திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக்கு**
**இரண்டு உருவம் ஒன்றாய் இசைந்து..."**

*- என்கிற பேயாழ்வாரின் பாடலிலும் பேதமில்லாப் பெருநெறி இருப்பதை அறிய முடிகிறது.*

*எனவேதான் அவர்களில் ஒருவரான பேயாழ்வாரை பின்னாளில் திருமழிசையார் குருவாய் கொள்ள இருக்கும் வினைப்பாட்டை முன்பே உணர்ந்து, ஈசன் தன் பொருட்டு திருமழிசையார் தவம் இயற்றியபோது காட்சி தரவில்லை. மாறாக பேயாழ்வாரை குருவாகக் கொண்டு, அவரிடம் மந்த்ரோபதேசம் பெற்று அஷ்டாட்சரத் தவம் புரியும் போது காட்சி தந்து அவருக்கு என்ன வரம் வேண்டும் என்றும் கேட்கிறான். சோதிக்கவும் செய்கிறான்.*

*ஆனால் திருமழிசையாரோ "விஷ்ணுபதியே முதலும் முடிவுமானவன். அலைந்து திரிந்து இறுதியாக அவனைச் சரண்புகுந்து விட்டேன். இனி இதனில் மாற்றங்களுக்கோ, தேற்றங்களுக்கோ இடமில்லை. எனவே எந்தையே எனக்கு யாதொரு வரமும் வேண்டாம். வேண்டுமானால் விஷ்ணுவின் வைகுண்டம் ஏகிட அருளாசி புரியுங்கள்" என்று வேண்டுகிறார்.*

*என்ன அற்புதக் கோரிக்கை...?*

*ஈசனும் திருமழிசையாரின் அந்த ஸ்திரமான மனப் பாட்டை உணர்ந்து "உனது தெளிவும் திடமுமான பக்தி வேட்கையைக் கண்டு இன்புறுகிறோம். அதனால் உன்னை பக்திசாரனென்றும் உலகு உணரட்டும்" என்று வாழ்த்தி பட்டம் தந்து செல்கிறான்.*

*விஷ்ணுவை நோக்கி தவம் செய்த, திருமழிசையாருக்கு ஈசன் பட்டமளிப்பு என்பதும் எத்தனை உன்னதமான விஷயம்!*

*இது 'மாலடியாரை அந்த மகாதேவனும் போற்றுவான்' என்றாக்குகிறதல்லவா?*

எல்லாம் சரி...

இவருக்குப் பேயாழ்வார் குருவாய் வாய்த்தது எங்ஙனம்?

அதைப்பார்ப்போம் இனி...

அனைத்து மார்க்கங்களிலும் நடந்து அவ்வளவு சிந்தனைகளிலும் கிடந்தாயிற்று. அஷ்டமா சித்துக்களும் கூட வசப்பட்டு விட்டது. இரும்பைப் பொன்னாக்குவதோ, கிழவியை குமரியாக்குவதோ, நீர் மேல் நடப்பதோ இல்லை. எரிதழலுக்குள் விரல் நீட்டுவதோ எதுவுமே ஒரு விஷயம் இல்லை. திருமழிசையார் வரையில்...!

ஒரு விஷயம் மட்டுமே எச்சமாயுள்ளது.

அது வைணவ நெறி!

அதுவோ சரணாகதியை பெரிதாய் சொல்கிறது. மாலவன் அடியார்களும் மாதவனைத் தவிர வேறு எவரையும் எண்ணவோ, துதிக்கவோ தயாரில்லை. அவர்கள் பாலிலும் மோரிலும் கூட மாலே சுவையாகக் கிடக்கிறான் என்கின்றனர். தூணிலும் துரும்பிலும் இருப்பதும் அவனே என்று பிரகலாத மகாத்மியத்தைச் செப்புகின்றனர்.

இப்படி ஒன்றே பிடியாய் இருப்பதுதான் சரியா?

'அவனே பரமாத்மா - நாமெல்லாம் ஜீவாத்மாக்கள். அவனை அடையவே இப்பிறப்பு. அவனருளாலேயே மாய வலையை கிழித்துக் கொண்டு இக்கலி வாழ்வை வெற்றி கொள்ள முடியும்.

ஏனைய நெறிகள் திரும்பப் பிறக்கச் செய்து விடும். சித்த நெறி சாகசங்களை காட்டி சரிவை தந்துவிடும். ஈசனோ பெரிதும் சோதித்துப் பார்ப்பவன். மாலொருவனே மனத்தால் நினைத்த மாத்திரத்தில் மதிநலம் தருபவன். காத்து ரட்சிக்கும் கடப்பாடுடைய அந்த மூர்த்தி ஒருவ'னை நாம் பிடித்துக் கொண்டால் போதும். இன்றைக்கும் இனி எடுக்கப் போகும் பிறப்புக்கும் பங்கமே வராது.

ஒன்றுக்குப் பத்தாக அவதாரம் எடுத்து வந்து புவனங்களை காத்து வருபவன் அவன்.

உறங்குவது போல் தோற்றம் காட்டி உள்ளுக்குள் விழித்திருந்து உலகை இயக்குபவன். அதனாலேயே பாற்கடலில் உதித்த மகாலட்சுமி அவனே கதியென்று அவன் மார்பை அணைந்தாள்...'

- இப்படியாக பேயாழ்வார் புரிந்த பிரசங்கக் கருத்துக்கள் திருமழிசையார் செவிகளை அடைகின்றன.

குறிப்பாக பரமாத்மா - ஜீவாத்மா எனும் தத்துவ விளக்கம் - சரணாகதியின் சிறப்பு பேயாழ்வாரால் நெஞ்சுருகச் சொல்லப்பட அதைக் கேட்டு திருமழிசையார் உருகிப் போகிறார்.

பேயாழ்வாரின் திருவடிகளில் விழுந்து தேம்புகிறார்.

''ஸ்வாமி...''

''என்னப்பா?''

''சித்துக்கள் அறிந்தவன் நான். சகல கலைகளும் அறிந்தவனும் கூட. ஆயினும் பரந்த இந்த பிரபஞ்சம் இதில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்கள் எனக்களிக்கும் வியப்பினுக்கு ஓர் அளவில்லை. அண்ணாந்து பார்த்தால் வானம். அதில் ஆயிரமாயிரம் நடசத்திரங்கள். சந்திரசூரியர்கள் இரவு பகல் என்கிற உலகின் நிலைப்பாடு - இங்கே கட்டுக்கடங்கி இருக்கும் கடல் என்று அனைத்திலும் ஒரு கணக்கும் கட்டுப்பாடும் இருக்கிறது.

இத்தனை பெரிய உலகை - இதனுள் ஜீவராசிகள், அவரவர்க்கும் ஏற்ப படியளந்து உலகையும் உருளச் செய்து இரவு பகல் உண்டாக்கி இயக்கிக் காத்திடும் அந்த மகாசக்தி எது என்பதை அறிவதே எனது தேடலாய் இருந்தது - இருக்கிறது.

இவைகள் தானாய் தோன்றியதாக சிலர் கூறினர். இயற்கை என்று ஒரு வார்த்தைக்குள் அதனை அடைத்தனர் - எனக்கு அந்தக் கருத்து நிறைவைத் தரவில்லை. இயற்கை எப்படி இத்தனை துல்லியமான கணக்கோடு இருக்க முடியும்?

நம்மையே பாருங்கள்... எவ்வளவு நடந்தாலும் பாதங்கள் தேய்வதில்லை. மென்மையான விரல்களின் மேல் திண்மையான நகங்கள். வாயினுள் சீராக மேலும் கீழுமாக பற்கள். அதிலும் கடை, இடை என்கிற ரகங்கள்...

எனக்கு நானே அதிசயமாகப் படுகின்றேன்...!

என்னைப்போல எத்தனை கோடி பேர் இந்த உலகில்...?

நான் மட்டும்தானா...? எத்தனை உயிர்கள்...?

இந்த உலகில். மையப்புள்ளி போல் இருக்கும் சின்னஞ்சிறு விதைக்குள் பிரம்மாண்ட மரங்கள் ஒளிந்திருக்கிறதே... ஒளித்து வைத்தது யார்?

இப்படி எண்ணும்போது நான் புரியும் சித்துக்கள் எனக்கே மிக மலிவாகத் தோன்றுகிறது. நான் அறிந்து வைத்திருப்பதெல்லாம் ஒரு கைப்பிடி காணாதென்பதும் புரிகிறது.

எனவே என்னை, இந்த மண்ணை, உங்களை, பிற உயிர்களை, அந்த வானை, அதில் இலங்கும் சந்திர சூரிய நட்சத்திராதிபர்களை, பஞ்ச பூதங்களை படைத்த அந்த மகா சக்தி எது? நான் அதை அறியத் துடிக்கிறேன்.

இங்கு எதுவும் எனக்கு நிறைவைத் தரவில்லை. எல்லாமே ஒரு கட்டத்தில் அலுத்துப் போய் அப்புறம் என்கிற கேள்வி எழுகிறது.

எது நிலையானது - எதில் நித்யமுள்ளது.

எவனிடம் அதற்கான பெரும் சக்தி உள்ளது. அந்த விஷ்ணுபதியிடம் தானா?

அவனைச் சரண் புகுந்தால் நான் இந்த சிடுக்குகளில் இருந்தெல்லாம் கடைத்தேறி விடுவேனா?''

பேயாழ்வார் முன் மண்டியிட்டு கண்களில் நீர் பெருகக் கேட்கிறார் திருமழிசையார்.

குருவின் செவிகளில் கொட்டியாகிவிட்டது. இனி அது பார்த்துக் கொள்ளும். பேயாழ்வாரும் புன்னகைக்கிறார்...

# 6

குருவாகிய பேயாழ்வார் முன்னிலையில் ஒரு பணிவான சீடனாய் தன் உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் கேள்விகளை எல்லாம் வைத்துவிட்டு நிற்கும் திருமழிசையாரை, பேயாழ்வாரும் கருணை ததும்பப் பார்த்தார்.

காடு மேடெல்லாம் அலைந்து திரிந்துவிட்டு, யார் யாரிடமெல்லாமோ சென்று யாசித்துப் பார்த்தும் ஒன்றும் கிடைக்காது போய், இறுதியாக ஓரிடத்திற்கு வந்து நிற்கும் ஒருவரைப் போலத்தான் திருமழிசையாரும் பேயாழ்வாருக்குத் தோற்றமளித்தார்.

இப்போது இவரும் கைவிட்டால் அவ்வளவுதான்!

ஆனால் பேயாழ்வார் என்ன சாமான்யரா இல்லை சராசரியா... திருமழிசையாரைக் கைவிட?

''அப்பா... விஷ்ணுபதியைச் சரண் புகுந்தால் நான் கடைத்தேறி விடுவேனா என்று கேட்டாய்? தாய் மடியைத் தேடி அலைந்த குழந்தை அதன்பின் பாசத்திற்குத் தவிக்குமா? இல்லை பசியால்தான் அழுமா? விஷ்ணுவும் அப்படித் தானப்பா... அவனே சர்வேஸ்வரன்.

துளியும் மாறாமல், அணுவளவும் குறைவும் படாமல், எல்லைகள் என்பதே இல்லாமல், துளியும் மாசுபடாமல் இருப்பது எதுவோ அதுவே ஈஸ்வரம் என்பதாகும். இதனால் மட்டும் அழியாப் பேரின்பத்தை அளிக்க முடியும். அந்த ஈஸ்வரத்தை உடைய சர்வேஸ்வரன் அந்த விஷ்ணு மாத்திரமே!

இவனுக்கே ஐந்து வகை வடிவங்கள். பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யா மித்வம், அர்ச்சா ரூபம் ஆகியவை.

வைகுண்டத்தில் அவன் கிடக்கும் பாவமேபரத்துவம் படைத்தும், காத்தும், அழித்தும் அவன் புரியும் வினைகளே வியூகமாகும்.

அவதாரங்கள் எடுத்துவந்து ரட்சிப்பதே விபவமாகும்.

நம் ஆன்மாவில் நிரம்பி வழிவதே அந்தர்யாமித்வமாகும்.

நம்மாலே நாம் விரும்பும் வண்ணம் நாமம் கொண்டு அர்ச்சிக்கப்படுபவனாக அவன் திகழ்வதே அர்ச்சா ரூபமாகும்.

இப்படிப்பட்ட அந்த விஷ்ணுவாகிய நாராயணனே பரம்பொருள். அவன் பரமாத்மா என்றால் நாமெல்லோரும் ஜீவாத்மாக்கள். அவனை நாம் நாமத்தால் அனுபவிக்கலாம். அவன் மேலான பக்தியால் லயிக்கலாம். மற்றபடி அவன் வேறு, நாம் வேறு...

ஒரு வைணவன் இவைகளை துளியும் குழப்பமின்றி உணர்ந்திருக்க வேண்டும். அடுத்து குருபக்தியோடு திகழ வேண்டும். குருவைச் சரண் புகுந்தாலே போதும். அவரே தன் சீடனை அந்த விஷ்ணுவிடம் கொண்டு சேர்த்து விடுவார்.

'பாராயணம், த்யானம், சத்சங்கம், பரோபகாரம் - இந்த நான்கையும் உடையவன் எவனோ அவனே ஸ்ரீவைஷ்ணவன். அந்த நாராயண மூர்த்தியோடு நாம் எப்படி வேண்டுமானாலும் அன்பு காட்டலாம். அனுமனைப் போல தாசனாகத் திகழலாம். அர்ச்சுனன் போல நண்பனாய்க் கொள்ளலாம். யசோதை போல பாசம் காட்டலாம். கோபிகைகள் போல காதல் கொள்ளலாம். அனைத்து உணர்வுகளுக்கும் இடமளித்து நம்மை ரட்சிப்பவன் அவன்.

அவனை அடைந்து விட்டவர்க்கு பிறப்பு இறப்பு என்னும் சுழற்சி இல்லை.

'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்பதே அவன் உள்ளம் குளிரச் செய்யும் மந்திரமாகும்.

'அது நன்று இது தீது என்று ஐயப்படாதே
மது நன்று தண்துழாய் மாலவன் - பொதுநின்ற
பொன் அம் கழலே தொழுமின் முழு வினைகள்
முன்னம் சூழலும் முடிந்து!'

என்று பாட்டாலும் அந்த விஷ்ணுவை துதி செய்து திருமழிசையாருக்கும் உபதேசிக்கிறார் பேயாழ்வார்!

திருமழிசையாரும் அவைகளை எல்லாம் கேட்டு தெளிவுற்றதோடு வைணவ நெறியை முழுதாக அப்போதே கைக் கொண்டு வாழ சங்கல்பமும் செய்து கொள்கிறார்.

அவருக்குள் ஒழுங்கின்றிக் கிடந்த பலவித சக்திகளும் அவர் வைணவனாய் ஆன நிலையில் ஒரு ஒழுங்கிற்கு வந்தது. வைணவ தர்மங்களை 'பாராயணம், த்யானம், சத்சங்கம், பரோபகாரம்' என்றே வாழத் தொடங்கினார்.

பேயாழ்வாரை குருநாதராக வரித்த கையோடு அவர் போற்றித் துதி செய்த திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாளையும் துதித்து மெய்யுருகிப் போனார்.

பேயாழ்வாரால் திருமழிசையாருக்கு அவரது சக ஆழ்வார்ப் பெருமக்களான பூதத்தாழ்வார் மற்றும் பொய்கையாழ்வாரின் தரிசனமும், ஆசிகளும் கிடைத்தன. அவர்கள் வாயாலே கடல் மல்லை குறித்தும் காஞ்சியிலுள்ள திருவெஃகா குறித்தும் அறிந்தும் அங்கெல்லாமும் யாத்திரை மேற்கொண்டார்.

இடையில் திருமழிசையாருக்கு வினோதமான சில அனுபவங்களும், திசை மாற்றங்களும் ஏற்படப் பார்த்தன. ஜாலவித்தைகள் பல கற்று ஒருவன் திருமழிசையாரைப் பற்றி அறிந்து அவரைச் சீண்ட முயன்றான். அவர் எதிரில் ஒரு துண்டுக் கயிற்றை பாம்பாக காட்டியும், ஒரு பழத்தை உருட்டிவிட்டு மறையச் செய்தும் 'நான் யார் தெரியுமா?' என்பது போலப் பார்த்தான்.

பதிலுக்கு தான் யார் என்று வார்த்தைகளில் காட்டாமல் தான் அணிந்திருந்த துளசி மாலையை நாராயண நாமம் கூறி நெகிழ்த்தி விட்டுக் கொண்டார் திருமழிசையார். அடுத்த நொடி அது நவரத்ன மாலையாக அவர் மார்பில் மின்னியது. பக்கத்துக் கோவில் கோபுரத்து குரங்குச் சிற்பம் ஒன்று உயிர்பெற்று பாய்வதற்குத் தயாரானது.

அடுத்த நொடி அந்த ஜால விந்தைக்காரன் திருமழிசையார் கால்களில் விழுந்து விட்டான். இந்த சித்துக்களை கற்பனை என்றும் கூறுவோர் உண்டு.

ரசவாதி ஒருவனோ திருமழிசையார் திசைமாறிச் செல்வ தாகக் கூறியதோடு நானறிந்த ரசவாதம் போன்றவைகளை அவர் அறிந்திட பல காலமாகும் என்று ஏகடியம் பேசினான்.

பதிலுக்கு ஒரு இரும்புத் துண்டை எடுத்து உடல் முழுக்கத் தடவி, மேனி மேல் சுரந்த வியர்வையில் அதைத் தோயச் செய்த பின் அதைத் துடைக்கவும் அந்த இரும்புத் துண்டு பளபளவென்று மின்னியது. ஆடிப் போனான் ரசவாதி.

''இரும்பு தங்கமானது பெரிதேயில்லை - இதயம் தங்கமாக வேண்டும் - விஷ்ணுவை இதயத்தில் நிரப்பு - தன்னால் ஆகிவிடும்'' என்று அவனுக்கு உபதேசித்து அவனையும் நாராயண பக்தனாக்கினார்.

காஞ்சி சென்ற சமயம் திருவெஃகாவில் அவர் தரிசித்த பள்ளி கொண்ட பெருமான் அவர் உள்ளம் கொள்ளை கொண்ட பெருமானாகவும் ஆகிவிட்டார்.

அந்தத் தலத்தை விட்டு நீங்காமல் அங்கு சில காலம் வாழத் தலைப்பட்டார். வளர்ப்புத் தந்தை பிரம்பாளனின் வயிற்றில் ஜனித்த கணிக்கண்ணனும் திருமழிசையாரிடம் சீடனாக வந்து இணைந்து கொண்டான்.

இருவரும் திருவெஃகாவில் தங்கி பள்ளி கொண்ட பெருமாளைத் தினமும் துதித்து பக்தி செய்தனர். இவ்வேளையில் இவர் பல பாடல்களையும் பாடினார்.

'சொல்லினால் தொடர்ச்சி நீ சொல்லப்படும் பொருளும் நீ
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ
சொல்லினால் படைக்க நீ படைக்க வந்து தோன்றினார்
சொல்லினால் சுருங்க நின் குணங்கள் சொல்ல வல்லவரே!'

என்று இவர் பாடிய திருச்சந்த விருத்தப் பாடல் பொருள் நிரம்பியதாகும். சொல்' என்று இங்கே திருமழிசையார் சொல்லுவது வேதத்தை யாகும். ''வேதத்தின் தொடர்ச்சி நீ... அதன் ஒட்டுமொத்த பொருள் வேறு - நீ வேறில்லை. அந்தப் பொருளை அறிவானது உணரும்போது மனதுக்குள் ஒரு ஒளி ஏற்படும். அந்த ஒளியாகிய சோதியும் நீதான். அந்த வேதங்களைப் படைக்க வந்த பிரம்மாவாலும் உன்னுடைய குணங்களைக் கூற முடியாது. ஏனென்றால், நீ படைத்த பிரம்மாவால் நின்னை அறிவது எங்ஙனம்?'

- என்று விஷ்ணுவின் எல்லைகளற்ற பரந்த விரிந்த தன்மையை பாடி மகிழ்கிறார்.

திருமழிசையாரைப் பற்றிச் சிந்திக்கையில் ஒரு தீந்தமிழ்ப் பாடலொன்றையும் அந்தப் பாடலுக்கு பரம்பொருளாகிய அந்தப் பெருமானே கட்டுப்பட்டு நடந்ததையும் சான்றோர் உலகம் சொல்லிச் சொல்லி மகிழும்.

அந்தப் பாடலின் பின்புலத்தில் ஒரு சுவையான சம்பவமும் உண்டு...

திருவெஃகாவில் கணிக்கண்ணனுடன் பக்தி செய்து வந்த வேளையில் ஒரு மூதாட்டி திருமழிசையாருக்கு மனையில் எல்லா உதவிகளையும் செய்து வந்தாள். வீடு கூட்டுவது, மெழுகுவது, சமைப்பது என்று அவள் புரிந்த தொண்டிற்கு நடுவில் முதுமை காரணமாக அவள் சில உபாதைகளையும் அனுபவித்தாள். பெரும் உபாதையோடு அவள் அவதிப்படுவது திருமழிசையாரையும் வருத்தியது. அவளது உபாதைக்குக் காரணம் முதுமை. அதைப் போக்கி விட்டால் அவள் ஆரோக்யத்துக்கு மாறிவிடுவாள். ஒரு தாயைப் போல இருந்து அவள் புரிந்த சேவைக்கு பதிலாக திருமழிசையாரும் அவளுக்கு இளமையைத் தரச் சித்தமானார்.

சித்த புருஷராக சில காலம் திகழ்ந்திருந்தபோது யௌவனம் தரும் மூலிகைகள் குறித்து அறிந்திருந்தமையால் அதைக் கொண்டு அந்த மூதாட்டியை ஒரு மண்டலத்தில் அழகிய இளம் பெண்ணாக்கி விட்டார்!

இந்த விஷயம் அப்போது காஞ்சியை ஆட்சி செய்து வந்த அரசன் காதுவரை சென்றுவிட்டது. அரசனால் அதை நம்பவும் முடியவில்லை. ஆயினும் இளம் பெண்ணாகிவிட்ட மூதாட்டியை அரசவைக்கே வரவழைத்து அவளிடமே நேரில் கேட்டு வியந்தும் போனான்.

பட்டமும் பதவியும் உடைய அரசன் மனதிலும் தனது முதுமையை வெற்றி கொள்ளும் ஆவல் துளிர்விடத் தொடங்கியது. திருமழிசையாரை அழைத்து வருமாறு தன் வீரர்களிடம் பணித்தான். ஆனால் மன்னன்முன் வந்து நின்றது கணிக்கண்ணன்தான்!

# 7

காஞ்சி மன்னன் முன்னாலே கணிக் கண்ணன். மன்னன் சந்திக்க விரும்பியதோ திருமழிசையாரை... அரசன் ஆச்சரியமாக வினவ, ஒரு பெரும் விவாதமும் தொடங்கி விட்டது...

''யாரப்பா நீ?''

''தாங்கள் அழைத்துவரப் பணித்த திருமழிசைப்பிரானின் அத்யந்த சீடன் நான் அரசே...''

''திருமழிசையார் வராமல் நீ வந்ததன் நோக்கம்?''

''எனது குருநாதர் எம்பெருமான் குடி கொண்டிருக்கும் ஆலயமல்லாது வேறு எங்கும் தன் விருப்பமோ, சரியான காரணங்களோ இன்றிச் செல்ல மாட்டார் அரசே!''

''ஒரு அரசன் அழைக்கும்போது காரணங்களே தேவையில்லை. ஓடி வந்து நிற்க வேண்டியது ஒரு பிரஜையின் கடமை.''

''அவர் வெறும் பிரஜை மட்டுமல்ல... அந்தத் திருமாலின் திருவடித் தொண்டர் - மேலாக ஆயகலைகள் அவ்வளவையும் அனுபவத்தால் அறிந்தவர். மாயை தெளிந்தவர்! எனவே அவர் வரையில் அந்தத் திருமாலே தாய், தந்தை, அரசன் எல்லாம். எனவே அந்தத் திருமாலன்றி எவர்க்கும் அவர் கட்டுப் படமாட்டார்.''

''இது ஆணவப் பேச்சு. அவரை நானொன்றும் தண்டிக்க அழைக்கவில்லை. அவரின் சித்த ஜாலமறிந்து அதன் மூலம் நானும் இளமையைப் பெற விரும்புகிறேன். என் விருப்பத்தை அவர் ஈடேற்ற வேண்டும். அது அவர் கடமை.''

''எப்படி அரசே? அவர் என்ன உங்கள் அரசவையில் கைகட்டி ஊழியம் புரிபவரா... உங்கள் விருப்பத்தை ஈடேற்றுவதை கடமை என்கிறீரே?''

''கணிக்கண்ணா, நீ அதிகம் பேசுகிறாய்... ஒரு கிழட்டுப் பணிப்பெண்ணை இளமை ததும்பும் யவ்வனத்துக்கு மாற்ற

முடிந்தவருக்கு, எனக்கும் அதைச் சாதிப்பதில் எது குறைந்து விடும்?''

''மன்னா... அந்தப் பணிப்பெண் என் குருவிடம் எதையும் கேட்கவில்லை. அவள்மிகுந்த தொண்டுள்ளம் படைத்தவள். இறை தொண்டாற்ற முதுமை ஒரு பெரும் தடையாக இருக்கிறதே என்று அவள் வருந்தியதை தானாக உணர்ந்து அவளது தொண்டினை ஊக்கப்படுத்தவே என் குருவானவர் அவளுக்கு யவ்வனம் அளித்தார்.''

''இருக்கலாம்... நான் இந்த நாட்டு அரசன். இந்த நாட்டை நிர்வகிக்க எனக்கும் யவ்வனம் தேவைப்படுகிறது. எனது அரசாட்சி கூட ஒரு சேவைதான்...''

''மன்னிக்க வேண்டும் அரசே... அரசாட்சி ஒரு சேவை என்பதை என்னால் ஏற்க முடியாது. அதை ஒரு கடமை என்று கூறுங்கள். ஒப்புக் கொள்கிறேன். அந்த கடமைக்குப் பரிசாகவும், பயனாகவும் மாடமாளிகையில் பணிப்பெண்கள் சூழ ராஜபோகத்துடன்தான் உங்கள் வாழ்க்கை சென்றபடி இருக்கிறது. எந்த வகையிலும் அந்த மாதரசியோடு உங்களை ஒப்பிடவோ உங்களுக்கு யவ்வனம் அளிக்கவோ நியாயங்கள் இல்லை.''

''உன் கருத்தை ஏற்க முடியாது. உன்னோடு நான் தொடர்ந்து விவாதம் புரியவும் தயாரில்லை. என் விருப்பத்தை உன் குரு நாதரிடம் சொல்லி என்னையும் இளமையானவனாக ஆக்கிவிடு. இல்லாவிட்டால் நடப்பதே வேறு...''

''நல்லது அரசே... உங்கள் கருத்தை நான் என் குருநாதரிடம் கூறுகிறேன். அவர் கூறும் பதிலையும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.''

- என்ற கணிக்கண்ணன் அரசனிடம் விடை பெற்று திருமழிசையாரைச் சந்தித்து நடந்தவைகளைக் கூறிமுடித்தான்.

திருமழிசையார் முகத்தில் புன்முறுவல்!

''முடியவே முடியாது என்று கூறிவிடு. முதுமையில் இருக்கும்போதே இத்தனை அதிகார மமதையோடு பேசிடும் இந்த அரசன் இளமையை அடைந்துவிட்டால் மமதை

கூடிப்போவதோடு சர்வாதிகாரமும் புரியத் தொடங்கிவிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அடுத்து... யவ்வனம் என்பது அருள் சார்ந்தது. அதை அதிகாரம் வென்று விட்டதாக நாளைய வரலாறு கூறிவிடக் கூடாது. எனவே எக்காரணத்தைக் கொண்டும் என்னால் இந் நாட்டு மன்னனின் முதுமையைப் போக்க முடியாது. இதை முடிவாகவே கூறிவிடு.'' என்றார் திருமழிசையார்.

கணிக்கண்ணனும் திரும்பிச் சென்று திருமழிசையார் கருத்தைக் கூறி நின்றான்.

அரசனுக்குக் கோபத்தில் முகம் சிவந்து விட்டது.

''இந்த நிலையில் உன்னை தண்டித்தாலன்றி என் கோபம் அடங்காது. உனக்கு நான் அளிக்கப் போகும் தண்டனையை பார்த்து உன் குருவின் மனமும் மாற வேண்டும். ஒரு அரசன் என்பவனின் அதிகார பலம் எப்படிப் பட்டது என்பதை உணர்ந்து அவரும் என்னை நாடி வந்து மன்னிப்பு கேட்க வேண்டும்.''

- என்று பலத்த கோபத்துடன் பேசிய மன்னன் ''இந்த நொடியே நீ இந்த காஞ்சி மண்ணைவிட்டு வெளியேற வேண்டும். என் நாட்டினுள் எந்த ஒரு பாகத்திலும் நீ இருக்கக் கூடாது. உனக்குக் குடிக்க ஒரு குவளைத் தண்ணீரைக் கூட யாரும் வழங்கக் கூடாது. நாளை சூரிய உதயத்தின்போது என் நாட்டின் எல்லையை நீ கடந்திருக்க வேண்டும். இது என் ஆணை.'' என்றான் அரசன். சீடன் நேராக திருமழிசையார் குடிலை அடைந்தான்.

திருமழிசையார் விவரம் கேட்டு ஒரு வினாடி கோபம் கொண்டார். பின்று கணிக் கண்ணனைப் பார்த்து ''கண்ணா... இது உனக்கு விதிக்கப்பட்ட தண்டனை அல்ல. எனக்கு விதிக்கப்பட்ட தண்டனை. எனக்கு விதிக்கப்பட்ட தண்டனை என்பது கூட பொருந்தாது - இது அந்தத் திருமால் அடியவர்க்கு விதிக்கப்பட்ட தண்டனை. அடியவர்களிடம் நானே இருக்கிறேன் என்று அந்தப் பெருமானும் உரைத்தபடியால் இது எம்பெருமானுக்கே விதிக்கப்பட்ட தண்டனை. ஆக நீயும் சரி, நானும் சரி, அந்தப் பெருமானும் சரி மூவருமே இந்த

காஞ்சித் தலத்தில் இருப்பது பிழை. அதிகார மமதை கொண்ட அரசனுக்கு அருளாட்சி என்பது எப்படியென்றே தெரியவில்லை. அதை அவன் உணரும் நேரம் வந்துவிட்டது. இரு, உன்னோடு நானும் புறப்படுகிறேன்.''

என்று திருமழிசையாரும் கணிக் கண்ணனுடன் சேர்ந்து கொண்டார்.

அப்படியே இருவருமாய் நடந்து திருவெஃகா தலத்தின் ஆலயம் முன் நின்றனர். திருமழிசையார் ஆலயத்தின் கோபுரத்தைப் பார்த்து நெகிழ்வுடன் வணங்கத் தொடங்கினார். பின் அங்கிருந்தபடியே பாடல் ஒன்றையும் பாடத் தொடங்கினார்.

**'கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - துணிவுடைய**
**செந்நாப் புலவனும் செல்கின்றேன் நீயும் உன்றன்**
**பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்.'**

- என்று பாடவும் உள்ளே திருச்சன்னதியில் பாம்பணைந்த பெருமாளாய் கிடக்கும் பெருமாளிடம் ஒரு சத்யாவேசம்!

திருமழிசையார் சொல்லை மெய்ப்பிப்பது போல திருச்சன்னதிக்குள் கிடந்த பெருமாள் அடுத்த நொடி மாயமாகி விட்டார்.

இதையறிந்த ஆலயத்து பட்டர் 'பெரும் அபச்சாரம் நிகழ்ந்துவிட்டதை' உணர்ந்து ஓடி வந்து ஊராரிடம் கூறவும் எல்லோரிடமுமே அதிர்ச்சி.

செய்தி அரசனையும் சென்று சேர்ந்தது. அடுத்த நொடியே ஆடிப் போனான். திருவெஃகா ஆலயத்தை அடைந்து பார்த்தவன் பதறத் தொடங்கினான்.

''எம்பெருமானே, நான் ஆத்திரத்தில் அறிவை இழந்து விட்டேன். என்னை மன்னிப்பாயாக. இந்த நொடியே என்னுடைய நாடு கடத்தும் உத்தரவை நீக்குகிறேன். அது மட்டுமல்ல; திருமழிசையாரையும் நான் எதற்காகவும் வற்புறுத்தமாட்டேன். அவரது சீடனாகத் திகழ்ந்து நற்கதி அடைய முயல்வதே இனி என் சித்தம்.''

- என்று பிரார்த்தித்துக் கொண்டவன் தானே புறப்பட்டுச் சென்று நாட்டின் எல்லை நோக்கி நடந்தபடி இருந்த கணிக் கண்ணன் மற்றும் திருமழிசையாரின் கால்களில் விழுந்து தன் தவறுக்கு மன்னிப்புக் கோரி நின்றான்.

கண்களில் கண்ணீர் பெருக நின்ற மன்னன் ஆலயத்தினுள் பெருமாளும் மாயமாகி விட்டதைச் சொன்னபோதுதான் திருமழிசையாருக்கே தனது பாடலின் சக்தி புரிந்தது.

அது பாடலின் சக்தி மட்டுமா? பரந்தாமனின் ஆசியும்தானே?

உள்ளம் நெகிழ்ந்திட, உடம்பெல்லாம் சிலிர்த்திட ஆகாயத்தைப் பார்த்துத்தான் விசும்ப ஆரம்பித்தார்.

''இந்த அடியவன் பாட்டை சாசனமாக்கி விட்டவனே...''

இன்று இந்த ஏழையின் குரல் கேட்டு ஓடிச் சென்றாய்.

அரசன் தன் தவறை உணர்ந்துவிட்டான். ஆதிநாயகா, நீ திரும்ப வர வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டவர், தான் முன்பு பாடிய பாடலை சற்று மாற்றி திரும்பப் பாடினார்.

**'கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் - துணிவுடைய**
**செந்நாப் புலவனும் செலவொழிந்தான் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய் விரித்துக் கொள்.'**

- என்று பாடவும் திருமழிசையார் சொன்ன வண்ணமே திருவெஃகா ஆலயத்தினுள் கருவறைக்குள் பெருமானின் திவ்ய ரூபமும் தோன்றி அமர்ந்தது. அன்று முதல் தான், 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்று அவரும் அழைக்கவும் படுகிறார்.

இதனால் திருமழிசையாரின் புகழ் எட்டுத்திக்கும் பரவியது. இன்றும் இந்த நிகழ்வை நினைவுபடுத்தும் விதமாக திருவெஃகாவில் எழுந்தருளியுள்ள பெருமாள் அங்கிருந்து வெளியேறி ஓரிரவு காஞ்சிப்புறத்திலுள்ள பாலாற்றங்கரையில் தங்கிவிட்டு மறுநாள் திரும்ப வரும் ஒரு உத்சவம் நடைமுறையில் உள்ளது.

அப்படிச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் தங்கும் இடம்தான் 'ஒரிக்கை' என்றும் அழைக்கப்படுகிறது.

திருமழிசையார் பேச்சைக் கேட்ட பெருமாள் அதன்பின் பெரும்புலியூர் எனும் தலத்தில் திருமழிசையார் செல்லும் திசை எதுவோ அதைப் பார்த்து நின்றானாம். இது அவர் வாழ்வில் நாம் அறியவரும் அடுத்த அதிசயமாகும்.

இதை அறிந்த பெரும்புலியூர் வேத பண்டிதர் ஒருவர் அதிசயித்துப்போனார். இவர் தன் இல்லத்தில் அவ்வப்போது ஹோமங்கள் செய்து இறைவனை துதிப்பவர். அந்த ஹோம நிகழ்வுக்கு இவரை அழைத்து அதில் பங்கேற்கச் செய்து மகிழ்ந்தார்.

ஆனால் திருமழிசையாரை ஒரு பிராம்மணராக ஏற்க மறுத்த சிலர் அந்த வேதபண்டிதர் செயலை இகழ்ந்தனர். அது மட்டுமல்ல, ''காஞ்சியில் நிகழ்ந்த 'சம்பவம் திருமழிசையாரின் கண்கட்டு வித்தை. அதற்கும் எம்பெருமானுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. எங்கே இங்கே காட்டட்டும் தன் பக்தியை... இது ஹோமம் நிகழ்ந்த இடம். இங்கு கண்கட்டு பலிக்காது!'' - என்றனர்.

கலியுகத்தில் எவராக இருப்பினும் அவர்கள் பழிச்சொற்களுக்கு ஆளாவதும், சோதனைகளுக்கு ஆட்படுவதும் இயல்புதானே?

திருமழிசையார் தன்னை கண்கட்டு வித்தை செய்தவன் என்று கூறியது குறித்து வருந்தவில்லை. மாறாக அந்த ஹோம நிகழ்வில் பெருமானை மனதாரத் துதிக்கவும். அவரைச் சுற்றியே ஒரு பெரும் ஒளி வட்டம் தோன்றியதோடு அவரது திருமார்பில் பாற் கடலில் துயில் கொண்டிருக்கும் அந்த பரந்தாமன் லட்சுமி பிராட்டி சகிதம் அனைவர்க்கும் காட்சி தந்து மறைந்தான்.

அதன்பின் அவரை யாரும் அற்ப சித்தராக பார்க்கவில்லை. அற்புத ஆழ்வாராகவே பார்க்கத் தொடங்கினர். திருமழிசையாரும் தலயாத்திரை புரிந்தபடி கும்பகோணம் வந்து சேர்ந்தார்.

திருமழிசையார் தன் இருப்பிடம் நோக்கி வருவது கண்டு அந்த ஆராவமுதன் அவரை எதிர்கொள்ள எழுந்திருக்க முயன்றானாம். இன்றும் அந்தக் கோலத்தில்தான் அங்கே பெருமான் சேவை சாதிக்கிறார். பெருமானின் பெருங் கருணையும் தன் மேலான வாஞ்சையையும் உணர்ந்த திருமழிசையார் தன் மிகுந்த காலத்தை அங்கேயே கழிக்கச் சித்தமாகி விட்டார். அங்கிருந்து கொண்டுதான் அநேக பாடல்களைப் பாடினார்.

தம் பாடல்களை அந்த வைகுண்டபதி ஏற்பதை உலகோர் உணர்த்திட ஒரு காரியம் செய்தார்.

குடந்தை காவிரியில் தான் எழுதிய பாடல்களை வெள்ளத்தில் விட அவைகளில் பெரும்பாலானவற்றை அந்த திருமால் தனக்கே என்று எடுத்துக் கொண்டு உலகத்தார் உய்யவும் உணரவும் விரும்பி சில பிரபந்தங்களை ஏற்க மறுத்திட அவை வெள்ளத்தை எதிர்த்து கரை ஏறி ஆழ்வார் திருவடிகளை அடைந்தன.

அவைதான் 'நான்முகன் திருவந்தாதி', 'திருச்சந்த விருத்தம்' என்னும் பிரபந்தங்கள்!

இத்தனை பெரும் பேறு பெற்ற திருமழிசையார் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்ட ஒரு பாடலும் மிக பிரபலமானது மட்டுமன்று - அது ஆழ்ந்த பொருளையும் கருத்தையும் உடையது.

''குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன்
புலன்கள் ஐந்தும் வென்றிலேன், பொறியிலேன் புனித நின்
இலங்குபாத மன்றி மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே''

- என்கிற இவரது பாடல் தூய்மையான உறுதியான ஆழமான பக்தி மட்டும் மால்வன் மேல் கொண்டால் போதும். அவன் தானே வந்து ஆட்கொள்வான். இதற்காக உயர் குலத்தில் பிறக்க வேண்டும். பெரும் கல்வி கற்க வேண்டும். ஐம்புலன்களை அடக்கி தவம் புரிய வேண்டும் என்பதே யில்லை என்பது தான் திருமழிசையார் மூலம் நாம் உணர வேண்டிய செய்தியாகும். அடுத்து நம்மாழ்வார்...

# 8

ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவதரித்த நம்மாழ்வாரைப் பற்றி இனி சிந்திப்போம்...

இவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர். மதுரையை தலைநகரமாகக் கொண்டிருந்த பாண்டிய நாடானது அன்று தென்பகுதி முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தது. அந்த வகையில் இன்றைய திருநெல்வேலிச்சீமை பாண்டிய மண்ணின் ஒரு பெரும் செழிப்புள்ள நாடாக விளங்கியது.

காரணம் இம்மண்ணில் பாய்ந்தோடும் தாமிரபரணி எனும் நதிதான்! இதற்கு அந்த நாளில் 'பொருநையாறு' என்றும் ஒரு பெயர் உண்டு. இந்த தாமிரபரணிக்கு பல சிறப்புகள்... இது பொதிகை மலையில் தோன்றி நெல்லைச் சீமைக்குள் ஓடி, அங்கேயே திருச்செந்தூரை ஒட்டிய கடலிலும் கலந்து விடுகிறது.

தமிழகத்தின் வற்றாத ஜீவநதி இன்று இது ஒன்றுதான்! இதனால்தான் நெற்பயிர் செழித்து வளரவும் அதையே நாற்புறமும் மலை போல குவித்து வைத்துவிட்டதில் ஒரு வீட்டிற்கோ, தோட்டத்திற்கோ வேலியே தேவைப்படாமல் போய் விட்டதாம். இதைப் பார்த்தே திருநெல்வேலி என்று பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள். (இந்த பெயரில் பின்புலத்தில் வேறு ஒரு கதை வடிவமும் உண்டு.)

நெல்லைச் சீமையில் மட்டும்தான் தமிழர்கள் பகுத்தாய்ந்து உணர்ந்த ஐவகை நிலப்பரப்பும் இருக்கிறது. அதாவது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்கிற ஐவகை நிலங்களையும் ஒரு நாடு தன்னகத்தே கொண்டிருப்பது நெல்லையில் மட்டும்தான்!

வற்றாத ஜீவநதி, அருவி, கடல், ஏரி, குளம் எனும் ஐந்தும் இருப்பது நெல்லையில் மட்டும்தான். ஒன்று வீழும் - ஒன்று ஓடும் - ஒன்று தேங்கி நிற்கும் - ஒன்று பரந்து கிடக்கும் - ஒன்று அனைத்தையும் தன்னுள் கொள்ளும் (கடல்).

இதனால்தான் நெல்லையில் வைணமும் சரி, சைவமும் சரி பெரும் பேற்றோடு விளங்கி வருகின்றன. செந்தூரில் கௌமாரமும், சங்கரன் கோவிலில் சைவ, வைணவ, சாக்தமும், நவ திருப்பதிகளில் வைணவமும் தழைத்து ஓங்கின.

இதில் வைணவம் பெரிதும் தழைத்தது இந்த மண்ணில்தான். இப்படி ஒரு மண்ணில் திருநகர் என்றும் திருக்குருகூர் என்றும் விளிக்கப்படும் ஒரு ஊரில் பிறந்தவர்தான் நமது நம்மாழ்வார்! இந்த ஊரில் வேளாளர் எனப்படும் உழைப்பாளர் குடியிலே சிறந்து விளங்கிய பொன்காரி என்பானுக்கும் உடைய நங்கை என்பாளுக்கும் வேண்டுதல் பிரசாதமாய்ப் பிறந்தவர் இவர்.

காரியை திருநகரியின் அரசன் என்றும் கூறலாம். பாண்டிய மன்னனின் மேலாண்மையில் அவன் அரசுக்கும் கப்பம் கட்டிய நிலையில் குறுநில மன்னர்களாக என்று பலர் விளங்கினர். அவர்களின் ஒருவன் காரி!

காரியும் சரி, இவன் மக்களும் சரி வைணவத்தைத் தங்கள் கண்ணாகக் கருதி அதன் வழியில் தர்ம வாழ்வு வாழ்பவர்களாக விளங்கினர். இதனால் மாதம் மும்மாரி பெய்தது. பசி பஞ்சமும் இல்லை!

இவர்களுக்கெல்லாம் அந்த மாலவனே உற்ற கடவுள். மறந்தும் பிறந்தொழாத வீர வைணவர்களாகவும் திருநகரிக் காரர்கள் திகழ்ந்தனர் எனலாம். இந்தத் திருநகரியில் கோயில் கொண்டிருக்கும் அந்த திருமாலுக்கு நம்பி என்பது தலப் பெயராகும்.

மனித குலத்தின் மகத்தான உணர்வு நம்பிக்கை என்பதே... இந்த உணர்வையே தம் பெயராக இங்கே அந்தத் திருமால் கொண்டிருப்பதிலும் சூட்சும காரணங்கள் அனேகம்.

'நானே நம்பிக்கைக்குரியவன் - நானே நம்பிக்கையு மானவன் - ஆதலால் நானே நம்பி! என்னை நம்பியவர் கைவிடப்பட்டதேயில்லை' என்பதே அதன் மறை பொருள்.

இப்படி ஒரு பெரும் பொருளை தன்னகத்தே கொண்ட அந்த விஷ்ணுபதியை காரியும், உடைய நங்கையும் ஒருநாள் பெரும் உருக்கத்தோடு வழிபட்டனர். அதற்குக் காரணம் திருமணமாகி ஆண்டுகள் பல சென்றும் பிள்ளைப்பேறு ஏற்படவில்லை என்பதுதான்...

அதற்குக் காரணம் ஊழ்வினையோ இல்லை பாழ் வினையோ...? அதன் பொருட்டு அவர்கள் வருந்த வேண்டும் என்பது விதிப்பாடு. அதே சமயம் அந்த வருத்தத்தை நீக்கி அவர்கள் விருப்பத்தை ஈடேற்றும் ஆற்றல் அந்த நம்பியெம் பெருமானுக்கன்றி வேறு எவருக்கு இருக்க முடியும்?

உருக்கத்துடன் வேண்டிக் கொண்ட காரியும், நங்கையும் ஏகாதசி விரதத்தை பெரும் சிரத்தையுடன் அனுஷ்டித்தனர். அது மட்டுமின்றி அனுதினமும் அதிகாலை நம்பியம் பெருமாளை விஸ்வரூபத்தில் தொழுது முதல் உணவாய் தீர்த்தமும், திருத்துழாயும் உட்கொண்டு, கோவில் பசுவையும் வலம்வந்து அதற்கு அகத்திக் கீரையும், தவிடும் தந்து அது வயிறார உண்ணும் போது வணங்கி எழுந்தனர்.

இந்த உலகில் ஒன்றைத்தொட்டு ஒன்று இருக்கிறது. கண்காணாத் தொலைவில் இருப்பவரையும், இருப்பதையும் கூட காற்றின் மூலம் நாம் தொட்டுக் கொண்டே இருக்கிறோம். அவரும் நம்மைத் தொட்டபடியே உள்ளார் என்பது ஒரு சித்தாந்தக் கருத்து. இதை புலன்களால் உணர இயலாது. ஆனால் எண்ணமாகிய கருத்தால் உணரலாம்.

இப்படி எல்லாமே ஒன்றுக்குள் ஒன்று அடங்கியே உள்ளது.

இதுவே பரிகாரச் செயல்களிலும், வழிபாடுகளிலும் நாம் தீவிரம் காட்டும்போது நம் வினைக் கணக்கை நேர் செய்து தேவைப்படும் ஒன்றிற்குத் தகுதிப்படுத்தியும் விடுகிறது. இந்தச் செயல்களை உடையவனாகவும், அதை செய்விப்பவனாகவும் கூட அந்த மாலே இருக்கிறான்.

உடைய நங்கையின் கனவில் தோன்றி ''நானே உன் வயிற்றில் ஒரு ஆண் மகவாய் வந்து பிறப்பேன்'' என்றான் ஒரு நாள்!

இப்படிக் கனவில் வந்து கூறாமலும் அருள் செய்யலாம்தான். அவனும் அருள் செய்திருக்கிறான்தான்! ஆனாலும் கூறியதன் பின்னே நாம் உணர வேண்டிய பல காரணங்கள் உள்ளன. அதை உரிய வேளையில் நாமும் பகுத்து உணர்வோம். இப்போது கனவிற்கு வருவோம். உடைய நங்கை அந்தக் கனவாலே பெருமகிழ்ச்சி கொண்டாள். கணவனாகிய காரியிடம் கூறி மகிழ்ந்தாள்.

திருமாலின் திவ்ய வரம் தன் பணியைத் தொடங்கியது. உடைய நங்கையும் கருத்தரித்தாள். அவளைப் பின்னர் ஊரே கொண்டாடியது...

வைகாசி மாத விசாக நட்சத்திரத்தன்று அழகிய ஒரு ஆண்மகவையும் பெற்றெடுத்தாள். அன்று பௌர்ணமி வேறு...! வைகாசி மாத விசாக பௌர்ணமிக்கு பெரும் சிறப்பு கள் உண்டு. பொதுவாகவே முழுமதி நாளில் தாவரங்களில் இருந்து விலங்குகள் வரை எழுச்சியான உணர்வினை பெற்றிருக்கும், மனித மனமும் அதற்கு விதிவிலக்கானதல்ல... அதாவது இது ஒரு பூரண நிலை. இப்படி ஒரு நாளில் பல ஞானிகள் அவதரித்துள்ளனர். இந்த நாளால் அவர்களுக்குப் பெருமையா, இல்லை. அவர்களால் நாளுக்குப் பெருமையா என்பது ஒரு பட்டிமன்றக் கேள்வியாகும்.

இப்படி ஒரு நாளில்தான் நமது நம்மாழ்வாரும் பிறந்தார்!

அவர் எங்கு பிறந்தார்? உடைய நங்கை கனவில் எம்பெருமான் சொன்னதுபோல அவனல்லவா வந்து பிறந்திருக்கிறான்! புவனங்களைப் படைத்து, அவைகளோடு பஞ்சபூதங்களைப் படைத்து அதனுள் ஈ எறும்பு முதல் கோடானு கோடி உயிர்களையும் படைத்து, அவைகளை தனது நித்திரைத் தவத்தாலேயே பரிபாலித்தபடி பாற் கடலில் பள்ளிகொண்டிருப்பவன் என்ன காரணம் கருதி இப்படி ஒரு

சிற்றரசன் மகனாகப் பிறந்து வர வேண்டும் என்கிற கேள்வியும் கூடவே எழுகிறதல்லவா?

நம்மோடு இருக்கும் நம்மையே நாம் முற்றாக அறியமாட்டாது உலக மாயையில் சிக்கித் தவிப்பவர்களாக உள்ளோம். நாம் எப்படி இறைவனின் அந்த அவதார நோக்கை அறிய முடியும்!

ஆனால் ஒன்று...

நிச்சயம் ஒரு அற்புதமோ இல்லை வைபவமோ அதுவுமில்லை. திருவிளையாட்டோ இந்த மண்ணில் நிகழப் போகிறது - அது மட்டும் உண்மை!

இதே எண்ணம்தான் காரிக்குள்ளும் இருந்தது.

இறைவனையே பெற்றெடுத்துவிட்டோம் என்று ஒரு செருக்கும் அத்தோடு ஒரு ஆனந்தமும்கூட அவனிடம் சேர்ந்து கொண்டது. ஆனாலும் பிறந்த குழந்தை உலகில் பிறக்கும் எல்லாப் பிஞ்சுகளையும் போல அழவும் இல்லை. சிரிக்கவும் இல்லை. முகம் பார்க்கவும் இல்லை. அவ்வளவு ஏன் அது அசையக்கூட இல்லை!

என்ன விந்தை இது?

உடைய நங்கையும் இதை எல்லாம் கண்டு உடையத் தொடங்கினாள்! ஆனாலும் அவள் மனதுக்குள் 'அந்த நாரணனின் அவதாரம் இது... எனவே உலகப் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பதை எல்லாம் இந்தப் பிள்ளையிடம் எதிர்பார்க்கக் கூடாது' என்கிற எண்ணமும் இருந்து, 'அது அவளை தேற்றவும் செய்தது. அந்தத் தேறுதல் எல்லாம்கூட சில நிமிடத் துளிகள்தான். அவளது தாய்மை பெற்ற பிள்ளைக்குப் பாலினைத் தந்திட பெரிதும் துடிதுடித்தது.

ஒரு மகவிடம் பிறந்த கன்றுகூட மண்ணைத் தொட்டுவிட்ட சில மணிகளில் தாய்மடியில் பால்குடிக்கத் தொடங்கி விடுகிறது. இந்த உலகில் உடைய நங்கை பிள்ளையோ அவளின் மார்பை ஏறெடுக்கவும் மறுத்தது.

எல்லாமே ஆச்சரியம்! அதிசயம்.

இப்படி இருந்தால் எப்படி உயிர் வாழ முடியும்?

ஆனாலும் துளியும் திடம் குன்றாமல் நீரோ, மலமோ கொள்ளாமல் - தள்ளாமல் பசியை ஜெயித்து விட்டது போலவும். இயற்கைதான் என்னுள் அடக்கம். நான் அதற்குள் அடக்கமில்லை என்பது போலவும்தான் அது கிடந்தது.

இங்கெல்லாம்தான் உடைய நங்கைக்கு அவள் கண்ட கனவு கைகொடுத்தது. கனவில் அந்த நாரணனும் 'நானே வந்து பிறக்கப் போகிறேன்' என்று கூறாமல் போயிருந்தால் உடைய நங்கையால் இப்போது இருப்பதைப் போல ஒரு தேறுதலோடு நிச்சயம் இருக்க முடியாது.

இதை திருக்குருகூரும் ஆச்சரியமாய் பார்த்தது.

ஒருநாள் இருநாள் மூன்று நாட்கள் என்று பன்னிரண்டு நாட்களும் கழிந்திட பதிமூன்றாம் நாள் பிரசவ தீட்டை நீராடிக் கழித்த நிலையில் காரியும், உடைய நங்கையும் குழந்தையை கையில் ஏந்திக் கொண்டு நேராக ஆலயத்துக்குச் சென்று நம்பிரான் முன்னிலையில் நின்று கதறத் தொடங்கினர். இடையில் குழந்தைக்குப் பெயர் வைப்புச் சடங்குகளும் நிகழ ஆரம்பித்தன.

என்னதான் அசைவின்றிக் கிடந்தாலும் எழில் துளியும் குழந்தையிடம் குறையவில்லை. எனவே அதனை ஒட்டியும் காரி தன் தந்தையின் நினைவாகவும் மாறன் என்கிற பெயரைக் சூட்டவும் செய்தான். அவ்வேளையில் அங்கிருந்த பெரியவர் களில் ஒரு மாலடியாரும் இருந்தார். மிகுந்த அனுபவ ஞானமுடைய அவர் குழந்தை அசைவற்றுக் கிடக்க அதனுள் சடவாயு செயலாற்றாததே காரணம் என்று கண்டறிந்தார்.

வாயுக்கள் நம் உடலில் பத்துவிதமான தன்மையோடு செயலாற்றுகின்றன. 'பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவ தத்தன், தனஞ்ஜெயன்' என்று இவைகளுக்கு இவை செயலாற்றும் தன்மைக்கேற்ப பெயர்களும் உண்டு.

இதில் தேவதந்த வாயுவைத்தான் சிலர் சடவாயு என்பர். இந்த வாயுதான் சோம்பல் முறிப்பது, கோபம் கொள்ள வைப்பது, ஆவேசப்படுவது, அழுவது, பிறரைத் தாக்குவது போன்றவற்றுக்குக் காரணம். இது பலம் குன்றியிருந்தால் அந்த உடலுக்குரியவர் மிகவும் சாந்தமாகக் காணப்படுவார்.

எனவே இந்த சடவாயுவும் பதிமூன்று நாள் குழந்தையான நம்மாழ்வரிடம் துளியும் செயல்படாது இருப்பதே குழந்தை அசையாமலும், அழாமலும், கோபம் கொள்ளாமலும் இருக்கக் காரணம் என்பதை உணர்ந்த அந்த பெரியவர், ''சடவாயுகுன்றி அதனால் கோபதாபமின்றி கிடக்கிறது இந்தப் பிள்ளை. எனவே இவனை 'சட' கோபன் என்றும் கூறலாம்'' என்றார்!

# 9

சிற்றரசன் காரிக்கும், உடைய நங்கைக்கும் பிறந்த குழந்தைக்கு, காரி தன் தந்தை நினைவாக மாறன் என்கிற பெயரைச் சூட்டிவிட்ட நிலையில் சடவாயு அந்த குழந்தையை சூழ்ந்து செயலாற்றாது போனதால் சடகோபன் என்றும் ஒரு பெயரும் தோன்றிவிட்ட நிலையில், அந்த பதிமூன்று நாள் குழந்தையை திருநகரியின் ஆதிநாதனாகிய நம்பியெம் பெருமான் முன்கீழே கிடத்தி கண்ணீர் உகுக்கலானாள் உடைய நங்கை!

அழுவதும் சிரிப்பதும் இன்றி, உண்ணுவதும் துள்ளுவதும் இன்றி ஒரு பிள்ளை மரக்கட்டைக்கு உயிர் வந்தது போல் மட்டும் கிடந்தால் எந்தத் தாய் மனம்தான் வருந்தாது?

என்னதான் அந்த திருமால் அவள் கனவில் வந்து 'நானே உன் வயிற்றில் பிறப்பேன்' என்று கூறிய போதிலும், ஒரு பச்சைக் குழந்தை இப்படியா இச்சைக்கு வெளியே ஆடாது அசையாது கிடக்கும்?

இப்படி இருந்தால் உடம்பில் உயிர் எப்படி நிலைக்க முடியும்? இப்படி இருந்தால் தேகம்தான் எப்படி திரண்டு

எழும்? பிள்ளை வளர வேண்டாமா? இளம் பிராயத்தில் உண்ணும் உணவால்தானே முதுமையிலும் ஒருவர் திடகாத்திர மாக திகழ முடியும்! இதைக் கருதித்தானே 'இளமையில் வறுமை கொடியது' என்று கூறப்பட்டது.

ஆனால் இங்கே மன்னன் மகனாகப் பிறந்து ஒரு பிள்ளை கல்லாய்க் கிடக்கிறது? ஆலயத்துக்குள்தான் அந்த ஆதிநாதன் கல்லாயக் கிடக்கிறான் என்றால் அவதாரம் எடுத்து வந்த பின்பும் எதற்கு அந்த கல்லின் குணம்?

உடையநங்கை உள்ளம் குமுற அழுதாள்.

'இது என்ன சோதனை பெருமாளே... எதன்பொருட்டு இதுபோல் ஒரு நிலை? இதற்கு நான் ஒரு கல்லையோ கட்டையையோ பெற்றெடுத்திருக்கலாமே?' என்றெல்லாம் திருச்சன்னதி முன் குமுறினாள். மன்னன் காரியாலும் அவளைத் தேற்ற முடியவில்லை. அப்போது இருவருக்குமே ஆறுதலளிப்பதுபோல சிறு சம்பவம் ஒன்று அங்கே நடக்கத் தொடங்கியது.

திருச்சன்னதி முன் கிடத்தப்பட்ட பிள்ளையின் கை, கால்களில் ஒரு அசைவு ஏற்படத் தொடங்கியது. முகத்திலும் கன்னக் கதுப்புகளிலும் அசைவு! அப்படியே மல்லாந்திருந்த குழந்தை நொடியில் பிரண்டு ஒரு ஆறுமாதக் குழந்தை தவழ முற்படுவது போல தவழத் தொடங்கியது!

உடைய நங்கை உள்ளம் குளிர்ந்து போனாள். தன் கண்ணீரை அந்த மாலவன் துடைத்து விட்டதாகக் கருதி ''எம்பெருமானே உனக்கு கோடி நன்றிகள்'' - என்று உருக்கமாக கை கூப்பினாள்.

மன்னன் காரியும் அதே பரவசத்தோடு தவழத் தொடங்கிய பிள்ளை எங்கே செல்கிறது என்று பார்க்கத் தொடங்கினான்.

அந்த பதிமூன்று நாள் பிள்ளை மெதுவாக நீந்தி ஆதிநாதன் ஆகிய நம்பியெம்பெருமான் திருவடிகளை நெருங்கியது. அந்தத் திருவடியில் ஒரு துளசி மாலையும்

சார்த்தப்பட்டிருந்தது. குழந்தையின் சென்னியானது திருவடியை எட்டவும் அந்தத் துளசிமாலை குழந்தையின் கழுத்தில் விழுந்தது.

அதைக்கண்ட கூட்டத்தார் பக்திப் பெருக்கில் ''நாராயண... நாராயண...'' என்று உச்சபட்ச கோஷம் எழுப்பினர். கோயில் பட்டாச்சாரியாரும் குழந்தையைத் தொட்டுத் தூக்க முயன்றார். ஆனால் குழந்தையைத் தொட்ட மாத்திரத்தில் மின்சாரத்தைத் தீண்டியது போல் ஒரு வெட்டு... கைகளை உதறிக் கொண்டு நிமிர்ந்தார். அக்குழந்தை தவழ்ந்த நிலையில் அவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு திருச் சன்னதியை விட்டும் வெளியேறத் தொடங்கியது.

மன்னன் காரியும் உடையநங்கையும் பிள்ளை எங்கே செல்கிறது என்று பார்த்திடப் பின் தொடர்ந்தனர். அதுவோ தவழ்ந்து, தவழ்ந்து, தவழ்ந்து, தவழ்ந்து ஆலயத்தின் வெளிப்புறத்தில் அடப்பமாக வளர்ந்திருக்கும் புளியமரம் ஒன்றின் கீழ் வந்து அதன் நிழலில் தேங்கியது.

பின்னர் மல்லாந்து கொண்டு அந்த புளிய மரக் காற்றை உள்வாங்கியபடியே கை, கால்களை உதைத்துக் கொண்டது. மரக்கிளைகளையும் பார்த்து எச்சில் பிலிற்றியது.

என்ன ஆச்சரியம்... பதிமூன்று நாள் குழந்தை, ஒரு வாய் பாலோ நீரோ அருந்தாத குழந்தை தவழ்கிறது! அப்படித் தவழ்ந்த குழந்தை பெருமாளின் திருவடியைத் தீண்டிவிட்டு புளியமர நிழலுக்கும் தவழ்ந்தே வந்துவிட்டது.

இந்த மரத்ததடி நிழலில் அப்படி என்னதான் விசேஷம் என்று தெரியவில்லையே?

எல்லோரையுமே ஆச்சரியம் அப்பி எடுத்தது. அதுவரை பொறுமை காத்த உடையநங்கையும் இனியும் பிள்ளையை இப்படி வெறும் தரையில் விடுவது தகாது என்று உணர்ந்தவள் போல குனிந்து குழந்தையைத் தூக்க முயன்றாள்.

ஆனால் அவளால் தூக்க முடியவில்லை.

அதிர்ந்தாள். அவளைத் தொடர்ந்து மன்னன் காரி முயன்றான். ஊஹூம்... அவனாலும் குழந்தையைத் தூக்க முடியவில்லை.

அதைப் பார்த்த தாதியர், சேடியர் முதல் பலரும் முயன்றனர்.

இலஹிமா சித்தி காரணமாக நாவுக்கரசர் கடலில் மிதந்ததுபோல், மஹிமா சித்தி கொண்ட அனுமன் விசுவரூபம் எடுத்தது போல், இங்கே கரிமா சித்தியை கைக்கொண்டு குழந்தை மாறனும் கனத்தான்.

''குழந்தைக்கு அந்த இடத்தில் கிடக்கவே விருப்பம் - அதனால்தான் அது ஒருவரும் தொட்டுத் தூக்கிட முடியாது கனக்கிறது. திருவடியைத் தொட்டு வணங்கி விட்டதுபோல வந்து, இங்கே கிடக்கும் இந்தப் பிள்ளை 'நான் அந்தத் திருமாலின் திருவடி அம்சம்' என்றும் சொல்லாமல் சொல்லிவிட்டது'' - என்று ஒரு வைணவப் பெரியவர் நடந்து முடிந்த நிகழ்வுக்குள் இருக்கும் சூட்சுமத்தை அத்தனை பேருக்கும் புலப்படுத்தி விட்டார்.

இங்கேயே பிள்ளை இருக்க விரும்புமளவுக்கு இந்த புளிய மரத்துக்கும் அதன் நிழலுக்கும் அப்படி என்ன பெருமை?

பூவுலகில் விருட்சங்கள் பெரியவை! ஆயிரமாயிரம் ஆண்டுகள் கூட வாழ முடிந்தவை... உண்மையில் சிரஞ்ஜீவித் துவம் அவைகளுக்கே சாத்யம். அதனாலேயே ஆலயங்களுக் கென பிரத்யேக விருட்சங்களும் தீர்மானிக்கப்பட்டன. அந்த விருட்சத்தின் குணத்திற்கும் திருக் கோயிலுக்கும் ஒரு நுணுகிய தொடர்பும், அதனாலே ஊருக்கே பெரும் நன்மைகளும் விளைந்தபடி இருக்கும் என்பதே விருட்சங்களுக்கு பின்னால் இருக்கும் நுட்பமான விஷயமாகும்.

ஆதிநாதன் ஆலயத்துப் புளியமரத்துக்கு அப்படி என்ன பெருமை? அதிலும் அது பூப்பதில்லை - காய்ப்பதில்லை. அதாவது புளிப்புச் சுவையை அது ஊருக்குத் தருவதில்லை. ஆறு சுவையில் ஒரு சுவைதான் புளிப்பு. இந்தப் புளிப்புப் பற்றை வளர்க்கும் தன்மை உடையது. ஒவ்வொரு சுவைக்குப்

பின்னாலும் ஒரு தன்மை உண்டு. அந்த வகையில் சாப்பாட்டில் பற்றுதலுடன் சாப்பாட்டு ராமனாக மட்டுமின்றி, உலகாயதமான விஷயங்களில் பெரும் ஆசைப்பற்றோடும் திகழ்ந்திட புளிப்புச் சுவை ஒரு தூண்டி ஆகும்.

இப்படிப்பட்ட புளிப்புச்சுவையே பற்றை விடுவதற்கும் காரணமாக உள்ளது. ஒன்று நமக்குள் அலுப்பை ஏற்படுத்தும் போது அது புளித்துவிட்டது என்கிறோம். புளிப்பு மிகுந்து விட்டதை உடலும் மனமும் ஏற்காது. சன்யாசிகளாகிவிட்ட பலரும் 'உலக வாழ்க்கை புளித்து விட்டது. அதனால் சன்யாசியானேன்' என்று கூறக் கேட்டிருக்கிறோமே...? தொடக்கத்தில் ஈர்க்கும் புளிப்பே அலுக்கும் போது விட்டுவிடவும் காரணமாக உள்ளது.

இதெல்லாமே அறிவார்ந்த நோக்கில் அடங்கப்படுகின்ற விஷயங்கள் . ஆனால் திருநகரியிலுள்ள நம்பியெம்பெருமான் ஆலயத்துப் புளியமரத்துக்குப் பின்னாலே ஒரு புராணச் சம்பவமும் ஒளிந்துள்ளது. அந்த சம்பவத்தின்படி பார்த்தால் அந்தப் புளிய மரம் திருமாலின் அனந்த சயனத்திற்குக் காரணமான ஆதிசேஷனின் அம்சம்!

ஆதிசேஷன்தான் ராமாவதாரத்தின் போது லட்சுமணனாக வும் உடன் தொடர்ந்து வந்தவன். நம்மாழ்வார் பொருட்டு அவர் பிறந்துவரும் முன்பே திருநகரியில் புளியமரமாய் வந்து அவதரித்து விட்டவன் என்பார்கள். இதன் பின்புலத்திலே ஒரு காரணகாரியமும் ஒளிந்துள்ளது.

ராமனது வனவாசம் முடிந்து ராமனும் அயோத்தி திரும்பி, அயோத்தியின் அரசனாகவும் ஆகிவிட்ட நிலையில் ஒருநாள் அவனுக்குள் பெருந்தனிமை தேவைப்படுகிறது. அதன் பொருட்டு தனித்திருக்க விரும்பும் ராமன் லட்சுமணனை அழைத்து தன் விருப்பத்தைக் கூறி, ''என் தனிமைக்கு பங்கம் வராதபடி பார்த்துக் கொள்'' என்கிறான். ஆனால் துர்வாச முனிவர் வடிவில் சோதனை வருகிறது.

துர்வாச முனிவர் பெரும் கோபக்காரர். அதனால் சபித்தும் விடுபவர். இதை அறிந்திருந்த லட்சுமணன் அவர் வரையில்

பயந்து ராமனைச் சந்திக்க அனுமதித்து விடுகிறான். அவரும் ராமனைச் சந்தித்து விட்டுச் சென்று விடுகிறார். ஆனால் ராமனுக்குத்தான் கைக் கொள்ள எண்ணிய தனிமை லட்சுமணனால் வசப்படாது போனதால் லட்சுமணன் மேல் கோபம் கொள்ள வைக்கிறது.

''தம்பி... நான் என் விருப்பத்தைக் கூறியிருந்தும் நீ துர்வாச முனிவரை அனுமதித்து என் தனிமையை ஏன் கலைத்தாய்?'' என்று வினவுகிறான்.

''உண்மைதான் அண்ணா... என்னதான் தனிமை என்றாலும் தவச்சிறப்புடையோரை காக்க வைத்து அவர்கள் சாபத்துக்கு ஆளாக விரும்பாததாலேயே நான் துர்வாசரை அனுமதித்தேன். என்னை மன்னியுங்கள்...'' என்கிறான்.

''உன்னை மன்னிக்குமளவுக்கு நீ ஒன்றும் பிழை புரியவில்லை. அதே சமயம் வனவாசத்தின் போதும் சரி, இப்பொழுதும் சரி ஏனோ என்னால் யோக நித்திரை கொள்ள முடியவேயில்லை. எப்பொழுதும் ஒரு மனோபாரமும், கடப்பாடும் என்னை இந்த உலகப் பற்றோடே வைத்துள்ளன.

வானவாசததில் வாழத் தவறிய யோக வாழ்வை இன்னொரு பிறப்பெடுத்தாவது நான் வாழ்ந்து தீர்க்க விரும்புகிறேன். எங்கும் நிழல்போல் என்னைப் பின் தொடரும் நீ எனது அந்த யோகப் பிறப்பின் போதும் தொடர்வாய், பற்றுக்கும் பற்றறு பாட்டுக்கும் சின்னமாய் விளங்கும் புளிய மரமாக நீயும், உன் நிழலில் பூ உலகின் யாதொரு சம்பந்தமும் இன்றி மூச்சை மட்டும் உட்கொண்டு வாழும் ஒரு யோகியாய் நானும் ஒரு வனவாச காலமளவிற்கும், பின் அதற்கு மேலும் வாழ்ந்திட உள்ளோம்'' என்றான் ராமன்...

அதனாலேயே அந்த ஆலய வளாகத்தில் ஆதிசேஷனாகிய லட்சுமணன் புளிய மரமாக வளர்ந்து நிற்க, அன்றளித்த வாக்கினுக்கேற்ப காரிக்கும் உடையநங்கைக்கும் மகனாகப் பிறந்து பின் சடகோபனாகி சொன்னது போலவே புளியமரத்து நிழலடிக்கும் வந்து சேர்ந்து விடுகிறான்.

என்றால் தனிமையில் ஒரு நெடிய வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கப் போகிறான் என்றுதானே பொருள்?

ஆனால் அந்த சூட்சும உட்பொருளை அக்கிருப்போர்களால் அப்போது விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இந்தக் குழந்தை இப்படி மாயம் புரிகிறதே என்று ஆச்சரியமாய் அதிர்ச்சியில் ஆயாசமாய்த்தான் இருந்தது காரிக்கும், உடையநங்கைக்கும்.

அங்கேயே ஒரு பட்டுப் பாய் விரித்து அதன் மேல் மெத்தை விரித்து இதிலாவது படுத்துக் கொள் என்று கூற மட்டும்தான் அ!வர்களால் முடிந்தது. கூடவே அரண்மனையில் காவலிருக்கும் சேடிகளையும், வீரர்களையும் அங்கேயே நின்று காவல் காக்கும்படி உத்தரவிடவும் முடிந்தது.

ஆனால் குழந்தை மாறனாகிய எம்பெருமான் தன் வாக்கிற்கும் நாக்கிற்கும் ஏற்ப அந்தப் பட்டு மெத்தை, சேடியர் காவல் என்று எதையும் பொருட்படுத்தாமல் புறந்தள்ளிவிட்டு இதையெல்லாம் விட அதே அந்தப் புளியமரத்து பொந்து எனக்கு மிக ஏற்ற இடம் என்பதுபோல அதனுள் ஏறி அமர்ந்து கொண்டான்.

ஒருநாளா - இருநாளா?

பதினாறு வருடங்கள்...!

இந்தப் பதினாறு வருட காலமுமே யோகத்துயில்தான். பேராச்சரியம் போல காற்றை மட்டுமே உட்கொண்ட அந்தக் குழந்தை எல்லாக் குழந்தைகளையும் போலவே வளர்ந்தது அதன்! முகத்திலும் சூரியனே இடம் பெயர்ந்து வந்து அமர்ந்தது போல அப்படி ஒரு தேஜஸ்!

உடையநங்கையும், காரியும் வெகு காலம் வரை இதுகுறித்து வருந்திய போதிலும் குழந்தையின் தெளிவும் திடமும் கண்டு தேற்றிக் கொள்ளவும் செய்தனர். ஊராரும் தினம் ஆலயத்துக்கு வரும்போது அந்த புளியமரத்து பொந்துக்குள் கண்களை மூடி யோகத்துயில் கொண்டபடி இருக்கும் மாறனைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

ஆனால், இதெல்லாம் எதற்காக?

எத்தனை நாளைக்கு இப்படி?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் உலகத்தார் பொருள் உணரும் காலமும் வரத் தொடங்கியது.

எந்த ராமன் யோக வாழ்வின் நிமித்தம் அயோத்தியை விட்டு திருநகரி வந்தானோ அதே ராமன் அரசாண்ட அயோத்தியில் பெரும் வைணவ பக்தனாய் வாழ்ந்தவர் தான் மதுரகவி என்பவர்!

இறை தேடலோடு சித்தாந்த ரீதியாக சில குழப்பங் களுடனும் இருந்த இவர் உகந்த ஒரு குருநாதரையும் தன் முக்தியின் பொருட்டு தேடியபடி இருந்தார்.

குருநாதர் விஷயத்தில் எப்போதுமே ஒரு வலிமையான கருத்து ஒன்று உண்டு. ஆத்மார்த்தமாக எவர் ஒருவர் தனக்கொரு குருநாதர் கிட்ட வேண்டும் என்று விரும்புகின்றாரோ, அவரை குருநாதரே தேடிவந்து ஆட்கொள்வார் என்பதுதான் அது!

மதுரகவியின் ஆத்ம விசாரத்துக்கும் வழி பிறக்கத் தொடங்கியது. ஓர் இரவின்போது அவர் கனவில் திருநகரி ஊரும், நம்பி ஆலயமும், விருட்சமான புளியமரமும் அதனுள் அமர்ந்திருக்கும் மாறனாகிய சடகோபனின திருஉருவமும் பெரும் ஒளியோடு தோன்றி மறைந்தது!

## 10

**ம**துரகவியின் மனதுக்குள் மூண்ட அந்த ஒளி மிகுந்த காட்சிக்குப் பின்னாலே நாம் சிந்திப்பதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன. முன்னதாக மதுரகவியைப் பற்றி நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

மதுரகவியார் இவ்வேளையில் இருந்த இடம் வடபுலத்திலுள்ள அயோத்தியாக இருக்கலாம். ஆனால், மதுரகவியார் தென்புலத்தில் பிறந்து வளர்ந்தவரே! அதிலும் நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூருக்கு அருகிலுள்ள ஊரான

திருக்கோளூரில் பிறந்தவர். ஈஸ்வர வருடம் சித்திரை மாதத்தில் இவர் பிறந்ததாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

நம்மாழ்வாரை விடவும் வயதில் மூத்தவர்! மிகுந்த ஆன்மீக வேட்கையுடன் வாழ்ந்தவர்... குறிப்பாக கடவுளை அறிவதில் பெரிதும் தவிப்புடன் இருந்தவர் இவர் என்றால் மிகையில்லை. அன்று சைவமும் வைணவமும்தான் தென்பகுதியில் பிரதான வழிகளாக இருந்தன. சைவ வைணவத்தை அசைத்துப் பார்க்கவென்றே வந்ததுபோல பௌத்தம், சமணம் போன்றவை விளங்கின.

இறைவன் ஒருவனே!

அவனை உணர எதற்கு இத்தனை வழிகள்...?

இதுதான் மதுரகவியாருக்குள் எழும்பிய பிரதான கேள்வி. இதற்கு விடையை அவர் மனம் ஏற்கும் விதத்தில் யாரும் தரவில்லை. பலவிதமான விடைகள்... ஒவ்வொரு வழிமுறை யில் இருப்பவரும் தான் கடைபிடிக்கும் வழிமுறைதான் சிறந்தது என்றும் மற்றவை எல்லாம் போட்டியால் முளைத்தவை என்றும் கூறினர்.

மதுரகவியார் திருமால் அடியாராக, வைணவதாசனாக திகழ்ந்தபோதும் திருமாலே முற்றும் முதலுமானவன் என்று அவருக்கு உணர்த்த ஒருவருமில்லை. எனவே அவரும் தனது தவிப்பின் பொருட்டும், ஞான தாகத்தாலும் உரிய குருவைத் தேடி யாத்திரை மேற்கொண்டார்.

அப்படி அவர் யாத்திரை மேற்கொண்ட நிலையில் அவர் சென்று சேர்ந்த தலம்தான் அயோத்தி. அங்குள்ள ராமனை அனுதினமும் தொழுவதும், சரயு நதியில் நீராடுவதுமாக இருந்தவருடைய தவிப்பைப் போக்க அந்த ராமனே திருஉள்ளம் கொண்டான்.

அவனேயன்றோ நம்மாழ்வாராய் திருக்குருகூரில் அவதரித்து புளிய மரத்திலும் ஞானத் தலத்தில் இருப்பவன்? எனவே மதுரகாவியாரை அவன் தன் அவதார ரூபத்தை நோக்கி திசை திருப்ப எண்ணியே அவர் மனக்கண்ணில் நம்மாழ்வாரை மிகுந்த ஒளிப்புனலோடு ஒருசில வினாடிகள் காட்டியருளி

னான். வானிலும் தென்திசையில் ஓர் ஒளியைக் காட்டி அவரைப் பின் தொடரச் செய்தான்.

அந்த ஒளியைத் தொடர்ந்தே பயணித்து வந்தவர் இறுதியாக அந்த ஒளியானது திருக்குருகூர் ஆலய புளிய மரத்தில் இறங்கி மறைந்ததையும் கண்டு அங்கே ஓடிச் சென்று நின்றார்.

அப்படி நின்றவர் எதிரில்தான் புளிய மரத்து யோகியாக நம்மாழ்வாரும் சேவை சாதித்தார்.

பதினாறு வயது இளம்யோகி...!

கண்களை மூடிக்கொண்டு இந்த உலகில் உள்ள எதுவும் எனக்கு ஒரு பொருட்டில்லை என்று யோக நித்திரையில் இருப்பது என்பது எத்தனை அரிய காட்சி?

மதுரகவியாரால் அந்த காட்சியை நம்ப முடியவில்லை.

''யார் இந்த மகான்...?'' என்று ஆலயத்துக்குள் இருப்பவர்களிடம் வினவுகிறார். அவர்கள் ஆதியோடு அந்தம் நடந்தவைகளை கூறி முடிக்கின்றனர்.

ஒரு பதிமூன்று நாள் குழந்தை எப்படி ஒரு தாயின் அரவணைப்பின்றி, அல்லது பாலின்றி, அன்ன ஆகாரமின்றி இப்படி ஒரு கோலம் கொள்ள முடியும்?

'இந்த மகானைப் பார்க்கும்போது எனக்குள் பல சந்தேகங்களும், கேள்விகளும் எழுகின்றனவே...' என்று தவிக்கிறார். 'இதுதாள் வரையில் இந்த மகான் ஒரு வார்த்தை பேசியதில்லை...! என்று தவிக்கிறார். ''இதுநாள் வரையில் இந்த மகான் ஒரு வார்த்தை பேசியதில்லை...! யோக கோலம் கலைந்து புறத்தில் நடமாடியதில்லை...! ஒரு வாய் தண்ணீரும் உட்கொண்டதில்லை...! அவ்வாறு உட்கொள்ளாததாலேயே கழிவிடைகளுக்கும் இவர் ஆட்படவில்லை!' என்று இவருக்குத் தெரியவரும் விஷயங்கள் எல்லாம் வியப்பையே ஏற்படுத்துகின்றன.

'மொத்தத்தில் பதினாறு ஆண்டுகளாய் யோக நித்திரையை அமர்ந்த நிலையில் புரிந்து வரும் இவர் எங்கள்

வரையில் ஒரு பேரதிசயம். எதற்காக இங்கே இவர் இப்படி தவத்திலிருக்கிறார் என்பதும் தெரியவில்லை. ஆனால் ஒன்று... ஓடிக் கொண்டேயிருக்கும் நீரானது அணை கட்டித் தேக்கப்படும் போது அங்கே ஒரு பெரும் சக்தி உருவாகும். அதே நீர் அணை மதகு வழியாக வெளியேறிடும்போது அதன் வேகம் அது முன்பிருந்ததைவிட பலமடங்கு அதிகமாக இருக்கும். இந்த ஞானி வரையிலும் கூட அப்படி ஏதோ ஒன்று நிகழப் போகிறது என்று மட்டும் எங்களுக்குத் தெரியும்' என்றனர் கோவில் வாசிகள்!

மதுரகவியாரும் அந்தக் கருத்தையே ஏற்கிறார்.

அவர் மனதுக்குள் தனக்கு வழிகாட்டிய ஒளி குறித்தும் ஓர் எண்ணம். நம் வாழ்வில் மனதுக்குள் ஒளியை ஏற்றி வைப்பவர் எவராக இருந்தாலும் அவரை குரு என்போம். குரு என்னும் சொல்லுக்கே 'இருள் அகற்றி ஒளியூட்டுபவர்' என்பதுதான் பொருள். எனவே தனக்கு அயோத்தியில் இருந்து வழிகாட்டிய ஒளி 'இவரே உன் குருநாதர்' என்று சொல்லாமல் தனக்குச் சொல்லிவிட்டதாகக் கருதுகிறார்.

ஒரு சீடனுக்குண்டான மனோபாவமுடன் புளியமரம் முன் சென்றும் நின்று நம்மாழ்வாரின் யோக தவம் கலையாதா? அவர் கண்திறந்து பார்க்க மாட்டாரா? தன் மனதில் இருக்கும் ஆன்மீக குழப்பங்களுக்கு உரிய பதிலினைத் தந்து தன்னை ஆட்கொள்ள மாட்டாரா? என்று தவியாய்த் தவிக்கிறார்.

இவ்வேளையில் நம்மாழ்வார் குறித்து வரலாற்றில் கிடைத்த வேறுபட்ட சில செய்திகளையும் சற்று சிந்திப்பது நல்லது. பதிமூன்று நாள் குழந்தையாக இருந்த நிலையிலேயே அங்கே இருந்து விலகாமல் புளிய மரத்தடியில் கிடக்கவே அவர் விரும்பினார் என்பதை பட்டறிவு என்பது ஏற்க மறுக்கிறது. அதிலும் அழவும், சிரிக்கவும், பேசவும் மாட்டாத ஜடம் போன்ற ஒரு குழந்தை அதிலும் ஒரு அரசனின் குழந்தை இவ்வாறு இருந்திருக்க வாய்ப்பில்லை. அது ஓடியாடத் தொடங்கிவிட்ட நிலையில் வேண்டுமானால் ஆலயத்தைத் தேடி வருவதும், புளிய மரத்தடியை விட்டு விலகாமல்

அங்கேயே இருக்க விரும்பியும் இருக்கலாம் என்பதையும் ஓரளவு ஏற்க முடிகிறது.

பிறரைப் போல அது உணவருந்தி உயிர் வளர்ந்திருக்க வில்லை. ஒரு ஆழாக்கு பாலே போதும் என்றுகூட அது இருந்திருக்கலாம் என்று எண்ணவும் இடமிருக்கிறது.

குழந்தையின் விருப்பத்துக்கு எதிராகச் செல்ல மனமில்லாத அரசன் காரியும், அரசி உடைய நங்கையும் அந்தப் புளிய மரத்தடியிலேயே அந்தப் பிள்ளை நலமாய் வாழ்ந்திட வேண்டுவன செய்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

அதன் இளம்பிராயம் குறித்து இப்படி சில ஐயங்கள் இருந்த போதிலும் நாள் செல்லச் செல்ல அது மௌனத்திலும், தவத்திலும் ஆழ்ந்ததை மறுப்பதற்கில்லை.

ஏன் எனில் உலகின் உயிர்ப் பிறப்புகளில் அவதாரப் பிறப்புகளின் பின்னாலே சராசரி மனிதர்கள் அறியமாட்டாத எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன.

நமது பட்டறிவு என்பதோ நாம் பார்த்ததை வைத்தும், நம் காதில் நாம் கேட்டதை வைத்தும், நாம் பிறந்து வளர்ந்த இடத்தில் சுற்றியிருக்கும் மனிதர்களையும், இன்னபிற சூழல்களை வைத்துமே உருவாகிறது. பலவாறு வாழ்க்கையில் வதைபட்ட பிறகே 'நான் யார்' என்ற கேள்விக்கே வருகிறோம். அதிலும்கூட நூற்றுக்குத் தொண்ணூத்தி ஒன்பது பேர் இந்த 'நான் யார்' கேள்விக்கும் தவறான பதில்களைப் பெற்று, ஒரு கட்டத்தில் இந்த கேள்வி எல்லாம் நமக்கெதற்கு? என்று அதை ஒதுக்கிவிட்டு மனிதப் பிறப்பெடுத்தே உண்டு உறங்கி மகிழத்தான் என்பது போல வாழ்ந்து விட்டு இறந்தும் விடுகின்றனர். மதுரகவி யார் போல சிலருக்கே இந்த நான் யார் கேள்வியாகட்டும் இறைவன் எப்படிப்பட்டவன் என்பதை முற்றாக அறிவதாகட்டும் சாத்யமாகிறது.

அப்படிப்பட்ட மதுரகவியார் சடகோபன் என்றும் மாறன் என்றும் அறியப்பட்ட புளியமரத்து ஞானிமுன் அவர் கண் திறக்க மாட்டாரா என்று காத்திருந்து பார்த்துப் பொறுமை யிழந்தவராக ஒரு சிறுகல்லை தூக்கிப் போட்டு ஒலியெழுப்பு கிறார். அப்போதும் மாறன் என்னும் சடகோபனின் யோகம் கலையவில்லை.

மனதுக்குள் 'ஹே ராமா... ஒரு ஒளியைக் காட்டி என்னை உன் தலத்தைவிட்டே இங்கு அனுப்பினாயே...! எதற்கு...? நான் இப்படி தவித்தபடி நிற்பதற்கா...?' இவர் கண் திறக்க மாட்டேன் என்கிறாரே...? நான் என் குழப்பங்களில் இருந்து விடுபடுவது எங்ஙனம்...? வழிகாட்டியருளியது நீதான் என்றால் இவர் கண் மலர்ந்திட வேண்டும் - அதுமட்டுமல்ல... இதுநாள் வரை இவர் பேசியதே இல்லை என்பதும் 'பொய்யாகி இவர் திருவாய் மலர்ந்திட வேண்டும்' என்று பலவாறு மனதுக்குள் உருக்கமுடன் வேண்டிக் கொள்ளவும் செய்கிறார்.

மதுரகவியாரின் தவிப்பு வீண் போகவில்லை. ஆர்வமும், தவிப்பும் தாளாமல் தன் கைவசம் இருந்த திருத்துழாயை சடகோபரையே அந்த நாராயணனாகக் கருதி அர்ச்சிப்பது போல மேலே தூவவும் சடகோபரின் விழிகளும் திறக்கின்றன.

அது ஒரு அரிய தருணம்! அற்புதமானது தனது பணியைத் தொடங்கிவிட்ட தருணம் என்று கூட சொல்லலாம். பளிச்சென்ற ஒளி மிகுந்த கவர்ந்திழுக்கும் திவ்யமான நிலை நயனங்கள், முகத்திலும் ஒரு மென்சிரிப்பு!'

மதுரகவியாரின் முதல் விருப்பமும் ஈடேறிவிட்டது. யோக நித்திரை கலைந்துவிட்டது. அடுத்த பேச்சுதான்! பேச வேண்டும்... அதாவது திருவாய் மலர வேண்டும்... மலரச் செய்ய என்ன வழி? மலர்ந்துவிட்ட விழிகள் முன் பேசத் தொடங்குகிறார்...

''மகானே... நான் ஒரு திருக்கோளூர்காரன்...! ஞானம் தேடி அயோத்தி வரை போனவன். அந்த ராமனோ இங்கே உங்கள் முன்னால் என்னைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டான். எனக்குள்ளே ஏகத்துக்கும் கேள்விகள், குழப்பங்கள், குறிப்பாக இந்த பிறப்பு குறித்து...

பிறக்கின்ற ஓர் உயிர் கூட நீடித்து நிலைத்து வாழ்வதே இல்லை - வாழ்ந்ததும் இல்லை - வாழப் போவதும் இல்லை. மொத்தத்தில் பிறப்பதே ஓரளவு வளர்ந்து இறப்பதற்குத்தான் என்றாகிறது. ஆனால் அழிவு இந்த உடம்புக்குத்தான்.

உயிருக்கு இல்லை என்று ஒரு வியாக்யானத்தையும் கேள்விப் படுகிறேன்.

இதன் நிமித்தம், உங்கள் முன் எனக்குள் இப்போது எழுப்புவது ஒரு வினாதான். பதில் சொல்லி என்னை ஆட்கொள்ள வேண்டும். ''செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தை தின்று எங்கே கிடக்கும்?''

என்று கேட்டுப் பணிவுடன் பார்க்கிறார். ''அதாவது இறப்பைச் சந்திக்கக்கூடிய இந்த உடம்புக்கு பதுங்கியிருக்கும் உயிரானது இந்த உடம்புக்குள், அதாவது தினந்தோறும் செல்கள் அழிந்து புதிதாக உருமாறிக் கொண்டேயிருக்கும் உடம்பில் அழியாத் தன்மை கொண்ட உயிரானது எப்படி எதை உண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறது?' என்பது கேள்வியின் உட்பொருள். இன்னும் சற்று விளக்கமாகக் கூடப் பார்க்கலாம்.

நம் உடம்பே உயிர் என்று ஒன்று இருப்பதாலேயே செயலாற்றுவதாக உள்ளது. உயிரானது நீங்கவும், பிணமாகிப் பின் அழுகி நாற்றமெடுத்து மண்ணோடு மண்ணாகி விடுகிறது. மொத்தத்தில் உடம்பானது ஒவ்வொரு நொடியும் பழையது அழிவதும், புதியது பிறப்பதுமாகவே உள்ளது. அது நிலையானதாக இல்லை. நிலையற்ற இந்த உடம்புக்குள் நிலையான உயிரால் எப்படி இருக்க முடிகிறது? உடம்பு பிணமாகும்வரை அது எப்படி இந்த உடம்புக்குள் இருக்கிறது. உடம்பானது உணவைத் தின்று தன்னைப் பேணுவது போல் உயிரானது எதைத் தின்று தன்னைப் பேணுகிறது? என்று கேட்கிறார்.

உலகில் உன்னதமான கேள்விகள் என்று ஒரு வரிசை உண்டு. 'கடவுள் இருக்கிறாரா?' என்பதே காலம்காலமாக கேட்கப்பட'டும் ஒரு உன்னதமான கேள்வி. இதை ஆங்கிலத்தில் மில்லியன் டாலர் கேள்வி என்பார்கள்.

இதுபோல பல கேள்விகள் உலகில் உள்ளன.

தாவோ என்னும் சீன ஞானி 'பாத்திரம் என்பது எது? அதன் வடிவமா - இல்லை அதனுள் இருக்கும் வெற்றிடமா?'

என்று கேள்வி எழுப்புகிறான். 'எதையும் ஏன், எதற்கு, எப்படி?' என்று கேட்கச் சொல்கிறான் சாக்ரடீஸ்!

'நான் யார்?' என்று கேட்டுக் கொள்ளப்போய் பெரும் ஞானியானவர் தான் பகவான் ரமணர். இப்படிப்பட்ட தலை சிறந்த கேள்விகளின் வரிசையில் உள்ளதுதான் இந்த கேள்வியும்...!

இக்கேள்விக்கு சூட்சுமமாய் வேறு பொருள் இருப்பதாகவும் அது பெரும் ஞானியர்க்கே புரிந்த ஒன்று என்றும் ஒரு கருத்து உண்டு.

சரி இப்படி ஒரு கேள்விக்கு விழிகளை மலர்த்திய மாறனாகிய சடகோபனிடம் இருந்து என்ன பதில் வந்தது?

## 11

மதுரகவியார் ஒரு பெரும் கேள்வியை கேட்டு முடித்துவிட்டார்.

''செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தை தின்று எங்கே கிடக்கும்?'' என்பதுதான் அந்த கேள்வி.

கேள்வி கேட்டதோ பதினாறு வயது நிரம்பிய மாறனாகிய சடகோபனிடம்...

இந்த சடகோபனோ இதுநாள் வரையில் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசியதில்லை..பெற்ற தாய் தந்தையரைக்கூட ''தாயே, தந்தையே'' என்று அழைத்ததில்லை.

இது என்ன சாதாரண கேள்வியா...?

'உண்டு இல்லை என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிட...?'

கேள்வியும் ஆழமானது... பதிலும் ஆழமானதாகத்தானே இருக்கும்?

ஆனால் இப்படிப்பட்ட கிளைக் கேள்விகளோ, அந்தப் புளிய மரத்து யோகி பதில் கூறமாட்டார். அவர் ஒரு மௌனி

போன்ற எண்ணங்களே மதுர கவியாரிடம் இல்லை. அவர் நம்பிக்கையும் பொய்யாக்கவில்லை. கண்மூடி யோகத்திலிருந்தவர் முதலில் கண் விழித்து மலர்ந்த முகத்தோடு பார்த்ததே ஒரு பெரும் ஆச்சரியம். அந்த ஆச்சரியத்தை அதிகப் படுத்துவது போல மதுரகவியார் கேள்விக்கு மாறன் சடகோபன் பதில் சொல்ல வாய் திறந்தது அதைவிட பேராச்சரியம்!

புன்னகை மாறா உதடுகளுடன், ''அத்தை தின்று அங்கே கிடக்கும்'' என்று வாய் திறந்த மாறனும் முத்துதிர்த்தார்போல பதிலை உதிர்க்கவும் சிலிர்த்துப் போனார் மதுர கவியார்!

**''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்...''**

**''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்...''**

என்று மாறன் சடகோபன் கூறிய பதில் கருத்தை சொல்லிச் சொல்லி பார்த்துக் கொண்டபோது அந்த விடை சிலிர்ப்பேற்படுத்தியது.

உடம்பு தினமும் அழிந்து அழிந்து புதிதாய்த் தோன்றியபடியே இருக்கிறது. பழையதுதான் புதிதாய் வடிவமெடுக்கிறதா? ஆம்... அப்படியும் கூறலாம்தான்... புதியது பழையதைத் தின்று விடுகிறது. தின்று எங்கும் வெளியேறி விடவில்லை. மாறாக அங்கேயே புதிய வடிவம் கொள்கிறது. அதாவது, அங்கேயே தான் கிடக்கிறது.

அதுதான் முடிந்ததும் கூட... ஒரு ஆத்மாவிற்கு அது ஆட்கொண்ட உடலுக்கேற்பவே அது இன்ப துன்பங்களையும் கொள்ள முடியும். கூடுதலான அனுபவங்களுக்கு அதனிடம் இடம் கிடையாது.

ஆத்மாவானது உடம்பை உடம்பின்பாற்பட்ட சக்திகளைக் கொண்டே பேணவும் வேண்டும். பேணத் தவறினால் அந்த உடம்பே பகையாகி, ஆத்மாவால் அங்கே நிலைத்து நிற்க இயலாமல் போய் மரணம் சம்பவித்து உடம்பானது அழிய நேரும். ஆத்மாவும் தன் பயணத்தை அடுத்த உடலைத் தேடியோ இல்லை மீண்டும் பிறவாமையை உத்தேசித்து இறைவன் திருவடி நிழலைத் தேடியோ பயணிக்க வேண்டியதெல்லாம் இதனாலேயே நிகழ்கிறது.

இப்படி மாறன் சடகோபன் சொன்ன பதிலுக்கு நாள் கணக்கில் சிந்திப்பதற்கு விஷயம் இருப்பதையும் ஆனால் தன் கேள்விக்கு ரத்னச் சுருக்கமாய் அவர் பதில் கூறிவிட்டதையும் உணர்ந்த மதுரகவியார் அந்த நொடியே மாறன் சடகோபனே தான் தேடியலைந்த ஞான குரு என்று உணர்ந்து அவர் திருவடியில் விழுந்து விட்டார்.

மாறன் சடகோபன் வாய் திறந்து பேசிவிட்ட விஷயம் உடனடியாக அரண்மனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஊர் முழுக்கவும் பரவியது. அரசனும், அரசியும் ஓடோடி வந்து சடகோபன் எதிரில் நின்றனர்.

''குழந்தாய்... என்னைத் தெரிகிறதா...? நான்தான் உன் தாய்...'' என்றாள் அரசியான உடைய நங்கை...

''மகனே, நீ எப்போது பேசுவாய் என்றுதான் தவித்துக் கொண்டிருந்தோம்...'' என்றான் மன்னன் காரி. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த ஒரு பதிலை மாறன் சடகோபன் அவர்களுக்கு அளிக்கவில்லை.

''என் வரையில் மட்டுமில்லை நம் அனைவருக்குமே தாயும், தந்தையுமானவன் ஒருவனே... அவனே அந்தப் பரந்தாமன்...'' - என்று, சடகோபனின் சுட்டுவிரல் ஆலயத்து நம்பியெம் பெருமானை நோக்கிக் காட்டியது.

இந்த பதில் உடையநங்கைக்கும், காரிக்கும் சற்று ஏமாற்றம் அளித்த போதிலும் பெரிதாக பாதிப்பை ஏற்படுத்தவில்லை. பதினாறு ஆண்டுகள் பேசாதவன், உடன் ஒரு பிள்ளையாக வாழாதவன் ஏதோ இம்மட்டில் வாய் மலர்ந்தானே என்று மட்டும் மகிழ்ந்தனர். அப்படியே அந்தக் கருத்தையும் ஏற்றுக் கொண்டார்.

''ஆம், நம் அனைவருக்கும் அந்தப் பரந்தாமனே தாயும், தந்தையுமானவன்... அவன் புகழைப் பாடவே இந்தப் பிள்ளையும் வாய் திறந்திருக்கிறது'' என்று புரிந்து கொண்டார்.

பேசத் தொடங்கிவிட்ட சடகோபனும் வீண் கதைகளைப் பேசவில்லை. உலக விசாரங்களிலோ, போலியான பரபரப்புகளிலோ துளியும் நாட்டம் செலுத்தவில்லை.

தான் யோகத்தில் கற்றதை, உணர்ந்ததை, உள்ளே கெழுமித் திளைத்ததை சாகாவரம் பெற்ற பாடல்களாகப் பாடத் தொடங்கியது.

அதை படி எடுப்பதுதான் மதுர கவியாருக்கும் வேலை. இப்படி மதுரகவியார் படி எடுத்த பாடல்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?

1296!

இதனுள் திருவிருத்தம் என்னும் கட்டமைப்பில் பாடியது நூறு பாடல்கள். திருவாசிரியம் என்னும் கட்டமைப்பில் பாடியது ஏழு!

பெரிய திருவந்தாதி - எண்பத்தி ஏழு!

திரவாய்மொழி 1102 - ஆக மொத்தம் 1296.

அந்த நாளில் தமிழ்ச் சங்க புலவர்களின் ஆளுமை மற்றும் உயர்ந்த நெறிப் பாடுகள் காரணமாக மொழியறிவும் சரி, அதன் புலமையும் சரி மிகவும் உயரத்தில் இருந்தன. பாடல்களைத் தாங்கி நிற்கும் பனை ஏடுகளை இடுப்புக்குக் கீழே பிடிப்பது கூட கீழ்மை என்ற ஒரு நிலைப்பாடு இருந்தது. இதன் காரணமாக பனை மரத்தை ஞானத்தின் சின்னமாக சிலர் கருதினர்.

ஏடுகளும், எழுத்தாணிகளும் கண்களில் ஒற்றிக் கொள்ளப்பட்ட பிறகே பயன்படுத்தப்பட்டன. அப்படி, அதை பயன்படுத்தி எழுதுகின்ற எழுத்தையெல்லாம் சான்றோர்கள் ஏற்றுக் கொண்டு விடவில்லை.

எழுதப்படும் பாடல்களில் இலக்கணமும் பொருளும் இயைந்து காணப்பட்டாலே அதை ஏற்றனர்.

அந்த வகையில் மாறன் சடகோபனின் திருநெஞ்சில் உதித்த 'திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி' என்னும் நான்கும் நான்கு வேதங்களின் பொருட்தன்மையோடு காணப்பட்டன.

அதாவது வேதவடிவாய் விளங்கிய அந்த வேத நாராயணன், மாறன் சட கோபனாக மானுட அவதாரம் எடுத்து

வந்து வேதம் நான்கையும் தமிழ்ப்படுத்த விரும்பினார் போல இந்த நால்வகை கட்டமைப்பில் பாடல்களைப் பாடியதாக வைணவச் சான்றோர்கள் கூறுவார்கள்.

அதை மறுப்பதற்கில்லை!

ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் சமஸ்கிருத மொழி யில் இருந்தன. அதனை தமிழ் மட்டுமே அறிந்த சாமான்யர்கள் அறிந்திட வாய்ப்பில்லை. இப்படி வாய்ப்பில்லாதவர் களையும் வேதம் சென்றடைய வேண்டும் என்று அந்தப் பேரருளாளன் எண்ணியிருக்கலாம்.

அதனாலேயே இவ்வகையில் சடகோபனின் பாடல் களும் வடிவம் கொண்டன.

அதனாலேயே பின்னாளில் இந்தப் பாடல்களை 'திராவிட வேதம்' என்றும் பரிந்துரைத்தனர். இன்று நாலாயிர திவ்ய பிரபந்தத்திலேயே நம்மாழ்வாரின் இந்த 1296 பாடல்களையே முதலாவதாகவும் மூத்ததாகவும் முத்துக்கு முத்தாகவும் கருதும் ஒரு நிலைப்பாடு உள்ளது.

குறிப்பாக திருவாய்மொழி எனும் கட்டமைப்பில் பாடப்பட்ட 1102 பாடல்களில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல ஒரு பாடல் வெகுவாக வியக்க வைக்கிறது.

நம்மை வியக்க வைத்தால் போதுமா...? சில பொய்கள் கூட மெய் போல தோன்றி நமக்கு 'வியப்பேற்படுத்தும் ஆபத்து கவிதைகளில் உண்டு. இதனாலேயே கவிதைக்குப் பொய்யை அழகுடையதாக ஆக்கி 'கவிதைக்குப் பொய்யழகு' என்று தகுதிப் பாட்டையே அதற்கு அளித்திருந்தனர்.

எனவே அந்த நாளில் ஒரு பாடலின் சத்ய ஒளியை தெய்வானுகூலத்தோடு பரிசீலிக்கும் வழக்கம் இருந்தது. அதில் ஒருவிதம்தான் சங்கப் பலகையில் வைப்பது என்பது! அந்த வகையில் மாறன் சடகோபனின் திருவாய்மொழிப் பாடல் களில் ஒரு பாசுரத்தை மட்டும் பலகையில் வைத்தார்களாம்.

"கண்ணன் கழலினை
நண்ணும் மனமுடையீர்

**எண்ணும் திருநாமம்**
**திண்ணம் நாரணமே!''**

என்பதுதான் அந்த பாசுரம்.

அதாவது நாமங்களில் நாராயண நாமமே உயர்ந்தது. சாலச் சிறந்தது. அழிவற்றது. சாசுவதமானது. முக்தி தரவல்லது என்று அதற்கு எல்லாப் பொருளையும் கூறலாம்.

இதை சங்கப் பலகையும் அப்படியே ஏற்றுக் கொண்டது. இத்தோடு பல்வேறு பொருள் நலங்களில் வைக்கப்பட்ட பாடல்களும் இருந்தன. அவ்வளவையும் சங்கப் பலகை தள்ளிவிட்டது. இந்தத் திருவாய்மொழிப் பாடலை மட்டும் ஏற்றுக் கொண்டது. திருவாய்மொழிப் பாடல்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவை... ஒவ்வொரு ரசமுடையது...

**''ஆழி எழச் சங்கும், வில்லும் எழுத் திசை**
**வாழி யெழத் தண்டும் வாளும் எழ அண்டம்**
**மோழை எழ முடி பாதம் எழு அப்பன்**
**ஊழியெழ உலகம் கொண்ட வாறே...'**

- என்னும் பாடல் அந்த துயில் கொண்டிருக்கும் பரந்தாமன் எப்படி அவதரித்தான் என்பதை எண்ணி வியக்கும் பாசுரமாக உள்ளது.

தொடக்கத்தில் மாறனாகவும், பின் சடகோபனாகவும் அழைக்கப்பட்ட இவர் பாசுரங்கள் பாடி வைணவ திருத் தொண்டினை தொடர்ந்தபோது ஒவ்வொரு வைணவரும் இவரை தனக்கு வழிகாட்ட வரும் ஆழ்வாராக உணர்ந்து பிறரிடம் பேசும்போது இவர் நம் ஆழ்வார் என்று பாசத்துடனும் உரிமையுடனும் கூறிடப் போய், பின் அந்தப் பெயரே நம்மாழ்வார் என்றாகி நிலைபெற்று விட்டது. இவருக்கு வகுளா பரணர், பராங்குசர் என்றும் பெயர்கள் உண்டு. மகிழம்பூ மாலையை சூடி மகிழ்பவர் என்பதால் வகுளா பரணர் என்றும், பரந்தாமன் ஆகிய பெருமானையே தன் பக்தி எனும் அங்குசத்தால் கட்டியவர் என்பதால் பராங்குசர் என்றும் இவரைச் சான்றோர்கள் கூறியிருக்கலாம்.

நால்வகை வேதத்துக்கு இணையாக திராவிட வேதம் படைத்த இவர் பணியும் ஒருநாள் முடிவுக்கு வந்தது. இவரது

முக்தி குறித்து தெளிவான தகவல்கள் இல்லை. ஆனால் இவரது பூத உடலை இவர் வளர்த்த புளிய மரத்தடியிலேயே கிடத்தியதாகக் கருத இடமிருக்கிறது.

இவரை இவர் காலத்திற்குப் பிறகு பெரிதும் கொண்டாடி மகிழ்ந்தனர். இவரை குருவாகக் கொண்டவர் மதுரகவி ஆழ்வார்தான். இவரை செப்பு வடிவில் வார்த்து சென்னி மேல் வைத்து வணங்கி வந்தார்.

வைணவ உலகம் நம்மாழ்வாரை அந்த மாலவன் திருவடி அம்சமாகவும், அணிகளில் கௌஸ்துப மணியாகவும் கருதுகிறது. அதனாலேயே ஆலயங்களில் நம் சென்னிமேல் வைக்கும் இறைவன் திருவடிக்கு இவர் நாமமான சடகோபனில் இருந்து சடாரி என வைக்கப்பட்டது. ஒரு சில சான்றுகளில் நம்மாழ்வாரின் குருவாக சேனை முதலியார் சித்திரிக்கப்பட்டுள்ளார் என்றால் சேனை முதலியார் திருநகரியில் பெரிதும் பேசப்பட்டிருக்க வேண்டும். அம்மட்டில் ஒரு தெளிவு காணப்படவில்லை. மாலவனின் தூதராக அவர் வந்து மௌனமாகவே உபதேசித்திருக்கலாம் என்றும் சிலர் கூறுவர். எது எப்படி இருப்பினும் ஆழ்வார்கள் பின்னிருவரில் யோகம், தவம், நெறி இம்மூன்றும் மிகுந்தும், நாரணன் அன்றி வேறு தெய்வமில்லை என்று ஒன்றே குலமாய் ஒருவனே தேவனாய் ஏகாக்ரமமாய் வாழ்ந்து வழி காட்டியவர் நம்மாழ்வார் என்றால் அது மிகையில்லை.

அடுத்து மதுரகவியாழ்வார் குறித்த சில செய்திகளோடு குலசேகர ஆழ்வார் குறித்து சிந்திப்போம்.

# 12

**ந**ம்மாழ்வாரை செழுந்தமிழாலே ஆராதிப்போம்...

அவர் வாழ்வைக் கண்ணுற்ற அதே வேளையில் அவரோடு இணைந்த மதுரகவியைப் பற்றியும் சிந்திப்போம்...

ஆயினும் நம்மாழ்வார் குறித்த பார்வையோடு மதுர கவியைப் பார்ப்பதற்கும், மதுரகவியின் வாழ்வு வழியாக

நம்மாழ்வாரைப் பார்ப்பதற்கும் சில வேற்றுமைகள் இருக்கவே செய்கின்றன.

அது ஒரு குருவானவர் சிஷ்யனைப் பார்த்த விதம்! ஆனால் இதுவோ ஒரு சிஷ்யன் குருவை நோக்கிய விதம்... இப்படிப் பார்த்திடும்போது, வாழ்க்கைச் சம்பவங்களில் மாற்றங்களுக்கு இடமில்லை. ஆனால் இதில்தான் மதுர கவியின் குருபக்தியை நூறு சதம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

முன்பே பார்த்தாகிவிட்டது -

மதுரகவியாரின் அவதார ஸ்தலம் நம்மாழ்வார் அவதரித்த திருக்குருக்கூருக்கு அருகிலுள்ள திருக்கோளூர் என்று... சித்திரை மாதத்து சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர். இவர் பிறந்த தமிழ் ஆண்டு ஈஸ்வர வருடமாகும்.

நம்மாழ்வார் அவதரிப்பதற்கு முன்பே அவதரித்து விட்டவர். நம்மாழ்வாரின் முக்திக்குப் பின்பும் ஆயுள் கொண்டிருந்தவர். அதாவது, ஒரு திருவிழாவை நிகழ்த்த வேண்டிய பொறுப்பிலுள்ளவர்கள் திருவிழா தொடங்கும் முன்பே விழா அரங்கத்துக்கு வந்து முன்றேற்பாடுகள் செய்து பின் திருவிழாவை செம்மையாக நடத்தி முடித்து அதைக் கண்டு களித்தவர்கள் எல்லோரும் சென்றபின் விழா அரங்கைக் கலைத்து கணக்கு வழக்குகளையும் பார்த்து முடிப்பதைப் போல.

நம்மாழ்வார் ஜனிப்பதற்கு முன்பே ஜனித்து பின் சூரிய சந்திரர்களை விடவும், நட்சத்திரங்களைவிடவும் மேலான ஒளியாக அவரை உணர்ந்து, அவர்பால் சரண் புகுந்து, அவரையே தன் ஹரியாய், விக்ரமனாய், முகுந்தனாய் முழு முதல்வனாகக் கருதி பக்தி செய்து, பின் அவர் முக்திக்குப் பின் அவர் பாடல்களைக் கைகளில் ஏந்தி நாடு நாடாக, வீடு வீடாகச் சென்று அதைப் பாடுவதும் அவர் புகழ் பரப்புவதுமே வாழ்க்கை என்று வாழ்ந்தவர் மதுரகவியார்.

ஒரு வார்த்தையில் சொல்வதனால் இவரே சீடர்களுக்கு இலக்கணம் வகுத்த உத்தமசீடர். அதனாலேயே ஆழ்வார்கள் வரிசையில் இடம்பெற்ற சிறப்புக்குரியவர்.

அந்த மாலவன்தான் மன்னன் காரிக்கும் உடைய நங்கைக்கும் கனவில் கட்டியம் கூறி நனவில் மகனாய் வந்து பிறந்தவன். பின் குழந்தைப் பருவம் தொட்டே யோக வாழ்வும் வாழ்ந்தவன்... இந்த யோக மௌனத்தைக் கலைத்த சீடன்தான் மதுரகவி!

''செத்தவன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'' என்று கேட்ட வித்தகக் கனியும் கூட... ''அத்தைத் தின்று அங்கேயே கிடக்கும்'' என்ற நான்கு வார்த்தைகளில் வந்த பதிலைக் கொண்டே இவரே என் மன இருளைப் போக்க முடிந்த குருநாதர் என்று வயது வரம்பு குறித்து சிந்தியாது உள்ளொளியை மட்டுமே சிந்தித்து சீடரானவர்.

நல்ல சீடர்களுக்குரிய இலக்கணங்களில் தேடலும், தெளிதலும் பெரும் பங்கு வகிக்கிறது. மதுரகவி முதலில் தேடியது இறைவனைத்தான்... அதன் பொருட்டே யாத்திரை மேற்கொண்டார்.

திருக்கோளூர் எங்கே... அயோத்தி எங்கே?

இங்கிருந்து அங்கே செல்ல எத்தனை பக்தியும், மனஉறுதியும் வேண்டும் என்று, எண்ணிப் பாருங்கள். இடையிலும் எவ்வளவோ ஸ்தலங்கள்! எவ்வளவோ நதிகள்... அவைகளிலெல்லாமும் நீராடல்கள்.

இப்படி பெரும் பிரயாசையோடு இறைவனைத் தேடியவர் பின் நம்மாழ்வாரை குருவாகக் கொண்டுவிட்ட, நிலையில் அந்த இறைதேடல் அப்படியே குருபக்தியாக மாறி குருசேவை, குருவைப் போற்றுதல் என்று மாறி விடுகிறது.

நம்மாழ்வார் சொல்லச் சொல்ல அவர் பாடல்களை படி எடுத்தவர். தானும் அதுபோல நாரணன் புகழைப்பாட வேண்டும் என்று எண்ணவில்லை. விழையவும் இல்லை; காரணம் ஒன்றே ஒன்றுதான்...

'குருவான நம்மாழ்வாரை விடவா தன்னால் பரவிவிட முடியும்?' இந்தக் கேள்வி மட்டும் அவரைக் கட்டிப் போடவில்லை. பின்னாளில் தன்னால் பாடப்பெற்ற

பாடலகள் குருவின் பாடல்களோடு சமதையாக பாடப் பெறுவதை அவர் ஒருவித அகந்தையாகக் கூட உணர்ந்துவிடக் கூடும். இதெல்லாமே அவர் குருநாதரை எத்தனை பெரிதாகக் கருதினார் என்பதை நமக்கு மறைமுகமாய் உணர்த்துகின்றன.

ஆனாலும் மதுரகவி என்கிற பெயரிலேயே இவரும் ஒரு கவிஞர் என்பதை இந்த உலகம் ஏற்று மகிழும் வண்ணம் 'கண்ணிநுன் சிறுதாம்பு' என்னும் பதினோரு பாசுரங்களைப் பாடியிருக்கிறார்.

இந்தப் பதினோரு பாசுரங்களாவது அந்தத் திருமால் பெருமையைப் பறை சாற்றுகிறதா என்றால் அதுவும் இல்லை. இந்தப் பாசுரங்கள் பதினொன்றும் நம்மாழ்வாரின் சிறப்பை யும், அருங்குணத்தையும், பக்தியையும்தான் பறைசாற்று கின்றன.

வைணவ நெறியில் மட்டுமல்ல மற்ற பிற நெறிகளிலும் கூட இறைவனைவிட அவர்தம் தொண்டர்களே பெரியவர்கள் என்று ஒரு கருத்து உண்டு.

இதனாலேயே 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பர். இதை யொட்டியே குருவையே முழு முதல் தெய்வமாக காணும் வழிமுறை தோன்றியது.

குருவே உயர்ந்தவர் - குருவே சிஷ்யனுக்கு முதலானவர் என்பதற்குப் பலப் பல சான்றுகள் உள்ளன. குரு உபதேசம் பெற கள்ளத்தனங்கள் செய்தவர்கள் கூட நமது புராண சரித்திரங்களில் காணப்படுகிறார்கள்.

பெரும் ராமபக்தரான கபீர் தாசர் பிறப்பால் ஒரு முகலாயர். ஆயினும் ராமநாமம் கபீர்தாசரை சிலிர்க்கச் செய்கிறது. ராமபக்தியில் திளைக்கத் தொடங்குகிறார். அதை மதமும், உறவுகளும் தடுக்க முனைகின்றனர். மற்றோரும் ஏற்க மறுக்கின்றனர்.

செவி வழியில் பொதுவாக வந்து சேர்ந்த ராமநாமத்தைச் சொல்லி பக்தி செய்வதால் எல்லாம் முழுப் பயன் வந்து சேராது. நெறிப்படுத்தவும், நேர்ப்படுத்தவும் குரு என்று ஒருவர் வேண்டும் என்று அவருக்குச் சொல்லப்படுகிறது. அவரும்

தன்னைக் கடைத்தேற்றும் குருவானவர் யார் என்று தேடி அலைகிறார்.

ராமானந்தர் என்கிற ஒரு குருநாதர் கங்கைக் கரையில் ஆசிரமம் அமைத்து ராமநாமத்தின் பெருமைகளை உரைத்து வாழ்வதையே வாழ்வாகக் கொண்டிருப்பவர். அவருக்குப் பல சிஷ்யர்கள் இருக்கிறார்கள். அந்த சிஷ்யர்களில் ஒருவனாக தானும் மாறிட முனைகிறார். கபீர்!

ஆனால் ராமானந்தர், கபீரை ஏற்க மறுக்கிறார்.

பிற மதத்தவன் என்பதால் மட்டுமல்ல, அவர் பக்தி, மன உறுதி போன்றவற்றை உலகம் உணர வேண்டும் என்று விரும்பியதால்... தான் ஏற்க மறுத்தாலும் கபீர் தன்னை விடமாட்டார் என்பது ராமானந்தருக்குத் தெரியும்.

அதற்கேற்பவே கபீரும் நடந்து கொண்டார். குருநாதரின் அன்பை குறிப்பாக குருவின் திருவடிகளையும் உபதேச மொழிகளையும் அடைய அவர் ஒரு குறுக்கு வழியைக் கண்டுபிடித்தார். அதன்படி அதிகாலை வேளையில் கதிரவன் உதிக்கும் முன்பே ராமானந்தர் துயிலெழுந்து கங்கையாற்றில் நீராடச் செல்வதை தூர இருந்தே கண்டு வைத்திருந்தவர் ஒருநாள் அதிகாலையில் ராமானந்தர் நீராட வரும் சமயம் கங்கையாற்றின் படித்துறை படிகளின் இடையே படியோடு படியாக படுத்துக் கொண்டார்!

இருளில் படிகளில் தட்டுத் தடுமாறியபடி வந்த ராமானந்தர் கபீரின் முதுகையும் ஒருபடியாக கருதி மிதித்து விட்டார். பின் அவ்வாறு மிதித்ததை உணர்ந்து பதறிப்போய் ''ராமா, ராமா'' என்ற நாமத்தால் அதற்குப் பரிகாரம் தேட முற்படவும் அந்த திருவடித் தீண்டலையும், நாமத்தையுமே தனக்கான குரு உபதேசமாக எடுத்துக் கொண்டாராம் கபீர்!

பின்னாளில் அந்த ராமச்சந்திர மூர்த்தியும் கபீர்தாசருக்கே முதலில் சேவை சாதித்தான். குருவான ராமானந்தருக்குக் கூட பிறகே அவன் தரிசனம் கிடைத்தது என்பார்கள்.

குருவருளைப் பெற்றுவிட்டால் போதும் திருவருள் தானாகக் கிடைத்துவிடும். அதற்கென்று பிரத்யேக

முயல்வுகளே தேவையில்லை. அதற்கு கபீர்தாசர் வாழ்க்கை ஒரு பின் உதாரணம்தான். முன் உதாரணம் மதுரகவியின் வாழ்க்கைதான். மதுரகவியால்தான் நம்மாழ்வாரின் பாடல்கள் மக்களிடையே வேகமாகப் பரவின.

மதுரகவியார், நம்மாழ்வார் திருமேனியோடு இருந்தபோது அவர்பால் பக்தி செலுத்தியதை விடவும் அவர் முக்திக்குப் பிறகு அவரின் செப்புத் திருமேனி மேல் செதுக்கிய பக்திதான் இன்றளவும் சிந்திக்கப்படுகிறது.

செப்புத் திருமேனியை வார்த்து, நம்மாழ்வார் செப்பிய பாடல்களையும் பாடி அவர் நிகழ்த்திய உற்சவங்கள் பல நூறாகும். அப்போதெல்லாம் நம்மாழ்வாரை வியந்து போற்றி பெரும் பட்டங்களை தன் குரு பக்தியாலே நம்மாழ்வாருக்கு அளிக்கிறார்.

அப்படி அவர் அளித்த பட்டங்கள்தான் 'பராங்குசர், வகுளாபரணர், வளநாடர், திருவாய்மொழிப் பெருமான். வேதம் தமிழ் செய்த பெருமான்' என்பதெல்லாம்...

இவ்வாறு அவர் காட்டிய குரு பக்தியை, பேரன்பை அன்றைய தமிழ் சங்கப் புலவர்கள் ஏற்க மறுத்தனர். அவ்வேளையில்தான் அவர்களும் நம்மாழ்வாரின் பாசுரங் களின் சிறப்பை உணரும்படியாக சங்கப்பலகையில் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்களில் ஒன்றான 'கண்ணன் கழலினை' என்னும் பாசுரத்தை மட்டுமே வைத்து அத்தனை சங்கப் புலவர்களின் செருக்கையும் அறியாமையை யும் வேரறுத்துக் காட்டினார்.

அதன்பின் அவர்களில் பலரும்கூட நம்மாழ்வாரை ஒப்புக்கொண்டு அவர் மீது பாடல்கள் இயற்றி தங்கள் பக்தியையும் பரவசத்தையும் உலகுக்கு உணர்த்தினர். அதிலொரு பாடல்தான் -

**"சேமங் குருகையோ, செய்ய திருப்பாற்கடலோ**
**நாமம் பராங்குசமோ நாரணமோ, தாமந்**
**துளவோ வகுளமோ தோளிரண்டோ, நான்கு**
**முளவோ பெருமானுனக்கு..."**

என்கிற பாடலாகும்.

''இப்படி சங்கப் புலவர்களையே சிந்திக்கவும், சிலிர்க்கவும் வைத்த மதுர கவியாரின் கண்ணிநுன் சிறுத்தாம்புப் பாசுரங் களான பதினோரு பாசுரங்களையும் பன்னிரெண்டா யிரம் முறை பக்தியோடு சிந்திப்பவர்களுக்கு அந்த மாலவன் நம்மாழ்வார் வடிவில் கனவில் வந்து சடாரி வைத்து சேவை சாதிப்பான் என்றும் சான்றோர் உலகம் கூறுகிறது.

பல வைணவப் பெரியவர்கள் கண்ணிநுன் சிறுத்தாம்பை பாராயணம் செய்து நம்மாழ்வார் தரிசனத்தையும் அடைந் திருக்கிறார்கள் என்றால் இன்றும் நம்மாழ்வார் தரிசனத்தை பிரயாசை உள்ளவர்கள் அடைவதற்கு வழிகோலியிருக்கும் மதுரகவிகள் எத்தனை சிறப்புக்குரியவர்?

இவர் சிறப்பைக் கூற மொழியில் உள்ள சொற்கள் போதுமானதா என்ன?

மதுரகவி ஆழ்வாரைப் பற்றி சிந்தித்து சிலிர்த்த நெஞ்சோடு அப்படியே குலசேகரன் பக்கம் செல்வோம்...

## 13

இதுகாறும் ஆழ்வார் பெருமக்களில் அறுவரைப் பற்றி சிந்தித்து விட்டோம். ஏழாவதாக குலசேகர ஆழ்வாரை சிந்திப்போம்!

முந்தைய ஆழ்வார்களிலும் சரி, இனி காணப்போகும் ஆழ்வார்களிலும் சரி குலசேகர ஆழ்வார் மிகவே வேறுபட்டுத் தெரிகிறார்.

இந்த ஆழ்வாரோடு வெகுஜனமாகிய நாம் நிரம்பவே நெருங்க முடியும் - அதுதான் இவரது தனிப் பெரும் சிறப்பு.

இதுகாறும் சிந்தித்த ஆழ்வார் பெருமக்களின் பின் புலத்தில் ஒரு அருட்சிறப்பு ஒளிந்திருந்தது. அதன் வழி நடத்தலும் அவர்களின் தனிப்பெரும் சிறப்புக்குக் காரணமாகும்.

திருமழிசையாருக்கு அந்த மகாலட்சுமியே வந்து பால் தந்தாள். நம்மாழ்வாரோ ''நானே வந்து பிறப்பேன்'' என்று

அந்த மாலவன் அளித்த திருவாக்கின்படி பிறப்பெடுத்தவர்! முதல் மூவர்களான பொய்கை - பேய் - பூதம் மூவரின் பிறப்பின் பின்னாலும்கூட அவர்களின் ஆதி முகத்தை நாம் அறிய முடியாத ஒரு மாயச்சிறப்பு ஒளிந்துள்ளது. ஆனால் இந்த குலசேகரன் விஷயம் அப்படி அல்ல. இவர் நம்மைப் போன்றவர், ஒரே ஒரு சிறப்பு மட்டும் இவர் பிறப்பில் உண்டு. இவர் அரச பரம்பரையில் வந்தவர். ஆனால் நம்மில் ஆண்டிகளும் உண்டல்லவா?

அரச பரம்பரையில் வந்து, இரண்டு பிள்ளைகளைப் பெற்று சம்சார வாழ்வில் சந்தோஷ சாகரராக திகழ்ந்தவரைப் பற்றி நாம் சிந்திக்கவோ, வியக்கவோ, போற்றவோ, துதிக்கவோ எதுவுமில்லை.

**தெ**ன்னாடு அன்று சேர, சோழ, பாண்டிய மண்டலங்களாக பிரிந்து கிடந்தது. இதில் மலையும், மலை சார்ந்த நிலப்பரப்புகளும் சேரர்கள் வசமிருந்தன. குறிப்பாக இன்றைய மலையாள தேசமும் இதில் அடங்கும். இந்த மலையகங்களுக்கு மன்னனாகத் திகழ்ந்தவன் திருவிஞ்சைகளத்தை மையமாகக் கொண்டு அரசாட்சி புரிந்து வந்த திடவிரதன் என்னும் மன்னன்.

விரதமிருப்பவன் எனும் பொருளில் தான் விரதன் எனும் பெயரும் வருகிறது. அதிலும் திடவிரதன் எனும் பொழுது தன் அன்றாட வாழ்க்கைப் பாட்டிற்கு நடுவில் ஆன்ம நலன் தரும் விரதங்களை அனுஷ்டிப்பவன் என்று பொருள் கொள்ளலாம்.

ஆனால் இங்கே அப்படி ஒரு பெயர். இந்த மன்னனின் ஆன்மநேயச் சிறப்பைப் பார்த்து அவர்கள் வைக்கவில்லை. இது பெற்றோர் சூட்டிய பெயர். நாம் நம் பிள்ளைகளுக்கு ஸ்ரீநிவாசன், கமலக் கண்ணன் என்று ஆசையாக பெயர் வைப்பது போல் தான் இப்பெயரும் இம்மன்னனுக்கு வைக்கப்பட்டது.

உரிய காலத்தில் இவனுக்குத் திருமணமாகியும் உரிய நேரத்தில் பிள்ளைப் பேறு மட்டும் உண்டாகவில்லை. அவ்வேளையில் திடவிரதன் எனும் பெயருக்கேற்ப தாங்கள் வாழ்விலும் அனுஷ்டானங்கள் மூலம் ஆன்ம பலம்

பெற்றிடும்போது பிள்ளைப் பேற்றுக்குத் தடையாக உள்ள வினைப்பாடுகள் நீங்கும் என்று அவருக்கு அறிவுறுத்தப் படவே ஏகாதசி விரதத்தை இம்மன்னன் சீரிய ஒழுக்கமுடன் பின்பற்றத் தொடங்கினான்.

அது மட்டுமல்ல, திருமாலின் அடியார்களைப் போற்றுதல், அவர்களுக்கு அமுது செய்தல். திருமாலின் ஆலயங்களை புனருத்தாரணம் செய்தல், திருமாலுக்கு அனுதினமும் மாலை கட்டிப் போட்டு சேவித்தல், திருமஞ்சனம் செய்து அதை கண்குளிரக் கண்டு மகிழ்தல் என்று 'நித்யபரிகாரம்' என்னும் கணக்கில் வைத்துச் சொல்லப் பட்டவைகளை பிள்ளையின் பொருட்டு இந்த மன்னனும் செய்தான்.

ஒரு தேவை இவனுக்குள் சேவை மனத்தை அளித்தது. தெரிந்து கீழே போட்டாலும் - தெரியாமல் போட்டாலும் கண்ணாடி என்றால் அது உடைந்து சிதறும். நீர் என்றால் அது பள்ளம் கண்ட இடத்தே சென்று தேங்கி நிற்கும்.

அதுபோல இந்த நித்ய பரிகாரங்களும் திடவிரதன் கணக்கில் நலமளிக்கத் தொடங்கின. இவனுக்கும் பிள்ளைப் பேறு உண்டாயிற்று.

எல்லா நலமும் சேர்ந்ததுபோல பிள்ளைச் செல்வமும் வந்து சேர்ந்தது. இதை இப்படியும் சொல்லலாம். பட்டம், பதவி, செல்வம் என்று எல்லாவற்றையும் சேகரித்தவர் குலத்தை விளங்கச் செய்ய சேகரித்ததுதான் பிள்ளை. இந்த குலம் சேகரப்பிள்ளைதான் குலசேகரன் என்றானது!

இந்தப் பிள்ளை பிறந்த ஆண்டு தெளிவாய்த் தெரியவில்லை. ஆனால் எட்டாம் நூற்றாண்டு என்பதை ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளைக் கொண்டு ஒப்புக் கொள்ள முடிகிறது.

பிறந்த மாதம் - மாசி, நட்சத்திரம் - புனர்வசு. அரசனுக்கு ஒரு இளவரசன் பிறந்தாகிவிட்டது. இந்த இளவரசனும் எப்படி வளர வேண்டுமோ அப்படித்தான் வளர்ந்தான். இளவயதில் கொள் முதல் செய்து கொள்ள வேண்டிய கல்வி கேள்விகளில் இருந்து வீரப்பயிற்சிகள் வரை எதிலும் குறைவில்லை.

அக்காலத்தில் நால்வகை வேதங்களும் பயிற்றுவிக்கப் பட்டன. பிராம்மணனும், குடியரசனும் கட்டாயம் வேதம் கற்று அதில் நிறைபெற்றிருக்க வேண்டும் என்பது ஒரு விதியாகவே இருந்தது. அவ்வாறு இல்லாது போகும் பட்சத்தில் நாட்டில் மழை வளம் குன்றிப் போய் கள்வர் பயம் உண்டாகி அந்த நாடும் எதிரிகளின் பிடியில் சிக்கிச் சீரழியும் என்பதே காரணமாகவுமிருந்தது.

எனவே குலசேகரனும் நான்கு வேதம் அதன் ஆறு அங்கம் மற்றும் அரச நீதி, தர்மசாஸ்திரம் ஆகியவைகளைக் கற்றுத் தெளிந்திருந்தான். பின் பட்டாபிஷேகமும் ஆனது.

ஒரு அரசனுக்குரிய வீராவேசத்தோடும், மண்ணாசை யோடும் சோழர்களையும், பாண்டியர்களையும் கூட இவன் போரிட்டு வென்றான். இதனால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடாகிய தென்னாட்டுக்கே இவன் அதிபதியாக விளங்கினான். இதையொட்டியே இவனுக்கு.

'கொல்லிக்காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன் குலசேகரன்' என்னும் அடைமொழிச் சிறப்பெல்லாம் வந்து சேர்ந்தது.

நாடு பேற்றுக்குப் பின் வீடு பேற்றுக்கு வித்தான இல்லறத்திலும் நுழைந்தான். இவன் வரையில் பிள்ளைப்பேறு ஒரு பிரச்னையாக இல்லை. இரு பிள்ளைகள் பிறந்தனர். ஆண் ஒன்று - பெண் ஒன்று...!

மொத்தத்தில் குலசேகரனுக்கு எல்லாமே கிடைத்து விட்டது. 'நாடு - மக்கள் - வீடு - பிள்ளைகள்' என்று எதிலும் ஒரு குறைவுமில்லை.

ஆயினும் மனதுக்குள் ஓர் ஆயாசம்.

'இவ்வளவுதானா வாழ்வென்பது?'

இதில் என் தனித்த பங்கு என்று எதுவுமே இல்லையே...? அரச வழியில் பிறந்ததால் அரசனானேன். திருமணம் புரிவித்ததால் கணவனானேன். மனைவியோடு கூடியதால் தந்தையானேன். சகலத்திலும் ஒரு புறச்சார்பு

இருந்துள்ளது. அதன் காரணமாகக் கூட எனக்கு எல்லாமும் கிடைத்திருக்கலாம். எனக்குக் கிடைத்திருக்கும் இவையெல்லாமும் இந்தப் பூ உலகில் இன்னும் பல்லாயிரவர்க்கும் கிட்டியுள்ளது. எனக்கே எனக்கென்று மட்டும் என்னதான் உள்ளது?

எது நிலையானது? எல்லாமே மாறிக் கொண்டேயிருக்கிறதே - குழந்தையாக இருந்தேன் - மாற்றங்களால் பிள்ளையானேன் - பின் இளைஞரானேன் - இன்று கிரஹஸ்தன் - நாளை முதியவனாவேன் - பின் முடிந்து போவேன். இதில் நான் உணர்வது என்ன? எதற்கு இந்தப் பிறப்பு? எதனால் இந்த நீண்ட பயணம்...?'

குலசேகரன் உள்ளத்தில் வினாப்புயல் வீச ஆரம்பித்து விட்டது. விரதமிருந்து பெற்ற பிள்ளையல்லவா? விரதம் என்பதே புலனடக்கம்தானே... அடக்குவது அனைத்தும் விரிந்தெழுவதும் இயல்பு தானே?

குலசேகரனுக்குள்ளும் கேள்விகள் விரிந்தெழுந்தன.

ஆனால் குலசேகரனின் கேள்விக்குத் தெள்ளத் தெளிவாகவும், உள்ள நிறைவாகவும் பதில் கூறத்தான் ஆளில்லை. இதே மனநிலையோடு திருவிஞ்சைக் களத்துப் பெருமாளின் முன்போய் நித்ய வழிபாட்டின் நிமித்தம் நின்றபோது அங்கே மனம் ஒடுங்கியது. கேள்விகள் அவ்வளவும் அடங்கின. ஓர் இனம் புரியாத அமைதி ஏற்பட்டது. அந்த மாலவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருக்கத் தோன்றியது.

சம்பிரதாயமாகக் கோவில் நிகழ்வுகளின்போது உபன்யாசங்களும் இடம் பெற்றன. அவை காதில் ஒலிக்கத் தொடங்கின.

ஒருநாள் பாரதம், ஒருநாள் ராமாயணம், ஒருநாள் கிருஷ்ணாவதாரம் - என்று அந்த தசாவதாரியின் அடக்க இயலா கீர்த்திகளை தன் பேச்சில் அடக்க முற்பட்டு சிலர் பேசிய பேச்சு குலசேகரனைக் கவர்ந்து இழுத்தது. போய் அமர்ந்து

விட்டார். உபன்யாசம் புரிபவரும் மன்னரே வந்து எதிரில் அமரவும் உற்சாகத்தில் மிதந்தார். பெரு முயற்சி செய்து தானறிந்த புராண வரலாற்றையெல்லாம் குலசேகரன் முன் கொட்டத் துணிந்தார்.

இங்கேயிருந்துதான் இதுகாறும் நம் போல் இருந்த குலசேகரனும் ஆழ்வார்க்குரிய பெரும் பேற்றுக் குரியவராக மாறவும் தொடங்கினார்.

அர்ச்சா ரூபமே மனதைக் கட்டிப் போடும்போது அவதார ரூபங்கள் புரிந்த அற்புதச் செயல்கள் எதைத்தான் செய்யாது?

குலசேகரன் மனது அந்த மாலின் லீலைகளை எண்ணிப் பெரும் பரவசம் கொண்டது. அதிலும் கிருஷ்ணாவதாரமும், ராமாயணமும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. கிருஷ்ணரிடம் தெரிந்த தந்திரமும் சரி, ராமனிடம் தெரிந்த தர்மமும் சரி வெகுவாக யோசிக்க வைத்தது.

பத்து அவதாரங்களுமே பலவித எண்ண ஓட்டங்களை அவருக்குள் ஏற்படுத்தின. உலகின் மிகப்பெரிய உயிர் கூட்டம் மீன்களே! பிறகே மற்ற உயிர்கள். மூன்றில் இருபங்கு நீர்வெளி - அதனுள் பிறந்து அதனுள்ளேயே வாழ்பவைதான் மீன்கள். இவைகளுக்கு நிலையான ஒரு இடம் தேவையில்லை. திசைப் பாகுபாடுகளும் இல்லை. மேல் கீழ் இல்லை, இடது வலது இல்லை. ஐந்து பூதங்களில் நீர் என்னும் ஒன்று மட்டுமே ஆதாரம். நிலமோ, காற்றோ, வெளியோ, நெருப்போ, ஒரு பொருட்டில்லை. ஒன்றில் தோன்றி ஒன்றாகவே இருந்து ஒன்றுக்குள்ளேயே முடிந்தும் போகிறது. ஒன்றான அந்த மாலவனும் தன் அவதாரத்தில் முதலாக மச்சமாக அவதரித்ததன் பின்னே எத்தனை சூட்சும பிரமாணங்கள்?

வியந்துபோனது குலசேகரன் மனது, அடுத்து கூர்மம்...! அமுதம் கிடைக்கவே காரணமான அவதாரமாயிற்றே? இதன் ஓட்டின் மேலல்லவா மேருமலை மத்தாக நின்றது. வாசுகிப் பாம்பு கயிறாகப் பயன்பட்டது! தலைப் பக்கம் அசுரர்கள், வால்பக்கம் தேவர்கள். கடைசலில் கிட்டியதுதானே அமிர்தம். அதைக் கடலுக்குக் கீழ் பெரும் தினவோடு தாங்கிய முதுகு

மாலவன் - முதுகல்லவா? அது கூர்மமல்லவா? என்ன ஒரு கருணை!

இந்த நரசிம்மவதாரம் மட்டுமென்ன...?

வழியில்லை. வழியேயில்லை - வழிக்கு வழியே யில்லை என்பதல்லவா இரண்யன் பெற்ற வரசித்தி. மரணமிலா பெருவாழ்வு வாழ வரம் எனும் பெயரில் அவன் போல் ஒருவர் வரம் பெற முடியுமா?

''மரணம் என்பதே தனக்குக் கூடாது...'' என்று வரம் கேட்கையில், ''அப்படி ஒன்றைத் தந்திட எனக்கு அதிகார மில்லை. எதனால் எல்லாம் மரணம் வரக்கூடாது என்று நீ எத்தனை விதமாக வேண்டுமானாலும் வரத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்'' என்று பிரம்மதேவன் கூறிட இரண்யனும் புத்தியைப் பயன்படுத்தி கேட்டது தானே அவன் பெற்ற வரம்.

''மனிதர்களால், மிருகங்களால், தேவர்களால், ஈரேழு பதினான்கு லோகங்களில் வாழ்ந்திடும் உயிரினங்களால் அதில் ஆணாலும் சரி, பெண்ணாலும் சரி மரணம் நேரக் கூடாது. பகல் இரவு என்று பொழுதுகளிலும், பஞ்ச பூதங்களாலும், ஆயுதங்களாலும் கூட தனக்கு மரணமேற்படக் கூடாது.

நானே அழைக்காத நிலையில் மரணமும் வரக்கூடாது. என் மரணமானது வானிலும் சரி, பூமியிலும் சரி நிகழவே கூடாது'' - என்று அவன் வரம் கேட்டுப் பெற்ற பின் தேவருலகமே அதிர்ந்தல்லவா போனது...?

பிரம்மனாலும் இரண்யனின் புத்திசாலித்தனத்தைப் புறந்தள்ள முடியவில்லையே? இரண்யனும் தன்னையே அல்லவா அதன்பின்கடவுளாக அறிவித்துக் கொண்டான்!

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினானே...? ஆனால் அவனை சம்ஹாரம் செய்ய முதலில் பிரகலாதனை அனுப்பி பின் அவன் மூலமாக நாரணனை வரச் சொல்லி, அவனே அழைக்க அவன் முன் தோன்றி... எப்படி? ஒரு விந்தை வடிவில்!

மனிதனாகவும் இன்றி, மிருகமாகவும் இன்றி நரசிங்கம் எனும் புதிய வடிவம் கொண்டு வானிலும் இன்றி, பூமியிலும் இன்றி வாசலில், இரவிலும் இன்றி பகலிலும் இன்றி இரண்டும் கலந்த அந்தி சந்தி வேளையில், உயிருள்ள அதே சமயம் உயிரற்ற, ஆயுதம் என்றும் கூறமுடியாத நகங்களாலேயே இரண்யன் வயிற்றைப் பிளந்து அவனை சம்ஹாரம் செய்த நரசிம்மாவதாரம்தானே வழி காண முடியாத இடத்திலும் வழிகண்ட அவதாரம்? குலசேகரன் மெய் சிலிர்த்துப் போனது இந்த அவதாரத்திடம்தான்...

# 14

திருமாலின் ஒவ்வொரு அவதாரச் சிறப்புகளையும் நுட்பமாக உணர்ந்து அதில் கரைந்து போன குலசேகரன் அது குறித்துத் தனிமையில் மாற்றி மாற்றிச் சிந்தித்ததும், தன் சிந்தனைகளை தனது ராணியிடம் பகிர்ந்து கொண்டதும்தான் விசேஷம்!

''மச்சாவதாரம் ஒன்று ஒன்றாகவே இருப்பதை உணர்த்துகிறது. கூர்மாவதாரம் சிரஞ்ஜீவியாக திகழக் காரணமாக உள்ளது. வராக அவதாரம் வேதங்களைக் காத்து உலகில் தர்மம் வாழ காரணமாகி விட்டது. வாமனாவதாரம் அகந்தையை அழித்ததோடு அண்ட சராசரங்கள் அவ்வளவும் நானே என்றே உணர்த்தி விட்டது. பரசுராம அவதாரமோ சாதுர்ய பக்திக்கு சாட்சியாக நிற்கிறது.

பலராம அவதாரம் வழி நடப்பதை உணர்த்துகிறது. நரசிம்மாவதாரம் தன்னால் அழிக்க முடியாதது ஒன்று இல்லவே இல்லை என்கிறது. கிருஷ்ணாவதாரம் தர்மத்தைக் காப்பாற்ற மாயையையே பயன்படுத்துகிறது. ராமாவதாரமோ சர்வ அவதார லட்சணங்களையும் தாங்கி தர்மப்படி வாழ்ந்தே காட்டி விட்டது. கல்கி அவதாரமோ எதிர்காலத்துக்கு ஒரு எச்சரிக்கை.'

- உலகில் பிறக்கும் உயிர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும், தெள்ளத் தெளிவாகவும் இதைவிட வேறு யாரால் உணர்த்த முடியும்?

பத்தாதோ இந்த பத்து?

குலசேகரன் மனது நினைத்து, நினைத்து குளிர்ந்து போகிறது - இப்படி மாலவன் பால் கொண்ட பக்தியும், அந்த மகா விஷ்ணுபதியின் அவதாரச் சிறப்புகளும் குலசேகரனை புடம் போட்ட நிலையில் ராமாவதாரம் மட்டும் குலசேகரனை ஒரு நடந்து முடிந்த அவதாரமாக நினைக்க விடவில்லை. ராமர் தன் சமகாலத்தில் தனது தர்ம ராஜ்ஜியத்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும், ராமனே இந்த உலகம் அவ்வளவுக்கு மான சக்கரவர்த்தியாகவும், தான் அந்த சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டிடும் ஒரு அடிமை என்றும் குலசேகரன் நினைத்துக் கொண்டதுதான் விந்தை.

அதனாலேயோ என்னவோ, ராமாயண உபன்யாசம் நிகழ்ந்திடும் இடங்களில் அந்த உபன்யாசத்தை கேட்கும்போது ஏதோ அன்றைய சம்பவம் ஒன்றை அந்த உபன்யாசகர் கூறுவது போலத்தான் குலசேகரன் கேட்டுக் கொண்டார்!

ராவணன் சீதாதேவியை கவர்ந்து செல்லும் கட்டத்தை உபன்யாசம் புரிபவர் கூறிடும் போது குலசேகரன் முகத்தில் அப்படி ஒரு கோபம் ஆவேசம்!

'இந்த ராவணன்தான் எத்தனை இழிவானவன்?
உலகத்துக்கே தாயான சீதாதேவியை பெண்டாள எண்ணி
அவளை தந்திரமாக கடத்திச் செல்கிறானே...
இவனெல்லாம் ஒரு வீரனா... ச்சே!'

- என்று ஆவேசக் கருத்தோடும் சீதை கடத்தப்பட்டவுடன் அவளைத் தொலைத்த துக்கத்துடன் ராமன் வீற்றிருந்து கண்ணீர் சிந்தும் சம்பவத்தை உபன்யாசகர் கூறிடும் போது ''மகா பிரபோ... தேவியாரைக் கவர்ந்து சென்றான் ராவணன். இது தெரியாமல் தாங்கள் வருந்துகிறீர்களே...! உங்களுக்கு இந்த வேளையில். என்னால் எந்த உதவியையும் செய்யமுடியவில்லையே... அட! நானெல்லாம் என்ன மன்னன்?

ராவணனுடைய தவறை என்னால் தட்டிக் கேட்க முடியவில்லையே... அதனாலென்ன...? இப்போதும் கெட்டுவிடவில்லை. என் சேரநாட்டுப் படை அவ்வளவையும் திரட்டிக் கொண்டு நான் இப்போதே உங்களுக்கு உதவி செய்ய வந்து விடுகிறேன். அந்த ராவணனையும் இரண்டில் ஒன்று பார்த்து விடலாம்...' - என்று என்னவோ அந்த சம்பவம் அப்போதுதான் நடந்து கொண்டிருப்பது போலவும் அதில் தானுமொரு பாத்திரம் போலவும் பாவித்துக் கொள்ளுமளவுக்கு ராமாயணம் கதை கேட்கும்போது குலசேகரன் ஆழ்ந்து போவதுதான் அவனது உயரிய பக்திச் சிறப்பாகும்.

வெறும் பாவனைகளால் மட்டுமின்றி அனுமன் சீதையை அசோக வனத்தில் கண்ட செய்தியைக் கூறவும், அதனைத் தொடர்ந்து ராமபிரான் இலங்கை நோக்கிப் பெரும் படையுடன் புறப்படத் தொடங்கவும், அந்தப் படையோடு தன் சேர நாட்டுப் படையும் இணையட்டும் என்று கதை கேட்ட இடத்திலேயே உத்தரவு போட்டு விட்டான்!

அந்த உத்தரவுப்படி படையை வழி நடத்தும் முதல்வனாக தன்னை கருதிக் கொண்டு ''ஜெய் ஸ்ரீராம்'' என்று வீரமுழக்கமிட்டபடி நிஜமாகவே குலசேகரன் கடற்கரைக்குச் சென்று நின்றதாகவும், அந்த பக்தி பாவம் வைகுண்ட நாதனையே ஒரு உலுக்கு உலுக்கி ஸ்ரீ ராம லட்சுமண சீதாதேவி சகிதம் குலசேகரனுக்கு அந்த மாலவன் காட்சியளித்ததாகவும் கூட கூறுவார்கள்.

ஒரு பேரரசனுக்கு அவ்வளவு கூடவா நடப்புக்கும் கேட்கும் கதைக்கும் வித்தியாசம் தெரியாமல் போகும் என்பதெல்லாம் நாம் நம் புத்தியைக் கொண்டு எழுப்பும் கேள்விகள்.

அப்பழுக்கற்ற பக்தியின் விளைவாக அவருக்கு மாலவன் குடி கொண்ட ஆலயங்களுக்கெல்லாம் சென்று சேவை புரியவேண்டும் என்கிற எண்ணமும் ஏற்பட்டது. அதிலும் சூரிய குலத்தில் வந்த ராமனும் அவனது சந்ததியினரும் வைத்து வழிபட்ட பரமபத நாதனான வைகுண்டபதியின்

திருச்சன்னதியே திருவரங்கமாகும் என்பதிலிருந்து, அந்த திருவரங்கமே மாலவன் அடியார்க்கெல்லாம் முதலான ஸ்தலமும் ஆலயமுமாகும் என்பதை குலசேகரன் அறியவும் அவன் மனது எப்பொழுது திருவரங்கம் செல்வோம் - அங்குள்ள திருவரங்கனைக் காண்போம் என்று ஏங்கத் தொடங்கிவிட்டது.

கேரளத்தில் இருந்து ஆட்சி செய்து கொண்டு திருவரங்கம் நோக்கிப் பயணப்பட்டால் அதன்பின் அந்த யாத்திரை அப்படியே குடந்தை, திருவிண்ணகரம், திருக்கோவிலூர் என்று திருமலை தொட்டுத்தான் முடியும் என்பதை உணர்ந்த குலசேகரனின் அமைச்சர்களும், மந்திரி பிரதானிகளும் குலசேகரனை பல வழிகளில் தடுத்து நிறுத்த முயன்றார்கள்.

அவர்களில் சிலருக்குக் குலசேகரனின் பக்தி பாவம் ஒரு அரைப்பித்தாகக் கூடத் தோன்றியது.

ஒரு பேரரசன் இப்படி பக்தியில் சிக்கி பைத்தியமாகி விடக் கூடாது. இப்படி இருந்தால் இந்த நாட்டு நிர்வாகம் எப்படி நடக்கும்? எதிரிகள் படை எடுத்து வந்து ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது?

இவரது பக்தியை இந்த நாட்டோடு நிறுத்திக் கொண்டு விடவேண்டும். ராமன், அரங்கன் என்று அது பொங்கி வழிய முற்படும்போது, திருமாலடியார்களைக் கொண்டே தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்று திட்டமிட்டனர். அடியார் வேறு - அந்த ஆராவமுதன் வேறில்லை என்பதால், அதைக்கேட்டு மனம் உருகி அடியாரைப் போற்றி அவரோடு அமர்ந்து அவர்கள் கூறிடும் பாகவதக் கதை கேட்டு, பஜனைகள் புரிந்து தன்னை மறப்பவன்தான் குலசேகரன். எனவே திருவரங்கம் நோக்கி தன் சைன்யத்தோடு புறப்படத் தொடங்கும் போதெல்லாம் அந்த திருவரங்கத்தில் இருந்தே வந்ததாகக் கூறி, அடியார் கூட்டத்தை முன்னிறுத்தினர். குலசேகரனும் வந்த அடியார்கள்ள வரவேற்று, அவர்களுக்கு உபசாரங்கள் செய்து, அவர்களோடு ஆடிப்பாடி அதையே தன் முதற் கடமையாகக் கொண்டான்.

நாளா வட்டத்தில் அரண்மனையில் வேல்கம்புடன் கூடிய வீரர்களை விடவும், திருமண் காவி தரித்த அடியார்கள் கூட்டம் அதிகமாகிவிடடது.

அது மட்டுமல்ல... அந்த அடியார்கள் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்குச் செல்லலாம், வரலாம். அவர்கள் வைத்ததுதான் சட்டம். இதனால் குலசேகரன் அரண்மனையானது 'ஆட்சியாளன் அவையா - இல்லை ஆண்டி மடமா?' என்கிற எண்ணத்தை எழுப்பி விட்டது. அதிகாரத்தில் உள்ளவர்களால் எப்படி இதை ஏற்க முடியும்?

அனைத்துக்கும் ஒரு முடிவு கட்ட எண்ணிய குலசேகரனின் அமைச்சர் பிரதானிகள் குலசேகரனின் விஷ்ணு பக்தியில் இருந்து அடியார் கூட்டம் வரைக்கும் ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்யத் தீர்மானித்தனர்.

ஒன்றுபோய் இன்னொன்று வந்த கதையாக, குலசேகரனின் யாத்திரையைத் தடுக்க அடியார் கூட்டத்தைப் பயன்படுத்தினால் இப்போது அந்தக் கூட்டமே பெரும் பிரச்சினையாகி விட்டது.

'இது ஆட்சியாளனுக்கு அழகேயில்லை.' என்று கருதியவர்கள் தங்களுக்கேயுரிய சாதுர்யத்தோடு ஒரு திட்டம் தீட்டினார்கள்.

அதற்கு ஏற்றார் போல ஸ்ரீ ராம நவமி விழாக்காலமும் வந்தது. ஸ்ரீராம நவமியை குலசேகரன் தனது சேர நாட்டுத் திருவிழாக்களில் ஒன்றாகவே கருதினான்.

அத்தனை கோலாகலம். ஒவ்வொரு நாள் உற்சவமும் கண்படும். தினம் தோறும் அபிஷேக ஆராதனைகள், திவ்ய அலங்காரங்கள். இந்த அலங்காரத்தின் போது ஸ்ரீ ராமனின் உற்சவர் திருமேனியில் ஒரு நவரத்தனக்கல் பதித்த ஆரம் ஒன்று அழகு செய்யும். அதற்கு விலை மதிப்பும் கிடையாது. அந்த விலை மதிப்பில்லாத நவரத்ன ஆரத்தை எடுத்து ஒளித்து வைத்துவிட்டு, அது களவு போய் விட்டதாக ஒரு புரளியைக் கிளம்பிவிட்டனர். இதனால் ராமநவமி உற்சவமே ஸ்தம்பித்து நின்றது. அடியார்கள் பதற தொடங்கினர். ஆரம் களவு

போனதற்காக அல்ல... குலசேகரன் ஆட்சியில் கூட ஒரு கள்வன் இருக்கிறான் என்பதற்காக!

அவர்களைவிட அதிகம் பதறியது குலசேகரன்தான்! இடிந்து போய் உட்கார்ந்து விட்டான்.

இது என்ன கெட்ட சகுனம்?

எம்பெருமானின் ரத்ன ஆரத்தை திருடும் துணிவுகூட ஒருவருக்கு இருக்கிறதா...? குலசேகரன் மனது கிடந்து துடித்தது. எப்படியோ, அமைச்சர்களின் சதித் திட்டம் தன் வேலையை நன்றாக காட்டத் தொடங்கிவிட்டது.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே எல்லாம் நடக்கத் தொடங்கியது. அவர்களே எப்பாடு பட்டாகினும் கள்வனைப் பிடித்தாக வேண்டும் என்று ஆரம்பித்தனர். திருமால் அடியார்களில் யாரோ ஒருவர்தான் இதை செய்திருக்க வேண்டும் என்று தங்கள் கருத்தையும் கூறினர். அங்கேதான் அவர்கள் எதிர்பார்ப்பும் திசை மாறத் தொடங்கியது.

குலசேகரன் அதைக் கேட்டு விக்கித்துப் போனான்.

''அடியார்கள் இப்படி ஒரு செயலை எக்காலத்திலும் செய்யத் துணியார்...'' என்று சாதித்தான்.

''என்றால் இதற்கு ஒரே ஒரு தீர்வுதான் உள்ளது. அவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் நல்ல பாம்பை ஒரு குடத்துக்குள் விட்டு அதனுள் அவர்கள் கரத்தை உள்ளே விடச் சொல்வோம். அவர்கள் களவாடவில்லை என்றால் பாம்பு அவர்களின் கரத்தைத் தீண்டாது. இல்லாவிட்டால் தீண்டட்டும்'' என்றனர்.

குலசேகரன் துளியும் அதிரவில்லை.

''நல்லது... அப்படியே செய்யுங்கள்'' - என்று கூறி விட்டார். அமைச்சர்களுக்கெல்லாம் ஒரே சந்தோஷம். இதைக் கேள்விப்படும் அடியார்கள் குற்றம் செய்யாதிருப்பினும் இதைத் தங்களுக்கான அவமரியாதையாக, அபகீர்த்தியாக எண்ணுவார்கள். இனி ஒரு வினாடி கூட அரண்மனையில் இருக்கக் கூடாது. அவ்வளவு ஏன் இந்த நாட்டிலேயே இருக்கக் கூடாது என்று ஓடி விடுவார்கள் என்றும் கருதினர்.

இப்படி எல்லாம் ஆசைப்படவும், கற்பனை செய்து பார்க்கவும் தான் நம்மால் முடியும். ஆனால் நினைப்பது போலவா வாழ்க்கையில் எல்லாமும் நடந்து விடுகிறது?

அங்கேயும் அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

குடத்தில் பாம்புடன் சோதனைக்குத் தயார் ஆகி விட்டனர். ஆனால் மன்னன் குலசேகரன் அவ்வேளையில் தானே முன்வந்து, ''அடியார்கள் எக்காலத்திலும் இது போன்ற தவறுகளை செய்ய மாட்டார்கள். எனவே பிழை அவர்கள் மேல் இல்லை என்பதை நிரூபணம் செய்ய அவர்கள் அததனை பேரின் சார்பாக நானே கையை விடுகிறேன்'' என்று கூறவும் அமைச்சர்களும், அரசவை பிரதானிகளும் அதிர்ந்தனர். 'அரசே... இது கூடாது'' என்றனர்.

''எது கூடாது...? அடியார்கள் என் கண்ணின் மணி போன்றவர்கள். அவர்களாலேயே நான் பக்தியில் ஊறித் திளைக்க முடிகிறது. அவர்களே என்னை உலக மாயையில் சிக்கி விடாதபடி பார்த்துக் கொள்கின்றனர். இது அவர்களுக்கு வந்த சோதனை அல்ல. எனக்கு வந்த சோதனை...''

என்றபடியே துளியும் ஐயமின்றி பாம்புக் குடத்துக்குள் குலசேகரன் கையையும் விட்டு விட்டான். ஆனால் அரவம் தீண்டவில்லை. எப்படித் தீண்டும்? அதுதான் அந்த மாலவன் துயிலும் பாயாயிற்றே... அவன் பக்தர்களுக்கா அது விஷத்தைக் கக்கும்?

அதே சமயம் இந்த சோதனையை மிகவும் சாதுர்யமாகக் கருதி செயல்படுத்திய அமைச்சர் பிரதானிகளோ பயந்து நடுங்கத் தொடங்கிவிட்டனர். அவர்கள் முற்றிலும் எதிர்பாராத ஒரு சம்பவம் இது! ''அரசே எங்களை மன்னியுங்கள்...'' என்று அவர்கள் அவ்வளவு பேருமே குலசேகரனின் காலில் விழுந்தனர். அவ்வளவும் மானுடச் சதி என்று தெரிய வரவும் குலசேகரனுக்குள்ளும் பேரதிர்ச்சி. எதனால் இப்படிச் செய்தனர் என்ற கேள்விக்கு விடை கிடைக்கவும் அதைவிட பேரதிர்ச்சி

'நான் ஒரு அரசனாக இருப்பதனால் தானே என்னிடம் பக்தியை விடுத்து நல்லாட்சியை எதிர்பார்த்துள்ளனர்.

பக்தியோடு கூடிய ஒரு ஆட்சியை வழங்கியும் கூட அது இவர்களைக் கவரவில்லை. அரசன் என்றால் வில்லும் வாளுமாக வேட்டை, அல்லது போர் என்றிருக்க வேண்டும் என்று இவர்களாக ஒரு கருத்தில் இருந்துள்ளனர். அந்த கருத்துப்படி நான் வாழ வேண்டும் என்பதற்காக அடியார்கள் கூட்டம் மீதே பழியையும் போடப் பார்த்துள்ளனரே இது எத்தனை கொடுமை? எத்தனை மடமை?'

- குலசேகரன் கொந்தளித்த நிலையில் இறுதியாக எடுத்த முடிவுதான் அனைவரையும் அப்படியே ஸ்தம்பிக்க வைத்தது. அந்த நொடியே அரசனுக்குரிய கிரீட குண்டலங்களைக் கழற்றிவிட்டு, தன் மகனை அழைத்து அரியணையில் அமரச் செய்தான். பின்னர் சன்யாச கோலம் பூண்டு ஒரு பரிபூரணமான மாலவன் அடியாராக தன்னை கருதிக் கொண்டு தனது நெடுநாள் கனவுகளில் ஒன்றான திருவரங்க யாத்திரைக்கும் தயாராகி விட்டான் குலசேகரன்!

## 15

திருவரங்கம்!

ஸ்ரீ வைஷ்ணவத்தின்படி ஒழுகுகின்றவர்களுக்கு இது தான் முதல் திவ்யதேசம். சுருக்கமாக பெரிய கோயில் என்று அழைப்பார்கள்.

பாரத நாடே ஒரு ஆச்சரியமூட்டும் நிலப்பரப்பாகும். மூன்று பக்கம் கடல் நீர் - நான்காம் பக்கமாகிய வடக்கில் இமயமலை - நடுவில்தான் தேசம். இதில் தென்பாகம் என்பது வேலின் வடிவம் போல குவிந்து சுருங்கி முடிகிறது. இந்த தென்பாகம்தான் காலத்தால் பெரிதும் மாற்றங்களை சந்திக்காமல் பழைய சான்னித்யங்களை இழக்காமல் இருந்து வருகிறது. அதில் திருவரங்கம் பிரதானமானது.

காவிரி நதியின் காரணமாகத் தோன்றிய தீவு போன்ற ஒரு நிலப்பரப்பு தான் திருவரங்கம்.

இதனால் இந்நகருக்கு மட்டும் எல்லாத் திசையிலும் நீரைக் கடந்தே செல்ல வேண்டும். வைணவர்களின் ஒரே

தெய்வம் அந்த ஸ்ரீமன் நாராயணனே! நாராயணன் என்ற பெயரே காரணப் பெயர்தான். நாரம் எனப்படும் நீரை அணைந்து பாற்கடல் மேல் பள்ளி கொண்டிருப்பவன் என்னும் பொருளை உடையது நாராயணன் என்னும் பெயர்.

அதாவது நாராயணன் என்றால் நீரை அணைந்தபடி கிடப்பான். இது விண்ணகத்தில் உள்ள பாற்கடலில்... மண்ணகத்தில் அதே போல் அவன் நீரை அணைந்த படியும் கிடக்க வேண்டும். அதே சமயம் அவனை நாடி வரும் பக்தர்களுக்கு அதனால் தடையேதும் கூடாது எனும் ஏற்பாட்டின்படி அமைந்ததே திருவரங்கம் ஆகும்.

அரங்கம் எனும் சொல்லுக்கு உலகம் என்றும் பொருள் உண்டு. அதில் உள்ள 'கம்' எனும் சொல்லுக்கு அடங்கி யிருத்தல் என்று பொருள். அதாவது அரங்க உலகில் அடங்கி யிருந்து தான் அடங்கியிருக்கும் இடத்தையே பாற்கடல் போல் சான்னித்யத்திற்குள்ளாக்கி அதன் காரணமாக பூலோக வைகுண்டம் என்கிற தகுதிக்கும் திருவரங்கத்தை ஆட்படுத்தி அங்கேயிருந்து கொண்டு அருள் பாலிக்கிறாள் அந்த நாரணன்.

அதுவும் எப்படி?

பாற்கடலில் ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டிருக்கும் அதே கோலத்தில்... இதன் பின்புலத்தில் திருவரங்கம் பற்றி அறிய வேண்டிய விஷயங்கள் நிறையவே உள்ளன. அவைகளை அறிந்தாலே குலசேகரன் தனது அரசாட்சியைத் துறந்து திருவரங்கத்திற்குச் செல்ல ஆசைப்பட்டதன் காரணமும் அதன் ஆழமும் நமக்கும் தெரிய வரும்.

இன்று திருவரங்கம் பற்றிக் கேட்டால் அது திருச்சி நகருக்குப் பக்கத்திலுள்ள ஒரு ஊர். திருச்சியை சேர்ந்தது என்றுதான் அடையாளப் படுத்துகின்றார்கள்.

இஷ்வாகு குலதனம் எனப்படும் ஸ்ரீரங்க மகாத்மியம் ஸ்ரீரங்கம் எனப்படும் திருவரங்கத்தின் சிறப்பை அறுதியிட்டுக் கூறுகிறது.

அதன் சுருக்கம்தான் இனி நாம் காணப் போவது!

இன்று நாம் வசிக்கும் இந்த பூமியை பூலோகம் என்கிறோம். அண்ணாந்தால் வானம்! அதில் சூரிய சந்திரர் களையும், ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களையும் காண் கிறோம். இது போக வைகுண்டம், கைலாயம், சத்யலோகம், இந்திர லோகம், ஸ்ரீபுரம் என்றெல்லாமும் புராணங்களின் வாயிலாக உலகங்கள் இருப்பதாக அறிகிறோம்.

பூவுலகில் வசிக்கும் நாம் மனிதர்கள் என்றழைக்கப் படுகிறோம். விண்ணகத்தில் இருப்பவர்களுக்குத் தேவர்கள் என்று பெயர். மண்ணிலும் சரி, விண்ணிலும் சரி எதிலும் எதிர்மறையாகவும், சுயநலமாகவும் வன்மையோடும் திகழ்பவர்களை அசுரர்கள் என்கிறோம். இதுபோல கோடானு கோடி ஜீவராசிகளும் புழு பூச்சிகளும் கொண்டதே உலகமாக உள்ளது.

இவை அவ்வளவுமே ஒரு நாளின் ஒரு பொழுதில் வந்துவிடவில்லை. இவை அவ்வளவுக்குமே ஒரு ஆரம்பம் என்று ஒன்றும் இருந்தே தீர வேண்டுமல்லவா?

அந்த ஆரம்பமே ஸ்ரீமன் நாராயண மூர்த்தியாவார்!

இவரால் முதலில் தோற்றுவிக்கப்பட்டவரே பிரம்மா!

அவருக்குச் செய்விக்கப்பட்ட முதல் மந்த்ரோபதேசம் 'ஓம்' எனப்படுவதாகும். பிரம்மனும் இந்த ஓம் எனும் பிரணவத்தை நாரணனின் கட்டளைக்கேற்ப ஜெபிக்கத் தொடங்கினான். இதனால் பிரம்மன் முதலில் ஞானம் பெற்றான். பின் 'ஓம்' எனும் மந்திரத்துடன் ஹரி என்கிற நாமத்தைச் சேர்த்து ஜெபிக்கவும் படைப்பாற்றல் அவனுக்குக் கிட்டியது. அந்த ஆற்றலால் உலகில் உயிரினங்கள் தோன்றின. அவ்வுயிரினங்கள் கடைத்தேறவும் ஒரு பொருள் பொதிந்த வாழ்க்கை வாழவும் அவர்களுக்கு வழிகாட்ட வேதங்களும், காயத்ரீ மந்திரங்களும் தோன்றின. மாயையும் தோன்றியது. அதன் காரணமாய் மது கைடபர்கள் என்னும் இரு அசுரர்கள் தோன்றி, அழிச்சாட்டியமும் செய்தனர். இவர்கள் நால் வகை வேதங்களையும் பிரம்மனிடம் இருந்து பறித்து பாதாள லோகத்தில் ஒளித்தும் வைத்து விட்டனர்.

இதனால் பிரம்மம் சோதனையை சந்தித்தது.

இறுதியாக தன்னைப் படைத்து தனக்கு ஞானமும், படைப்பாற்றலும் அளித்த நாராயணனிடம் சரண் புகுந்து நின்றது. நாராயண மூர்த்தியும் ரட்சிக்கத் தயாரானான். குதிரை முகம் கொண்ட ஹயக்ரீவ வடிவம் கொண்டு பாதாள உலகம் சென்று நான்கு வேதங்களை மீட்டு வந்ததோடு மது கைடபர்களையும் வதம் செய்தார்.

மீட்கப்பட்ட வேதங்கள், ''அசுரன் கரம்பட்டதால் நாங்கள் பொலிவை இழந்துவிட்டோம். எனவே எங்களுக்குப் பொலிவூட்ட வேண்டும்'' என்ற வேண்டுகோளை அப்பரந்தாமனிடம் வைத்தன.

அந்த வேதம் படைத்த நாயகனும் அதே ஹயக்ரீவ கோலம் கொண்டு தன் வாயாலேயே நால்வகை வேதங்களையும் பிரம்மனுக்கு உபதேசித்திட, பிரம்மனும் புத்துயிர்ப்போடு தன் படைப்பைத் தொடங்கினான். பிறகுதான் தேவர்கள், மனிதர்கள் ஏனைய உயிர்கள் என்பவையெல்லாம் தோன்றின.

அத்தனை உயிர்களுக்குமான உலகங்களைப் படைத்து, அதற்கேற்ப உணர்ச்சிகளைப் படைத்து இயக்கத் தொடங்கினான் பிரம்மன்.

ஆயினும் தான் படைத்தவை அவ்வளவுக்கும் தொடக்கம் இருப்பதைப் போலவே அழிவும் இருப்பதை பிறகே உணர்ந்தான்.

இதன் பிறகே அழியாத ஒரு நிலைக்கு முயன்றான்.

அதன் காரணமாக எம்பெருமானை சரண் புகுந்து ''அழியாப்பேற்றுக்கு என்ன வழி?'' என்று கேட்டபோது, பிரம்மனுக்கு ''ஓம் நமோ நாராயணாய'' எனும் அஷ்டாக்ஷர மந்த்ர உபதேசம் புரிந்தார் எம்பெருமான். பிரம்மன் அந்த அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சொல்லிப் பெரும் தவம் புரிந்தான். அத்தவத்தின் விளைவுதான் ஸ்ரீரங்கவிமானம்! பொன்னொளியோடு கூடி திருப்பாற்கடலில் இருந்து உதித்த அதனுள் அப்பெருமானோடு கூடி சப்தரிஷிகளும் அஷ்டவசுக்களும்,

த்வாதச ஆதித்யர்களும், நவக்கிரகங்களும் இருக்கக் கண்டார் பிரம்மன்.

இந்த தெய்வீக விமானத்தை கருடன் சுமந்து வர நாரதர், தும்புரு முதலானவர் கானமிசைத்து மகிழ, இந்திரனுடன் இதர தேவர்கள் உடன் வந்தனர். ஆதிசேஷன் விமானத்துக்கே குடைபோல தன் பெரிய படத்தை விரித்துக் கொண்டு வந்தான். சூரிய சந்திரர்கள் பெருமானுக்கு சாமரம் வீசியபடி இருந்தனர். அப்போது அங்கு வந்த சுனந்தர் என்னும் மகரிஷி ஸ்ரீரங்க விமானத்தின் சிறப்பை பிரம்மனிடம் வார்த்தைப்படுத்தினார்.

''பிரம்மதேவா, அஷ்டாக்ஷரம் ஜெபித்து அதன் சக்தியால் நீ காண்பதே இந்த ரங்க விமானம். இது உன் தவத்தால் விளைந்தது. தவம் என்றாலே மனவடக்கம் - மன ஒருமை என்பதே பொருள். அப்படி ஒரு ஒருமை அஷ்டாக்ஷரம் வாயிலாக நிகழும்போது அங்கெல்லாமும் இந்த விமானம் அவர்கள் மனதில் தோன்றிட அவர்களும் பிரம்மர்களாவர்!'' என்றார். எவரோ பிரம்மர்? எதுவோ பிரம்மம்? எனும் கேள்விக்கு ஒரு மறைமுகமான விடையாகவும் அமைந்தது. சுனந்த மகிரிஷிகள் விளக்கம்.

அதன்பின் பிரம்மன் அந்த விமானத்து தேவனாகிய நாரணனை - அரங்க விமானத்தில் வெளியில் தோன்றியதால் அரங்கனாகவும் ஆகிவிட்டவனை - நித்யமும் பூஜிக்க விரும்பி பெருமானே இந்த விமானத்தில் எனக்கும் இடமளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தான்.

''உன் அஷ்டாக்ஷர மந்திர சத்தியாலே தோன்றிய பாற்கடல் தோற்றம் இது. இதில் உனக்கு இடம் கிடைக்க நூறாண்டுகள் நீ ஆறுகால பூஜை செய்தால் என்னை வந்தடையலாம்'' என்றார்.

இது பிரம்மனுக்கு சொன்னது போல் ஸ்ரீரங்க விமானத்தை அஷ்டாக்ஷர மந்திர ஜெபத்தோடு தரிசித்து பிரம்மமாகவே ஆக விரும்புகிறவர்களுக்கும் சொன்ன பதில் இது!

ஏனென்றால் அந்த பிரம்மனே அவனில் இருந்து தோற்றுவிக்கப்பட்டவனே... அப்படிப்பட்ட பிரம்மன் தன்னை தனித்து உணர்ந்து தான் இனிதான் அப்பரந்தாமனோடு

சென்று சேர வேண்டும் என்று எண்ணிடக் காரணமே உலகமாயைதான். ஆனாலும் அதனால் நன்மையே விளைந்தது.

வேதங்கள் புனருத்தாரணம பெற்றன!

ஸ்ரீரங்க விமானம் தோன்றியது.

விமானத்தில் சேர்ந்திடும் வழிவகை தெரியவந்தது.

பிரம்மதேவனும் முதலில் இதை தன் சத்யலோகத்துக்கு எடுத்துச் சென்று அங்குள்ள விரஜை ஆற்றின் கரையில் வைத்தான். ஆராதனைகளையும் தொடங்கினான்.

பிரம்மனின் இந்த ஆராதனையோடு தங்களையும் இணைத்துக் கொண்டனர் ஸ்வயம்புமனு, தக்ஷபிரஜாபதிகள் போன்றவர்கள். ஒரு கட்டத்தில் சூரியனும் பிரம்மனிடம் அஷ்டாக்ஷர மந்திர உபதேசம் பெற்று இந்த ஸ்ரீரங்க விமானத்தை வணங்கி வந்தான். சூரியனைத் தொடர்ந்து அவன் குமாரனான வைவஸ்வத மனு, மனுவைத் தொடர்ந்து அவன் மகனான இஷ்வாகு போன்றோர் வழிபட்டனர்.

சத்யலோகத்தில் விரஜை ஆற்றங் கரையில் இருந்த ஸ்ரீரங்கவிமானத்தை இப்படி தன் போன்ற தேவர்களே வழிபட முடிவதையும், பூவுலகத்தவர்க்கு அந்த பாக்கியம் இல்லாமல் இருப்பதையும் ஒரு கட்டத்தில் அறிந்த இஷ்வாகு அந்த ஸ்ரீரங்க விமானத்தை பூலோகம் கொண்டு செல்ல விரும்பி அதற்காக கடும் ''தவம் செய்தான்... ஆனால் பிரம்மன் ஸ்ரீரங்க விமானத்தை சத்யலோகத்தை விட்டுச் செல்ல முதலில் அனுமதிக்கவில்லை. ஆயினும் இஷ்வாகுவின் உலக நன்மைக்கான எண்ணத்துக்கு அந்த நாராயணனே பெரிதும் மகிழந்து பிரம்மனுக்கு உரிய சமாதானம் செய்து, பூவுலகில் அயோத்தியில் கோயில் கொண்டான்.

பின்னர் சூரிய வம்சத்தில் வந்த இஷ்வாகுவைத் தொடர்ந்து பலர் வந்தனர். அவர்களில் தசரத சக்ரவரத்தியும் ஒருவர். இஷ்வாகு குலத்தவர்களின் இடையறாத தவமும் பக்தியும் அந்த பரந்தாமனை குளிர்விக்கப்போய், அவதார நோக்கம் கொண்டு பூமியில் ராமனாக அவதரிக்க எண்ணிய போது இஷ்வாகு குலத்தை அதன் பொருட்டே தேர்வு செய்தார்.

ராமனாகவும் பிறந்தார். ராமனும் அரங்கனை முன்னோர்களின் வழியில் நின்று வணங்கி பூஜைகளும் செய்தான்.

இதை வைத்துத்தான். 'வழியும் அவனே - வழிகாட்டியும் அவனே' என்பார்கள். பின்னர், ராமன் வாழ்வில் அனேக சம்பவங்கள் நடந்து முடிய ராவண வதமும் அதில் பிரதானமாக நிகழ்ந்தது. பின் விபீஷணனுக்கு அருள வேண்டிய தருணத்தில் விபீஷணன் கேட்டது ஸ்ரீரங்க விமானத்தையே...!

ராமனும் மறுக்காது விமானத்தை வீபீஷணன் வசம் தந்திட அது விபீஷணனோடு இலங்கை நோக்கிப் பயணம் மேற்கொண்டது.

இடையில் காவிரி நதி தீரமாயும் மாலை போல் அது பாய்ந்திடும் தலமாகவும் விளங்குமிடத்தில் விமானத்தை வைத்துவிட்டு காவிரியில் நீராடிவிட்டு வந்து விமானத்தை எடுத்துச் செல்ல முயல்கையில் அது அசைய மறுத்தது.

விபீஷணன் கலங்கிப் போனான். அவ்வேளையில் அசரீரி ஒலித்தது.

''விபீஷணா... இந்த மண்ணகத்தை தர்மவர்மா என்பவன் ஆண்டு வருகிறான். அவனுக்கும் நான் இங்கு கோயில் கொள்ள வேண்டும் என்று ஆசை. உரிய காலத்தில் அதை ஈடேற்றுவேன். அன்றிலிருந்து ரங்க ராஜ்யமும் ஆரம்பமாகும் என்று அருளியிருந்தேன். உன்னால் அது இன்றிலிருந்து தொடங்குகிறது. இதற்காக நீ வருந்தாதே... உனக்கான ஆயுட் காலம் முடியும் போது நீ என்னை அடையும் வரத்தை இப்போதே தந்து விடுகிறேன்'' என்றார்.

விபீஷணனால் காவிரிக் கரையில் வந்து அமர்ந்து ரங்க விமானம் முதற்காரியமாக விபீஷணனுக்கு முக்தியைத் தந்தது. அன்று முதல் தன்னை நாடி வந்து துதிப்பவர்க்கெல்லாமும் தந்து கொண்டிருக்கிறது.

இப்படி திருவரங்கத்துக்குப் பின்னாலே ஒரு வரலாறு இருக்கிறது. அந்தப் பரந்தாமன் ஒரு அர்ச்சாவதாரி... ஆகையால் அவனை இம்மண்ணில் பலர் கல்லிலும் மண்ணிலும் செதுக்கிக் கோயில் கொள்ளச் செய்துள்ளனர்.

ஆனால் திருவரங்கம் சுயமாகத் தோன்றியது. அதாவது தானாகவே தோன்றியது.

இப்படித் தானாக தோன்றிய தலங்கள் இந்த உலகில் அந்த அஷ்டாக்ஷரம் போலவே எட்டு உண்டு! அதில் முதலாவது திருவரங்கம், அடுத்தது ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடமாமலை, சாளக்ராம மாமலை, நைமிசாரண்யம், தோத்தாத்திரி, புஷ்கர், பத்ரிநாத் ஆகியவை ஆகும்.

# 16

திருவரங்கம் பற்றி அறிந்தோம். இதன் பெருமை, இதன் கருணை, இதன் தேஜோமயம் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் குலசேகரனுக்குள் திருவரங்கம் நோக்கிச் செல்லும் ஒரு துடிப்பை தோற்றுவித்தது.

குலசேகரரின் அரசாட்சிக்குட்பட்ட கேரளத்து திருவிஞ்சைக்களத்துக்கும் - திருவரங்கத்துக்கும் இடையே ஏகதூரம்... இந்த தூரத்தை என்னதான் ரதம் கொண்டே பயணித்தாலும் கடப்பதற்கு அன்று இருந்த நிலையில் பதினைந்து தினங்கள் ஆகும். போக பதினைந்து நாள் - வர பதினைந்து நாள்... பயணத்திட்டமே முப்பது நாட்கள். இப்படி முப்பது நாட்களை செலவழித்துச் சென்ற ஒரு ஸ்தலத்தில் குறைந்தது மூன்று மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரையாவது இருந்து சேவித்தால் தான் அத்தனை நீண்ட பயணத்திற்கும் ஒரு அர்த்தச் செறிவு ஏற்படும்.

ஒரு அரசன் வரையில் அவன் இப்படி ஆறுமாத காலத்தை தெய்வீக யாத்திரைக்காக ஒதுக்கினால் நாட்டை நிர்வகிக்கும் விதத்தில் பிரச்னைகள் எழும். அரசன் இல்லாத நாடு என்பதை கள்வர்கள் அறிந்தால் அவர்கள் கன்னக்கோல் புரியலாம்.

இதெல்லாம் தான் குலசேகரனை திருவரங்கம் நோக்கிச் சென்றுவிடாதபடி குலசேகரனின் அமைச்சர் குழாமால் தடுத்து நிறுத்தப்படவும், நிரந்தரமாக அந்த விருப்பத்தை குலசேகரன்

விலக்கிக் கொண்டு விடவேண்டும் என்று கருதவும் காரணமாகிவிட்டது.

ஆனால் அந்தக் காரணமே காரியமாகி தடுத்ததெற்கெல்லாம் சேர்த்து திருவரங்கம் நோக்கி குலசேகரன் வேகமாக புறப்படவும் காரணமாகிவிட்டது.

அடியார்கள் மேல் திருட்டுப் பழிபோட்டு அவர்களை வைத்தே குலசேகரனை கட்டிப் போட செய்த முயற்சி இறுதியில் பாவத்தில் முடித்துவிட்டது. அதற்குப் பரிகாரமாக அதே அடியார்களுக்குக் காலமெல்லாம் சேவை செய்வது ஒன்றே சாலச்சிறந்த செயலாகும் என்கிற முடிவிற்கு வந்த குலசேகரன் முதலில் செய்தது தனது அரசபதவியை துறந்த செயல்பாடுதான்.

''நான் இனி இந்த சேரநாட்டின் மாமன்னனில்லை. நான் இனி ஒரு மாலடியான், அடியார்க்கெல்லாம் அடியான்.'' என்று அறிவித்துக் கொண்டவர் தனது மகனான தனது தந்தையின் பெயரைக் கொண்ட திடவிரதனை அழைத்தார்.

''மகனே, இனி நீ தான் இந்த சேரநாட்டுக்கு அரசன். உன் தந்தை இனி ஒரு தொண்டன். இந்த நாட்டை என் அடி ஒற்றி தர்மத்தோடு ஆட்சி செய்ய வேண்டியது உன் கடமை'' - என்று அரசாட்சியை ஒப்புவித்தார்.

குலசேகரனுக்கு திடவிரதன் என்கிற மகன் மட்டுமல்ல. இளை என்கிற மகளும் இருந்தாள். அவளும் ஒரு ஆச்சரியமான பிறவி. தந்தையின் விஷ்ணு பக்திக்கு ஒரு நூலளவு குறையும் இல்லாமல் அவளும் விஷ்ணு பக்தையாக இருந்தாள். அவளுக்கு உரிய ஒரு ராஜ வரன் பார்த்து திருமணம் முடிக்கும் கடமை தந்தைக்கும், சகோதரனுக்கும் உண்டே?

தன்னை மாலடியாராக குலசேகரர் அறிவித்துக் கொண்டு திருவரங்கம் நோக்கிப் புறப்படும்முன் இளைக்கு ஒரு திருமணம் புரிந்து பார்த்துவிட வேண்டும் என்பதுதான் இவர்கள் இருவரின் எண்ணமாக இருந்தது. ஆனால் இளைக்கு ராஜபோக வாழ்வில் நாட்டமேயில்லை. இல்வாழ்க்கை பற்றி

எண்ணவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. தந்தை வழியில் விஷ்ணு பக்தையாக இருக்கவே தனக்கு விருப்பம் என்று கூறவும் அதைக் கேட்டு குலசேகரர் மகிழ்ந்தபோதும் மற்றவர்கள் மகிழத் தயாரில்லை.

அப்பனைத்தான் அந்த விஷ்ணு பக்தி என்னும் கிறுக்கு பிடித்தாட்டுகிறது என்றால் அது மகளையும் கூட பிடித்துக் கொண்டுவிட்டதே என்று பேசியவர்களே அனேகம். ஆனால் இளை அந்தப் பேச்சைக் கேட்டெல்லாம் அசரவில்லை. அண்ணன் திடவிரதன் ஒரு ராஜாதி ராஜனைப் பார்த்துக் கொண்டு வந்து நிறுத்துகிறேன் என்று கூறியதையும் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் தந்தையான குலசேகரன் நெற்றியில் தரிசிக்கும் திருமண் ஸ்ரீ சூரணக் காப்பில் பெண்கள் அணியத்தக்க ஸ்ரீசூரணத்தையும், அந்த மாலுக்கு மிக உகந்த துளசி மாலையையும் அணிந்து கொண்டு எனக்கு இப்படி இருப்பதில்தான் நாட்டம் என்று காட்சியிலேயே எடுத்துரைத்த தோடு ''அப்பா உங்களோடு நானும் திருவரங்கம் வருகிறேன்'' என்று தந்தையோடு புறப்படத் தயாராகி விட்டாள்.

குலசேகரனும் இங்கே தன் மகளின் திருமண வாழ்வு பாழாகிறதே என்று எண்ணவில்லை. அவள் பரந்தாமனின் அடியார்களில் ஒருவராய் மாறியது மகிழ்ச்சியே தந்தது. அதற்கு ஏற்பவே அனைத்தும் நடந்தன.

அன்று இரவு குலசேகரனின் கனவில் அந்த தாமோதரன் அசரீரி வடிவில் வழிகாட்டினான். 'குலசேகரா... இளை குறித்துக் கவலை வேண்டாம். அவள் எனக்கெனவே பிறந்தவள். என்மேலான அவளது தாஸ்ய பாவம் மிக உன்னதமானது. முற்பிறப்பில் மேற்கொண்ட தவத்தால் வந்தது. அவளுடனேயே நீ திரவரங்கம் ஏகுவாய்'' என்று அசரீரிக் குரல் குலசேகரனுக்கு பெரும் தெளிவையும் தெம்பையும் அளித்தது.

அதே போல இளையின் கனவிலும் வானில் ஒரு ஒளிவட்டம் தோன்றி அது திருவரங்க ரங்க விமானத்தில் சென்று கலந்து மறைந்தது. இளை பெரும் பரவசம்

கொண்டாள். தந்தையிடம் அவள் தன் கனவைக் கூற குலசேகரனும் தன் அசரீரியைக் கூறிட இருவருமே பெரும் புதையலை எடுத்த பரவசத்துக்கு ஆளாகி அன்றே திருவரங்கப் பயணத்தையும் தொடங்கிவிட்டனர்.

திருவரங்கத்தை அடைந்துவிட்ட குலசேகரன் அங்கே துளியும் தன் ராஜமார்த்தாண்டங்களைக் காட்டாமல் பன்னிரு திருமண் காப்பு தரித்தும், சிகை வளர்த்தும், அடியார்களில் ஒருவராய் ஆகிப் போனதோடு உள்ளம் உருகிட பல பாடல்களையும் பாடினார்.

இதுவரை மன்னன் குலசேகரனாய் அறியப் பெற்றவர் அடியாராகி, பாடல்களையும் பாடவும் திருவரங்கத்தார் இவருக்கு பெருமைக்குரிய பெருமானின் நாமத்தை இவர்க்கு அளித்து 'குலசேகர பெருமாள்' என்றே அழைத்தனர்.

செல்வ மகளான இளையும் தினம் தோறும் அரங்கனை தரிசித்து அதன் காரணமாய் பெரும் காதல் கொண்டாள். மாந்தர்க்கு மாந்தர் ஏற்படுவது காமத்தால் விளையும் காதலாகும். ஆனால் இக்காதலோ பக்தியால் உருவானது. இக்காதலை 'அரங்கன் வரையில் ஆண் பெண் பேதமின்றி அவன் பால் கொள்ளலாம். இளையும் இக்காதலுக்கு ஆளானபோது அடியார்க்கு அருள்வது போல அருளி ஆட்சிசெய்து தன் வைகுண்டத்தில் இடமளிப்பது ஒருவிதம் என்றால், மணந்து ஆட்கொள்வது இன்னொரு விதம். இளை விஷயத்திலும் சரி பின்னாளில் ஆண்டாளின் விஷயத்திலும் சரி அந்த அரங்கன் இவர்கள் பக்திக்குப் பரிசாக தன்னையே தந்தான். தனது வைகுண்டத்தைத் தருவதற்கும் தன்னையே தருவதற்கும் பெரிய வேற்றுமை இல்லையாயினும் அங்கே சிறிய வேற்றுமையும், சின்னஞ்சிறு வயதில் முற்றிய தவத்தவர்க்கு மட்டுமே ஏற்பட முடிந்த ஞானத்துக்கும் தவத்துக்கும் இப்படியே தன்னையே தருவதில், அவனுக்கு ஒரு ஆனந்தம் என்றே கொள்ளலாம்.

குலசேகரர் திருவரங்கத்தோடு தன் பக்தி உலாவை நிறுத்திக் கொள்ளவில்லை. திருவரங்கத்தை சுற்றியுள்ள திவ்ய

தேசங்கள் அவ்வளவிற்கும் சென்று அந்த திருமாலின் மாறுபட்ட வேறுபட்ட சொரூபங்களை தரிசனம் செய்து, அதன் காரணங்களையும் உணர்ந்து அங்கெல்லாமும் பாடல்கள் பாடினார். அதில் திருக்கண்ணபுரம் சௌரி ராஜப் பெருமானிடம் இவர் வியந்தது சற்று அதிகம். இங்கேதான் இவர் முகுந்த மாலை பாடியதாகக் கருதப்படுகிறது. இதை சமஸ்க்ருத மொழியில் படைத்தது விசேஷம்.

"தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே
யாவரும் வந்து அடி வணங்க அரங்க நகர்த் துயின்றவனே
காவிரி நல் நதிபாயும் கணபிரத்தென் கண்மணியே
ஏவரி வெஞ்சிலை வலவா, ராகவனே தாலேலோ..."

எனும் இப்பாடல் கண்ணபுரத்துப் பெருமாளைக் கண்ணுற்றுப் பாடியது. கண்ணபுரத்தோடு இவர் பயணம் நின்று விடவில்லை. அது தொடர்கிறது. திருச்சித்திரகூடம், திருமாலிருஞ்சோலை, திருவயோத்தி, திருப்பாற்கடல், திருவித்துவக்கோடு, திருமலை என்று வரிசையாக சென்றவர் திருவேங்கடமுடையானைக் கண்டு இவர் உள்ளம் உருகுகிறது.

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும், மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே..."

- என்கிறார். இது பக்தியின் உச்சம். இந்திரபதவிதான் அரச பதவிகளில் பெரியது. தேவர்களுக்கே தலைவனாகும் தகுதியைத் தரவல்லது. அதைப் போன்ற பதவிகளை விட பெரியது திருவேங்கட மலையில் உள்ள ஏதாவது ஒரு சுனையில் மீனாய் நீந்துவது...' என்கிறார்.

இங்கே இவரது உருக்கம் தொடர்கிறது. "செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல் அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே..." - என்கிறார்.

திருமலை சுனைகளில் மீனாய் பிறக்க விருப்பம் தெரிவித்தார். ஒரு படிமேலே போய் திருவேங்கடமுடையான் சன்னதியில் படியாய் கிடக்க விருப்பம் தெரிவிக்கிறார். அப்படிக் கிடக்கும் பட்சத்தில் அந்த வேங்கடவனின் பவளக்கனியாய் உதட்டையும், அதில் பொலிவும் குறுஞ் சிரிப்பையும் பார்த்த வண்ணம் இருக்கலாமே?

இவர் இப்படி விரும்பியதன் காரணமாகத்தான் திருமால் ஆலயங்களில் உள்ள கருவறைக்கு முன் உள்ளபடி 'குலசேகரன் படி' என்றே பெயர் பெற்று விளங்குகிறது. அந்தப்படியாய்க் கிடக்க விரும்பியதன் விளைவு எங்கெல்லாம் மாலின் திருச்சன்னதி உள்ளதோ அங்கெல்லாம் உள்ள கற்படிகள் அவ்வளவிற்கும் ஒரு ஆழ்வார்க்குரிய அந்தஸ்து வந்து விட்டது. இதன் காரணமாக இந்த படியை மிதியாமல் தாண்டிச் செல்லவே சான்றோர் விரும்புவர். இது குலசேகர ஆழ்வார் பால் உள்ள பக்தியின் பொருட்டு உருவான ஒரு மதிப்பான உணர்ச்சி.

திருவரங்கத்தில் திருவரங்கப் பெருமான் உள்ள படிக்கும் குலசேகரன்படி என்றே பெயர். இந்த பெருமானுக்கே தன் மகளாகிய இளையை திருமணம் செய்து ஒப்புவித்து விட்டபடியால் மாமனார் சீராக திருவரங்க ஆலயத்துக்கு இவர் புரிந்த தொண்டுகள் ஏராளம். அதில் மூன்றாம் சுற்றுப் பிரகாரத்தில் இவர் எழுப்பிய 'சேனை வென்றான் மண்டபமும்' அந்தப் பிரகாரப் பாதையைச் செப்பனிட்டு சீர் செய்ததும் இவரே. அதனால் இவர் பெயரிலேயே குலசேகரன் வீதி என்று அது இன்றும் அழைக்கப்படுகிறது' என்றும் அழைக்கப்படும்.

குலசேகரரின் இறுதிக்காலம் குறித்து சில குழப்பமான தகவல்களே கிடைக்கின்றன. இவர் அந்திம காலத்தில் நம்மாழ்வாரின் பெருமைகளை அறிந்து அவர் பிறந்து வாழ்ந்த குருகூரை அடைந்து அங்கேயே இறுதி வரை வாழ்ந்து தொண்டு செய்தார் என்கிறது ஒரு தகவல்.

குருகூருக்கு பக்கத்திலுள்ள மன்னார் கோயிலில் உள்ள ராஜகோபால ஸ்வாமிக்கு திருப்பணிகள் செய்து தன் அறுபத்தேழாம் வயதில் அங்கேயே தன் வாழ்வை முடித்துக் கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நூற்றி ஐந்து பாசுரங்கள் இவர் பாடியதாக கிடைத்துள்ளன. அவற்றை பெருமாள் திருமொழி என்கிற பெயராலே ஏற்று அதை பாடி மகிழ்கிறது அடியார்கள் உலகு. இது போக இவர் எழுதிய சம்ஸ்க்ருத நூலான முகுந்த மாலையும் இவர் படைத்ததில் அடங்கும்.

குலசேகரை தொடர்ந்து அடுத்து நாம் காண இருப்பது பெரியாழ்வாரை...

இவராலேயே 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு' என வாழ்த்திப் பாடும் பாடல் இம்மண்ணுக்குக் கிட்டியது. இவராலேயே கோதை என்றும் ஆண்டாள் என்றும் அறியப் பெற்ற வில்லிநகர் பெண்பாவையையும் இந்த உலகம் பெற்றது.

எப்படி?

# 17

ஆழ்வார்களின் வரிசையில் குலசேகரைத் தொடர்ந்து விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வாரைப் பார்ப்பதற்கு முன் அடிப்படையான பல விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இந்த விஷயங்களை அறிந்து கொண்டு பெரியாழ்வாரை நாம் நெறுங்கும்போது அவரை புரிந்து கொள்வதில் ஒரு ருசி இருப்பதோடு காலம் என்கிற ஒன்றின் சக்தியை எண்ணி வியக்கவும் தோதாக இருக்கும்.

**பி**றப்பால் பெரியாழ்வார் ஒரு சாமான்யப்பட்ட மனிதர்.

இன்றைய நமது பாஷையில் சொல்வதானால் ஒரு பூக்காரன்! ஒரு பூக்காரன் என்பவன் பூக்களைப் பறித்து மலர்

மாலைகள் கட்டி விற்று அதை வைத்துப் பிழைப்பவன். இந்தப் பூக்காரரோ பூக்களைக் கட்டி மலர் மாலைகள் செய்து அதை வைத்து இறைவனையே பெற்றவர் ஆவார்.

கடவுளுக்கு பக்தி மட்டுமே கணக்கு...

அதற்கு முழுமுதல் உதாரணம் விஷ்ணு சித்தர்.

ஆழ்வார் பெருமக்களில் இவருக்கு மட்டும்தான் 'பெரியாழ்வார்' என்னும் சிறப்பு.

ஆழ்வார்கள் அவ்வளவு பேருமே பெரியவர்கள்தான். அவர்களிலும் பெரியவர் இவர் என்பதன் அடிப்படையிலும் இவரது தொண்டைச் சிறப்பிக்க இதைவிட ஒரு அறிய சொல் கிடைக்கவில்லை என்பதாலும் மட்டும் இவருக்கு இப் பட்ட பெயர் கிட்டவில்லை.

மாய மயக்கங்கள் நிரம்பிய கலியுகத்தில் காலவெளியில், கால காலத்திற்கும் நிற்கும் வண்ணம் பரம்பொருளாகிய அந்த மாலவனின் திருவடிகளே முற்றிலும் முழுதானது - முடிவானது - முடிவுமற்றது என்பதை இந்த உலகிற்கு நிரூபித்த காரணத்தாலும் இவர் ஆழ்வார் பெருமக்களில் 'பெரியாழ்வார்' ஆனார்.

இப்படி இவர் ஆவதற்கு அடிப்படையான விஷயம்கூட அந்த மாலவன் கருணைதான் என்கின்ற போதிலும் அந்தக் கருணை எப்படி இந்த மண்ணில் வெளிப்பட்டது என்பதில் நிறையவே லாஜிக் (logic) இருப்பதுதான் ஆச்சரியம்.

பொதுவில் இறையனுபவங்களை மேஜிக் என்போம்.

ஏன் என்றால் ஒரு அனுபவம் போல இன்னொரு அனுபவம் இருக்காது. உணரத்தான் முடியும் - நிரூபிக்க முடியாது. இறையனுபவத்தின் அடித்தளமே தரிசனம் கிடையாது - இது நிதர்சனம். நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்பச் சிரமப்பட்டால் ஏற்க முடியாது. அதனால்தான் ஆத்திகத்துக்கு சளைக்காத நாத்திகமும் இந்த உலகில் இருந்தபடி வருகிறது.

நாம் பெரியாழ்வாரிடம் திரும்ப வருவோம்...

இவர் பெரிய ஆழ்வாராக, இவர் வாழ்ந்த ஸ்ரீவில்லிபுத்தூர் என்கிற மண்ணும் ஒரு பிரதான காரணம். இந்த மண்ணில் வடபத்ர சாயியாக அந்த மாலவன் சேவை சாதிக்கிறான். பேச்சுத்தமிழில் 'வடபத்ர கோயிலுடையான்' என்பார்கள். இப்பெயருக்குப் பின்னாலேயும் பெரும் பொருள் உள்ளது. பலர் இதற்கு பல பொருளை கூறியுள்ளனர்.

அவைகளில் மிக ஏற்புடையதாக ஒரு பொருளையே சான்றோர் உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. அது 'உறுதியாக மோட்சம் தரவல்லவன்' என்பதாகும்.

அந்நாளில் மன்னர்களிடையே வடக்கிருந்து உயிர் துறப்பது என்று ஒரு நெறி இருந்தது. பெரும் இழிவோ இல்லை தலைகுனிவோ, அதுவுமின்றி விரக்தியோ நேரிட்டு விட்ட நிலையில் வடக்கு நோக்கி அமர்ந்து ஊண் உறக்கமின்றி தவித்து அப்படியே உயிர்விடுவதை 'வடக்கிருத்தல்' என்பார்கள்.

கர்மவாழ்வில் நேரிட்ட அவ்வளவு பாவங்களுக்கும் அதுவே ஒரு பரிகாரம் போலாகி விடும். இவ்வாறு உயிர்விட மிகுந்த மனஉறுதி மட்டுமல்ல, மனத்தெளிவும் வேண்டும். அப்படிப் பிரியும் உயிர் நிச்சயம் மோட்ச கதியை அடையும் என்பது ஒரு நம்பிக்கை.

அடுத்து திசைகளில் வடக்கை குபேர திசை என்பார்கள். வீடுகளில் வடக்கு நோக்கிய வாசல்களுக்கு வாஸ்துபலம் அதிகம். வடக்கும் கிழக்கும் வசப்பட்டவர்கள் வாழ்வாங்கு வாழ்வார்கள் என்பது வாஸ்து நிபுணர்களின் சாட்சியம்.

கிழக்குக்கு உதிக்கின்ற கதிரால் சிறப்பு என்றால், வடக்கிற்கு உள்ளொளியைத் தருவதால் சிறப்பு. அப்படிப் பட்ட திசை குணத்தை பத்திரம் போல ஒரு உறுதியான சந்தேகத்திற்கு இடமின்றி வழங்குபவன்தான் 'வடபத்ரசாயி'. 'ஆயி' என்பது பெண்பாற் பெயர். இதுவே சாயி என்பது ஆண்பாலாயிற்று என்போரும் உண்டு.

ஆக வடபத்ரசாயிக்கு பொருள் 'உறுதியாக இகத்தில் பொருளையும் அகத்தில் அருளையும் தரவல்லவன்' என்பதாகும். இதற்குக் காரணமான சம்பவமும் ஒன்று உண்டு. இந்த சம்பவங்களாலேயே ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஊர் தோன்றி - இக்கோவிலும் அதில் பொலிவோடு திகழ்வதாகக் கூறுவார்கள். இது ஒரு செவி வழி கதை!

அச்சம்பவம் ஆச்சரிய மூட்டுவது...

இன்று ஸ்ரீ வில்லிபுத்தூர் அமைந்துள்ள இடமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பெரும் காடாக இருந்த சமயத்தில் அக்காட்டில் வேடுவக்குடிகளே வாழ்ந்து வந்தனர். அவர்களில் இருவர்தான் வில்லாளன், கண்டன் ஆகியோர். இருவரும் சகோதரர்கள்! வேடுவர்களின் தர்மம் வேட்டையாடுவது...! அதன் பொருட்டு வேட்டைக்குச் சென்ற வேளையில் ஒரு பாம்புப் புற்றுக்குள் இருந்து அஷ்டாக்ஷரமான 'ஓம் நமோ நாராயணாய' எனும் மந்திரக் குரலை இவர்கள் கேட்கின்றனர்.

உள்ளே ஒரு மகரிஷி பெரும் தவத்தில் இருக்கிறார்.

அவரது உச்சாடனக் குரலே அது. இந்தக் குரல் வில்லாளனை உருக்குகிறது. ஒரு மந்த்ரோபதேசம் போல காதில் புகுந்து அவன் மனதில் அமர்ந்து விடுகிறது. கண்டனிடம் அப்படி ஒரு பாதிப்பு இல்லை. எனவே அவன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

வில்லாளனும் மனம் விழிந்திருக்கும் போதெல்லாம் அந்த அஷ்டாக்ஷரத்தைக் கூறுகிறான். அப்படிக் கூறக்கூற அவனுக்குள் மெல்ல மெல்ல மாற்றங்கள் ஏற்படத் தொடங்குகின்றன.

ஒருநாள் புற்றில் தவம் செய்த முனிவரின் தவம் கலைந்து அவர் அங்கிருந்து புறப்பட முற்படுகையில் வில்லாளன் அவரை தரிசனம் செய்து ''சுவாமி... நீங்கள் ஜெபித்த மந்திரத்தை நானும் ஜெபித்து வருகிறேன். எனக்குள்ளே நான் இனம் புரியாத மாற்றங்களை உணர்கிறேன். அதை எப்படி விவரிப்பது என்று தெரியவில்லை'' என்கிறான்.

அதைக்கேட்டு வியப்படையும் அந்த முனிவரும் ''அப்பனே...'' என்னைவிட நீயே பெரிய தவசி. நான் ஒரு நோக்கத்தோடு தவம் புரிந்தவன். நீயோ அப்படி எதுவுமின்றி காதில் விழுந்த மந்திரத்தை இறுகப்பிடித்துக் கொண்டாய். இதற்கு உன் ஊழ்வினையும் ஒரு காரணம் என்பது எனக்கு இப்போது புரிகிறது. உண்மையில் நீ மிகப் பெரியவன். பலன் கருதாமல் அந்த நாராயணன் யார் என்றுகூட தெரியாமல் அவன் நாமத்தைச் சொன்ன நீ என் போன்ற முனிவர் பெருமக்களை விட மேலானவன்'' என்று வாழ்த்துகிறார்.

பிறகே அவனும் கேட்கிறான். ''யார் அந்த நாராயணன்? ஊழ்வினை என்றீர்களே... அப்படி என்றால் என்ன?'' என்று அவரும் பதில் கூறுகிறார்.

''நாரமாகிய நீரை அணைந்து கிடப்பதால் அவன் நாராயணன். பாற்கடல் அவன் இருப்பிடம் - வைகுந்தம் அவன் வாசஸ்தலம்.

பஞ்ச பூதங்கள் ஒன்றானாலே ஒரு உயிர் விளையும். அந்த பூதங்களை ஒன்றிணைத்து ஆதிசேடனாக்கி அதன்மேல் அனைத்திற்கும் சூத்ரதாரி நானே என்று பள்ளி கொண் டிருப்பவன்.

உறங்குவது போல விழித்திருப்பவன். ஆனால் நம்மில் விழித்துக் கொண்டிருக்கும்போதும் அவனை நாடத் தெரியாமல் மனதுக்குள் தூங்கிக் கொண்டிருப்பவர்கள் பலர்.

அவன் காலடியில் உலகச் செல்வங்கள் அவ்வளவும் கொட்டிக் கிடக்கின்றன. எங்களை ஒரு பொருட்டாய் கருதி ஏறெடுத்துப் பார்க்க மாட்டாயா என்பதுதான் அவைகளின் விருப்பம்.

அவைகளின் வடிவம்தான் மகாலட்சுமி.

அவள் அவன் காலடியில் அமர்ந்து அந்த சூத்ரதாரியின் கால்களைப் பிடித்து விட்டபடி இருக்கிறாள்.

உலகில் பலவானாக செல்வந்தனைச் சொல்வோம்.

ஆனால் அவனது செல்வங்களே ஒரு பெண்ணாகி 'அவன்' திருவடியைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்றால் அவன் எத்தனை பெரும் செல்வமாக இருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்.

அவன் நின்றால் விஸ்வரூபம் - அமர்ந்தால் மணக்கோலம் - பார்த்தால் தாயினும் மேலான பரிவு - பேசினால் கீதை. மொத்தத்தில் அவனே எல்லாம். எல்லாமும் அவனே...!

அவனிடமிருந்தே இந்த பூமி வந்தது - அதில் இந்த காடு வந்தது. நான் வந்தேன் - நீ வந்தாய் - நாம் வந்தோம். அண்ணாந்தால் விரிந்து கிடக்கிறது பார் - இதிலிருந்து இதில் இரவில் நீ பார்க்கும் சந்திரன் முதல் நட்சத்திரங்கள் தொட்டு பகலில் நீ பார்க்கும் சூரியன் வரை சகலமும் வந்தது. இவனை விட்டு இவனாலேயே பிரிந்து வந்தோம். இவனாலேயே திரும்பச் சென்றும் சேரவேண்டும். இவனை அடைவதற்கான வழிதானப்பா நாம் எடுத்திருக்கும் இந்த வாழ்க்கை.

இவனை உணரவே ஆறாம் அறிவு. அதைக்கொண்டு இவனை உணராவிட்டால் அதுவே ஒரு பாவமாகிவிடும். இதுபோக இவனை உணராததால் நம்மை உலகமாயை சூழ்ந்துகொள்கிறது. அதன் பொருட்டு கர்மப் பிறப்பெடுத்து பசி தாகத்திடம் சிக்கி அதற்காக வாழ்வதே நமக்கு வாழ்க்கையாகி விட்டது.

பசி, தாகத்திடம் இருந்து தப்பித்தாலே எச்சில், மலத்திடம் இருந்து தப்ப முடியும். எச்சில் மலத்திடம் இருந்து தப்பித்தாலே இந்த உடம்பிடம் இருந்து தப்ப முடியும். இந்த உடம்பிடம் இருந்து தப்பித்தாலே அவனை சென்று சேர முடியும்.

அதற்கு உதவுவது இந்த உலகிலேயே ஒன்றே ஒன்றுதான். அதுதான் 'ஓம் நமோ நாராயணா' என்னும் நாமம். இந்த நாமத்தைக் கொண்டுதான் நானும் இந்த பிறவிப்பெருங் கடலில் நீந்தியபடி இருக்கிறேன்.''

- என்று அவர் விளக்கமாகக் கூறி முடிக்கவும் வில்லாளன் கண்கள் பனித்து விட்டது.

'அடேயப்பா...! எத்தனை பெரிய மகா மந்திரத்தை நாம் செவிமடுத்திருக்கிறோம்... அதை சொல்லிப் பார்த்ததற்கே இத்தனை தூரம் ஒரு மகானின் தரிசனம் ஏற்பட்டு அவர் மூலம் பல அரிய உண்மைகளும் தெரிய வந்திருக்கிறது என்றால் நாமும் இந்த மந்திரத்தை ஜெபித்து இவர்போல முனிவனாக முற்பட்டால்...?'

வில்லாளனுக்குள் கேள்வி எழுகிறது. அதை அவன் அந்த முனிவரிடமே கேட்கவும் செய்கிறான்.

''சுவாமி... நீங்கள் சொன்ன உண்மைகள் என் அகக்கண்களை திறந்துவிட்டன. வயிற்றுப்பாட்டிற்காக பிற உயிர்களைக் கொன்று என் உயிரைக் காத்துக் கொண்டு வாழ்ந்து வரும் ஒரு வேடுவன் நான். என்னால் அந்த நாராயணனை அடைய முடியுமா?''

''ஏனப்பா முடியாது...? ஒரு முதலை அடைந்திருக்கிறது. ஒரு யானை அடைந்திருக்கிறது. கோகுலத்தில் அவனருந்திய பாலின் மிச்சத்தை குடித்த பூனை அடைந்திருக்கிறது. எனவே உன்னாலும் முடியும். ஆனால் பூரண சரணாகதியும் உள்ளத் தூய்மையும் முக்கியம். அது இல்லாவிட்டால் அவனருகிலேயே இருந்தும் அவனை அடையத் தெரியாத துரியோதனனாய் ஆகிவிடுவோம்.''

''என்றால் இப்போதே நானும் தவத்தில் இறங்குகிறேன்.''

''அவசரப்படாதே... தவம் என்பது ஐந்து புலன்களை அடக்குவது. அது சுலபமல்ல...''

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எனக்கு இனி அந்த நாராயணனை அடைவது ஒன்றே நோக்கம்.''

''சொல்வது சுலபம் - செய்வது கடினம். நீ தவத்தில் மூழ்கிவிட்ட நிலையில் உன்னை இந்தக் காட்டில் திரியும்

மலைப்பாம்புகள் விழுங்க முற்படலாம். சிங்கமும் புலியும் வந்து அடித்துத் தின்னப் பார்க்கலாம்.''

''எது நடந்தாலும் சரி சுவாமி. நான் தவத்தில் இறங்கிவிட்டால் அதன் பின் நான் அவன் சொத்து. என்னை பாதுகாப்பது அவன் கடமையல்லவா?'

- வில்லாளனின் மன உறுதி அவன் பேச்சில் தெரிந்தது. முனிவரும் ஆசிர்வதித்தார்.

''முன்னதாக பெற்ற தாயிடம் சென்று, பரிபூரண சம்மதம் பெறுவது நன்மையை அதிகரிக்கும்'' என்று ஒரு புள்ளி வைத்தார்.

வில்லாளனின் தாய் தான் வில்லி!

வில்லி, மகனின் விருப்பத்தை அறிந்து முதலில் அதிர்ந்தாள். எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

''இது மாமிசத்தால் வளர்ந்த உடம்பு - தவத்துக்குக் கட்டுப்படாது'' என்பது அதில் ஒன்று.

''இப்படி ஒரு உடம்பை கட்டுப்படுத்துவது தானம்மா பெரிய தவம்'' என்று அதற்கொரு பதிலைக் கூறிய வில்லாளன் இறுதியில் தாயின் சம்மதமுடன் அவளது ஆசிகளுடன் அதே காட்டில் தவம் புரியத் தயாரானான். ''அண்ணனுக்குச் சரியாக தவம் புரியத்தான் தனக்குத் தோன்றவில்லை. அண்ணனின் தவத்துக்குக் காவலாக இருப்போம்'' என்று வேலும் கையுமாக தயாரானான் வில்லாளனின் தம்பியான கண்டன்.

தவம் என்றாலே சோதனைகளும் வந்தாக வேண்டுமே?

வருடம் முழுக்க படித்த படிப்பை பரீட்சை எழுதி தேர்வாகிக் கிடப்பது போல தவத்தில் சோதனைகளைக் கடந்தால் தான் இறையருளையும் பெற முடியும்.

வில்லாளனையும் ஒரு சோதனை ஆடகொள்ளத் தயாரானது. அவன் தவத்தைக் கலைக்க அந்தத் திருமாலே ஒரு வேங்கை வடிவில் எதிரில் வந்தார். கண்டன் அதோடு

போரிட்டான். ஆனால் வந்தது வேங்கையாக இருந்தால் வென்றிருப்பான். மாலாயிற்றே?

அவர் வயிற்றுக்குள் சென்று அடங்கும் நிலைதான் கண்டனுக்கு ஏற்பட்டது. அடுத்தகுறி வில்லாளன் தான்...

# 18

**மா**லாகிய அந்த வேங்கைப்புலி வில்லாளனின் தவத்தை கலைக்கத் தொடங்கியது. உறுமியபடியே சுற்றி வந்தது. பின் தவத்தில் இருக்கும் வில்லாளன் முன்நின்று தன் முன்கால்களாலே அவனுடைய மார்பிலே அறைந்தது.

வில்லாளன் அப்படியே அமர்ந்த நிலையில் ஒரு பொம்மை சரிந்தது போல் சரிந்தான். ஆனாலும் அவனிடம் தவம் கலையவில்லை. உதடுகள் இரண்டும் அஷ்டாக்ஷரமான 'ஓம் நமோ நாராயணா'வை ஜெபித்தபடியே இருந்தன.

வேங்கையின் சீற்றம் அதிகரித்தது. அறைந்த மார்பில் இருந்து ரத்தம் பீறிட்டது. அந்த வேங்கை இம்முறை அவன் குரல்வளையை கடித்து விழுங்க முற்பட்டது.

அப்போதும் அஷ்டாக்ஷரம் ஒலிப்பது நிற்கவில்லை.

இதற்கு மேலும் வில்லாளனைக் கடித்து விழுங்க அந்த வேங்கையும் ஒன்றும் கர்மத்தால் ஜென்மமெடுத்த, உணர்வால் மட்டும் வாழும் விலங்கல்லவே?

மாலாயிற்றே - திருமாலாயிற்றே?

அடுத்த நொடியே திருமால் அங்கு சங்குசக்கரப் பிரசன்னராக வில்லாளன் முன்தோன்றி திவ்யதரிசனம் அளித்தார்.

''உன் மன ஒடுக்கத்தை மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டுமானாலும் கேள்'' - என்றார் திருமால். ''மாதவா... என்னை, என் தம்பியை விழுங்கியது போல் ஏன் விழுங்காமல் விட்டீர்கள். உம் பசியாற்றி அத்தொண்டை

செய்தபடியே உம்மோடு கலந்துவிடுதல் என்பது எத்தனை பெரிய பாக்கியம். அதைவிடுத்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டால் நான் எதைக் கேட்பேன்?'' - என்று திருமாலிடமே திருப்பிக் கேட்டான் வில்லாளன்.

அடுத்த நொடியே திருமாலால் விழுங்கப்பட்ட கண்டன் உயிரோடு எதிரில் வந்து நின்றான்.

''வில்லாளா... உன்னைச் சோதிக்கவே கண்டனை விழுங்கினேன். மாறாக எனக்குப் பசி என்பதும் இல்லை - பசியாதால் உணவென்பதும் இல்லை. அது ஒரு திருவிளையாடல்! இதில் தபோ திடம் காட்டிய உனக்கும் உன் தம்பி கண்டனுக்கும் என் திருவடி நிழலில் நிச்சயம் இடம் உண்டு. ஆனால் இப்போது இல்லை. உங்களாலே மானுட சமுதாயமானது என்னருளைப் பெறப் போகிறது. மனமிருந்தால் மார்க்கம் காணலாம் என்பதற்கு எதிர்காலத்தில் நீ ஒரு இலக்கணமாக திகழப் போகிறாய். உன் தவத்தை மெச்சி உனக்கு நான் பொன் பொருள் தருகிறேன். நீ அதை உன் விருப்பப்படி பயன்படுத்து'' - என்று கூறி மறைத்தார்.

அடுத்த நொடியே அவன் தவமிருந்த இடத்தில் பொன்மலை எழும்பியது. வில்லாளனோ அதைக் கண்டு மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக வருத்தமே கொண்டான்.

அந்தத் திருமால் பொருளைத் தந்து தன்னிடம் சோதனையைத் தொடர்வதாகக் கருதியவன், தன் தாயான வில்லியிடமும் அதையே கூறினான். வில்லியும் அதை அப்படியே வழிமொழிந்தாள்.

''புத்திரர்களே... இது அந்த பெருமாளின் நிதி. அவனுக்கே பயன்பட வேண்டும். எனவே, இதைக் கொண்டு அவனுக்கொரு கோயில் கட்டுவோம். கோயிலைக் கட்டினால் போதாது. அதில் பூஜைகள் முறையாக நடந்தேற வேண்டும். அதற்கு ஆவன செய்வோம். நம்மைப் போலவே எல்லோருக்கும் அவன் அருள் கிட்ட வேண்டும். எனவே, இந்த காட்டுக்குள் அந்தக் கோயிலை எழுப்பாமல் ஒரு நாட்டுக்குள் அதை எழுப்புவோம்'' என்றாள்.

தாயின் வழிகாட்டல் நன்கு வேலை செய்தது. ஒரு புதிய ஊரே வில்லாளன் மற்றும் கண்டனால் உருவாக்கப்பட்டது. வில்லியாகிய தாயின் பெயரையே அதற்கு வைத்து அதை வில்லிப்புத்தூர் என்றாக்கினர். பின் அதன் நடுவில் மாலவனுக்குக் கோயில் எழுப்பினர். அதில் தங்கள் ஆயியாகிய அன்னையால் வந்தவனை சாயி என்றனர்.

இந்த சாயியும் பின் வடபத்ர சாயியாக அதாவது உறுதியாக மோட்சம் தரவல்லவனாக சேவை சாதிக்கத் தொடங்கினான்.

நாடு கண்டு பின் கோயில் கண்ட நிலையில் வில்லாளனும் அவன் உறவுகளும் வேட்டைத் தொழிலைக் கை விட்டனர்.

அந்த மாலும் இதற்காகவே பொருள் கொடுத்தான். அவன் தந்த அருளோடு கூடிய பொருள் ஒரு நாடாயிற்று. அவனுக்காக ஒரு வீடாகவும் ஆயிற்று.

ஒரு சமுதாயமே சரியான வழியென்று ஹரியானவன் வழிக்கும் திரும்பிற்று. திருவில்லிபுத்தூர் எனும் பெயரின் 'பின்புலத்தில் உள்ள இந்த செவிவழிக் கதையை மறுப்பவர் களும் உண்டு. உண்மையை வரலாறே அறியும் இந்த ஊரில் வாழ்ந்து வந்தவரே பெரியாழ்வார்! ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் முகுந்தபட்டர் என்பவருக்கும் பத்மவல்லி நாச்சியார் என்பவருக்கும் ஐந்தாவதாக பிறந்தவர் இவர்.

பெற்றோர் இட்டபெயர் விஷ்ணு சித்தன்.

அந்த நாளில் பிள்ளைகளுக்கு மாலவன் நாமங்களைச் சூட்டுவது ஒரு வழக்கமாகவே இருந்தது. அந்தப் பிள்ளையை அழைக்கும் சாக்கில் அவன் நாமங்களைக் கூறலாம். அல்லவா?

இதை உத்தேசித்தே பெரியாழ்வாரின் பெற்றோர் சதாசர்வ காலமும் இந்தப் பிள்ளை விஷ்ணுவாகிய அந்தப் பரந்தாமனின் எண்ணத்தோடு மட்டுமே இருக்கவேண்டும் என்னும் பொருளில் விஷ்ணு சித்தன் என்று பெயரிட்டது. தூய தமிழில்

'திருமால் மனத்தன்' என்றும் கூறலாம். அதாவது இவர் மனமே திருமால் குடிகொண்ட மனமாம். அவனே நிரம்பி வழிய வேண்டுமாம். இது பெற்றோரின் விருப்பம்.

இந்த விருப்பத்தை பெரியாழ்வாரும் பின்னாளில் அந்த மாலவன் கருணைக்கும், தரிசனத்துக்கும் ஆளாகிவிட்ட நிலையில் தன் பாடல்களில் வலியுறுத்துகின்றார்.

''மானிடசாதியில் தோன்றிற்றோர் மானிடசாதியை
மானிட சாதியின் பெயரிட்டால் மறுமைக் கில்லை.
வானுடை மாதவா கோவிந்தா என்று அழைத்தக்கால்
நானுடை நாரணன் தம் மன்னன் நரகம் புகார்.''

- எனும் இப்பாடலானது மனித இனத்தில் பிறந்தவர்களுக்கு வீரன், சூரன் என்று பெயர் வைப்பது இந்தப் பிறவியைக் கடக்க உதவாது - 'மாதவா, கோவிந்தா' என்று அந்தத் திருமாலின் ஆயிரத்தெட்டு நாமங்களில் ஒன்றை வையுங்கள். நாம் நரகத்தில் விழாமல் அவன் தடுத்து விடுவான்' என்கிற பொருளை உடையதாகும்.

எனவே, பெற்றோர்கள் இட்ட விஷ்ணு சித்தன் என்கிற பெயர் இவரை விஷ்ணு சிந்தையுடைவராகவே வைத்திருந்தது. விஷ்ணு சிந்தையோடு இவர் வேதம் கற்கவோ, இல்லை வேறு கடமைக்கோ செல்லவில்லை. குடும்பச் சொத்தாக இருந்த நந்தவனம் ஒன்றில் நிறைய மலர்ச்செடிகளை நட்டார் - அதைப் பேணி வளர்ந்தார். பின் அதிலிருந்து மலர்களைப் பறித்து வண்ண வண்ண மாலையாகத் தொடுத்து அதை எடுத்துச் சென்று கோயில் பட்டர்களின் கரங்களில் அளித்து அந்த வடபத்ர சாயிக்கு அணிவித்து அழகு பார்த்தார்.

இதைவிட பெரிதாக ஒரு செயலை அவர் கருதவில்லை. வேறு செயல்கள் செய்ய நேர்ந்த போதும், ''ஐயோ இன்று இறைவனுக்கு மாலையில்லாது போகுமே... அவன் கோலம் மாறிப் போகுமே...?'' - என்று பதைத்துப் போய் அந்த வேற்றுச் செயலை விட்டுவிட்டு நந்தவனம் நோக்கியே ஓடுவார்.

'மொத்தத்தில் நந்தவனமும் மலர்ச் செடிகளுமே இந்த விஷ்ணு சித்தரின் வாழ்வை ஆட்கொண்டுவிட்டன!

'கர்ம சிரத்தையாக' என்பார்களே... அப்படி ஒரு கர்ம சிரத்தை இச்செயல் மேல் இவருக்கு! ஒரு வேடிக்கை என்னவென்றால் நந்தவனத்தில் இருந்து பறித்து வரும் பூக்களை இவரைத் தவிர வேறு யாரும் மாலையாக கட்டித் தந்தாலும் இவருக்குத் திருப்தியாக இருக்காது.

தன்கையாலேயே கட்டி அழகு பார்ப்பார். அப்படி கட்டிய மாலையை பூக் குடலைக்குள் வைத்து அதை திவ்யப் பிரசாதம் போல தலை மேல் வைத்து எடுத்துச் செல்வார். ஆலயத்தில் மாலை சூட்டி முடிக்கப்படும் வரை ஊண் உறக்கம் பற்றி சிந்திக்க மாட்டார்.

அப்படி ஒரு கர்ம சிரத்தை!

இந்த சிரத்தையையே அந்த மாலவனும் ஒரு தவமாகக் கருதி ஏற்றுக் கொண்டு விஷ்ணு சித்தரையும் தன் ஆழ்வார் களிலேயே பெரியவராக ஆக்கிட எண்ணம் கொண்டான்.

அந்த நிமித்தம் ஒரு திருவிளையாட்டையும் தொடங்கினார்.

எங்கே தெரியுமா?

பாண்டி நாட்டுத் தலை நகராம் மாமதுரையில்!

**பா**ண்டி நாட்டை அப்போது அரசாட்சி செய்து வந்தவன் ஸ்ரீவல்லபதேவ பாண்டியன் என்பவனாவான். அரச வாழ்வில் நகர சோதனை என்பது ஒரு முக்கியமான கடமையாகும். இதன் பொருட்டு மாறு வேடத்தில் ஒரு சாமான்யப்பட்ட மனிதனைப் போல தன்னை மாற்றிக் கொண்டு வல்லபதேவனும் தன் மந்திரியோடு நகர சோதனைக்குக் கிளம்பிவிட்டான். இப்படிச் செல்லும் சமயங்களில்தான் மக்களிடம் பேச்சுக் கொடுத்து அவர்களின் குறைகளையும் நிறைகளையும் தெரிந்து கொள்ள முடியும்.

வல்லப பாண்டியனும் சகலத்தையும் அறிந்தபடியே சென்றபோது ஒரு சத்திரத் திண்ணையில் அந்தணன் ஒருவன் சுருண்டு படித்திருந்தான். அவனிடம் ஒரே ஒரு துணிமூட்டை அதை தலைக்கு வைத்தபடி படுத்திருந்த அந்த அந்தணன் உடல், குளிரால் நடுங்கிற்று. அந்தணன், உறக்கம் வராமல் குளிரால் நடுங்குவதைக் கண்ட வல்லப பாண்டியன் தன் தலைப் பாகையை அவிழ்த்து அதையே அந்த அந்தணன் மேல் போர்த்தியும் விட்டான்.

பாண்டியனின் இச்செயல் அந்தணன் கவனத்தை அரசன் மேல் திருப்பிற்று. படுத்திருந்த அந்தணன் எழுந்து அமர்ந்து பாண்டியனுக்கு நன்றி கூறினான். பாண்டியனும் ''தாங்கள் யார் என்று நான் அறியலாமா?'' என்று கேட்டான்.

''நான் ஒரு வேதியன்... வடதேசம் சென்று புனிதநதியாம் கங்கையில் எல்லாம் நீராடிவிட்டு இம்மதுரையம்பதிக்கும் வந்திருக்கிறேன். முதுமை காரணமாக குளிர் தாங்க முடியவில்லை. அம்மட்டில் எனக்குப் போர்வை தந்த உமக்கு என் நன்றிகள். தாங்கள் புரிந்த இந்த தர்மம் உங்கள் சந்ததிகளை காத்து ரட்சிக்கடடும்...'' - என்றான்.

பாண்டியனுக்கும் அந்த அந்தணன் அப்படிக் கூறியவுடன் ஒரு சந்தேகம் எழும்பியது.

''வேதியரே... ஒரு போர்வையை நான் உங்களுக்கு தந்ததற்கே என் சந்ததிகள் எல்லாம் வாழ்ந்து விடுவார்களா - இது எனக்கு ஆச்சர்யம் தருகிறது'' - என்றான்.

''பயன் கருதாமல் செய்யும் சிறு செயல் எதுவாயினும் அதற்கு உரிய பதில் விளைவு காலத்தால் கிடைத்தே தீரும். அதையே நான் அப்படிக் கூறினேன்.

''நான் என் வாலிப பிராயத்தை வீணாகக் கழித்தவன். அறச் செயல்களில் அப்போது எனக்கு ஈடுபாடு இல்லை. அதனால்தான் என் முதுமைக்காலம் இப்படி ஆதரவற்ற யாத்ரீகனாக என்னை ஆக்கி விட்டது. ஆயினும் நான் செய்த

சில நற்செயல்கள்தான் இந்த இரவில் உங்கள் மூலம் எனக்குப் போர்வை கிடைக்கச் செய்தது. மொத்தத்தில் நம் செயல்களே வினைகளாக மாறி நம்மை வழி நடத்துகின்றன'' - என்ற வேதியரின் பேச்சு ஸ்ரீ வல்லபதேவ பாண்டியனை மேலும் சிந்திக்க வைத்தது.

''வேதியரே நம் செயல்களா வினைகளாகின்றன...?''

''ஆம்... நம் செயல்களே வினைகளாகின்றன. மழைக் காலத்தில் சிரமப்படாமல் இருக்க அதற்கு முந்தையகால கட்டங்களில் பாடுபட்டு உணவுப் பொருளை சேமித்து வைத்துக் கொள்கிறோம். அதே போல முதுமையில் சிரமப்படாமல் இருக்க இளமையில் பாடுபடுகிறோம். நான் பாடுபடாமல் இருந்து விட்டேன். இது கூட பரவாயில்லை. இதைவிட முக்கியம் இறந்த பின் மறுமையில் நாம் துன்பமடையாமல் இருக்க என்ன செய்யப் போகிறோம் என்பதுதான்.''

- என்ற அந்த அந்தணரின் பேச்சு பாண்டிய அரசனை வெகுவாக சிந்திக்க வைத்தது.

''அதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்றும் கேட்டான்.

''இறைவனை சரணடைய வேண்டும் என்கின்றனர்...'' என்றார் அந்த வேதியர்.

''இறைவனை சரணடைவதென்றால் யாரை...? தாய் தந்தையரையும் நம் வேதம் கடவுள் என்கிறது. குருவையும் கடவுளுக்கு நிகராகவே சொல்கிறது. ஒருபடி மேலே போய் குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை என்கிறது. இவர்களைக் கடந்து பிரம்மா, சிவன், விஷ்ணு என்னும் இறை ரூபங்கள்... இதில் யாரைச் சரணடைய வேண்டும் என்றும் கூறுங்களேன்'' - என்றான் மன்னன். அந்த அந்தணரையே இந்த கேள்வி திணறச் செய்துவிட்டது!

# 19

வல்லபதேவன் கேட்ட கேள்வி முன் அந்தணர் திணறினாரே அன்றி திட்டமாய் ஒரு பதிலை அவரால் கூற முடியவில்லை.

''அன்பரே... தாங்கள் கேட்ட கேள்வி எனக்கு வியப்பைத் தருகிறது. இப்படி ஒரு கேள்வியை யாரும் என்னிடம் கேட்டதில்லை. எனக்குள்ளும் இப்படி ஒரு கேள்வி தோன்றியதில்லை. நான் என் முன்னோர்கள் காட்டிய வழியில் என் குலத்தார் வணங்கும் அந்தப் பெருமாளையே எனக்கான இறைவனாகக் கருதி பக்தி புரிந்து வருகிறேன்.

ஒரு மனிதனுக்கு இம்மண்ணில் ஒரு தாயும், ஒரு தந்தையும் மட்டுமே இருக்க முடியும். அதே போல் ஒரு குருநாதர், ஒரு தெய்வம் என்று வாழ்வதே சாலச் சிறந்த வாழ்வு என்பதுதான் எனக்குச் சரியாகப் படுகிறது. அந்தத் தெய்வம் யார் என்பதை அவரவர் முன்னோர்கள் வகுத்து வைத்திருப்பர். எனவே, இம்மட்டில் யாரைப் பின்பற்றுவது என்பதில் குழப்பம் இருக்க இடமில்லை என்றே கருதுகிறேன்'' - என்றும் கூறினார்.

ஆனாலும் இந்த பதில் வல்லபதேவ பாண்டியனுக்கு நிறைவைத் தரவில்லை. அந்த அந்தணர் சொன்னது போலவே ஒரு தாய், ஒரு தந்தை, ஒரு குரு, ஒரு உலகம், ஒரு சூரியன், ஒரு சந்திரன், அது போல இவை அத்தனைக்கும் பின்னால் ஒரு பரம்பொருளே இருக்க முடியும்? யார் அந்தப் பரம்பொருள்? பாண்டியனுக்குள் கேள்வி விஸ்வரூபமெடுக்கத் தொடங்கி விட்டது. அன்று இரவு அதற்கு மேல் நகர சோதனையிலும் அவனால் ஈடுபட முடியவில்லை.

வேகமாய் அரண்மனைக்குத் திரும்பியவன் அந்தக் கேள்வி பாரத்தோடு அப்படியே படுக்கையில் விழுந்தான். விடிய விடிய சிந்தனைதான்... ஆனால் ஒரு தெளிந்த விடை மட்டும் கிடைக்கவில்லை.

ஆனால் பாண்டியன் ஒரு காரியத்தை கர்ம சிரத்தையாகச் செய்தான். அவனது அரசவைக் குருவான செல்வ நம்பி என்பவரை அழைத்து, ''முற்றும் முதலான அந்த பரம்பொருள் யார்?'' என்று கேட்கவும், அவரும், ''நாம் போற்றி வணங்கும் கூடலழகனன்றி வேறு யார்?'' என்று திருப்பிக் கேட்டார்.

''இது நாம் பெரும் பற்றுதலோடும் பக்தியோடும் கூறுவதாகும். நம் முன்னோர்கள் வணங்கியதைப் பார்த்து நாமும் வணங்கி அவர்கள் வழியில் நடக்கும் வேளையில், நம் வழியே பெரிதென்று நம்பியும் ஆசைப்பட்டும் கூறுவதாகும். இதை எல்லாம் கடந்து அந்தப் பரம்பொருளை பாரோர் அவ்வளவு பேரும் புரிந்து ஏற்கும் வண்ணம் கூறுவார் ஒருவர் கூடவா இல்லை?'' என்றும் கேள்வி எழுப்பினான்.

''அரசே இந்தப் பாண்டிய மண்ணில் இல்லாத ஞானியர்களா? - நான் இன்றே முரசறிவித்து இவ்வினாவிற்கு ஏற்ற விடை அளிப்போரை வரவேற்க ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் செல்வ நம்பி.

''முரசறிவித்தால் போதுமா? பெரும் உண்மையை உணர்த்த வரப்போகும் அந்த ஞானிக்கு உரிய பரிசினைத் தர வேண்டுமே...?''

''உண்மைதான்... ஆனால் இக்கேள்விக்கு விடை அளிக்கப்போகும் ஞானியர்க்கு பொன்னும் பொருளும் ஒரு பொருட்டாக இருக்காது. அவர்களுக்கு ஒரு பரிசை நம்மால் தரமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றார் செல்வநம்பி. பின் நெடுநேரம் சிந்தித்து,

''அந்தப் பொறுப்பையும் இறைவனிடம் விட்டு விடுவோம். ஒரு பொற்கிழியை உருவாக்கி அதை இறைவன் திருமுன் கட்டித் தொங்கவிடுவோம். உண்மையை உரைப்பார் முன் தர்ம தேவதையே நடுநிலையாக நின்று அப்பொற் கிழியை வளைத்து உரியவர் வசம் சேர்க்கட்டும். அதாவது பொற்கிழியை மையமாக வைத்து உண்மையை நாம் உணர்வோம்'' - என்னும் முடிவினுக்கும் வந்தனர்.

இம்முடிவோடு கூடிய கேள்வி பாண்டிய நாடெங்கும் பவனி வரத் தொடங்கியது.

'எவரோ பரம்பொருள்?

எதுவோ நிலையான உண்மை?' என்னும் அக்கேள்வி பாண்டிய மண்டலம் கடந்தும் பயணித்தது. இக்கேள்வியின் வீச்சு வில்லிபுத்தூருக்குள்ளும் ஊடுருவியது. பெரியாழ்வாரான விஷ்ணு சித்தரையும் எட்டியது.

''என்ன விஷ்ணு சித்தரே... பாண்டிய மன்னனின் கேள்விக்கு உமது பதில் என்ன?'' என்று கோவில் பட்டர்கள் கூட விஷ்ணு சித்தரிடம் சற்று சீண்டிப் பார்த்தனர்.

''பாண்டிய மன்னன் என்ன... இந்த உலகத்தையே கட்டியாளும் மன்னாதி மன்னனே வந்தாலும் எனது பதில் ஒன்றுதான்... அந்தப் பரம்பொருள் இதோ எந்தன் சாயிதான்...'' என்றார்.

''நீர் இப்படித்தான் சொல்வீர்... ஆனால் இது உமது நம்பிக்கை, இது உமது ஆசை... இதை எப்படி நிரூபிப்பீர்...?''

''இது என்ன பைத்தியக்காரத்தனம்... பெற்ற தாயைப் பார்த்து ஒரு பிள்ளை சந்தேகப்படலாமா? தந்தையிடம் கேள்வி எழுப்பலாமா? இதைவிட மடமை உண்டா?''

''இந்த பதிலை நீங்கள் எங்களிடம் கூறலாம். பாண்டிய மன்னனிடம் கூற முடியுமா?''

''என் வேலை அதுவல்லவே...? ஆனால் ஒன்று, வேதம் முற்றும் கற்றுத் தெளிந்த ஞானியர்கள் இம்மண்ணில் இருக்கின்ற படியால் யாராவது ஒரு ஞானி மன்னனின் இக்கேள்விக்கு நிச்சயம் பதிலைக் கூறுவார் - இது உறுதி!

நான் ஒரு பூக்கட்டி... எனக்கு வேதமும் தெரியாது. வியாக்ரண சூத்திரங்களும் தெரியாது. எனக்குத் தெரிந்த ஒரே மந்திரம் ''ஓம் நமோ நாராயணா'' என்பது மட்டும் தான். அந்த மந்திரத்தின் பெயரால் எம்பெருமானிடமே இக்கேள்வியை

விட்டு விடுகிறேன். அவன் பார்த்துக் கொள்வான்...'' - என்று கூறிவிட்டு மலர்வனத்துக்குப் புறப்பட்டு விட்டார் விஷ்ணு சித்தர்.

நாட்கள் உருண்டன.

ஆனால் இறை முன் கட்டிய ராஜ பொற்கிழியை வாய்மையால் வளைத்து வசப்படுத்தும் ஞானிகள்தான் வரவே இல்லை. பாண்டியனிடம் கவலை அதிகரித்தது. குருவான செல்வ நம்பியும் பொறுமை இழந்தவராக கூடல் அழகன் முன்னால் நின்று,

''எம்பெருமானே... தெரிந்தோ, தெரியாமலோ இப்படி ஒரு கேள்வி எழும்பிவிட்டது. இதற்கு ஒரு பதிலை நீதான் வந்து கூற முடியும். மாந்தர்களிடம் அப்படி ஒரு மதி நலம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உன்னால் ஒரு பேருண்மையை இந்த உலகம் அறியட்டும். மன்னனின் ஐயத்தை நீயே வந்து நீக்குவாயாக'' - என்று மனம் உருக பிரார்த்திக் கொண்டார்.

அந்தப் பிரார்த்தனைக்கு அந்தக் கூடலழகனும் செவிமடுக்கத் தொடங்கினான். விஷ்ணு சித்தரின் கனவில் தோன்றியவன், ''உன் நாவில் நின்று பேசப் போவது நானே - உடனே புறப்படு'' என்றான்.

அதே வேகத்தில் பட்டர்கள் கனவிலும் தோன்றி, ''விஷ்ணு சித்தனை, பாண்டிய மன்னன் கேள்விக்கு பதில் தருவோனை, பல்லக்கில் ஏற்றி அனுப்பி வைப்பீர்களாக...'' என்றான். மாமதுரையில் செல்வ நம்பியின் கனவிலும், ''விஷ்ணு சித்தன் புறப்பட்டு வருகிறான் - உன் மனக்குறை நீங்கும்'' என்றும் பதில் உரைக்கப்பட்டது!

அதனைத் தொடர்ந்து பாண்டிய மண்டலமே சிவிகையில் வரும் விஷ்ணு சித்தனை எதிர் கொண்டு வரவழைத்தது. பாண்டிய மன்னனும் முன் வந்து வரவேற்றான். பூர்ண கும்ப மரியாதை!

இதை சில வேதம் கற்ற சான்றோர்கள் அதிகபட்சமாகக் கருதினர். "ஒரு பூக்காரன் எது பரம்பொருள், யார் பரம்பொருள் என்பதற்கு பதில் கூறப்போகிறானா வேடிக்கைதான்... பாவம் அந்தப் பொற்கிழி" என்று ஏகடியமும் பேசினர்.

ஆனால் அனைவரும் அடங்கும் வண்ணம், அதிரும் வண்ணம், ஆர்த்தெழும் வண்ணம், விஷ்ணு சித்தர் வடபத்ர சாயியை வணங்கி வாயைத் திறந்தார். அதன்பின் அவர் பேசவில்லை. அவனே பேசினான். "ஸ்ரீமன் நாராயணனே முற்றான பரம்பொருள்! அவனே ஆதி அந்தம் அற்றவன். அவனுள் இருந்தே சர்வமும் தோன்றின. அவனது அம்சங்களே ருத்ரன் பிரம்மன் முதலான தேவர்கள்... அவனையின்றி அணுவும் அசையாது.

அவன் இருப்பவன், இல்லாமலும் இருப்பான். அவனே இப்பூமியைப் படைத்தான். புல் முதல் பூண்டு வரை படைத்து, புழு முதல் பூச்சி வரை படைத்து, பேரறிவோடு மாந்தர்களையும் படைத்து, அவர்கள் கடைத்தேற வேதங்களைப் படைத்து, அவன் திருவிளையாட்டாலே அது ஆழ்கடல் புகுந்தபோது அதை மீட்டெடுத்து, உலகம் வாழ அதைக் கொண்டே வழி காட்டினான். காட்டிக் கொண்டும் இருக்கிறான். அதில் ஒரு அங்கம் தான் இங்கு நிகழும் பிரமாண வைபவம்.

மேலும் அவனே அவதாரங்கள் பல எடுத்தான். அதில் நெறிமுறைகள் வகுத்தான். கூர்மத்தால் அமுதம் தந்தான். மச்சத்தால் அசுரனை வென்றான். சிம்மத்தால் வழிகாண முடியாத இடத்திலும் வழி கண்டான்.

கிருஷ்ணனாகி கீதை தந்தான். ராமன் ஆகி தர்மம் காத்தான். வாமானனாய் கர்வ பங்கம் செய்தான். பலராமனாய் ராஜ்ய நெறி விளங்கச் செய்தான். கல்கியாக வந்து கலிமுக்தி தரப்போகிறவனும் அவனே.

இவனுக்கு இணை இல்லை. இவனை அன்பினால் கட்டலாம். பணிந்து துதிக்கலாம். ஒட்டு மொத்தமாய் இவன் திருவடிகளில் சரண் புகுந்து விட்டால் போதும். பிறிதோர் முயல்வு தேவையே இல்லை.

சரணாகதி அதுவே உற்ற வழி!

அடைந்தவர்க்கு மோட்சகதி... அதனால் மாறும் இழிந்த விதி. இதுவே சத்யப்பிரமாணம், இதுவே பரப்பிரமாணம். இதுவே பேருண்மை, இதனில் தவறு உண்டெனில் இப்பொற்கிழி விழாது. இதுவே உண்மையெனில் பொற்கிழி விழட்டும். பலரும் இதைக் காணட்டும்'' - என்று விஷ்ணு சித்தர் உரைத்த நொடியில் பொற்கிழி வளைந்து விஷ்ணு சித்தர் மடியில் விழுந்தது. அவையும் உண்மையை அறிந்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தது.

இது மட்டுமா?

இப்பேருண்மையை விஷ்ணு சித்தர் உரைத்த இடம் கூடலழகர் திருக்கோயில் வளாகத்தில்... அதன் அட்டாங்க விமானம் மேலே விஷ்ணுசித்தருக்கும் அவர் பொருட்டு அன்று கூடிய அனைவருக்கும் ஆதர்சமாய் ஆனந்தமாய் அந்த ஆனந்தபதியும் சங்கு சக்ர தாரியாக தன் வாகனமாம் கருடன் மேல் அமர்ந்து ஸ்ரீதேவி பூதேவியோடு சேவை சாதித்தான்.

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை என்ற அவ்வையின் வாக்கிற்கு ஏற்ப விஷ்ணு சித்தன் என்னும் பெரும் பக்தன் பொருட்டு அத்தனை பக்தர்களுக்கும் அன்று அந்த ஆனந்த ரங்கன் சேவை சாதித்தான்.

கல்ப கோடிகால தவசிகள் வேண்டிய காட்சி அது... அதைப் பார்த்த மாத்திரத்தில் விஷ்ணு சித்தருக்குள் ஒரு பெரும் பூரிப்பு... மின்னல் போல் தோன்றிய அக்காட்சி கால காலத்துக்குமானது. உலகம் உள்ளளவும், உயிர்கள் உள்ளளவும் பேசப்படப்போகும் காட்சி. வாழ்வாங்கு வாழப்போகும் காட்சி, அதனாலே அதற்கு நிகரில்லாத மாட்சி.

மாட்சிக்கு உரியதை வாழ்த்தி நிலை நிறுத்துவது சான்றோர் வழக்கம். அது விஷ்ணு சித்தரிடம் செயல்படத் துவங்கியது. உடனே தன்னை மறந்து பாடத் தொடங்கினார்.

'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு.
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணி வண்ணா உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே....'

*என்று வாழ்த்திப் பாடினார்.*

*அந்த வாழ்த்தே அதன்பின் இன்று மட்டும் வாழ்த்துதலுக்கு ஒரு உதாரணமாய் திகழ்ந்து வருகிறது.*

*''பல்லாண்டு பல்லாண்டு'' என்று ஒரு பெரியவரோ சான்றோரோ வாய் திறந்து வாழ்த்தும் போதே அங்கே விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வாரும் விண்ணில் தோன்றிய அந்தப் பெருமாளும் மனக் கண்ணில் தோன்றி விடுகின்றனர். அப்படி அனைவர்க்கும் தோன்ற வேண்டும் என்று கருதியே தீர்க்க தரிசனமோடு விஷ்ணு சித்தர் பாடினாரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.*

*இத்தோடு விட்டாரா இவர்? பல்லாண்டு பாடிய இவர் நாவில் அதன்பின் பிரபந்தத் தமிழ் குற்றாலமாய் கொட்டத் தொடங்கியது. மொத்தமாய் 461 பாடல்கள். இவைகளில் பிள்ளைத் தமிழும் அடக்கம்.*

'புட்டியில் சேறும் புழுதியும் கொண்டு வந்து
அட்டி அமுக்கி அகம்புக்கு அறியாமே
சட்டித் தயிரும் தடாவினில் வெண்ணெயும் உண்
பட்டிக் கன்றே கொட்டாய் சப்பாணி
பத்பநாபா கொட்டாய் சப்பானி'

*என்று இவர் பாடிய கண்ணன் மேலான பாடடுக்கள் கிருஷ்ண பக்தர்களை கண்ணீர் உகுக்க வைப்பதோடு இன்பத் தேம்பலில்*

நிறுத்திவிடும். இப்படி கருடாம்சமான பெரியாழ்வாரை அவர் பாடல்களின் வழி வியந்து கொண்டே போகலாம்.

அவரையே பக்தியில் சற்று ஓரம் கட்டுவது போல் அவர் வசம் வந்து சேர்ந்தவள்தான் கோதையாகிய ஆண்டாள். அந்த மகாலட்சுமியே கோதையாகி பெரியாழ்வார் வசம் வந்து சேர்ந்த விதத்தை இனி காண்போம்...

# 20

பெரியாழ்வாரைத் தொட்டு நாம் தொடர இருப்பது ஒரு பெண் ஆழ்வாரை!

ஆழ்வார் என்பது ஒரு பட்டப் பெயர் போன்றது. இலக்கண ரீதியாகப் பார்த்தால் அது காரணப் பெயர். திருமாலிடம் பக்தியில் ஆழ்ந்து போய் அவனுடைய பெரும் கருணைக்கு ஆளானவர்களை அதன் காரணமாக ஆழ்வார் என்கிறோம். இதைச் சற்று கற்பனை நயத்தோடு தன் பக்தியாலே அந்தத் திருமாலையே ஆண்டவர்கள் என்றும் கூறி அதைச் சற்று மெருகேற்றி, இவர் திருமாலின் பக்தியையே ஆண்டு வருபவர். அதாவது அதை ஆள்பவர் அதனால் ஆழ்வார் என்றும் கூறுவார்கள்.

எப்படிப் பார்த்தாலும் ஆழ்வார் என்பது 'ஆழ்ந்த' மற்றும் 'ஆண்ட' தன்மைகளைக் குறிக்கிறது. ஆழ்வதற்கு ஒரு பலமும் தெளிவும் வேண்டும். அது இருந்தாலே மேலானவன் அந்தத் திருமால் என்று உணர்ந்து அந்த மேலானவனிடம் ஆழ்ந்திட முடியும். அப்படி ஆழ்ந்தாலே பக்தியை ஆண்டிடவும் முடியும்.

எனவே ஒவ்வொரு ஆழ்வாருக்குள்ளும் ஆழ்ந்த தன்மை, ஆண்ட தன்மை இரண்டும் உள்ளது. ஆழ்வார் என்னும் சொற்பதமும் பொதுவாகவே நிற்கிறது. அதில் ஆண், பெண் வேறுபாடு தெரிவதில்லை.

அம்மட்டில் வெகு அதிகமாய் ஆண் மக்களே திருமால் பக்தியை ஆழ்ந்து ஆட்சி செய்து ஆழ்வர் ஆனதால் இந்த சொற்பதமே ஆண்களுக்கு மட்டுமே உரியது போல ஆகிவிட்டது. அதனால்தான் பெண் மக்களில் திருமால் பக்தியை ஆழ்ந்து ஆட்சி செய்த கோதையாகிய ஆண்டாளை 'ஆண்டாள் ஆழ்வார்' என்று எவரும் அழைக்கவில்லையோ என்னவோ?

ஆனால் அவளை ஆழ்வார்கள் பட்டியலில் வைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ஒரு படி மேலே போய் அவளை மகாலட்சுமிக்கு இணையாக்கி திருமாலுக்கு ஒரு பக்கம் லட்சுமி என்றால் மறுபக்கம் ஆண்டாள் என்று அவளை தெய்வமாகவே ஆக்கி விட்டனர்.

இத்தனை பெரிய மானுட இனத்தில் பெண்களுக்கான இனப்பிரிவில் ஒரே ஒரு பெண்தானா ஆழ்வார் பட்டியலில் இடம் பெற்றாள்? இம்மட்டில் ஆண்களே பக்தியில் விஞ்சி நிற்கிறார்களோ என்று யாரும் அவசரப்பட்டுக் கருதிவிட வேண்டாம்.

சைவ நெறியில் நாயன்மார்களில் கூட அறுபத்து மூவரில் ஒரு காரைக்கால் அம்மையாரும், ஒரு மங்கையர்க்கரசியாரும் மற்றும் இசை ஞானியாரும் என்று மூன்றே மூன்று பெண் மக்களே இடம் பெற்றிருக்கின்றனர்.

இதையெல்லாம் வைத்து, பெண் இனத்திற்கே இறைவனை நெருங்கும் ஆற்றல் குறைவு போலும் என்று கருதி விடக்கூடாது. கலாசார ரீதியாக பெண்மக்களுக்கென்று நாம் வகுத்து வைத்திருக்கும் வாழ்க்கை நெறி முறைதான் அதற்குக் காரணமாகும்.

கணவனையே கடவுளாகக் கருதி அவர்கள் பதிபக்தியோடு திகழ்ந்தாலே போதும், அந்த இறைவனே அவர்களைத் தேடி வந்து விடுவான் என்கிறது நம் புராணங்களும் இதிகாசங்களும்.

அது ஒரு மாபெரும் உண்மை என்பதை நளாயினியில் இருந்து அனுசுயை, சாவித்திரி வரை நிரூபிக்கிறார்கள். அவர்கள் பதிபக்தியில் சிறந்து விளங்கி இறை பக்தியையே கூட பின்னுக்குத் தள்ளி விட்டார்கள் என்று கூட கூறலாம்.

அருந்ததி என்னும் பத்தினி ஆகாயத்தில் நட்சத்திர மாகவே திகழ்கிறாள். திருமண காலத்தில் அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது என்னும் ஒரு சடங்கே இவள் பொருட்டு உருவாகியிருப்பது சான்று. எனவே, பெண் மக்களுக்கு பதிபக்தியை ஒதுக்கிவிட்டு பரமபக்தியை ஆண் இனம் எடுத்துக் கொண்டுவிட்ட நிலையில் இந்த இனத்தில் இருந்துதானே அனேகர் தோன்ற முடியும்.

இருப்பினும் கோதையாகிய ஆண்டாள் எப்படி பதிபக்தியை பொருட்படுத்தாது பரமபக்திக்கு ஆளானாள் எனும்போதுதான் அங்கே நாம் உணர்வதற்கு ஏராளமான விஷயங்கள் காத்திருக்கின்றன.

திரும்பவும் பெரியாழ்வாரைத் தொடர்வோம்.

**மா**மதுரையில் பாண்டியனின் சந்தேகத்தைப் போக்கி அந்த நாரணனே பூரணமான பரம்பொருள் என்பதையும் நிரூபித்து அவனது தரிசனத்துக்கும் ஆளாகி பல்லாண்டு பாடிய அவரை பாண்டியனும் ஏராளமான பரிசில்களால் திணற அடிக்கிறான்.

பொன்னும் பொருளும் குவிந்து விட்டது!

பெரியாழ்வார் ஒரு பல்லக்கில் என்றால் பொன்னும் பொருளும் ஒரு வண்டியில் அவரைப் பின் தொடர்ந்தது!

அந்தப் பொன் பொருளை அவரா ஆண்டு அனுபவிப்பார்? அதைக் கொண்டு பெரிய பூந்தோட்டம் ஒன்றைத்தான் நிறுவினர். அதில் பூக்கும் பூக்களெல்லாம் அந்தத் திருமாலுக்கே என்பதுதானே அவர் முடிவாக இருந்தது?

எனவே தோட்டத்தைப் பெரிதாக்கி மலர்களை தோற்றுவிப்பதையே ஒரு பணியாகக் கொண்டு தொடர்ந்தார்.

பாண்டிய அரசன் சந்தேகத்தைப் போக்கி பொற்கிழியைப் பெற்ற மமதையோ, இல்லை மாலின் தரிசனம் கண்டு பல்லாண்டே பாடிவிட்டோம் என்கிற செருக்கோ துளியும் இல்லை.

மாறாக தனக்கு தரிசனம் தந்துவிட்ட திருமாலை மலர்கொண்டு அர்ச்சித்து திணறச் செய்ய வேண்டும் என்கிற நோக்கம் மட்டும் பெரிதாக இருந்தது.

இதை வைகுண்டத்தில் இருந்து அந்த மாலும் பார்த்தபடி இருந்தான். உடன் மகாலட்சுமி!

''ப்ரபோ... உங்கள் பக்தர் என்னுடைய செல்வத்திற்குத் துளியும் மயங்கவில்லை. அவ்வளவு செல்வமும் மலர்களாக பூத்துக் குலுங்கும் போல் இருக்கிறதே?'' என்று கேட்டாள்.

''ஆம்... அச்சித்தன் திட சித்தன். உன்னாலும் அவனை அசைக்க முடியவில்லை'' - என்று மறுமொழி பகர்ந்தான் பரந்தாமன்.

''இது எனக்கொரு வெற்றிகரமான தோல்விதான்'' என்றாள் தேவி. பரந்தாமனும், ''இப்படிப்பட்ட தோல்வி உனக்கு அபூர்வமாகத்தானே நேர்கிறது'' என்றார்.

''உண்மைதான்... நீங்கள் ஒருவர் மனதில் நிரம்பி விட்டால் அவருக்கு நான் அடிமையாகத்தான் வேண்டி யுள்ளது. அவரை அரசாள முடிவதேயில்லை.''

''இது உனக்கு வருத்தமா, இல்லை மகிழ்ச்சியா?''

''மகிழ்ச்சி கலந்த வருத்தம் என்பேன். அது சரி... உங்களுக்கு?''

''என் மகிழ்ச்சியே என் பக்தர்களின் மகிழ்வால்தான் ஏற்படுகிறது?''

''அதாவது விஷ்ணு சித்தன் போல் மலர் பறித்து உங்களை பூஜிப்பதா.''

''ஆமாம்.''

''அப்படி என்ன அந்தப் பூக்களுக்குப் பெருமை...?''

''சற்று சிந்தித்துப் பார். பூவின் பெருமை விளங்கும்.''

''நீங்களே உங்கள் திருவாயால் விளக்கி விடுங்கள்.''

''என் சிருஷ்டியில் உன்னதமானவை மலர்கள். ஐம்பூதங்களுக்கும் மலர்கள் மட்டுமே முழுமையான பெருமையைச் சேர்க்கின்றது. மண்ணில் புதைந்து, நீரைக் குடித்து வெளியில் எழுப்பி, காற்றில் அசைந்து, ஒளியை வாங்கித்தான் மலர்ச் செடிகள் மலர்களைத் தருகின்றன.

மற்ற தாவரங்களும் இப்படித்தான் காய்கனிகளைத் தருகின்றன. ஆனால் மலர்கள் மட்டுமே கண்ணுக்கு இனியதாகி பலவண்ணங்கள் கொண்டு ஒளிக்குப் பெருமை சேர்க்கிறது. மணத்தைப் பரப்பி காற்றுக்குப் பெருமை சேர்க்கிறது. தேனைத் தந்து நீருக்குப் பெருமை சேர்க்கிறது. மென்மையாக விளங்கி நிலத்துக்குப் பெருமை சேர்க்கிறது. வெளியில் பரவி காட்சியாகி வெளிக்குப் பெருமை சேர்க்கிறது. தன்னை ஆளாக்கிய பூதங்களுக்கு அது காட்டும் மரியாதையை யும் மாண்பையும் வேறு எதுவும் தருவதில்லை.

காயோ கனியோ புளிக்கவும் செய்யலாம். இனிக்கவும் செய்யலாம். வெம்பிப் போகலாம். ஆனால் மலர்களில் தீயதோ குணம் கெட்ட தென்றோ ஒன்றில்லை. அதனால் எனக்கு மலர்கள் என்றால் மிகவும் பிரியம். அந்த மலர்களால் மாலை தொடுப்பவர்களிடம் மேலும் பிரியம்'' என்கிறான் பரந்தாமன். அதைக்கேட்ட மாத்திரத்தில் லட்சுமிக்குள்ளும் ஓர் ஆசை முகிழ்ந்தது. அது அவள் சகோதரியான பூதேவியிடம் எதிரொலித்தது.

இந்த வைகுண்டத்தில் இவர் காலடியில் கிடப்பதைவிட இவர் எதிர்பார்க்கும் ஒருத்தியாக மாறுவது இன்னமும் மேலாவது என்று எண்ணுபவளாகி அந்த நொடியே பூதேவி பூலோகத்தில் பிறப்பெடுக்கத் தீர்மானித்து விட்டாள்.

ஆனால் இந்த செல்வச் சீமாட்டியை கருவில் சுமக்கத் தயாரான ஜாதககர்ம பலம் உள்ளவர்கள்தான் ஒருவர் கூட அவ்வேளையில் இல்லை.

பார்த்தாள் ஸ்ரீதேவி, சகோதரியான பூதேவியிடமே ஆலோசனை கேட்டாள்.

''அதனாலென்ன...? அயோநிஜமாய் ஒரு பெண் மகளாய் நீ மாறி என் மடியில் விழுந்துவிடு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள்.

பூதேவியும் பெண் மகளானாள்.

ஸ்ரீதேவி பார்த்தாள்... பெரியாழ்வாரின் மலர் வனத்தில் அவர் பூச்செடிகளை நட்டு பாத்திகட்டி நிலத்தை உழுக்கை கொண்டு கோதி வரும் இடத்தில் ஆடித் திங்களில் நல்ல வளர்பிறை நாளில் பூரம் நட்சத்திர காலகதியில் கொண்டு சென்று போட்டாள். நிலத்தைக் கோதி வந்த உழுக்கை குழந்தை மேல் படவும் குழந்தை வீறிட்டு அழத் தொடங்கியது.

பெரியாழ்வார் முதலில் பதைத்தார். பின் குழந்தையைத் தூக்கியணைத்து உச்சி மோந்து மகிழ்ந்தார். அடுத்து, யார் குழந்தை இது? எனும் ஆராய்ச்சியில் இறங்கினார். அதில் இது மானுடர் பெற்ற குழந்தையே இல்லை எனும் முடிவுக்கே வரவேண்டியிருந்தது.

குழந்தை அழும்போது எதைச் சொல்லியும் அதன் அழுகை நிற்கவில்லை. ''பெருமானே நாராயணா, இது என்ன சோதனை?'' என்று புலம்பியபோது ''நாராயணா'' என்னும் நாமம் கேட்ட மாத்திரத்தில் குழந்தையின் அழுகை நின்றது.

இது என்ன விந்தை என்று, ''நாராயணா... நாராயணா...'' என்று தொடரவும் நின்ற அழுகை சிரிப்பானது.

சிரிப்பா அது?

புவனங்களெல்லாம் பூத்துக் குலுங்க ஒரு ஒட்டு மொத்த அதிசயம் போன்றதல்லவா அது...?

பெரியாழ்வாருக்கு விளங்கி விட்டது. தன் பத்தினியின் வசம் குழந்தையை ஒப்புவித்தவர், ''இப்படி ஒரு பிள்ளையைத் தர விரும்பியே கருமார்க்கமாய் ஒரு பிள்ளை நாம் பெறவில்லை'' - என்றார். ஆமோதித்தாள் அந்தப் பெருமாட்டி.

''கருமார்க்கம் இல்லாவிட்டால் என்ன? திருமார்க்கம் அதனினும் மேலானதுதானே?'' என்று கேட்டு நிலத்தைக் கோதும்போது கிட்டியதால் கோதையான அந்தப் பெண்ணை உச்சிமோந்தாள்.

அது, ''நாராயணா, கோவிந்தா, கோபாலா'' என்றால் சிரித்தது.

''கண்ணே, மணியே, பொன்னே?'' என்றால் அழுதது!

உலகத்தவர்க்கு அது விந்தை. ஆனால் அந்தப் பரந்தாமனோ பாற்கடல் நாயகியின் ஒரு சேட்டையாகவே அதைப் பார்த்தான். ''என்ன லக்ஷ்மி... எதற்கிந்த அவதாரம்?'' - என்றும் கேட்டான்.

''எப்பொழுதும் அவதாரங்கள் என்றால் நீங்கள் மட்டும்தான் எடுக்க வேண்டுமா?''

''ஐயோடா... இதில் கூட போட்டியா?''

''ஏன் போடக் கூடாது?''

''போடு போடு - நன்றாகப் போடு - மார்போடு இருந்து என் மேனியெங்கும் உதிரமாய் பாய்பவள் நீதானே? நீ போட்டால் என்ன... நான் போட்டால் என்ன? அது ஒன்றுதான்...''

''அப்படிச் சொல்லுங்கள். இது என் பங்கு முயற்சி. அமிர்தக் கடைசலில் தோன்றிய நான் நேராக உங்களை அடைந்துவிட்டேன். காதலிக்கும் வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. அதுமட்டுமா? கன்னியாய் துதிக்கவும் வாய்ப்பில்லை. எல்லாவற்றையும் நான் மண்ணில் பிறந்து அனுபவிக்கப் போகிறேன்.''

''அடடா... காதலன் நான் இங்கிருக்க அங்கு தனித்து நீ என்ன செய்வாய்?''

''மலர் மாலைகளால் உங்களைக் கட்டி இழுப்பேன்...''

''என்னையா?''

''நீங்கள் தானே மலர்களின் தாசர் - பூக்களின் நேசர்...?''

''அடடா... நான் சொன்னதை வைத்தே என்னை மயக்க முயற்சியா?''

''அப்படியே என் இனத்துக்கு வழி காட்டவும் போகிறேன்.''

''ஓ... தாய்ப் பாசமோ?''

''நிச்சயமாக... அதேசமயம் இது தந்தையின் கடமை கூட...''

''எப்படி. எப்படி?''

''நீங்கள் வேறு - நான் வேறு இல்லையே... ஒரு கோணத்தில் என் காதல் தவம். மறு கோணத்தில் அனைவர்க்கும் பொதுவான பக்தி நெறியாக மாறும்.''

''புரிகிறது... பூலோகம் ஒரு புதுப் பாடம் கற்கப் போகிறது.''

''மாலவன் கூறிட வில்லியிலும் பெரியாழ்வார் மடியில் கோதை அதை ஆமோதிப்பது போல சிரித்தாள்.

## 21

பெரியாழ்வார் வசம் பூமாதாவின் பரிசாக வந்து சேர்ந்த கோதை அதன்பின் வளர்ந்த விதம்தான் அலாதியானது. அந்த பூமிதேவியே அல்லவா வந்து பிறந்திருக்கிறாள்?

எனவே சுற்றம் முழுவதும் அவளை கையில் எடுத்துக் கொஞ்சி மகிழ்ந்தது. திருஷ்டித் திலகம் இட்டே ஓய்ந்து போனார் பெரியாழ்வார்!

குழந்தைக்கு தினம் தோறும் திருமாலின் திவ்ய நாமங்களைக் கேட்டாக வேண்டும். எனவே, மலர் பறிக்க நந்தவனத்திற்குச் செல்லும்போதும், மற்ற வேளைகளிலும்

கோதையை சுமந்து சென்று பாதுகாப்பான நிழலில் கிடத்தி விட்டு மாலவன் நாமங்களைச் சொல்லி சொல்லி பூப்பறிப்பார் பெரியாழ்வார்.

குழந்தையும் கொலுசுக் கால்களை உதைத்துக் கொண்டு சிரிக்கும். எதன் பொருட்டாவது நாமம் சொல்வது தடைபட்டால் சிரித்த - குழந்தை அழத் தொடங்கிவிடும்.

பெரியாழ்வாருக்கும் அது ஓர் ஆச்சரிய அதிசயம் என்பது புரிந்துவிட்டது. கூடல் நகரில் அஷ்டாங்க விமானம் மேல் கருடன் மீது ஏறி வந்து சேவை சாதிக்க அந்த மாலவன் ஒரு பெண் குழந்தையை தன் வசம் அனுப்பி, ஒரு பாச விளையாட்டுக்கு அடி போட்டு விட்டான் என்பதையும் புரிந்து கொண்டு விட்டார்.

'இடைவிடாது உன் நாமத்தை நான் சொல்லி மகிழ வேண்டும் என்பதற்காகவே - எம்பெருமானே இந்த பிள்ளைச் செல்வத்தை எனக்களித்தாயா?' - என்று கேட்டு வியக்கிறார். நாமங்களைச் சொல்வது என்பது வளர்ந்து அவன் திருவிளையாடல்களைப் சொல்வது என்பதில் முடிகிறது.

திருவிளையாடல் என்றாலே பரந்தாமன் வரையில் கண்ணனின் நினைவுதான் வரும். ஏனைய அவதாரங்களில் ஒரு நேர் நோக்கு இருந்தது. குறும்பு, கேலி, வீரம், விவேகம், மாயை, மயக்கம் என்று நவரச உணர்வுகளுக்கும் இடம் அளித்தது கிருஷ்ணாவதாரம்தான்!

சிறையில் பிறந்த கண்ணன் வசுதேவரால் கூடையில் வைத்துக் கடத்தப்படும் சமயம் ஆதிசேஷனே குடை போல படம் விரித்துப் பின் தொடர்ந்து வந்தான் என்பதில் தொடங்கி அவனது பால்ய வயதுக் குறும்பு முதல் வெண்ணெய் திருடித் தின்ற அவனது சேட்டைகள் வரை பெரியாழ்வார் விவரிக்கும்போது அதை இமை கொட்டாமல் கேட்கும் ஆண்டாளின் முகத்தில் நவரச பாவங்களும் மிளிரும்.

வீட்டிலுள்ள கண்ணன் சிலைக்கு வெண்ணெயை ஊட்டி மகிழ்வாள். அது ஏன் எவ்வளவோ வஸ்துக்கள் உண்பதற்கு

இந்த உலகில் இருந்திட வெண்ணெய் மீது மட்டும் கண்ணனுக்குத் தீராத காதல்?

சத்தியத்தில் வெண்ணெய் என்பது பற்றற்ற தன்மையை சுட்டிக் காட்டும் ஒரு விஷயமாகும். பசுவின் மடி வழியாய் வெளிப்படும் பாலானது காய்ச்சப்பட்டு சூடேறி பின் பொறை ஊற்றப்பட்டு குளிர்ந்து பின் உறைந்து தயிராகி, அதற்கும் பின் கடையப்பட்டு மோராகி, அந்த மோரில் இருந்து வெண்ணெயானது பிரிந்து அதிலேயே மிதக்கத் தொடங்கிவிடுகிறது.

எதிலிருந்து அது வந்ததோ அதிலேயே அது துளியும் கலப்பின்றி மிதக்கிறது. அதை உருக்கிட நெய்யாகும். நெய்யோ வேள்வியில் தீயாகும். தீயோ என்றும் எப்போதும் எப்படிப் பிடித்தாலும் மேல் நோக்கியே எரிகின்ற ஒன்றாகும். மொத்தத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள் உறைகின்ற பசுவின் மடியில் வெளிப்பட்டு பின் வானில் உறையும் ஒன்றாக உள்ளதன் பற்றற்ற விஷயம்தான் வெண்ணெய்!

தூய்மை, மென்மை, குளிர்மை, வெம்மை என்று நான்கு வேதம் போல நான்கு தன்மையைக் கொண்டிருக்கும் வெண்ணெயைக் கண்ணனும் விரும்பக் காரணம் பற்றற்ற அனைத்தும் என்னையே வந்தடையும் என்று கூறிடத்தான்...!

அதனாலேயே ராம நாமத்தை அன்றி எதன்மேலும் பற்று வைத்திடாத அனுமனுக்கும் இது உகந்ததாகி அவனுக்கும் இது சாற்றப்படுகிறது.

வாழ்வால் கடையப்பட்டு நாமும் அனைத்துப் பற்றுகளிலிருந்தும் விடுபட்டு லேசாகும்போது நமது தலைமுடி எல்லாம் நரைத்து வெண்ணிறமாகி அந்த வெண்ணெயின் தன்மைக்கு இலக்காகி விடுகிறோம்.

இது போன்ற நுட்பமான விளக்கங்கள் முதல் கண்ணனின் கோபியர் லீலை தொட்டு சகலத்தையும் பெரியாழ்வார் சொல்லச் சொல்லக் கேட்டு வளர்கிறாள் கோதை!

அடிப்படையிலேயே அந்த பூமாதேவியின் அம்சம்!

திரு உடைய கரு வேறு...!

இதோடு அவதாரக் கதைகள் சேரும்போது கேட்க வேண்டுமா?

''பார்க்கும் இடத்தில் எல்லாம் நந்தலாலா.
உன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா...
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா
உன்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா''

- என்று

பாரதி பாடித் திளைப்பதற்கு முன்னோடியாக அந்தக் கண்ணன் நினைப்பில் ஆழ்ந்து போகிறாள் கோதை.

காலம் இப்படியே போய்விடுமா என்ன?

கண்ணனுக்குக் கோபியர்கள் என்றால் மிக விருப்பம் என்று தெரிந்து கொண்டவள் தன்னையும் ஒரு கோபிகையாக கருதிக் கொண்டு கண்ணாடி முன் நின்று பார்க்கிறாள்.

அலங்கார உணர்வு தலை தூக்குகிறது.

அருகில் பெரியாழ்வார் அந்த வடபத்ர சாயிக்கு என கட்டி வைத்த ராஜ கம்பீரமான மாலை! கோதையின் அழகுணர்ச்சி முன் அவளுக்கானதாகிறது. அதை எடுத்து அணிந்து கண்ணாடி முன் நின்று அழகு பார்க்கிறாள்.

'நான் அழகாயிருக்கின்றேனா...? அந்தக் கண்ணனுக்கு என்னையே தரலாம் தானே? அவனை நான் அடைய முடியும்தானே?' - இப்படிக் கேள்விகளாய் கேட்டுக் கொண்டு காலாலே எத்தி இப்படியும் அப்படியும் ஆடிப் பார்த்து, காதல் பாவனைகளில் நிலைக்கத் தொடங்குகிறாள். இந்தக் கோலாகலத்தை ஒரு சமயம் பார்த்துவிட்ட பெரியாழ்வாருக்குப் பதறிப் போகிறது மனது.

''ஐயோ இது எத்தனை பெரிய பாதகம்... அவன் சூட வேண்டியதை நீ சூடிக் கொண்டு மலினமாக்கி விட்டாயே...?

எத்தனை நாளாய் இப்படி ஒரு பழக்கம்? உன் 'கண்ணன் கிறுக்கு' இப்படியா அபசாரம் செய்ய வைக்கும்...'' என்று கேட்டுப் பொருமுகிறார்.

''மன்னியுங்கள் அப்பா... நான் என்னை கோபிகையாய் அந்த கண்ணனுக்கானவளாய் கருதி அலங்கரித்துக் கொண்டேன். வேண்டுமென்று நான் அதை அணியவில்லை'' என்று கோதை கூறவும் பெரியாழ்வாருக்கு மேலும் அதிர்ச்சியாகிறது.

''கோதை... நீ என்ன பேசுகிறாய்? நீ மாலையை அணிந்து பார்த்ததைக் கூட குழந்தைத்தனமான செயல் என்று மன்னித்து விடலாம். ஆனால் ஒரு படி மேலே போய் நான் கோபிகை போன்றவள், கண்ணனுக்கானவள் என்றெல்லாம் கூறுவது பெரும் அபசாரம்...

அற்ப மானிடப் பிறப்பம்மா நம் பிறப்பு!

அவனோ அதிசயங்களுக்கெல்லாம் அதிசயமானவன்.

அவனை எண்ணிப் பார்க்கும் உள்ளம் வாய்ப்பதே அரிது. அதற்கேகூட அவன் கருணை வேண்டும்.''

''நான் என்னப்பா செய்வேன்... என்னால் அந்தக் கண்ணனை எண்ணி உருகாமல் இருக்க முடியவில்லையே?''

''அது பக்தியாக இருக்கட்டும். அதுதான் சரியும் கூட! உனக்கு நான் உரிய பருவத்தில் மணம் செய்து விடுவதுதான் சரி...''

''மணமா...? எனக்கா? அப்பா... நான் அந்தக் கண்ணனின் தாசி. அவனுக்கே அவனுக்கானவள்.

மானிடர்க்கென்று பேச்சுப்படில் வ.ாழ்கில்லேன்.'' என்று உறுதிபடக் கூறி விடுகிறாள்.

பெரியாழ்வாருக்கு உறக்கமே போய் விடுகிறது.

அன்றைக்கு மாலையையும் திருச்சந்நிதிக்குக் கொண்டு செல்லவில்லை.

'இறைவா!

இது என்ன சோதனை!

உன்னைப் பற்றியே பேசிப்பேசி நான்தான் கோதையைக் கெடுத்து விட்டேனா? கற்ப கோடி காலம் தவமிருப்பவர்க்குக் கூட உன் திருவடிகள் எளிதாக கிட்டி விடாத நிலையில் என் மகள் உன்னையே அடையத் துடிக்கிறாளே... இது எத்தனை பேதமை...? எத்தனை செருக்கு?

பாவம் அவள்... அறியாப் பெண்... மன்னித்துவிடு.'

என்று அவர் மனம் கிடந்து தவிக்கிறது - துடிக்கிறது. ஆனால் கோதையிடம் துளிகூட மாற்றமில்லை. அவளது பக்தி நிலை காதலாக மாறி அந்தக் காதல் உணர்வு பல வண்ணங்களில் பிரதிபலிக்கத் தொடங்குகிறது.

அன்று இரவே பெரியாழ்வார் கனவில் தோன்றும் அந்தப் பரந்தாமன்.

''ஏன் இன்று மாலை சாற்றவில்லை?'' என்று தான் முதலில் கேட்கிறான்.

''எப்படிச் சாற்றுவேன் பரந்தாமா... என் மகள் அதை, தான் அணிந்து சிறுமைப் படுத்திவிட்டாளே...?''

''தவறு சித்தா... தவறு... நான் உன் மகள் சூடிக் கொடுத்த மாலையைத்தான் இந்நாள் வரை அனுபவித்து மகிழ்ந்தேன். இனியும் அனுபவித்து மகிழ விரும்புகிறேன்.

வழிபாட்டு முறைகளும், ஆசாரங்களும் நெறிப்படுத்துவதற்கே... தூய அன்புப் பெருகி வழியும் இடத்தில் இவை இரண்டாம் பட்சமாகி விடுவதை நீ அறிய மாட்டாயா?

நீ சூடியது பக்தியால் - உன் மகள் அதனுள் கலந்தது பேரன்பினை... பக்தியும் பேரன்புமே என்னை மகிழ்விக்கும்.''

பரந்தாமன் பதில் சொன்ன சூட்டோடு மறைந்தான். கனவும் கலைந்தது. பெரியாழ்யாவருக்கும் புரிய வேண்டியது புரிந்துவிட்டது.

பிறகென்ன?

கோதை சூடித் தருவாள்.

அதை அந்தத் தாமோதரனும் அணிந்து மகிழ்வான்.

இதனால் கோதையின் உள்ளத்திலும் காதல் பெருக் கெடுத்து ஓடத் தொடங்கியது.

வைகுண்டத்திலும் அதன் எதிரொலிகள்!

அந்த மகாலட்சுமி மாலவனைப் பார்த்துப் புன்னகைக்கிறாள்.

''இதற்கு என்ன பொருளோ?'' என்று மாலவனும் கேட்கிறான்.

''என் சகோதரி பூதேவியின் அம்சமாகிய கோதையை அதிகம் - சோதிக்காமல் அவள் சூடித் தந்த மாலையை ஏற்றுக் கொண்டதை எண்ணினேன். மகிழ்ந்தேன். மகிழ்ந்தாலே புன்னகையும் தோன்றி விடுமே?''

''மாலையை ஏற்றதற்கே புன்னகையா...? மாலையைச் சூடி மகிழ்ந்த மங்கையையும் ஏற்றுக் கொண்டால்?''

''அதைவிட பெருமகிழ்வு வேறு எதுவும் என் வரையில் இருக்க இயலாது.''

''அதை உடனே செய்யலாமா இல்லை...?'' மாலவனின் பதில் கேள்வி முன் மகாலட்சுமி வேண்டாம் என்பது போல பாவனை புரிந்தாள்.

''புரிகிறது... நீ கன்னித் தமிழாலே என்னை கட்டிப்போட விரும்புகிறாய்?''

''உண்மை... உங்களை வேதங்களாலும் நாதங்களாலும் மட்டும் தான் நெருங்க முடியுமா? தங்கத் தமிழாலும் இயலுமல்லவா?'' - மகாலட்சுமி அப்படிக் கேட்டதன் விளைவு தான் அவளது திருப்பாவையும், நாச்சியார் திருமொழியின் 142 பாடல்களுமாக ஆகியது.

இதில் திருப்பாவைக்குப் பல விசேஷ ஆற்றல்களும் உண்டு. ஜோதிட ரீதியாக சப்தம ஸ்தானம் என்னும் ஏழாமிடம்

கெட்ட நிலையில் ஜென்மம் எடுத்தவர்க்கெல்லாம் திருப்பாவை பாடல்களும், அந்தப் பாடல்களை பாடித் துதி செய்ய வேண்டிய மார்கழி மாதமும் மிக உற்ற நோன்புக் காலமாகும்.

நோன்பாகிய விரதங்கள் வைணவர்களிடம் ஏகாதசித் திதி நாள் அன்றும், மேலும் சில நுட்பமான நட்சத்திர கால நாட்களிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. மார்கழி மாதம் முழுவதுமே நோன்புக் காலமாக வைணவப் பெண்டிர் பின்பற்றும் விதமாய் உள்ளது.

இந்த நோன்புக் காலம்தான் இல்வாழ்வில் ஈடுபட்டு காரியார்த்தமாக வாழ விரும்புகின்றவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகவும் உள்ளது. எந்த ஒரு பெண்பாவை நோன்பை, கோதையாகிய ஆண்டாளின் வழியில் நோற்கின்றாளோ அவள் நல்ல கணவனையும், அவன் மூலமாக நல்ல சந்ததிகளையும் அடைவது உறுதி.

தன்னையொத்த பெண் சமூகத்துக்கு ஒரு நல்வழி காட்டு முகமாகத்தான் கோதை மார்கழி மாதம் ஒவ்வொரு நாளும் ஒரு பாடலால் அந்த மாலவனைப் போற்றித் துதி செய்தாள்.

அவ்வளவும் செழுந்தமிழால்... அதன் கவிதை நயமும் உவமேயங்களும் நிகரில்லாதவை. அதனுள் விஞ்ஞானம் முதல் மெய்ஞானம் வரை சர்வமும் அடக்கம்.

ஒரு சராசரிப் பெண்ணுக்கு இப்படி ஒரு ஆற்றல் சாத்யமேயில்லை என்பதுதான் அறிய வேண்டிய பேருண்மை!

## 22

**ஆ**ண்டாளின் பாடல்களும் சரி, அவளது பக்தி உணர்ச்சியும் சரி மனம்படைத்த மனிதர்களுக்கு எது பக்தி என்கிற கேள்விக்கு விடையாக நிற்பவையாகும். அது மட்டுமல்ல பக்தியால் பரமனையே அடைய முடியும் என்பதற்கு பெரும் உதாரணமும் ஆகும்.

மற்ற ஆழ்வார் பெருமக்களும் பக்தி செய்தனர். அந்தத் திருமாலின் வைகுண்டம் சென்றும் சேர்ந்தனர். இதனை பூரண முக்தி என்றும் கூறலாம். ஆனால் இவர்கள் அந்தப் பெருமாளை அடைந்த விதத்திற்கும், ஆண்டாள் அடைந்த விதத்திற்கும் நுட்பமான வேற்றுமைகளும், நாம் பிரித்து உணரத் தேவையான பல உண்மைகளும் அதில் உள்ளன.

மற்றவர்கள் உணர்வில் பக்தி இருந்தது.

ஆண்டாளிடம் காதலும் இருந்தது.

மற்றவர்கள் இறைவனை அடைந்திட நோன்பெல்லாம் நோற்கவில்லை. ஆண்டாள் நோன்பு நோற்றாள். மற்றவர்களுக்கு ஏற்கனவே பின்பற்றப்பட்ட சிலவழி முறைகள் இருந்தன. அதில் அவர்களும் பின் தொடர்ந்தனர். ஆனால் ஆண்டாளிடம் அப்படி எந்த வழிமுறையும் இல்லை. புதிய வழி முறைகளை இவள் தோற்றுவித்தாள். உதாரணமாக முதலில் இவளே மாலையை அணிந்து பார்த்து, பின் இறைவனுக்கு அணிவித்ததைக் கூறலாம்.

இந்த மாறுபாடுகளை எல்லாம் ஆண்டாளை ஒரு யோனி வழி பிறந்துவிட்ட பெண்ணாகக் கருதிப் பார்க்கும் போது பெரும் வியப்பைத் தரலாம். ஆனால் அந்த வைகுண்ட நாயகியான மகாலட்சுமியே அல்லவா ஆண்டாளாக அவதாரம் எடுத்து வந்திருக்கிறாள்? வைகுண்டத்தில் அந்த வைகுண்டபதி யிடம் அவளே கூறியது போல பெண் இனத்துக்கு ஒரு வழி காட்டு முகமாயும் எது பக்தி என்பதை உணர்வதில் உலகில் குழப்பம் நேர்ந்து விடக்கூடாது என்று கருதியும் அவள் மேற்கொண்ட ஒரு திருவிளையாட்டல்லவா இப்பிறப்பு?

அதனால் தானே, அன்றாட பூஜா விதிகளை விடவும் தன்னையும் மறந்த பேரன்பு பெரிது என்பதை உணர்த்த மாலையை சூடிக் கொடுத்தாள். அதே போல உலகியல் வாழ்வில் பெண் மக்கள் வாழ்வு என்பது ஆண்களின் அடி யொற்றியே உள்ளது. அவர்களின் வாழ்க்கை மேலானதாக விளங்கிட அவர்கள் நல்ல கணவனை அடைந்து அவனையே

கடவுளாகக் கருதி வாழ்ந்து பிறப்பில் உயர்வை அடைய வேண்டும்.

நல்ல பண்பும் அன்பும் உள்ள கணவன் வாய்க்கா விட்டால் ஒரு பெண்ணின் வாழ்வு அவ்வளவுதான். பெண்ணைப் பொறுத்தவரை ஒரு ஆண் பிரம்மச்சாரியாக தனித்து வாழ்வது போல வாழ்வது என்பது பூரணம் தராது. ஒரு பெண் பரிபூரணி ஆவதே அவள் தாயாகும்போதுதான்... அவள் தாயாக கணவன் வேண்டும். அந்தக் கணவன் பண்பும் அன்பும் கொண்டிருக்க வேண்டும். அவன் சண்டாளனாகி விட்டால் பெண் வாழ்வு குரங்கு கை பூமாலை போலாகிவிடும்.

எனவேதான் பெண் குலத்துக்கு வழி காட்டிட அமிர்தத் தோடு சேர்ந்து அவதரித்த லட்சுமி தேவி, தான் எப்படி ஸ்ரீமன் நாராயணனைச் சென்று சேர்ந்தாளோ அதே போல தன் இனமும் சென்று சேர்ந்திட திட்டமிட்டே ஆண்டாளாக அவதாரம் எடுத்து வந்தாள்.

பரந்தாமன் மேல் பக்தி கொண்டு, ''எனக்கு உன் திருவடி நிழலில் இடம் கொடு. என்னை வைகுண்டவாசியாக்கு'' என்றெல்லாம் கோராமல், ''உன்னை நான் மணக்க வேண்டும். இந்த உடம்பும் இதன் உணர்வுகளும் உன்னால் ஆற்றுப்பட வேண்டும்'' என்றாள்.

இப்படிச் சொன்னதன் மூலம் இல்வாழ்க்கை என்பது மிக மேலானது. அதிலும் பெண்களுக்கு இல்வாழ்வை விட பாதுகாப்பானது வேறில்லை என்பதை உலகுக்கு உணர்த்துகிறாள். அந்த இல்வாழ்க்கை நன்கு அமைவது என்பது நல்ல கணவன் வந்து வாய்ப்பதில்தான் உள்ளது. அது பூ உலகில் நோன்பு நோற்காமல் வாய்க்காது. நோன்பு நோற்றுவிட்டாலோ, தவத்துக்கு வரம் போல நோன்புக்கு பரிசாக நல்ல கணவன் வாய்த்து விடுவான். அவன் அந்த பெருமாளின் அம்சம் கொண்டு அவனாலேயே அனுப்பப் பட்டவனாகவும் இருப்பான். எனவே, அவனையே, விஷ்ணுவாக பாவித்து பதிபக்தியோடு நடந்து கொண்டாலே

போதும், அந்த பக்தி விஷ்ணுவை சென்று சேர்ந்து விடும் என்பதுதான் அவள் இந்த உலகுக்கு உணர்த்தும் விஷயம்.

சொல்கின்றவர்களே செய்து காட்டுகின்றவர்களாகவும் இருப்பது மிகச் சிறப்பானதாயிற்றே...?

கோதையும் நோன்பு நோற்கிறாள். நோன்புக்கு உகந்த மாதம் மார்கழி என்று வரையறை செய்து தன் சகாக்களான பெண் இனத்தைப் பார்ப்பது,

**'பையத் துயின்ற பரமன் அடி பாடி**
**நெய்யுண்ணோம், பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்**
**செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்று ஓதோம்...'**

என்று நோன்பு விதிகளைக் கூறுகிறாள். அதன் பயனையும்,

**"நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து...**
**...நீங்காத செல்வம் நிறைந்து ஏலோர் எம்பாவாய்!"**

- என்று விண்டு உரைக்கிறாள். தீங்கின்றி பெய்யும் மழை என்பது புயல் சுனாமி போல் இல்லாத அடர்வான மழையே... அது போதுமே...!

மழை வந்தால் தான் பசுமை வந்து விடுமே...? பசுக்களும் குடம்குடமாய் பால் தருவது என்பதே வளமையின் உச்சத்தில் தானே?

பாவை நோன்பு என்பது அந்தப் பெண்ணுக்கு நல்ல கணவனை மட்டுமல்ல ஊருக்கே எல்லா நன்மைகளையும் செய்கிறது. இப்படிப் பாவை நோன்பை பெண்களுக்காய் விதிக்கும் கோதை, 'நாச்சியார் திருமொழி எனும் பெயரில் 143 பாடல்களைப் பாடியுள்ளாள். அதன் மூலமாக அவள் அந்தக் கண்ணனை சென்று சேரத் துடிப்பது நவரச உணர்வுகளோடும் நமக்கு நன்கு புலனாகிறது. இதில் தூக்கலான உணர்வு சிருங்காரமாகும்!

அதற்காக அவள் காமனான மன்மதனை வழிபட்டு, சிற்றில் சிதையாதிருந்து, துகிலை பணித்தருளி, கூடல் இழைத்து, குயிலை வேண்டி, கனவு பல கண்டு 'கற்பூரம்

நாறுமோ கமலப் பூ நாறுமோ' என்று கேட்டு, மேகத்தைத் தூதுவிட்டு இறுதியாக தந்தையின் சிபாரிசு வரை செல்கிறாள். அப்படியே கண்ணன் இருக்குமிடம் செல்ல விரும்பி, கண்ணன் விரும்பும் பொருள்களை எல்லாம் கோரி, விரகதாபம் தீர்த்துத் துடித்து, இறுதியாக பிருந்தாவனத்தில் கண்ணனைக் கண்டு அவனோடு கலக்கிறாள்.

மேம்போக்காக பார்த்தால் ஒரு பெண் காதல் மிக அதிகமாகி தன் காதலனை அடையத் துடிக்கும் ஒரு செயல் போல தெரியும். இதன் சூட்சுமமான உட்பொருள் வேறு. அந்த பெண்தான் ஜீவாத்மா - அவள் சேரத் துடிக்கும் கண்ணன்தான் பரமாத்மா... பரமாத்மாவோடு ஜீவாத்மா சென்று சேர வேண்டும். அதற்கே பிறப்பு - அதற்கே வாழ்வு என்கிறாள் கோதை!

மகளின் திருவாய் மொழிப்பாடல் கேட்ட தந்தையாகிய பெரியாழ்வார், 'இது எதில் சென்று முடியுமோ தெரிய வில்லையே - எம்பெருமானே என் மகள் சூடிக் கொடுத்த மாலையை சூட்டிக் கொண்ட நீ என் மகளை என்ன செய்யப் போகிறாய்' என்று கேட்டு கண்ணீர் உகுக்கிறார். பரந்தாமனும் அவர் கனவில் தோன்றி, ''கோதையோடு திருவரங்கம் வா... நானே அவள் கரம் பற்றுவேன்'' என்கிறான்.

பெரியாழ்வாரும் கோதையுடன் திருவரங்கம் புறப்பட்டார். இதை அறிந்த பாண்டிய மன்னனும் ஸ்ரீவில்லி புத்தூருக்கும் திருவரங்கத்துக்கும் இடையே தோரணங்கள் கட்டி, வாழை நட்டு, கோலமிட்டு, இசை ஒலி எழுப்பி, கோதை திருவரங்கம் சென்று சேரும்வரை கோலாகலப் படுத்தினான்.

விண்ணும் மண்ணும் காணப்போகும் தெய்வத் திருமணமல்லவா நடக்கப் போகிறது? திருவரங்கத்திலும் ஒரே கோலாகலம். கோதையுடன் வந்து சேர்ந்த பெரியாழ்வார் திருச்சன்னதி முன் வந்து நின்றார். கோதையும் சிலிர்த்துக் கிடந்தாள்.

இடையில் வைகுண்டத்தில் ஒரு காட்சி.

புன்னகையோடு பரந்தாமன் - பாதமருகே பூமிபிராட்டி!

''நான் புறப்படலாமா?'' - என்றொரு கேள்வி பரந்தாமனிடம்...

''வேளை வந்துவிட்டதோ?''

''ஆம் வேளை வந்து வேலையும் வந்து விட்டது - எல்லாம் உன்னால்!''

''இது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. பெண் குலத்துக்கு வழி காட்ட விரும்பினேன். அதை நிறைவேற்றித் தந்தவர் நீங்கள்தானே?''

''மார்பிலிருந்து நீயே ஆட்டுவிக்கிறாய்... ஆனால் நான் ஆட்டுவிப்பதாக கூறுகிறாய், வினோதகி நீ...''

''கண்ணாடி முன் நின்று பிம்பத்தைப் பார்த்து பேசிக் கொள்வதைப் போல நாம் பேசிக் கொள்கிறோம் என்று நினைக்கிறேன்.''

''நான் வேறு நீ வேறு இல்லை என்கிறாயா?''

''மாதவரே... இது என்ன கேள்வி? தேவாசுரர் கடைசலில் உயிரமுதமாய் வந்து சரண் புகுந்தவள் நான். ஜீவாத்மாவாய் நான். பரமாத்மாவாய் நீங்கள்! உயிர்கள் கடைத்தேற நான் பூலோகத்தில் ஒரு ஒத்திகை பார்த்திருக்கிறேன். அதை கால காலத்துக்குமான அருட்பதிவாய் ஆக்கப் போகிறவர் நீங்கள்தானே?''

''நல்லது... உன் திருவிளையாட்டில் பத்மாவதி ஒரு விதம். சீதை ஒரு விதம். இந்தக் கோதை ஒரு விதம்...''

''சீதையோ, ராதையோ, கோதையோ இல்லை ஒரு பேதையோ சேர வேண்டியது உங்களிடம்... சேர வேண்டுவதும் உங்களிடமே...''

பூதேவியின் கரங்குவித்த பேச்சோடு மாலும் அந்தர்யாமியானார்! மகாலட்சுமியும் மார்பிலிருந்தபடியே நடப்பதைக் காணத் தயாரானாள்...

திருவரங்கம்! செந்தமிழ் நாட்டின் சிங்காரத் தீவு... உப்புக் கரித்திடும் கடற் தீவு போலன்றி நன்னீர் சூழ்ந்த நற்றமிழ்த் தீவு...! வைகுண்ட முன் மாதிரியாய் ஆலயம்... தும்பியும் கொம்பும் முழங்க அந்த கோதை கனவு கண்டது போலவே வாரணமாயிரத்தோடு அந்த சப்தபிராகார சன்னதிக்குள் நுழைகிறாள் கோதை!

எண்ணியதை எண்ணியவாறு திண்ணியமாய் பெறப் போகும் அவளை உற்றோரும் மற்றோரும் உடன் தொடர்கின்றனர். கோதையிடம் மணக் கோலம்! பின்னாளில் ஆண்டாள் கொண்டை என்றே ஒரு மரபு தோன்றப் போவதை அறிந்தாளோ அறியாமலோ...? ஆனால் அதை அறிந்த அரங்கனோ அசரீரியாலேயே அவளை வழி நடத்தி திருச்சன்னதி வாசலில் மணக்கோல நாதனாய் நின்ற வண்ண மிருக்கிறான்!

கோதை பாடிப்பாடி அனுபவித்த காட்சி அவள் எதிரில் கோடி சூரிய ஒளிப் பிரகாசத்தோடு... ஜோதிவடிவாய்...!

''ப்ரபோ...'' என்றபடியே ஓடினாள். மார்போடு அணைந்தாள் - அப்படியே மறைந்தாள். திரும்பிய ரங்கனும் சன்னதிக்குள் புகுந்து மறைந்திட, ஆலயம் முழுக்க ஆகாயத்தில் இருந்து மலர் மாரி பொழிந்தது - மேகப் பொதிமேலெல்லாம் தேவர் கூட்டம்! - கதிரவனும் தணிந்த தகிப்போடு கை கூப்பினான்.

பெரியாழ்வார் ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்.

பெண்ணைப் பிரிந்த துக்கக் கண்ணீரும், அவனுக்கே மாமனாக ஆனந்தக் கண்ணீரும் கலந்து பெருகி கன்னம் நனைந்தது.

''விஷ்ணு சித்தரே, உம் பக்தியாலே அவன் வரையில் நீர் ஆழ்வார்க்கெல்லாம் ஆழ்வாராய் பெரியாழ்வார் ஆனீர். உம் மகளோ அவனையே ஆண்டு ஆண்டாளாக ஆகிவிட்டாள்!'' என்றார் ஒரு பாகவதோத்தமர்.

இன்றுவரை அது அப்படியே நின்று நிலைத்து விட்டது! அதன்பின் பெரியாழ்வார் திருவில்லி திரும்பினாலும்

அங்கேயே இருந்து விடாமல் மாலிருஞ் சோலை என்னும் அழகர் கோயில் வந்து அவன் ஆட்கொள்ளும் வரை அங்கேயே வாழ்ந்து 473 பாமாலைகளை படைத்து சூட்டிய பின் வைகுண்டம் ஏகினார்.

அடுத்து வருபவர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

# 23

இதுவரை சந்தித்த ஆழ்வார் பெருமக்களில் பூவுலகில் லௌகீகமாய் வாழ்கின்ற நம்மைப் போன்ற ஒருவரைக்கூட நாம் சந்திக்கவில்லை.

முதல் மூன்று ஆழ்வார் பெருமக்களான பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் ஆகிய மூவருமே அயோநிஜர்கள். அதாவது கர்மப் பிறப்பெடுத்து ஒரு தாய் தந்தை வழி வந்தவர்களல்ல. நம்மாழ்வாரோ அதிசயப் பிறப்பு புளிய மரத்தை விட்டு நீங்காமல் வாழ்ந்தார்.

அடுத்து வந்த திருமழிசையாழ்வாரோ ஒரு சகலகலா வல்லவர். அந்த லட்சுமி தேவியிடமே பாலருந்தியவர்! குலசேகரர் அரசர்பிரான். பின்பு வந்த பெரியாழ்வார் உலக மாயையில் சிக்கிக் கொள்ளாதவர், பூதேவியாகிய ஆண்டாளையே மகளாகப் பெருமளவு பாக்யம் செய்திருந்தவர்.

ஆனால் இப்போது காண இருக்கும் விப்ரநாராயணர் என்னும் தொண்டரடிப் பொடியாழ்வார்தான் வெகு ஜனங்களாகிய நாம் நெருங்கவும் இணை வைத்துக் கொள்ளவும் முடிந்தவர்.

இந்த உலகம் மாயையால் ஆனது. அதனால்தான் இங்கே பெரிதென்றும் சிறிதென்றும் வேற்றுமைகள். அழகென்றும், குரூரமென்றும் தோற்றங்கள். நன்மை தீமை, இனிப்பு கசப்பு, உண்மை பொய், நல்லவன் கெட்டவன் என்று சகலத்திலும் இருநிலைப்பாடுகள்.

இதனாலே நம் வாழ்விலும் நிரந்தரமாய் நிம்மதி என்பதோ சந்தோஷம் என்பதோ நிலையாக இருந்ததே யில்லை. எல்லாமே மாறி மாறி வந்து கடைந்து பிழிகிறது. கதற வைக்கிறது. உய்வை அடைய நம் போன்றவர்களுக்கும் வழி தெரியவில்லை. நமக்கெல்லாம் வழிகாட்டுவது போன்றது தான் தொண்டரடிப் பொடியாழ்வாரின் வாழ்க்கை.

சோழ நாட்டில் புள்ளம் பூதங்குடி எனும் திவ்ய க்ஷேத்திரத்துக்கு அருகில் இருக்கும் திருமண்டலங்குடி எனும் ஊரில் சோழிய பிராமண குடியில் பிறந்து வந்தவர்தான் விப்ரநாராயணன் என்னும் தொண்டரடிப் பொடி.

பராபவ தமிழ் வருடம் மார்கழி மாதம் தேய்பிறைச் சதுர்த்தி திதியில் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர் இவர்!

இவர் காலத்தில் பௌத்த சமண சமயங்கள் இருந்து அதை ஒழுகுகின்றவர்களும் இருந்தனர். இதனால் வைணவரும் சரி, சைவரும் சரி தம் வாரிசுகள் தம் சார்பை விட்டு வேறு பாதையில் சென்று விடக்கூடாது எனும் அவாவினாலும் உத்வேகத்தாலும் சம்பிரதாயங்களை துளியும் கை விடாது பக்தியறிவை புகட்டியே தம் பிள்ளைகளை வளர்த்தார்கள்.

இதன் காரணமாக விப்ர நாராயணரும் சீரிய வைணவனாக வளர்ந்தவர். உபநயனச் சடங்குகளும் இவருக்கு நிகழ்த்தி இறை பக்தியை ஊட்டி வளர்த்தனர்.

இப்படி வளர்க்கப்படுவதற்கு நடுவில் சில ஜென்மாந்தர விஷயங்களும் உயிர்த்தெழும். அந்த வகையில் திருமண்டலங் குடியில் பிறந்தவராக விப்ர நாராயணன் இருந்த போதிலும் அரங்கன் மேல் இவருக்கு மாறாத ஒரு பக்தி ஏற்பட்டது. இதுதான் பின்னாளில் அரங்கனை எவரும் காணாவிதத்தில் கண்டு,

> ''குடதிசை முடியை வைத்துக் குண திசை பாதம் நீட்டி
> வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கிக்
> கடல் நிறக்கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
> உடல் எனக்கு உருகுமாலோ என் செய்தேன் உலகத்தீரே!''

- என்று பாட வைத்தது.

அரங்கன் மேல் கொண்ட பக்தி காரணமாக பெரியாழ்வார் போல் மலர்வனம் அமைத்து தினம் பூப்பறித்து மாலை கட்டி அதை அரங்கனுக்கு அளித்து பக்தி புரிந்து வரலானார்.

பக்தர்களை சோதிப்பதும் சோதனை காரணமாகவே அவர்களை சாதனையாளர் ஆக்குவதும் தானே இறைவனுக்கும் விருப்பமான ஒன்று...?

விப்ர நாராயணன் வரையிலும் தேவதேவி என்னும் தாசியின் வடிவில் சோதனை ஆரம்பமானது.

இந்த தேவதேவி தாசி குலத்தவள், ஆடிப்பாடியும் அந்தரங்கத்தில் கூடியும் பிழைக்கவென்றே உள்ள பிறப்பாகி விட்டவள்.

சோழ மன்னன் அவையில் ஒரு நாள் ஆடிக் களித்து அவன் தந்த பெரும் பரிசில்களோடு பல்லக்கில் ஏறி வருகின்றவள் விப்ர நாராயணரின் நந்தவனத்தைக் கண்டு அங்கே ஓய்வெடுக்கிறாள்.

நந்தவனத்தின் எழிலிலும் மயங்குகிறாள்.

அப்போது அங்கு மலர் பறிக்க வந்த விப்ர நாராயணரையும் கண்டு மயங்கியதில்தான் திருவிளையாட்டும் தொடங்குகிறது.

அவள்தான் அவரைக் கண்டாள். விப்ர நாராயணர் அவளை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. தேவதேவியின் பல்லக்கு திருவீதி வருகிறதென்றால் காளையர் கூட்டமும், காமுகர் நோட்டமும் போட்டி போடும். ஒளிந்தும் மறைந்தும் நேரிடையாகவும் அவளழகில் மயங்கி ஆடவர்கள் வலம் வருவார்கள். அதைக் கண்டு செம்மாந்து போவதுதான் தேவ தேவிக்கு வழக்கம்.

தேவ தேவிக்கு ஒரு சகோதரி இருந்தாள்.

அவளது முதுமைக்குப் பிறகு தேவதேவியால்தான் அவர்களது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. எங்கே சென்றாலும் தேவதேவியை அவள் சகோதரியும் தொடர்வது வழக்கம்.

அன்று நந்தவனத்திலும் உடன் இருந்தாள்.

விப்ரநாராயணர் ஏறெடுத்துக் கூட பாராதது அவளுக்கு நெருடலைத் தந்தது.

''யார் இவன்... என்னைக் கண்டும் காணாதவன் போல் இருக்கிறானே?'' - என்று சகோதரியிடமும் கேட்டாள்.

அவளும் தானறிந்ததைக் கூறி, ''இவர் ஒரு அரங்கனடிமை...'' என்று முடித்தாள்.

''அந்த அரங்கனே நேரில் வந்தால் எனக்கடிமையாகி விடுவான்... இவனென்ன?'' - என்று சிலிர்த்துக் கொண்டாள்.

''வேண்டாம் தேவி... வார்த்தைகளைக் கொட்டாதே - பின் அள்ள இயலாது.''

''என்ன கூறுகிறாய்?''

''இவரை எண்ணி மாச்சரியம் கொள்ளாதே. ஆண்களிலும் விதிவிலக்கானவர் உண்டு.''

''அது எப்படி? இவன் வணங்கும் அரங்கனே மார்பில் லட்சுமிக்கு இடம் கொடுத்தவன்தானே?''

''நீ இப்போது என்னதான் கூறுகிறாய்...?''

''இந்த நந்தவனப் பிரியனை என் சொந்த மனப்பிரியன் ஆக்கினாலே என் மனம் அடங்கும்.''

''உன் மடியில் விழத்தான் ஆயிரமாயிரம் பேர் உள்ளனரே?''

''விழுபவன் உடலளவில் ஆண் மகன் - இவனே உண்மையான ஆண்மகன். என் வாழ்நாளில் நான் ஒரு உண்மையான ஆண்மகனையாவது ஆர்த்திட விரும்புகிறேன்.''

''ஓய்வெடுக்க வந்த இடத்தில் நோய் பிடித்தவள் போல் பேசுகிறாய்.''

''உண்மைதான்... இது அவன் பாலான காதல் நோய்.''

''ஆனால் அவன் விழ மாட்டான்.''

''விழ வைத்து விட்டால்...?''

''நானும் உனக்கு ஆண்மக்கள் போல அடிமை - போதுமா?''

''இனி அவன் என் அடிமை... வேடிக்கை பார்.''

- என்னும் தேவதேவி விப்ர நாராயணரை வீழ்த்த தவக்கோலம் பூண்டாள். மாலடிமை என்று சொல்லி விப்ர நாராயணரின் மலர்வனப் பணியைக் கேட்டாள்.

''எனக்கே இங்கே பெரிதாய் வேலையில்லை. எனக்கொரு பணிப்பெண்ணா?'' - என்று விப்ரநாராயணரும் திருப்பிக் கேட்டார்.

''நீங்கள்தான் அரங்க சேவை செய்ய வேண்டுமா? அவனருகில் எனக்குப் பங்கு தந்தால் குறைந்து விடுமா?'' - என்று கேட்டவள் நினைத்ததை இறுதியில் சாதித்து விப்ர நாராயணரின் மலர் வனத்தில் ஒரு குடிலிலும் குடியேறி விட்டாள்.

ஊரிலும் ஆச்சரியப் பார்வை.

ஆயினும் விப்ர நாராயணர் அவளின் தளராத சேவை காரணமாக தேவதேவியை நம்பத் தொடங்கினார். ஆனாலும் விதி வலியதாயிற்றே? வைகுண்டத்தில் ஒரு காட்சி.

பரந்தாமனை தேவி பாங்குடன் பார்த்துச் சிரித்திட அவளிடம் கேள்வி...

''என்ன தேவி... பக்தி நெறிக்கு காமப் பரிசோதனையா?''

''அக்னியை விடவும் அடர்ந்த நெருப்பு அது தானே தேவா?''

''உண்மைதான்... அதே சமயம் உலகில் உயிர்கள் உருவாகும் வழியும் அதுவல்லவா?''

''உயிர்களை உருவாக்கிக் கொள்ள மட்டுமே அது பயன்பட்டால்தானே நல்லது?''

''தீ என்றால் சுட்டே தீர வேண்டும். தீயில் கூடியது குறைந்தது கிடையாது.''

''அதனால்...?''

''பரிசோதனை நிகழ்த்தும் நீதான் பதில் கூற வேண்டும்.''

''உம் பக்தர்கள் என் பக்தர்கள் - எம் பக்தர்கள் நம் பக்தர்கள் - நம் பக்தர்களுக்கு உலக மாயையை தெளிவிக்கச் செய்வது நம் கடமையல்லவா?''

''அதனால்...?''

''அதனாலேயே இந்தத் திருவிளையாட்டு, விப்ர நாராயணன் விழுந்தாலே எதிர் நாளில் பக்த நாராயணர்கள் எழ முடியும்...''

''சரி... நடத்து உன் நாடகத்தை...''

- பரந்தாமனும் அனுமதித்திட லட்சுமி தேவியும் திருவுள்ளம் கொண்டிட ஒரு மழை நாள் இரவில் தேவ தேவிநனைந்த நிலையில் விப்ர நாராயணரின் எதிரில் இளமைச் செழிப்போடு தோன்றி சலனப்படுத்துகிறாள்.

படிப்படியாக முன்னேறி படுக்கையில் சாய்த்தும் விடுகிறாள்.

காமப்பசிக்கு மலர்த்தொண்டாற்றிய விப்ர நாராயணனும் பலி!

ஆனானப் பட்ட விசுவாமித்திரனும் விழுந்த பெரும் பள்ளம்!

ராஜ ரிஷிகளையே சாய்த்துவிடும் கோரச் சுனாமியல்லவா காமம்? முனிவர்களுக்கு விசுவாமித்திரர் என்றால் மாந்தர்களுக்கு விப்ர நாராயணன்!

தேவதேவியின் காமவலையில் அகப்பட்ட விப்ரநாராயணன் அதன் பின் அவள் வலையில் இருந்து விடுபடவேயில்லை.

நந்தவனச் செடிகள் வாடத் தொடங்க. அரங்கனும் மாலையற்றுப் போக, ஊராரே வியந்து, செருமாந்து பேசாத பேச்சு பேசுகின்றனர்.

தேவதேவிக்கோ தான் நினைத்ததை சாதித்து விட்ட பெருமை. கித்தாய்ப்பு!

சகோதரியும் திருஷ்டி கழிக்கிறாள். ஆனால் தாய்க் கிழவியோ, ''இனி விப்ரநாராயணனை நீ தீண்ட வேண்டும் என்றால் அவன் பொருள் தர வேண்டும். காசில்லாதவன் கடவுளே ஆனாலும் கதவைச் சாத்துவதே நம் குலத்தவர் வழக்கம்'' என்று ஏங்கித் தவித்து வந்த விப்ரநாராயணனை ஒரு நாள் தெருவோடு திருப்பி அனுப்பி விடுகிறாள்.

'நாராயணா - மாதவா - முகுந்தா' என்று அவன் நாமம் சொன்ன விப்ரநாராயணன் உதடுகள் 'தேவி - தேவி - தேவி'. என்று அவள் நாமம் சொல்லி உருகி அழுகிறது.

திருவிளையாட்டிலும் ஒரு திருப்பம்!

தேவதேவி வீட்டுக் கதவை ஒரு இளம் பிராம்மணர் தட்டுகிறார். அவர் கையில் ஒரு வட்டில்! சாதாரண வட்டில் கூட அல்ல, பசும் பொன்னால் ஆன தங்க வட்டில்!

அரங்கனின் திருச்சன்னதியில்தான் இது போன்ற வட்டில்களைப் பார்க்கலாம்.

அப்படி ஒரு வட்டில்!

கதவைத் திறந்த தேவ தேவியின் தாய் அவரையும் வட்டிலையும் ஆசை பொங்கப் பார்த்தாள். அவர்தான் பஞ்சணை கொள்ள வந்திருப்பதாக கருதி, உள்ளே அழைத்தாள்.

''மன்னிக்க வேண்டும். இது விப்ரநாராயணர் தரச் சொன்ன வட்டில். தங்க வட்டில். பெற்றுக் கொள்ளுங்கள்'' என்றார்.

''நீங்கள்?''

''நான்... நான்... அழகிய மணவாளதாசன் என் பேர்...'' என்றவர் வணங்கி விட்டுப் புறப்பட்டார். அவளோ வட்டிலில் மயங்கியதோடு விப்ரநாராயணரை அழைத்து வர பல்லக்கை அனுப்பத் தயாரானாள்!

# 24

அந்த அழகிய மணவாள தாசனும் தேவதேவி வசம் பொன் வட்டிலைச் சேர்த்த கையோடு அடுத்து நேராகச் சென்று நின்றது விப்ரநாராயணரிடம்தான்... அவர் முன் மிகப் பணிவாக சேவக பாவனையோடு வணங்கிய அழகிய மணவாள தாசன்,

''விப்ர நாராயணரே... உமக்காக தேவ தேவியார் காத்துக் கொண்டிருக்கிறார். சிறிது நேரத்தில் பல்லக்கு வந்து விடும். புறப்படத் தயாராக இருங்கள்'' என்றார்.

விப்ர நாராயணரிடம் திகைப்பு.

''ஐயா தாங்கள் யார்... நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா - என்னால் நம்ப முடியவில்லையே...'' எனும் போதே தேவ தேவி வீட்டுப் பல்லக்கு மணிச் சப்தம் விப்ர நாராயணர் காதுகளில் விழுந்திட, அதைத் தொடர்ந்து வியப்பும் மகிழ்வும் அவருக்குள் பொங்கி எழ மணவாள தாசரும் அதற்கு மேல் அங்கே தனக்கு வேலை இல்லை என்று கழன்று கொண்டார்.

பல்லக்கும் வீட்டு வாசலில் வந்து நின்றது.

பல்லக்குத் தூக்கிகளும் விப்ர நாராயணரைப் பார்த்து வணங்கியவர்களாக ''புறப்படுங்கள்... தங்களை அழைத்து வரும்படி உத்தரவு'' என்றனர்.

''சற்று பொறுங்கள்... நான் நீராடி வேறு ஆடை உடுத்தி வருகிறேன்...''

''அவசியமில்லை... தாங்கள் தைல நீராட தேவ தேவியார் ஏற்பாடு செய்துள்ளார். அதன் பொருட்டு வென்னீர் வளாகமும் செயல்படத் தொடங்கி விட்டது.''

''இது என்ன விந்தை... எதனால் தேவதேவிக்கு என் மேல் இத்தனை கரிசனம்?''

''அதை நீங்கள் அங்கு வந்து அவரிடமே கேட்பதுதான் சரி. நாங்கள் கூலிக்குப் பல்லக்கு சுமக்கும் ஏவலர்கள்...''

- அதற்கு மேல் விப்ர நாராயணரும் அவர்களிடம் பேசவில்லை. பல்லக்கில் ஏறி அமர்ந்தார். அதுவும் அசைந்தபடி தெருவில் நுழைந்து சென்றது. திருவரங்கத் தவர்கள் அவ்வளவு பேரும் பார்த்தார்கள்.

''விப்ரநாராயணர் முன்பு தாசி வீட்டுக்கு நடந்து சென்றார். இப்போது பல்லக்கில் செல்கிறார். பொதுவில் தாசிகளிடம் எல்லோரும் முதலில் பல்லக்கில் செல்வார்கள். பின் பொருளை எல்லாம் இழந்து நடந்து செல்வார்கள். ஆனால் இங்கே தலை கீழாக உள்ளதே...'' - என்று பேசத் தொடங்கினர்.

''விப்ர நாராயணர் விஷயமே பெரிய புதிர்தான். அவர் எப்போது எப்படி நடந்து கொள்வார் என்பது அந்த அரங்கனுக்குத்தான் வெளிச்சம்''' என்றார் இன்னொருவர்.

''இது எதில் போய் முடியுமோ தெரியவில்லை. இந்தத் திருவரங்கமே போற்றும் அடியாராக இருந்தவர் இப்படி ஒரு தாசிக்கு அடிமையாகிப் போனாரே...''

- என்றும் ஒருவர் புலம்பினார். மறு நாள் பொழுதும் விடிந்தது. ஆரம்பமாகி விட்டது ஒரு பரபரப்பான திருவிளையாட்டு!

அரங்கன் சன்னதிக்குள் காலை விச்வரூப தரிசனத்துக்குப் பயன்படுத்தும் அவனது தங்க வட்டிலைக் காணவில்லை!

எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. விஷயம் கோயில் மிராக காதுக்கு முதலிலும், பின் அவர் மூலம் மன்னன் வரைக்கும் சென்று விட்டது.

அன்று பார்த்து மன்னனும் சேவை நிமித்தம் கோயிலுக்கு வந்திட, பட்டர்களுக்குள் பதட்டம் பரவி நிற்பதைக் கவனிக்க, அவனுக்கும் விஷயம் தெரிந்தது.

'அரங்கன் சன்னதி பொன் வட்டில் விலைமதிப்பற்றது. அது அரச காணிக்கையும் கூட. அதையே இறைவன் சன்னதியில் இருந்து ஒருவன் களவாடி இருக்கிறான் என்றால் அவன் எந்த குற்றத்தையும் சாதாரணமாகச் செய்வான்.'

- என்று எண்ணிய அரசனும் பொன் வட்டிலைக் கண்டறியக் கட்டளை இட்டான். அதோடு சதா சர்வ காலமும் கருவறைக்குள் இருப்பவர்கள் பட்டர்கள்தான்... எனவே அவர்கள்தான் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள்' என்றும் கூறிவிட சோழ வீரர்களும் பட்டர்களைக் கைது செய்து சிறைக்குள் அடைத்தனர். அவர்களோ அழுது புலம்பினர். அவர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

சிறைக் காவலன் ஒருவன் அதைப் பார்த்து மிகவே வருந்தினான். அன்று பணி முடிந்து வீடு திரும்பியவன் பட்டர்களின் புலம்பலை அவனது மனைவியிடம் கூறி வருந்தி நிற்க அவளிடம் தீவிரமான சிந்தனை.

அவளோ தேவதேவி வீட்டில் பணிப்பெண்ணாக இருப்பவள். விப்ரநாராயணர் தரச் சொன்னதாக அழகிய மணவாள தாசர் வந்து பொன் வட்டிலை தேவ தேவியின் தாயார் வசம் தந்தபோது உடன் இருந்து அதைப் பார்த்தவள். அந்த விபரத்தை அப்போதே தன் கணவனிடம் கூறினாள். அவனும் அதை தனது சிறை அதிகாரி மூலமாக அரசனிடம் தெரிவிக்க, அந்தப் பொன் வட்டிலைக் கைப்பற்றி பரிசோதிக்க அரசனும் உத்தர விட்டான்.

அடுத்த சில நிமிடங்களில் தேவதேவி வீட்டுக்குள் புகுந்த அரச வீரர்கள் வட்டிலைக் கைப்பற்றியதோடு தேவதேவியை யும் கைது செய்தனர்.

''ஐயோ, அது விப்ரநாராயணர் எனக்குக் காணிக்கைப் பொருளாகக் கொடுத்தது'' என்று கூறப்போய் அவரும் கைது செய்யப்பட்டார்.

விப்ர நாராயணரோ, ''நான் தரவேயில்லை - எனக்கு இதைப்பற்றி எதுவுமே தெரியாது'' - என்று அவர் வரையிலான

உண்மையைக் கூறிப் புலம்பினார். அப்படியே பேச்சு அழகிய மணவாள தாசரிடம் சென்றது.

அவன்தான் தேவதேவியிடம் வட்டிலைத் தந்தவன். அவனேதான் விப்ர நாராயணரிடம் தேவதேவி அழைப்பதாகத் தகவலும் சொன்னவன்.

இப்போது அவன் எங்கே? அவன் வந்தால் களவாடியது யார் என்பது மட்டுமல்ல, எல்லா கேள்விகளுக்கும் விடை தெரிந்துவிடும். தெரியத்தான் போகிறது.

இதுதான் அவன் திருவிளையாட்டாயிற்றே? அந்த உண்மை தெரிவதற்குள்தான் தேவ தேவியிடமும் விப்ரநாராயணரிடமும் எத்தனை தவிப்பு - துடிப்பு!

''பொருளை ஆதாரமாக வைத்து பிழைக்க முயற்சி செய்தாலே இப்படித்தான் ஆகும்'' என்கிற ஞானம் தேவ தேவிக்கும், 'பாழும் உடற் பசியாலே இன்று அரசனாலேயே தண்டிக்கப்படும் அளவிற்கு வந்து விட்டேனே... சில நாள் சுகத்துக்காக வாழ் நாளெல்லாம் இந்த உடம்பு சிறையில் கிடந்து வாடப் போகிறதே' என்று விப்ரநாராயணரும் வாழ்வின் உண்மையை மனம் வாக்கு காயம் என்னும் மூன்றாலும் உணர்ந்து துடித்தபடி இருக்க திருவிளையாட்டும் ஒரு முடிவுக்கு வந்தது.

பாற்கடல் நாயகன் தன்நாயகியைப் பார்த்து, ''பொன் வட்டில் சிக்கலை தீர்த்து விடவா?'' என்று கேட்கிறான்.

''தீர்த்துத்தானே தீர வேண்டும். பெண்ணாசை என்பது தானே தாய்ப்பாசமாகவும், சகோதர அன்பாகவும் மனைவி மேல் உயிராகவும் இருக்கக் காரணமாக உள்ளது. அந்த ஆசை தவறாகி முழு காமத்திலேயே செலவானால் இப்படியும் பாதிப்பு ஏற்படும் என்பதை இனி உலகமும் உணர்ந்து விடுமே?' - என்று பதிலுரைக்கிறாள் ஸ்ரீதேவி!

அதற்கு மேல் பரந்தாமனும் வாளாதிருப்பானா? சோழ மன்னன் கனவில் புகுந்து, 'யாமே அழகிய மணவாள தாசனாக வந்து இந்த நாடகத்தை நடத்தினோம். விப்ர நாராயணனின் மலர்ச் சேவை தொடர விரும்புகிறோம்' என்ற மாத்திரத்தில் அரசனும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான்.

அந்த நொடியே சிறைக் கதவுகளைத் திறந்து விப்ர நாராயணரையும், தேவ தேவியையும் விடுவித்தான். அவர்களும் அந்தப் பரந்தாமன் கனவில் வந்து கூறியதை அறிந்தனர். தேவதேவி அந்த க்ஷணமே விப்ர நாராயணர் வரையில் போட்ட அடியார் வேடத்தை நிஜமாக்கிக் கொள்ள முடிவெடுத்து விட்டாள்.

ஆனால் விப்ர நாராயணரால்தான் தாளமுடியவில்லை. மலர்வனம் அமைத்து மாலை கட்டித் தொண்டாற்றிய வரையில் இருந்த உயரம் எங்கே? பின் பெண்ணாசையால் வீழ்ந்ததில் ஏற்பட்ட தாழ்வுதான் என்ன...?

இரண்டையும் அனுபவபூர்வமாகவே பார்த்தாகி விட்டது. இனி எக்காலத்திலும் இப்படிப்பட்ட தவறினை செய்து விடக் கூடாது என்றும் சங்கல்பித்துக் கொண்டவருக் குள் ஒரு பிரதான கேள்வி.

நல்லவிதமாய் தான் தொண்டாற்றி வந்த நிலையில், இந்தத் தவறு இடையில்தான் நேரிட்டது. நல்லவிதமாய் இருக்கும்போது எப்படி இப்படி ஒரு தவறு நேர அந்தப் பரந்தாமன் அனுமதிக்கலாம். தேவ தேவியை அடைய முடியாமல் 'தவித்தபோது துணை புரிய வந்து பொன் வட்டிலால் அவளோடு சேர்ந்திட வழிவகை செய்த அந்த தாமோதரன் அப்படி ஒருத்தியையே கண்ணில் காட்டாமல் விட்டிருக்கலாமே? இந்தச் சோதனையால் உலகத்தவர்க்கு ஒரு பாடம் கிடைத்தது என்கிற நன்மை ஒரு பக்கம் இருந்தாலும் விப்ர நாராயணர் பெண்ணாசையால் விழுந்து பின் எழுந்தவர் என்று தானே ஊர் உலகம் சொல்லும்.'

- இந்தக் கேள்வியில் அவர் உழன்ற தன் பின்புலத்தில் தான் அனுபவித்துத் தீர்க்கும் கர்மம் என்று ஒன்று உள்ளது. அதே சமயம் இல்வாழ்க்கைக்குரிய விதிப்பாடு அவரிடம் இல்லை. எனவேதான் இப்படி நிகழ்ந்தது. எனவே அறச் செயலில் ஈடுபடும்போது பூர்வ வினைகள் அறவே செயல்படாமல் இருக்க தீவிர ஈடுபாடு முக்கியம் என்பது புலனாகிறது.

அந்தத் தீவிர ஈடுபாடு முக்கியம் என்கிற ஞானமே விப்ரநாராயணரை தொண்டரடிப் பொடி ஆக்கியது. ஒரு

பெண்ணிடம் மயங்கிக் கிடந்த தகாத செயலுக்கு தனக்குத்தானே தண்டனை அளித்துக் கொள்ள விரும்பியவர் மாலடியார்களின் திருவடிகளைக் கழுவி அந்தத் தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொண்டும் ஒரு வாய் பருகியும் தன் தேகத்துக்கும் செயலுக்கும் கழுவாய் தேடிக் கொண்டார்.

அதனாலேயே தொண்டரடிப் பொடியாழ்வார் என்றும் ஆனார். இவரைக் கொண்டு அந்தப் பரந்தாமன் உணர்த்த விரும்புவது ஒன்றுதான்!

'நெறி பிறழ்ந்த காமம் பாவமாகிறது. ஆனாலும் மாலடியாராக இருந்து சேவை புரியும் பட்சத்தில் அவருக்கு விமோசனம் உண்டு' என்பதுதான் அது!

இங்கே தேவ தேவி மேல் வைத்த காமம் போன்றதுதான் நாம் இந்த உலகில் வாழும் நாளில் அழிந்துவிடும் அனைத்துப் பொருட்களின் மேல் வைக்கும் பற்றுதலும்... அது நீங்கவும் உய்வு பெறவும் ஒரே வழி மாலடியாராக ஆவதும், மாலடியாரைத் தொழுவதும்தான்...!

தொண்டரடிப் பொடியாக விப்ர நாராயணர் மாறிவிட்ட நிலையில் அவர் பாடியருளியதுதான் திருமாலை - திருப்பள்ளியெழுச்சி போன்ற பிரபந்தங்கள். திருமாலையில் நாற்பத்தைந்து பாசுரங்கள் உள்ளன. திருப்பள்ளி எழுச்சி பத்து பாசுரங்கள் கொண்டது. ஆக மொத்தம் ஐம்பத்தைந்து பாசுரங்கள்! ஆனபோதிலும் மாலடியார்களின் மனதில் பெரிதும் பசைபோட்டு ஒட்டிக் கொண்டவை இவரது பாடல்களே!

**'பச்சைமாமலை போல் மேனி**
**பவள வாய் கமலச் செங்கண்**
**அச்சுதா! அமரர் ஏறே**
**ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான் போய்**
**இந்திர லோகமாளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன்**
**அரங்கமா நகருளானே!'**

- எனும் பாடல் எல்லோரும் அறிந்த ஒன்று.

'ஊரிலேன் காணியில்லை - உறவு மற்றொருவரில்லை' எனும் பாடலோ உருக்கத்தின் உச்சம். மொத்தத்தில் தொண்டரடிப் பொடி. வாழும் மனிதர்கள் அனுபவித்து அறிய வேண்டிய ஆழ்வார் ஆவார். நம் மனதிற்கு மிக நெருக்க மானவரும் இவரே! அடுத்து வருபவர் திருப்பாணாழ்வார்!

# 25

ஆழ்வார்கள் வரிசையில் பொய்கையாழ்வாரில் தொடங்கி தொண்டரடிப் பொடி வரை ஆராதித்து விட்டோம். இவர்களில் பெண்பாற் சார்புக்கு ஆண்டாளும், குலசேகர ஆழ்வாரின் புதல்வி இளையையும் கண்டோம்.

கூட்டினால் பதினோரு பேர்!

பதினோரு பேரும் பதினோரு விதம்...

இவர்களில் ஆண்டாளும், திருமழிசை யாரும் கண்டெடுக்கப்பட்டவர்கள். ஆண்டாளை பூதேவி பூக்குவித்தாள். திருமழிசையாரை தாங்கிப் பிடித்தாள்.

இதே வழியில் இன்னொருவரும் வரவிருக்கிறார்.

அவரே பாணர்!

வயல் வெளியில் கிடந்த குழந்தையை பிள்ளைப் பேறில்லாத பஞ்சம குலத்தைச் சேர்ந்த தம்பதிகள் கண்டெடுத்து வளர்த்தனர். அப்படி வளர்ந்த பிள்ளையே அரங்கன் மேல் பக்தி கொண்டு பின்னாளில் திருபாணாழ்வானாக மாறியது என்பதே வரலாற்றுப் பக்கங்கள் வாயிலாக கிட்டும் தகவல்.

ஆனால் கார்த்திகை மாதத்தில் ரோகிணி நட்சத்திரத்தில் எப்பெருமானின் திருமார்பை அலங்கரிக்கும் ஸ்ரீவத்சம் எனும் அணியின் அம்சமாக இவர் அவதரித்தார் என்பதை எதை வைத்து கூறினர் என்பதில் கேள்வி எழுகிறது.

வயல் வெளியில் அனாதையாகக் கிடைத்த குழந்தை எனில் அதன் நட்சத்திர விலாசத்தை ஒருவரால் எப்படி அறிய இயலும்.?

அதிலும் இவர் 'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்னும் பாரதியின் பாடல் வரிகளுக்கு உதாரணமாகத் திகழ்கின்றவர்.

எனவே, இவரை பஞ்சமர் குலத்தில் பிறந்தவர் என்று கருதுவதிலோ ஒப்புக் கெள்ளவதிலோ இழிவில்லை. 'மாறாக இவர் யாரோ?' ஆனால் பஞ்சமராக வளர்ந்தவர் என்பதில் ஒரு பாசாங்கும் ஆழ்வார்களில் ஒருவராக இவரை உயர் குலத்தவர்கள் ஏற்க மறுத்து விடுவார்களோ என்று அச்சப் படுவதும் மட்டுமே புலனாகிறது.

இவர் பிறப்புக்கு பின்னால் உள்ள இந்த கேள்விகளை ஒதுக்கி விட்டு இவரது பக்திச் சிறப்பை அறிய முற்படுவோம். நாயன்மார்களுக்கொரு நந்தன் போல் ஆழ்வார்களில் இவர் அகப்படுகிறார்.

உயிரினங்களில் வலிமையுடையது - வலிமை குறைந்தது என்கிற பிரிவில் புழு, பூச்சி முதல் ஆடு, மாடு வரை அனைத்தும் அடங்கி விடுகிறது. இவைகளில் மேலானது கீழானது என்றெல்லாம் இல்லை.

ஆனால் அரிய உயிரி என்று போற்றப்படும் மனிதர்களில் மட்டும் மேல் கீழ் என்கிற பாகுபாடுகள்! அதன் காரணமான வர்ணாஸ்ரம முறைப்பாடுகள்... ஒரு அலுவலக நிர்வாகத்தில் மேலாளர், கணக்காளர், காசாளர் என்று பணிப் பிரிவுகள் இருக்கும். அதற்கேற்ப அவர்கள் கடமையாற்றுவார்கள். இதனால் குழப்பக்கங்களுக்கும் சச்சரவுகளுக்கும் இடமின்றி அந்த அலுவலகம் இயங்கும்.

இதையொட்டியே சமுதாயம் சச்சரவின்றி இயங்க வர்ணாஸ்ரம முறைவடிவமைக்கப்பட்டது. பெரியவன் சிறியவன் என்று பேதம் உருவாக்க இது வடிவமைக்கப்பட வில்லை. ஆனால் மனித சமுதாயம் பெருகப் பெருக இந்த வடிவமைப்பு சிதைந்து பொய் பேதம் உருவாகி அதனால் சாதிச் சண்டை... மதக் கலவரம் எல்லாம் தோன்றிற்று... இன்று அம்மட்டில் சமநிலையை தோற்றுவிக்க ஒரு பெரும் போராட்டமே நடந்தபடி உள்ளது. சம நிலை இல்லாது போய் விட்டது என்பதால் இட ஒதுக்கீடு எனும் ஒரு முறையே

தோன்றி அதற்கொரு முடிவும் இல்லாமல் அது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணமே பிறப்பில் உயர்வு தாழ்வை கற்பித்த செயல்பாடுதான். தொடக்க காலத்தில் சில செயல்பாடுகளுக்கு உத்தமமானதாக விளங்கிய இந்த உயர்வு தாழ்வு பல விஷயங்களுக்கு பகையாகி பெரும் பாவச் செயலாகவும் மாறிவிட்டது.

'இது பெரும் பாவம். எனக்கு இந்த ஏற்ற தாழ்வில் உடன்பாடில்லை' என்று அந்த பரந்தாமனும் சொல்ல விரும்பினான். திருப்பாணாழ்வார் மூலம் சொல்லி முடித்தான் என்பதே உண்மை.

அது எத்தனை பெரிய உண்மை என்பதற்கு சான்று தான் பன்னிரு ஆழ்வார்களின் மூலம்.

ஒருவர் சோழியர், ஒருவர் க்ஷத்திரியர் ஒருவர் அந்தணர் என்கிற வரிசையால் இதை நாம் உணரலாம்.

சரி திருப்பாணாழ்வாருக்கு வருவோம்.

அந்த நாளில் பாணர் குலம் என்று ஒன்றிருந்தது. மிருகங்களின் தோலைக் கொண்டு பறை செய்து அதை இசைத்துப் பாடி ஆடுவது இவர்கள் வழக்கம். இதில் பெரிதாக இனிமை இல்லாத நிலையில் ஆட்டம் களை கட்டும்.

பேதம் காரணமாக இவர்களை ஊருக்குள் சேர்த்திடாத நிலைப்பாடு இருந்தது. எனவே, ஊருக்கு வெளியே சேரி ஒன்றை அமைத்துக் கொண்டு அங்கே கூட்டமாய் வசித்து வந்தனர். இவர்களுக்கு ஆலயங்களில் அனுமதி இல்லை.

தூரத்தே நின்று கொண்டு கோபுரத்தை பார்த்து அதையே கடவுளாக பாவித்து வணங்கிக் கொள்ளலாம். இதனாலேயே தாழ்வு மனப்பான்மை தோன்றி அதன் விளைவாக மது அருந்துவது, புலால் 'உண்பது' என்று இவர்கள் தீய பழக்க வழக்கங்களுக்கும் ஆட்பட நேர்ந்தது.

அது இவர்களுக்கான இடைவெளியையும் அதிகரித்தது.

மிக இழிவானவர்களாக இவர்களை பார்க்க வைத்தது.

இப்படி ஒரு நிலையில்தான் பாணன் புறப்படுகிறார்.

உறையூருக்கு வெளியே சேரியில் வாசம்.

அங்கிருந்து காவிரிக் கரை பகுதிக்கு வந்து நின்று கொண்டு அரங்க மாநகரின் ராஜகோபுரங்களை பார்த்துக் கொண்டு அரங்கநாதப் பெருமாளையும் கற்பனையிலேயே மனதுக்குள் உருவாக்கிக் கொண்டு பக்தி செலுத்துவதுதான் இவர் வழக்கம்.

அவ்வேளையில் எல்லாம் தம்புரா போன்ற இசைக்கருவி ஒன்றை கையில் இசைத்தபடி பாடி ஆடுவதும் இவர் வழக்கம்.

**''ஆதி அந்தமில்லாத ரங்கா ரங்கா - இந்த**
**மேதினியே உனதன்றோ ரங்கா ரங்கா...**
**சாதியிலே சிறிதானேன் ரங்கா ரங்கா - உன்**
**ஜோதியிலே இடமளிப்பாய் ரங்கா ரங்கா...''**

- என்று மனமுருகப் பாடி ஆடியபடியே இருப்பதுதான் இவர் செயல். இதனால் இவரை, இவரைச் சார்ந்தவர்களே பித்தர் என்றும் வீணர் என்றும் கூறும் நிலை தோன்றி விட்டது. ஆனால் அதை இவர் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. சதாசர்வ காலமும் ரங்கா ரங்கா என்றே சிந்தித்தபடி இருந்த இவருக்கு அரங்கனின் தரிசனம் ஒன்றுதான் நோக்கம். இதனாலேயே இவர் உயர்சாதியில் பிறவாமல் போய் விட்டேனே என்று வருந்தியதோடு வரும் பிறப்பாவது நற்பிறப்பாக திகழ வேண்டும் என்றும் மனம் உருகினார்.

'ஆனால் இப்பிறப்பே உன் வரையில் நற்பிறப்பு தான்' என்று உலகத்தவர் உணரத் தீர்மானித்தான் அந்த அரங்கன்.

'பக்தி ஒன்றே எனக்குப் பொருட்டு!

என்னை அடைய அந்த உணர்வு ஒன்றே போதுமானது.

அம்மட்டில் எனக்கு உயிரினங்களில் பெரியது சிறியது என்பதே கிடையாது. அதனாலேயே ஆதிமூலமே என்றழைத்த யானைக்காக ஓடினேன். ஓடக்கரை குகனை சகோதரனாகவே வரித்தேன். சபரி தந்த எச்சில் கனியை ருசித்தேன்' - என்று திகழ்ந்திடும் அந்த தாமோதரன் லோக சாரங்கர் என்னும் திருக்கோயில் தலைமை பட்டர் மூலமாக பாணரின் பக்திக்கு ஒரு அங்கீகாரமும் முக்தியும் அளிக்கத் தீர்மானித்தான்.

லோக சாரங்கர் ஒரு வேத பிராமணர்! முனி பிரான்களைப் போல தீட்சை உடையவர். அரங்கனுக்காக பூஜா முறைகளில் அணுப்பிசகும் நேர்ந்து விடக்கூடாது என்று கருதி அதற்கேற்ப தீவிரமாய் திகழ்பவர்.

அரங்கனுக்கான பூஜாக்ரமங்களில் காவேரித் திருமஞ்சன நீராட்டும் ஒன்று... கங்கைக்கு நிகரான காவிரி நீரில் அரங்கமேனியை அபிஷேகித்த பின்பே மற்ற பூஜைகள் தொடங்கும்.

அதற்காக யானை மேலேறிக் கொண்டு காவிரிக்கு வந்து நீரெடுத்துச் செல்வது இன்றும் மரபு!

அப்படி ஒரு நாள் லோக சாரங்கர் காவிரிக்கரைக்கு வந்தக்கால் பாணர் அங்கே நீரோட்டம் முன் நின்று தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தார். ரங்கா ரங்கா என்கிற அவரது தீனத் குரல் காற்றில் கலந்து கோபுரக் கலசங்களில் சென்று முண்டியபடி இருந்தது. லோக சாரங்கருக்கு பாணரைப் பார்த்த மாத்திரத்தில் உடனேயே ஒரு அசூயை.

தாழ்ந்த சாதியராயிற்றே... மதுவும் புலாலும் உண்ணும் தன்மையராயிற்றே... காவிரி நீரில் இவர் நிற்கின்ற காரணத்தால் நீரும் மாசடையுமே? இந்த நீராலா திருமஞ்சனம் புரிவது? - என்றெல்லாம் கேள்விகள். எனவே, அவரை அங்கிருந்து விலக்கிட 'ஏ பாணா விலகு' என்று குரல் கொடுக்கிறார்.

ஆனால் பாடியபடி இருக்கும் பாணர் காதில் இவர் குரல் விழவில்லை. திரும்பவும் குரல் கொடுக்கிறார். இம்முறையும் பாணனின் காதில் லோகசாரங்கர் குரல் விழவில்லை.

வந்தது கோபம் - அருகில் கல்லொன்று கிடந்தது. அதை எடுத்து பாணர் மேல் எறிந்து கவனம் கலைக்க முயன்றார். அந்தக் கல்லும், விசையோடு பறந்து சென்று பாணனின் நெற்றியில் பட்டு அவரை நிலைகுலையச் செய்தது. நெற்றியும் புடைத்து ரத்தம் கசியத் தொடங்கி விட்டது!

அந்த நிலையில் பாணனும் லோக சாரங்கரை பார்த்துப் பதைத்து அங்கிருந்து விலகிச் சென்றார். தடையாக நின்று விட்டதற்காக மன்னிக்கவும் கோரினார். லோக சாரங்கரிடம்

கோபம் குறையவேயில்லை. ''உன்னை இனி நான் இந்த இடத்தில் பார்த்தால் தொலைந்தாய் நீ...'' என்று கோபக் குரல் கொடுத்துவிட்டு, கொணர்ந்த தங்கக் குடத்தில் நீர் முகந்தவராய் யானை மீதேறிக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்.

பாணனுக்கோ, 'அடடா... இப்படி ஒரு தவறைச் செய்து விட்டோமே... லோக சாரங்கரின் கோபத்துக்கு ஆளாகி விட்டோமே' என்றெல்லாம் குமைச்சல்.

ஆனால் தன் செயல் ஒரு தவச்செயல் என்பதை அறிந்திருக்கும் அறிவார்த்தம் பாணனிடம் இல்லை. மாறாக மனம் குழைந்து குழைந்து அதையே ஒரு தவறாக கருதும் அனர்த்தமே மிகுதியாயிருந்தது.

அரங்கனும் திருவிளையாட்டை தொடங்கினான்.

திருமஞ்சனம் முடிந்து மஞ்சள் காப்பிடும்போது அரங்கனின் நெற்றி மீது ரத்தம் கசியத் தொடங்கியது. இது என்ன விந்தை என்று லோக சாரங்கரும் அதிர்ந்தார். உடனேயே மனது பாணனை அடித்ததையும் பாணன் நெற்றியில் குருதி பெருகியதையும் எண்ணிப் பார்த்தார்.

'அங்கேயும் குருதி

இங்கேயும் குருதி

அங்கேயும் நெற்றி

இங்கேயும் நெற்றி...'

பெருமாளே! உணர்ந்து கொண்டேன் பாணனை நான் கோபித்தது பெரும் தவறு. உன் நினைவாய் இருந்தவனை கல்லால் அடித்தது அதைவிடப் பெரிய தவறு... திரும்பும் போது கோபித்துப் பேசியது தவறுக்கெல்லாம் தவறு... ஆசார நினைப்பில் அபசாரம் செய்து விட்டேன். என்னைப் பெரிதாகக் கருதி அவனை மதிக்கத் தவறி விட்டேன்' - என்று தனக்குள்ளே குமைந்து கதறத் தொடங்கி விட்டார்.

அரங்கன் அவரை அதோடு விடவில்லை.

இரவு கனவில் அவர் மனதை தட்டி எழுப்பினான்.

''வருந்தி நீ அழுவதால் உன் பாவம் குறையலாம். பாணனுக்கு அதனால் என்ன பயன்?'' என்று கேட்டவன், ''கல்லால் அடித்ததற்குக் கழுவாயாய் அவன் திருமேனியை உன் தோளில் சுமந்தபடி சன்னதிக்கு அழைத்து வந்து தரிசனம் செய்து வை!'' - என்றான்.

கனவும் கலைந்தது - பொழுதும் புலர்ந்தது. லோக சாரங்கர் பாணன் வசிக்கும் சேரிக்கே ஓடினார். நெடுஞ்சாண் கிடையாகக் காலில் விழுந்தார். அரங்கனின் கட்டளையைக் கூறினார். அதைக் கேட்ட பாணருக்கு மட்டுமல்ல அவர் சார்ந்த மக்களுக்கும் புல்லரித்தது. மெய் சிலிர்த்தது. கண்கள் குளமாகிட நின்றனர்.

லோக சாரங்கர் பாணர் மறுக்க மறுக்க அவரை தன் தோள் மேல் ஏற்றிக் கொண்டார். அப்படியே அரங்க மாநகருக்குள் புகுந்தார். வீதியரெல்லாம் பார்த்தனர். ''இது என்ன பேதமை... இது என்ன அனாச்சாரம்'' என்று சிலரும், 'விடிந்து விட்டது'' என்று சிலருமாய் அவர் பின்னாலேயே சென்றனர்.

திருச்சந்நிதி முன்னால் பாணரும் இறங்கிக் கொண்டார். 'ஐயோ இங்கே என் கால்கள் படலாகாதே' என்று மண்டியிட்டார். லோக சாரங்கரும் ஆரத்தி எடுத்து அரங்கனை அவர் கண்குளிரச் சேவிக்கச் செய்தார்.

மனதிலேயே கற்பனையால் வணங்கிய பாணர் அசலில் அரங்கனின் ரூப சௌந்தர்யத்தை வியந்தார். அவரது பாமரப் புலமை பாமதுரப் புலமையாக மாறத் தொடங்கியது.

''அமலன் ஆதிபிரான் அடியார்க் கென்னை - ஆட்படுத்த
விமலன் விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின் மலன் நீதிவானவன் நீள் மதிளரங்கத் தம்மான் - திருக்
கமல பாதம் வந் தென் கண்ணிலுள்ளன - வொக்கின்றதே!''

- என்று பாடி மகிழ்ந்தார். இப்படி இவர் நெகிழ நெகிழப் பாடியது பத்தே பத்து பாடல்களைத்தான். அதில் இவர் நாரணனை 'அமலனாதிபிரான்' என்று விளித்ததை எண்ணி பெரிதும் மகிழ்ந்தான் அந்த நாரணன்.

நாமெல்லோருமே எச்சிலும் மலமுமானவர்கள். அவன் அதைக் கடந்தவன். ஆதலால்... அவன் மலனல்ல. அமலன்!

இவன் போல் அமலர்கள் சிவன், பிரம்மன் என்று இன்னும் பலருண்டு. அவர்களிலும் இவனே ஆதியான முழு முதலானவன். இதை பாணர் உணர்ந்து கொண்டு அமலனாதிபிரான்' என்று பொழிந்ததை இன்றும் வைணவ உலகம் கொண்டாடி வருகிறது.

பாணரின் பாடலால் மகிழ்ந்ததோடு அப்படியே அருட்ஜோதியாக்கி அவரை தன் திருவடியில் சேர்த்தும் கொண்டான் அந்த அரங்கன்!

ஆண்டாளுக்குப் பின் அவனை அடைந்த பெருமை திருப்பாணாழ்வாரையே சேர்ந்திடும்.

'மாசற்ற பக்தி உன்னிடம் இருக்கிறதா?

கவலையை விடு - மாலவன் தேடி வந்து ஆட் கொள்வான்' என்பதற்கு திருபாணாழ்வார் ஒரு திவ்யமான உதாரணம்.

அடுத்து மங்கை மன்னன்! திருட்டாலே திவ்யம் பெற்றவன்...

# 26

இப்பூவுலகில் மாந்தராய் அவதரித்த ஒவ்வொருவருமே ஒவ்வொரு விதம். உழுது பிழைக்கும் விவசாயி வாழ்க்கை ஒருவிதம் என்றால், தொழுது பிழைக்கும் கோயில் குருக்களின் வாழ்க்கை இன்னொரு விதம். பண்டிதன் வாழ்க்கை, பாடகன் வாழ்க்கை, பயணங்கள் புரியும் யாத்ரீகனின் வாழ்க்கை, வியாபாரியின்வாழ்க்கை என்று வாழ்க்கை முறைகள் ஒரு எல்லையே இல்லாமல் விரிந்து கொண்டே செல்கின்றன.

ஆனால் இப்படி பல்வேறு விதமான வாழ்க்கை முறைகளையும், வாழ்க்கைப் போக்கையும் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் போதிலும் அனைவர்க்கும் பொதுவாக இருப்பது ஓர் இறைவன் மட்டும்தான்.

இவனைச் சரண் புகுகின்றவர்கள் யாராக இருந்தாலும் கடைத்தேற்றம் பெற்று விடுகிறார்கள். இறைவன் என்கிற

ஒருவனைப் பற்றியே தெரியாமல் மனம் போன போக்கில் உல்லாசமாய் வாழ்ந்திடும் சிலரோ இம்மட்டில் சில சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாகி அதில் வெற்றி பெற்றாலே கடைத்தேறுகிறார்கள்.

ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் என்ற வைணவ உலகமே போற்றிக் கொண்டாடும் இந்த ஆழ்வாரின் சரிதம் மிகவே மாறுபட்டது. பன்னிரு ஆழ்வார்களில் மிகுந்த உணர்வுக்களமாகவும், கதைச் செறிவும் எப்போது எது நடக்கும் என்பது தெரியாத ஒரு விறுவிறுப்பும் இருந்ததுஇவரது வாழ்வில்தான்!

இனத்தால் கள்ளன்.

மனத்தால் பெரும் வீரன்.

அதனால் யுத்தம் என்று வந்துவிட்டாலே வீரம் கொப்பளிக்கும்.

இவனுக்கு ஒத்தாசையாய்ஒரு அஷ்ட மங்கலப்புரவி. நல்ல இந்த வெண்ணிறப் புரவி இவன் வசம் மிகுந்த நட்போடு பழகி வந்தது. இவன் ஆடச் சொன்னால் அது ஆடவும் செய்யும்! அதனால் 'ஆடல்மா' என்றே இதற்குப் பெயர்.

இந்த ஆடல்மா மீதேறிக் கொண்டு, நீலன் எனும் பிறந்த வேளையில் இடப்பட்ட திருநாமத்தோடு, இவன் தெருக்களில் வந்தாலே எதிரிகள் பாய்ந்து ஓடி ஒளிந்து கொள்வார்கள்.

எந்த அளவு வீரம் இருந்ததோ அந்த அளவுக்கு நீலனிடம் விளையாட்டு உணர்ச்சி, களியாட்ட உணர்ச்சி என்று எல்லாமே இருந்தது.

களியாட்டத்துக்குப் பெண்கள் தேவை.

அவர்களில் அழகிய பெண்டிரைக் கண்டு விட்டால் அவர்களை எண்ணி ஏங்குவதும் அடைய முற்படுவதும் நீலனின் வழக்கம்.

சோழ நாட்டில் திருவாலித் திருநகருக்குப் பக்கத்திலுள்ள திருக்குறையலூரில் நள வருஷத்தில் கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தில் பௌர்ணமியன்று இவர் பிறந்ததாகக் குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்ததோடு, வீரர்களுக்கே உண்டான வில்லேற்றம், குதிரையேற்றம், யானை ஏற்றம் என்கிற சகலத்திலும் சிறந்து விளங்கினான். நீலனின் தந்தையான பெரிய நீலனும் சோழ சக்ரவர்த்தியிடம் ஒரு படைத் தலைவராக விளங்கி வந்தார்.

ஒரு படைத்தலைவன் மகன் அவனை விடவே வீரனாக வளர்வது என்பது ஆச்சரியப்படுத்தும் ஒன்றல்லவே?

பெரிய நீலனும் தன் மகனை தன்னிலும் வீரனாக மட்டுமல்ல அவன் தன் போல படைத்தளபதியாகவே இருந்து முடிந்து போய் விடக்கூடாது குறைந்த பட்சம் ஒரு குறுநில மன்னனாகவாவது திகழ வேண்டும் என்று விரும்பினான்.

அதற்கு அந்த நாளில் நிறையவே வாய்ப்புகளும் இருந்தன. சோழ நாட்டைச் சுற்றியுள்ள சிற்றூர்களை சற்று அயர்ந்தால் ஒருபுறம் பாண்டிய நாட்டவனும் மறுபுறம் பல்லவனும் ஆக்ரமித்து தங்கள் எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளும் ஒரு வழக்கம் இருந்து வந்தது.

பல்லவ நாட்டில் அவ்வேளையில் நந்திவர்மன் அரசாண்டு வந்ததாக தெரிகிறது. அதை வைத்து யூகித்தால் அனேகமாய் திருமங்கை மன்னனின் காலம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இருக்க வாய்ப்பு மிகுதி.

அப்பன் பெரிய நீலன் - தாயான திருவாலித் தேவி இருவருமே வீரப்பால் ஊட்டி வளர்த்தது வீண்போகவில்லை. ஆக்ரமிக்க வந்த விரோதிகளை எல்லாம் நீலனால் துவம்சம் செய்ய முடிந்தது.

அதன் விளைவாக சோழப் பேரரசன் அவனுக்கு 'பரகாலன்' என்கிற ஒரு பட்டத்தை அதாவது 'எதிரிகளுக் கெல்லாம் எமன்' எனும் பொருளில் அளித்தார். இப்படிப் பட்டம் பெற்றால் ஆயிற்றா - பெரிய நீலன் எதிர்பார்த்தது போலவே பதவி உயர்வும் தேடி வந்தது. திருவாலி என்னும் குறுநிலத்துக்கே ராஜாவாக அறிவித்து விட்டான்.

ஒரு சிற்றரசனாக சோழ அரசனுக்குக் கப்பம் கட்டிக்கொண்டு அதே சமயம் அரச போகங்களுக்குக் குறையே இல்லாமல் வாழலாம்.

அப்படி வாழ வேண்டும் என்பதுதான் நீலனின் விருப்பம்!

ஒரு ஆச்சரியமான விஷயம்... குறு நிலத்துக்கு அரசனாக ஆகிவிட்ட நிலையில் ஒரு பெரும் கவிஞனுக்கே உரிய பாடும் திறனும் மொழியாற்றலும் நீலனிடம் இருந்ததுதான்.

அதாவது குலத்தோடு வந்த வீரத்தோடு தமிழும் கலந்திருந்தது. இப்படி வீரமும் தமிழுமான ஒருவனைத்தான் காலம் வைணவ அடியார்களில் ஒருவனாக ஆக்கிப் பார்த்தது.

இறைவனின் திருஉள்ளம் என்பது எப்போது எவரை எப்படி ஆட்கொள்ளும் என்று யாராலும் கூற முடியாது. அதற்கு முன் வினைகளும் அடித்தளமிடுகின்றன என்பதும் அறிய வேண்டிய ஒரு உண்மை.

திருமங்கை மன்னனான நீலனின் வாழ்விலும் குமுதவல்லி என்கிற ஒரு வைணவ வைத்தியனின் திருமகளால் திருப்பம் ஏற்படத் தொடங்கியது.

திருவெள்ளக்குளம் எனும் சிற்றூர் ஒன்றில் குமுதவல்லியை யதார்த்தமாக தன் ஆடல்மா எனும் குதிரை மீதேறிச் செல்கையில் மங்கை மன்னன் காண நேர்கிறது. ஒரு மின்னலைப்பார்த்தது போன்ற தாக்கம் அவனிடம்.

பிறப்பிலேயே கொந்தளிக்கும் உணர்வுக்களம் கொண்ட திருமங்கை மன்னன் நீலன் குமுதவல்லியால் மனதளவில் 'அலங்கோலன்' ஆனான் என்றால் மிகையே இல்லை.

அந்த நாளில் இப்படிப்பட்ட ராஜ பார்வைகளுக்கு ஆளாக மாட்டோமா என்றே பல பெண்கள் தவித்ததுண்டு. அப்படி தன் மேல் ராஜ பார்வை பட்டுவிட்டால் அதன் பின் வாழ்வில் வளத்துக்குப் பஞ்சமே கிடையாதே...?

ராஜாவின் திருமதிகளில் ஒருமதியாகி அந்தப்புரத்தில் ஒரு சொகுசான வாழ்க்கை வாழலாம். சேடியர் தாதியர் தோழியர் என்று ஒரு கூட்டமும் அவர்களால் வாழ்ந்திடும்.

ஆனால் குமுதவல்லிக்கு இந்த ராஜ பார்வையில் பெரிய உடன்பாடில்லை. அவளிடம் கிலேசம்தான் ஏற்பட்டது.

மன்னன் ஒரு மாவீரன். உல்லாசப் பேர்வழியும் கூட...

நாளைக்கே தன்னைவிட ஒரு அழகியைக் கண்டால் தன் மேலான காதல் அத்தோடு முடிந்து போகும் என்கிற யதார்த்தத்தை அறிந்திருந்தாள்.

அதுமட்டுல்ல அவளிடம் மனிதர்கள் மேலான காதலை விட மாலவன் மேலான காதல் பெரிதாக இருந்தது. அதாவது அவள் அரை ஆண்டாளாக, முக்கால் இளையாக இருந்தாள்.

அவர்கள் எப்படி மானுட வரம்பை மீறிக் கொண்டு மாலனை நாடினார்களோ அப்படி ஒரு நாட்டம் குமுதவல்லியிடமும் இருந்தது.

மகள் எப்படிப்பட்டவள் என்பது அவளையே வளர்த்து ஆளாக்கி வரும் அவளது தந்தைக்குத் தெரியாதா என்ன?

எனவே மங்கை மன்னன் நீலன் தன் காதலுக்காக ஒருவரை தூதனுப்பி பேசச் சொன்னபோது, அந்தத் தூதனிடம் ''இதில் தன் விருப்பத்திற்குத் துளியும் இடமில்லை. தன் மகளுக்கு விருப்பமாயின் தனக்கும் விருப்பமே'' என்று நாசூக்காக கூறி விட்டான்.

அதனால் நீலனின் ஆசை என்னும் காமப் பந்து குமுதவல்லி முன் வந்து விழுந்தது. அவள் அதை எடுத்துத் தன்னோடு வைத்து விளையாடப் போகிறாளா இல்லை எட்டி உதைத்து எங்கோ போய் விழும்படி செய்யப் போகிறாளா என்பது கேள்வி.

குமுதவல்லியோ இரண்டையும் செய்யவில்லை. அவள் செய்யவில்லை என்பதைவிட அவளை அவளது திருமால் செய்ய விடவில்லை என்றும் கூறலாம். அவள் நீலன் துளியும் எதிர்பாராத ஒரு பதிலைக் கூறினாள்.

''தூதரே...

மன்னரின் வீரத்தை நானறிவேன். அவரது தன்மையும் அழகும் ஆனந்தமானதே. ஆனால் நானொரு வைணவ வழி வந்த குலக்கொடி. அவரோ மறவர். அவர் புத்தியில் பக்திக்குப் பெரிதும் இடமுண்டா இல்லை கத்திக்கு இடமுண்டா என்றால் கத்திக்குதான் இடம் என்பதை அனைவரும் அறிவர்.

எனக்கோ பக்தியே பெரிது. அதிலும் ஏக சித்தமாய் அந்தத் திருமாலை வழிபடும் பக்தி நெறியையே நான் தூய நெறியாய், வாழும் நெறியாய் நம்புகின்றேன். எனவே எனக்கும் அவருக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது என்பதை முதலில் நீங்கள் உணருங்கள்.

பிறகு அவருக்கும் உணர்த்துங்கள்.

இந்த ஊரில் அவரை மணக்க அனேக பெண்கள் தயாராய் இருப்பது திண்ணம். எனவே, அவர்களில் ஒருவரை மணந்து கொண்டு அவரை இன்பமாக வாழச் சொல்லுங்கள்'' என்று கூறி விட்டாள்.

விஷயம் திருமங்கை மன்னன் நீலன் காதுக்கு சென்று சேர்ந்தது.

குமுதவல்லியின் தெளிவும் துணிவும்தான் முதலில் கவர்ந்தது. அவள் தோற்றத்தில் தான் பேரழகி என்றால் உள்ளே அவள் மனமும் பேரழகுடன் இருப்பதை உணர்ந்தவன். அவள் சொன்னதை ஒரு முறைக்குப் பலமுறை சொல்லச் சொல்லிக் கேட்டான்.

எங்கேயும், 'எனக்கு மன்னனைப் பிடிக்கவில்லை' என்கிற பொருளே வரவில்லை. மாறாக மன்னனிடம் பக்தி இல்லை - குறிப்பாக வைணவ பக்தி இல்லை. அடுத்து, 'அவர் உயரத்தில் இருப்பவர், தானே தாழ்ந்த வைத்தியன் மகள்' - என்கிறாற் போன்ற கருத்தின் தொனிப்பை புரிந்து கொண்டவன் அடுத்து தானே குமுதவல்லியைச் சந்தித்துப் பேசுவது என்று முடிவு செய்தான்.

அதன்படியே தன் ஆடல்மாவின் மேலேறிக் கொண்டு ஒரு புயற்காற்றைப் போல பறந்து சென்று அவளது கிரகத்தின் முன் நின்றான்.

வைத்தியர் அதைப் பார்த்துப் பதறிப் போனார்.

குமுதவல்லியிடம் சென்று, ''நீ அரசனை புறக்கணிக்கவும் கோவம் கொண்டு அரசரே இங்கு வந்து விட்டார். அவர் உன்னை என்னை மீறி தூக்கிச் சென்றால் நான் ஏதும் செய்ய இயலாது. இறுதியில் ராஜாங்கத்து வம்பை

விலைக்கு வாங்கி விட்டாயே அம்மா'' - என்று வருந்தினர். ஆனால் அடுத்தடுத்து நடந்ததோ எல்லாமே யாருமே யூகிக்க முடியாததாகவே இருந்தது.

குமுதவல்லி நீலனைக் கனிவோடு வரவேற்று உபசரிக்கத் தொடங்கினாள். அவள் இல்லத்தில் எங்கு பார்த்தாலும் அந்த மாலின் ரூபங்கள் கொண்ட சிற்பங்கள். திசைதோறும் திருமண் காப்பு. இதமான குங்கிலியப்புகை.

ஒரு கோவிலுக்குள் இருக்கும் உணர்வே நீலனுக்கும் ஏற்பட்டது. முதல் தடவையாய் அவனிடம் ஒரு மெய்க் கிளர்ச்சி.

''என்ன பார்க்கிறீர்கள்?''

''இது இல்லமா இல்லை கோயிலா?''

''இல்லக் கோயில்!''

''அருமையான பதம். அற்புதமாக இருக்கிறது. இருந்தும் வாழவேண்டிய பருவத்தில் இப்படி யோகக் கோலம் கொள்ளத் தேவைதான் என்ன என்கிற கேள்வியும் எழுகிறதே?''

''உண்மைதான்... ஆனால் நீங்கள் சொன்ன இந்த வாழ வேண்டிய பருவத்துக்கு நீடித்த நிலைத்த ஆயுள் கிடையாது. இது சில ஆண்டுகளே இருக்கும். பின் நம்மை கிழப்பருவத்தில் தள்ளிவிடும். அப்பருவமோ இளம் பருவ இன்பங்களை எண்ணி இப்போது அனுபவிக்க முடியவில்லையே என்று பெரிதும் வருந்தும்.

மொத்தத்தில் வாழ்க்கை என்பதே கனவு காண்பதும் அதற்காக உருகுவதும் என்றாகி விடும். ஆனால் உண்மையில் வாழ்வென்பது பிறவி எனும் பெருங்கடலை கடக்கப் பயன்படும் ஒரு தோணி போன்றது.

நாம் பிறப்பெடுத்திருப்பது என்பதே மீண்டும் பிறவாதிருக்கும் வழியைக் காணத்தான். ஆனால் நாமோ, திரும்பத் திரும்ப இந்த மண்ணில் பிறந்து உழல்வதற்கு தேவையானதையே செய்கின்றவர்களாக இருக்கிறோம்...''

''... என்றால் இல்வாழ்க்கை என்பது பாவத்தின் விளைவா?''

''நான் அப்படிக் கூறவில்லை. இல்வாழ்க்கை என்பது இரண்டு இதயங்களின் சங்கமம். ஒன்றுபட்ட ஒரு வாழ்க்கை நெறி.''

''நான் அதை மறுக்கவில்லை. என்னை ஏற்க இனி உனக்கு ஆட்சேபம் இருக்காதே?''

''மறுக்கவில்லை என்று உதட்டளவில் சொன்னால் ஆயிற்றா?''

''என்ன செய்ய வேண்டும்?''

''இனம், குணம், மனம் என்று எல்லாமே மாற வேண்டும். வாளும், வேலும், சூலமும் கட்டாரியும் என்று ஆயுதபாணியாயிருக்கும் தங்கள் தோற்றம் பன்னிரு தோளிலும் மாலவன் திருமண் திலகத்தையே ஆயுதமாக கருதித் தரிக்க வேண்டும்.''

''இதோ இப்போதே தரித்துக் காட்டவா?''

''அவ்வாறு ஆவது என்பது வேடம் புனைவது போன்றதல்ல! வேதம் புகுவது போன்றது! அது பெரும் செயல். அதற்கு குரு என்னும் ஆச்சாரியனின் அனுமதியும் உபதேசமும் வழிகாட்டுதலும் அவசியம்.''

''யார் அந்த ஆச்சாரியன் என்று சொல்... இப்போதே அவரை இந்தத் திருமங்கைக்கு வரவழைத்து நீ கூறிடும் சம்ஸ்காரங்களை செய்து கொள்கிறேன்.''

- நீலனின் ராஜரீகப் பேச்சைக் கேட்டு குமுதவல்லி சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''குருமார்களைப் பற்றி எண்ணும் போதே பணிவும் பக்தியும்தான் வரவேண்டும். உங்களிடமோ ராஜ கட்டளை பிறக்கிறது. நம் கட்டளைக்குப் பணிபவரல்ல குரு மகான். அவர் கட்டளைக்கு நாம்தான் பணிந்து செயல்பட வேண்டும். அது உங்களால் ஆகாது.''

குமுதவல்லியின் பதில் நீலனை நிஜமாகவே சற்று நிலைகுலைய வைத்தது. இப்போது அவள் மேலான காதலை

விடவும், அவள் சொன்ன விஷயங்களின் மேலான காதலும் சேர்ந்து கொண்டது.

எந்த ஒரு நல்ல அரசனாலும் 'உன்னால் முடியாது' என்று ஒருவர் சொல்லும்போது அதைக் கேட்க சகிக்க முடியாது.

தன்னால் ஆகாதது ஏதுமில்லை என்று காட்டவே முற்படுவான். நீலனுக்குள்ளும் அந்த உணர்வே தலை எடுக்கத் தொடங்கியது.

''புலனை அடக்கி ராஜரிஷியாவது என்பது உன்னால் இயலாது'' என்று மன்னன் கௌசிகனிடம் கூறப் போய்தான் ஒரு விஸ்வாமித்திரர் இந்த உலகிற்குக் கிடைத்தார்.

''இங்கே மாலடியாராக பஞ்ச சம்ஸ்காரமெல்லாம் செய்து கொண்டு ஒரு வாழ்க்கை வாழ்வது என்பது உன்னால் ஆகாது'' என்று குமதவல்லி கூறவும், நீலனின் ராஜரீக போகதாக உணர்வு அவ்வளவும் ஒன்றுபட்டு வைராக்கியத்துக்கு மாறி 'என்னாலும் ஆகும்!' என்று காட்டத் துடித்தது.

அதற்குமேல் நீலன் குமுதவல்லியிடம் வாதம் செய்து கொண்டிருக்க விரும்பவில்லை.

இனி பேச்சில்லை - செயல்தான் என்பது போல் வேகமானான். ஒரு அர்த்த புஷ்டியுள்ள பார்வையோடு அவளை விட்டுப் புறப்பட்டான்.

வைத்தியரோ, மகளிடம் குமுறத் தொடங்கினார். ''குமுதா... நீ மன்னரிடம் பேசுவது போலவே பேசவில்லை. உன்னை மணந்து ஒரு பெருவாழ்வு வாழ விரும்பி வந்தவரை ஆண்டிக் கோலம் பூண்டு வா'' என்று சொல்லாமல் சொல்லி விட்டாயே. இது நடக்கிற காரியமா?

அரசர் தரும் பதிலடியை நாம் எப்படித் தாங்கப் போகிறோமோ தெரியவில்லை'' - என்று பயந்தார். ஆனால் குமுதவல்லியோ ''நானெங்கப்பா பேசினேன்? என்னுள்ளிருந்து அவனல்லவா பேசினான்!'' என்றாள்!

# 27

''நான் எங்கே பேசினேன்?''

''அவனல்லவா என்னுள் இருந்து பேசினான்!'' என்ற குமுதவல்லியை வைத்தியர் திகைப்போடு பார்த்தார்.

அவள் பதில் கேட்க நன்றாக இருந்தது.

ஆனால் மங்கை மன்னன் வீரத்தின் இலக்கணம். அதிகாரம் அவன் கைகளில்... அப்படிப்பட்டவன் குமுதவல்லி கூறியதை எப்படி எடுத்துக் கொள்வானோ என்று பயந்தபடியே தான் இருந்தார் குமுதவல்லியின் தந்தையான வைத்தியர்!

மன்னனோ பஞ்ச சம்ஸ்காரம் புரிந்து கொள்ள உற்ற குருவை தேடிப் புறப்பட்டுவிட்டான். ஒப்பிலியப்பன் கோயிலில் ஒரு வைணவ ஆசார்ய சீலர் தங்கியிருந்து வழிபட்டு வருகிறார். அவர் சம்ஸ்காரம் புரிவதிலும் உபதேசிப்பதிலும் உற்ற ஆசார சீலர் என்கிற தகவல் மன்னனுக்குக் கிட்டியது.

ஆனால் ஒப்பிலியப்பன் கோயிலுக்குச் சென்ற சமயம் அவர் அங்கிருந்து திருநறையூர் கிளம்பி விட்டிருந்தார். மன்னனுக்கு ஒப்பிலியப்ப பெருமாளின் தரிசனமே வாய்த்தது. பெரும் கள்ளன் - பின் மனத்துள்ளன் - அதற்குப் பின் நிகரிலா வலிவல்லன் - அப்படிப்பட்டவன் முதல் முறையாக ஒரு பெண்ணின் நிமித்தம் உந்தப்பட்டு ஆலயம் ஒன்றில் இறைவன் முன் நிற்கிறான்.

அவன் எதிரில் நெடிதுயர்ந்த பெருமாளின் திருமேனி. சங்கமும் சக்கரமுமாய் அவன் தரிசித்த பெருமாளின் திருத்தோற்றம் அவன் மனதில் பெரும் பரவசத்தை ஏற்படுத்தியது.

அடேயப்பா... என்ன ஒரு ஆகிருதி!

எத்தனை சௌலப்யம்... பச்சைக் கற்பூர வாசமும் திருத்துழாய் வாசமும் கலந்து மிதக்கும் அந்தக் கருவறை, மன்னனின் மனதுக்குள் பெரும் ரச மாற்றத்தை ஏற்படுத்தியது. 'இவ்வளவு நாளாக இப்படி ஒரு பரசவமடைய வழி இருந்தும்

அதற்காகத் துளியும் முயலாமல் கத்தி, யுத்தம் என்றே வாழ்ந்து விட்டோமே' மனதுக்குள் ஒரு சஞ்சலமும் ஏற்பட்டது. யாரும் கூறாமல், புறத்தூண்டல் எதுவுமே இல்லாமல் மனது அந்த ஒப்பிலியப்பன் திருவடிகளில் தாழ்ந்து பணிந்தது.

'பெருமாளே...

நான் காலத்தைப் பெரிதும் வீணடித்து விட்டேன்.

இப்போதுதான் அது எனக்குப் புரிகிறது. இங்கே நிற்கும்போதே மனது பேரானந்த வயப்பட்டு லேசாகி மிதக்கிறதே என்றால் நான் உன்னோடு கலந்து விட்டால் அதைவிட ஒரு பேரானந்தம் இருக்க முடியாது போல் தோன்றுகிறதே...?'

- என்று மனது, எது முற்றான உண்மையோ அதன் அருகில் போய் நின்று விட்டது.

அப்போது மன்னனின் காவலர்கள் திருநறையூர் செல்ல எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு வந்து அழைத்தனர். மன்னனும் ஒப்பிலியப்பப் பெருமாளிடம் பிரியாவிடை பெற்றான்.

'பெருமாளே, பஞ்ச சம்ஸ்காரம் புரிந்து நான் திரும்ப வருவேன்... இந்தப் பரவச அனுபவத்தை இனி நான் விட மாட்டேன். இது வலிய மேனி - வாளால் பலர் உயிரை வாங்கியிருக்கிறது. இந்தக் கண்களும் கூட காணக்கூடாத காட்சிகளைக் கண்டிருக்கிறது. நாவும் அறுசுவைக்கு அடிமையாகவே இருந்திருக்கிறது. மொத்தத்தில் என் ஐம்புலன்களுமே அநித்யமானவற்றில் அகப்பட்டுவிட்டது. அதை உனக்கான சம்ஸ்காரமே புனிதப்படுத்தும். எனக்கான ஆச்சார்யனை நீ அங்கே கண்ணில் காட்டியே தீர வேண்டும்' - என்று பிரார்த்தித்துக் கொண்டே விடை பெற்றான்.

ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதார்?

மன்னனும் ஆடினான்.

திருநறையூரில் அவனுக்காக சம்ஸ்காரங்களை நறையூர் நம்பியே செய்வித்தார்.

இந்த நம்பியை வைணவ ஆச்சாரியர் என்பாரும் உண்டு. அங்கே இறைவனாகிய திருமாலே வந்து செய்வித்தான் என்பாரும் உண்டு. வைணவ ஆச்சாரியார் செய்வித்தார் என்பதே ஏற்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில் அந்த மாலவன் பெரும் சோதனைகளுக்குப் பிறகே அந்த வேதனை தீர்த்து அதை உலகிற்கும் உதாரணம் ஆக்குபவன். மங்கை மன்னன் வரையில் சோதனை என்பது இனிதான் தொடங்கிட உள்ளது. எனவே, வைணவ ஆச்சாரியரே பஞ்ச சம்ஸ்காரம் செய்வித்தார் என்பதே பொருத்தமாக உள்ளது.

இருப்பினும் அவர் அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசிக்க மறுத்துவிட்டார். ஏனென்றால் மந்த்ரோபதேசம் என்பது உபநயனமான அந்தணர்களுக்கே... அதை ஆசைப்படுபவர்க் கெல்லாம் உபதேசிக்க சம்ஸ்கார விதிகள் தடுத்தன. இதனாலேயே மங்கை மன்னனுக்குப் பின் வந்த ராமானுஜர் திருக்கோட்டியூரில் அந்த விதியை பொருட்படுத்தாது அதை உலகத்தார் அனைவருக்குமாய் உபதேசித்தார். 'இதனால் சாபமும் பாபமும் வந்தாலும் பரவாயில்லை. தான் ஒருவன் நரகு சென்றாலும் அஷ்டாக்ஷரம் கேட்ட அந்துணை பேரும் மோட்சம் அடைவார்களே' என்று துணிந்தார்.

எனவே, இங்கே மங்கை மன்னனுக்குத் திருமண் காப்பிட்டு, ''நீ இனி வைணவ மார்க்கத்தில் ஒழுகலாம். ஆயினும் உனக்கு மந்த்ரோபதேசம் செய்திட என்னால் இயலாது. உன் பக்திக்கு இறங்கி அந்தப் பெருமாளே வந்து செய்தாலே உண்டு'' என்று கூறியது மன்னனைப் பெரிதும் பாதித்து விட்டது.

''என்றால் நான் இப்போது முழுமையான வைணவன் இல்லையா?'' என்று கேட்டுக் கண்ணீர் உகுத்தான்.

''வைணவத்தைப் பின் பற்றுவதில் முழுமை - பாதி - கால் என்கிற நிலைப்பாடுகள் கிடையாது. அந்தணர்களுக்குக் கான தர்ம நெறி உனக்குப் பொருந்தாது. அவர்கள் கடப்பாடு வேறு. உன் கடப்பாடுவேறு... நாளையே யுத்தம் என்று வந்துவிட்டால் வாளெடுத்துப் போராட வேண்டிய கடமை கொண்ட நீ அந்த கடமை வழியாகக் கூடஅவனை அடையலாம்'' என்று கூறிவிட்டார் வைணவ ஆச்சாரியார்.

எப்போதுமே உனக்கு ஒன்று இல்லை எனும்போது அதை அடைந்திடும் வைராக்யம் தோன்றும். அதிலும் ரஜோகுணம் மிகுந்தவர்களிடம் அது மிக வேகமாய் தோன்றும். அப்படித்தான் மன்னன் கௌசிகனிடம் தோன்றியது. பின்னர் ராஜரிஷி பட்டம் பெற்று விசுவாமித்திரனும் ஆனான். இங்கே மங்கை மன்னனிடமும் அதே வேகம்!

நான் ஒரு பூரணமான வைணவன்.

எம்பெருமானே... என் பக்தித் திறத்தால் உன்னிடமே நான் உபதேசம் பெரும் நாள் வரும். வந்தே தீரும். இது உறுதி!' - என்று சங்கல்பித்துக் கொண்டு தன் நாடு திரும்பத் தொடங்கினான்.

குமுதவல்லியும் அவன் திருமண் காப்போடு பஞ்ச சம்ஸ்காரம் கொண்டு திரும்பியது கண்டு ஆனந்தப்பட்டாள். அந்த நொடியே தன்னை அவன் வசம் ஒப்பவிக்கத் தயாராகி விட்டாள்.

இருப்பினும் மன்னனின் வேகம் திருமணமானவுடன் மாறி வழக்கமான வாழ்க்கைக்குள் சென்று விடக்கூடாது என்று எச்சரிக்கையோடு சிந்தித்தவள் மன்னனிடம் மேலும் ஒரு நிபந்தனையோடு போய் நின்றாள்.

''வேந்தே!''

என் பொருட்டு மாலடியாராய் தாங்கள் மாறியது கண்டு என் உள்ளம் பேரானந்தம் அடைகின்றது. தங்களின் இந்த அடியார் உணர்வும் வேட்கையும் என்றென்றும் தங்களை விட்டு நீங்கக் கூடாது என்று நான் எண்ணுகிறேன். அதற்குத் தாங்கள் நான் கூறப்போகும் இன்னொரு செயல்பாட்டையும் செய்திட வேண்டும்.''

''குமுதா... இப்போது நீ என்னிடம் பேசியதாகவே நான் எண்ணவில்லை. உன் வடிவில் அந்த மாதவனே பேசுகிறான். நான் என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் சொல். அது போதும்...''

''உங்களின் இந்தப் பணிவும் பக்தியும் மேலும் வைராக்ய சித்தம் கொள்ள தாங்கள் தினமும் மாலடியார்க்கு அன்னமிட

வேண்டும். அதுமட்டுமல்ல, அந்த அடியார்களின் திருவடிகளைக் கழுவி அந்த நீரினை தாங்கள் பருகிட வேண்டும்...'' என்றாள். குமுதவல்லியின் கோரிக்கையைக் கேட்டு அவள் தந்தை முதல் அவ்வளவு பேரும் அதிர்ந்தனர். ஓடும் மாட்டை மேலும் ஓட ஓட விரட்டுவது போல் குமுதவல்லி நடந்து கொள்வதாகவே எண்ணினர். ஆனால் மன்னனிடம் துளிகூட சிந்தனையோ தயக்கமோ இல்லை.

''குமுதா... இப்போது கட்டளையிட்டது நீயில்லை. உன் வடிவில் அந்தத் திருமாலே... இன்றே அந்தத் திருப்பணியைத் தொடங்கி விடுகிறேன். நல்லதை நாளைக்கு என்று நான் தள்ளத் தயாரில்லை'' - என்று வேகமானான்.

குமுதவல்லி பூரித்துப் போனாள். மன்னனின் அறப்பணியும் தொடங்கியது. அன்னசாலை ஒன்று வேகமாக நிர்மாணிக்கப்பட்டு அணையா அடுப்பு ஒன்றும் மூட்டப்பட்டது.

திருவாலி நோக்கிப் பசியாறிட பெரும் கூட்டமே வந்தது.

மங்கை மன்னன் சளைக்கவில்லை. அனைவர்க்கும் அன்னமளித்தான். அவர்கள் திருவடிகளை எல்லாம் அந்தத் திருவரங்கம் திருவடியாகவே கருதிப் பிடித்தான். குமுதவல்லியும் அவன் மனையாளாய் அவன கரம் பிடித்தாள்.

காலனையே கலங்கடித்த பரகாலனா இப்படி என்று சோழ நாடே ஆச்சர்யத்தில் ஆழ்ந்திடத் தொடங்கியது. செய்தி சோழப் பேரரசின் காதுகளையும் அடைந்தது. ''மன்னன் நீலன் - பரகாலன் - இப்போது மாலடிமை!'' என்று கூறினர். ''எல்லாம் ஒரு பெண்ணால்'' என்று கூடவே கூறவும் மன்னனுக்குக் கோபம்தான் வந்தது. ''பைத்தியக்காரத்தனம்'' என்றான். இங்கே பெண் ஒரு கருவி என்பதை அவனால் உணர முடியவில்லை. அந்தத் திருமால் உணர்த்தத் தீர்மானித்தான். மாலடியார் கூட்டத்தை அதிகமாக்கினான். தான்யக் களஞ்சியம் இதனால் கைப்பிடி அளவுக்குக் குறைவு படும் நிலை வந்துவிட்டது.

குந்தித் தின்றால் மலையும் குந்து மணியாகும் என்று சும்மாவா சொன்னார்கள். மன்னனை தரித்திரம் சூழத்

தொடங்கியதால் கப்பம் கட்டுவதும் ஆயிரம் கோட்டை நெல்லை சோழப் பேரரசுக்குத் திறையாக செலுத்துவதும் நடவாது போயிற்று.

சோழன் ஆளனுப்பினான்.

அதுவும் விரட்டப்பட்டது.

மன்னனிடம் வீரத்தில் குறைவு இல்லை. தன் வரையில் விநயம் தான் இல்லாமல் போய் விட்டது என்பது சோழ அரசனுக்குப் புரிந்தது.

மங்கை மன்னனை நேருக்கு நேர் போரிட்டு அடக்குவது எளிதல்ல... ஆனால் அவனை மாலடியாராய் வசப்படுத்துவது மிக எளிது என்பது தெரிந்தது.

ஆலயம் ஒன்றுள் வைணவ ஆச்சாரியர் ஒருவர் எழுந்தருளியிருக்கிறார் - அவரை தரிசிக்க வரச்சொல்லி ஆளனுப்பினான். மன்னனும் சோழனின் தந்திரம் அறியாது ஆலயத்துக்கு வரவும், தனித்து வாளும் வேலுமின்றி திருமண் காப்போடு மாலடியாராய் வந்தவனை அப்படியே ஒரு வீரர் கூட்டம் வளைத்துப் பிடித்து அங்கேயே சிறை வைத்தது.

சோழனின் மந்திரியும் வந்தார்.

''புத்திகெட்ட நீலா... நன்றாகத்தானே இருந்தாய்? இப்படியா பக்தியால் கெட்டழிந்து போவாய்... பக்திக்கு உனக்குக் கிடைத்திருக்கும் பரிசுதான் இந்த சிறை வாசம்...'' - என்றார். அதோடு விட்டாரா?

''பைத்தியக்காரனே... கடவுளிடம் பக்தி இருக்க வேண்டியதுதான். ஆனால் உன் அரசாங்கமே தரித்திரத்தால் சூழும் அளவுக்கா அதைக் கொண்டு செல்வாய்? இப்போது பார்... எந்த அரசனால் நீ குறுநில மன்னன் ஆனாயோ அதே அரசனால் நீ கைதியாகவும் ஆகிவிட்டாய்.

என்ன செய்யப் போகிறாய்?

உனக்காக அந்தத் திருமாலா வைகுண்டத்தை விட்டுவரப் போகிறார்? பக்கத்திலேதான் இருக்கிறது காஞ்சி மாநகர். அங்கே கோயில் கொண்டிருப்பவர் வரதராஜர். அதுவும்

வரமாய் அள்ளித் தரும் ராஜாவாம். எங்கே அந்த வரதராஜனைக் கூப்பிடேன். வருகிறானா என்று பார்க்கிறேன்.''

- ஏகடியம் பேசினார் மந்திரி. மன்னன் மனது அதைக் கேட்டு கொதித்தது.

'பெருமாளே... இந்த மந்திரி பேசியது காதில் விழுந்ததா? முழுமையான வைணவனாய் வைராக்கியமாய் என்னை நான் ஆக்கிக் கொண்டதற்குப் பரிசா இது? இல்லை எனக்கான சோதனையா? எதுவானாலும் சரி, நான் அயரமாட்டேன்.

வரதராஜன் வருவானா என்று கேட்ட மந்திரிக்காக வந்தே தீரவேண்டும் நீ. உற்ற வழியைக் காட்டியே தீரவேண்டும். என் வைராக்கியத்தில் உறுதி இருப்பது உண்மை என்றால் உற்றவழி இப்போது புலப்பட்டே ஆக வேண்டும்... வரதராஜா...!'

- மங்கை மன்னன் மனம் அரற்றியது. கண்களில் கண்ணீரும் பிறிட்டது.

புறத்தில் குமுதவல்லியும் குமுறினாள்.

'திருமாலே... உன்னையே பெரிதென்று எண்ணியே நான் மன்னனை உன் அடிமை ஆக்கினேன். சோழனோ தன் அடிமை என்கிறான். மன்னன் என்றும் உன் அடிமையே என்பதை உலகம் உணரச் செய்...' என்று மனம் உருகி நின்றாள்.

அந்தத் திருமாலும் மனமிரங்கினான்.

ஆலயச்சிறைக்குள் அசரீரி ஒலித்தது.

''மங்கை மன்னா... என் திருச்சன்னதிக்கு வா. உன் துயர் தீர வழி காட்டுகிறேன்'' என்றது அந்த அசரீரி!

மங்கை மன்னன் காதுகளுக்கு மட்டுமே புலனான அதை மந்திரி நம்பிடத் தயாரில்லை.

''இங்கிருந்து தப்பிச் செல்லும் திட்டமா?'' என்று கேட்டான்.

''சத்தியமாக இல்லை... இது அந்தத் திருமாலின் மேல் ஆணை...'' - என்றான் மங்கை மன்னன். அதற்கு மேல் மந்திரியும் மன்னனை கட்டுப்படுத்தத் தயாரில்லை.

''நான் அந்த காஞ்சி வரதன் குறித்து தெரிவித்த கருத்துக்கு அங்கே வைத்தே எனக்கு பதிலளிக்க எண்ணமா? அதையும் பார்க்கிறேன்'' என்று மன்னனை ஆலயச் சிறையில் இருந்து விடுவித்து ஆனால் கை விலங்கை அகற்றாமல் அதே நிலையில் காஞ்சி வரதன் திருச்சன்னதிக்கு அழைத்துச் சென்று நிறுத்தினான்.

கண்குளிர மங்கை மன்னனும் வரதனை தரிசித்தான். தான் இப்போது ஒரு கைதி என்பதில் இருந்து சகலமும் மறந்து போய் பக்திப் பெருக்கில் கண்ணீர் பீறிட்டது.

''அடேய் நீலா... நீ இப்படி அழுவதற்காக உன்னை இங்கு அழைத்து வரவில்லை. ஏதோ அசரீரி ஒலித்தது என்றாயே? எல்லாமே பொய்யா?'' - என்று கேட்டார் மந்திரி.

''பொய்யில்லை...'' என்றொரு அசரீரி உடனேயே ஒலித்தது.

ஆடிப்போனார் மந்திரி!

## 28

**கா**ஞ்சி வரதனின் வாக்காக ஒலித்த அந்த அசரீரிக்குரல் மந்திரிய்ய ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

அது தொடர்ந்தும் ஒலித்தது.

''நீலா... நிமிர்ந்து நில். உன் பொருட்டு வேகவதி ஆற்றங்கரையில் யாம் பொன்னைக் குவித்திருக்கிறோம் - தேவைக்கு எடுத்து சோழனுக்கான கப்பத்தை செலுத்து. புறப்படு'' என்றது அந்த ஒலி.

ஆனால் அது பரகாலனாகிய நீலன் காதுகளில் மட்டுமே ஒலித்தது. அடுத்த நொடியே புளகாங்கிதமும் பூரிப்புமாக விழுந்து விழுந்து தொழுதான்.

மந்திரியும் ஆச்சரியம் குறையாமல், ''பொய்யில்லை'' என்றொரு அசரீரி மட்டும் என்காதில் ஒலித்தது. எது பொய்யில்லை...? நீலா உன் பரவசத்துக்கு என்ன காரணம்?'' என்று கேட்டார்.

''எல்லாவற்றுக்கும் பதிலை இந்த ஊர் எல்லையில் பாயும் வேகவதி ஆற்றின் கரையில் கூறுகிறேன். புறப்படுங்கள்...''

''அங்கே எதற்கு?''

''திறைப் பணமும் பொன்னும் வேண்டுமா வேண்டாமா?''

''வேண்டும்... வேண்டும்...''

''என்றால் பேசாமல் வேகவதி ஆற்றின் கரைக்கு வாருங்கள்?''

- நீலனின் கட்டளையைத் தொடர்ந்து மந்திரி தன் பிரதானக் கூட்டத்தோடு அங்கிருந்து ஆற்றங்கரைக்குப் புறப்பட்டார்.

முன்னதாய் கோயில் முகப்பில் இருந்து ஒரு கருட பட்சியும் வழிகாட்டுவது போல செல்லலாயிற்று.

ஆச்சரியம் அப்பியிருந்தது.

அதற்கு மேலும் நீலனை சங்கிலிகளால் பிணைத்து இழுத்துச் செல்ல மனதில் நெருடல் தோன்றியது.

அவிழ்த்து விட்டார். சற்று பயபக்தியோடு பார்க்கவும் செய்தார். ஆனால் நீலனின் பரவசப் பார்வை பறக்கின்ற கருடபட்சியின் மேலேயே இருந்தது.

அதுவும் ஆற்றங்கரையில் ஒரு மண் திட்டின் மேல் அமர்ந்தது. அங்கே சென்று பார்க்கவும் அந்த மண் திட்டில் பொற்காசுகள் குவிந்து கிடந்தன. கண்கள் அகண்டு விரிந்திட ஆனந்தக் கண்ணீர் பெருகத் தொடங்கியது. அப்படியே பார்வை மந்திரியின் பக்கம் திரும்பியது. மந்திரிக்கு நடப்பது எல்லாம் மாயமா என்கிற சந்தேகம் ஒருபுறம். இல்லையில்லை இது ஒரு அற்புதம்தான் என்கிற நம்பிக்கையும் மறுபுறம்.

''அள்ளிக் கொள்ளுங்கள்... இதுவரையிலான அளவுக்கு மட்டுமல்ல. இனி வரும் காலத்துக்கும் சேர்த்து அள்ளிக் கொள்ளுங்கள்.

வரமாய் அள்ளித் தரும் வரதராஜனைக் கூப்பிடு -

வருகிறானா என்று பார்க்கிறேன் என்றீரே மந்திரி... அவன் வந்துவிட்டான். தேவைக்கு மேல் தந்தும் விட்டான். எடுத்துக் கொள்ளுங்கள்...

இனி எம்பெருமான் விஷயத்தில் வார்த்தைகளை யோசித்து உதிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் தலைமுறையே பேச்சற்றுப் போய் விடும்...''

- என்ற நீலனை கூப்பிய கரங்களோடு பார்த்தார் மந்திரி.

அந்தக் கருடனும் சற்று தள்ளி இன்னொரு மணல் மேட்டில் போய் அமர்ந்தது. அங்கு போய் பார்க்கவும் மணவெளி அவ்வளவும் நெல்லாய் கொட்டிக் கிடந்தது. திறைப் பணத்தோடு, கோட்டை நெல்லு மல்லவா குறுநில மன்னர்கள் வழங்க வேண்டியது?

பொன்னையே தர முடிந்தவனுக்கு நெல்மணிகள் எம்மாத்திரம்?

நீலன் அண்ணாந்தான் - ஆகாயம் பார்த்தான். ''மாலே மணிவண்ணா, மாதவா, மதுசூதனா, பரந்தாமா, பத்மநாபா, தாமோதரா, நரசிம்மா, திரிவிக்ரமா, வரதராஜனே... உனக்குத்தான் என்மேல் எத்தனை பரிவு, எத்தனை கருணை...?

என்னை அற்ப மானிடனுக்கு கடனாளி ஆக்காமல் உனக்கான அடிமையாக ஆக்கிக் கொண்டாயே? இது நான் செய்த தவப்பயன்... இது என் புண்ணியத்தின் திரட்டு.''

- என்று உணர்ச்சி மிகுதியோடு துதித்தான்!

பெரும் பொன்னோடும் வண்டி வண்டியாக நெற்குவியல்களோடும் வந்து சோழனிடம் நடு நடுங்க நின்ற மந்திரி நடந்ததைக் கூறி முடிக்கவும் சோழ அரசனிடம் ஸ்தம்பிப்பு.

ஒரு முறைக்குப் பல முறை அவ்வளவும் நிஜமா? என்று கேட்டவன் அவ்வளவையும் பின் நீலனுக்கே என்று திருப்பி அனுப்பிவிட்டான்!

அதோடு ''இனி நீலன் குறுநில மன்னன் இல்லை. அந்த நிலம் இனி அவன் நிலம் - அவன் அதன் அரசன். இந்த சோழப்

பேரரசுக்குக் கப்பம் கட்டவும் தேவையில்லை. அவனை நான் கப்பம் கட்டப் பணித்தால் ஒரு திருமால் அடியவனை நான் வாட்டிய பாவம் என்னையும் இந்த சோழ நாட்டையும் வந்து சேரும்'' என்று அறிவித்ததோடு நீலனின் அறப்பணிக்குத் தன்பங்காய் ஒரு பொற்குவியலையும் அதோடு சேர்த்து அனுப்பி வைத்தான்.

நீலனாகிய பரகாலனின் அப்பழுக்கற்ற பக்திக்கு நாடே சொந்தமாகி விட்டது. அதுமட்டுமல்ல அந்தத் திருமாலே கடனை அடைத்துத் தன் கருணையைக் காட்டவும் பரகாலனின் திருமால் சேவையில் மேலும் புதுவேகம்!

ஆயிரம் பேருக்கான அன்னதானம் பல ஆயிரம் பேருக்கு என்று மாறியது.

அது மட்டுமா?

திருவாலியைச் சுற்றியுள்ள திருமாலின் திருக்கோயில்கள் புதுப் பொலிவு பெறத் தொடங்கின. இம்மண்ணில் ஒரு திருக்கோயில் கூட எத்தாலும் சிரமப்படக் கூடாது என்று தேடித்தேடிச் சென்று அவைகளை புதுப்பித்து, திரு வாராதனைக்குரியதைச் செய்து புனருத்தாரணப் பணிக்குள்ளும் நுழைந்தான்.

முன்பாவது ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்று சொல்ல சிலர் இருந்தனர். காஞ்சி அருளாளன் கை கொடுத்த பின் அவர்கள் நீலனைப் பார்த்து எதையும் சொல்ல அஞ்சினர். திருமால்தான் அவன் வடிவில் நடமாடுவதாகவும் பலர் கருதினர். ஆனாலும் ஒரு விஷயம் பாக்கி இருந்தது. அந்த அஷ்டாக்ஷர மந்திர உபதேசம் மட்டும் சித்திக்கவேயில்லை. உபதேசம் பெறாத நிலையில் அதை த்யானிக்க முடியாமல் பரகாலன் மனது புழுங்கத் தொடங்கியது. அதன் பொருட்டு வருத்தம் பெருகி திருநறையூர் நம்பி அவனிடம் சொன்னதே எஞ்சி நின்றது.

''பிராம்மணன் அல்லாத உனக்கு உபதேசிக்க எனக்கு அதிகாரமில்லை. அவனே வந்து உபதேசித்தாலன்றி நீ உபதேசம் பெற வழியுமில்லை'' என்ற அந்தக் கருத்தை எண்ணி அன்று பொற்குவியலை காட்டியருளிய திருமாலே...

என்று எனக்கு மந்த்ரோபதேசம் செய்விக்கப் போகிறாய்? அம்மட்டில் உன் மனம் என்று இரங்கும்? நான் இன்னும் எத்தனை காலம் அதற்காக காத்திருக்க வேண்டும்?'' என்று கேட்டு உருகினான்.

அதற்கான காலமும் வரத் தொடங்கியது. ஒரு அடுத்த கட்ட சோதனை வடிவில்!

அவன் வசமுள்ள நிதி அவ்வளவும் செலவாகி கஜானாவில் கால் பொன்னுக்கும் வழி இல்லாது போயிற்று. அன்னமிடுவது நின்று போய், ஆலய உழவாரப் பணிகளும் ஸ்தம்பிக்க ஆரம்பித்தன.

திருச்சன்னதிக்குச் சென்று கதறி நிற்கத் தொடங்கினான் நீலன். உடன் இருப்போர் அன்று கேட்டது போல பொருளைக் கேளுங்கள் என்று எடுத்துக் கூறினர்.

'முடியாது. அன்று நான் எங்கே கேட்டேன். கேளாமலே அருளினான் அவன்.

இன்று என்னை சோதனை செய்கிறான். அவனுக்கான திருச்சேவைக்கு அவனிடமே கேட்பதும் எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. அதற்கு நான் களவாடுவது எவ்வளவோ மேல்' என்கிற ஒரு கருத்து அவனிடம் தோன்றியது. இறுதியில் களவாடுவதுதான் ஒரே வழி என்கிற முடிவுக்கும் வந்தான்.

அவனது இல்லக் கிழத்தி பதைத்துப் போனாள்.

''களவு பெரும் பாவம் - பேரழிவு - அதைச் செய்தா திருத்தொண்டு புரிவது?'' - என்று கேட்டாள்.

''பாவமும் இழிவும் எனக்குத்தானே - வந்து விட்டுப் போகட்டுமே - திருப்பணி மட்டும் நிற்கவே கூடாது...''

''வேண்டாம் - உங்களை இம்மட்டில் மாற்றியவள் நான். நானே இப்போது கூறுகிறேன். செய்த வரை போதும் நிறுத்தி விடுங்கள்...''

''தவறாகப் பேசுகிறாய் குமுதா. உன் வடிவில் வந்து உன்னை மாற்றியவன் அவன். அவனே வந்து நிறுத்து என்றாலும் கேட்க மாட்டேன்.'' - என்றவன் அதன் பின் தன்

குலத் தொழிலில் இறங்கி விட்டான். அவனுக்கு இம்மட்டில் அவன் சகாக்களும் கை கொடுத்தனர்.

ஒரு இரவில் கூட்டமாய்ச் சென்றவர்கள் பெரும் வணிகர்கள். செல்வந்தர்கள் இல்லங்களில் பூனைகளைப் போல புகுந்து திருடத் தொடங்கினர். அதே சமயம் மறந்தும் வறியவர்களிடம் களவைத் தவிர்த்தனர். மீண்டும் அறப்பணி வேகம் எடுத்தது. ஆலய மதில்கள் நிமிர்ந்து எழுந்தன. திருக்குளங்கள் வடிவம் பெற்றன.

இப்படி பரகாலன் கள்ளனாகி விட்ட செய்தியும் சோழ அரசன் முதல் சுற்றி அனைவருக்கும் சென்று சேர்ந்து அவர்களை எல்லாம் மீண்டும் வியப்பு ஆட்கொண்டது. புத்தி சொல்லவும் முடியவில்லை. ஆதரிக்கவும் மனம் வரவில்லை. பரகாலனும் துளியும் கவலைப்படவில்லை. குமுதவல்லி ஒருநாள் இதற்கு ஒரு முடிவுதான் எப்போது என்று கேட்டாள்.

''அது என் கையில் இல்லை. அவன் கையில்... என்னைக் கட்டிப் போட ஒரே வழிதான் உள்ளது. வற்றாத நதியோடு எனக்கான உபதேசமும் நிகழ்ந்து விட்டால் என் பணியை நான் இந்த அயோக, வினியோகத்தில் இருந்து யோகத்துக்கு மாற்றிக் கொண்டு விடுவேன்'' என்றான்.

அதைக்கேட்டு குமுதவல்லியும் பரந்தாமனிடம், 'இறைவா... விரைவாக வந்து இதற்கொரு தீர்வை அளிப்பாய். உன் மனம் கவர் கள்வனாகத் திகழ வேண்டிய என்பதி பலர் பொருள் கவர் கள்வனாகத் திகழ்ந்து அவர்களின் கோபத்துக்கும் சாபத்துக்கும் ஆளாவது சரிதானா?

சோழன் கடனுக்கு ஒரு வழி காட்டிய நீ பிறவிக்கடன் தீர்க்க வரமாட்டாயா?' என்று உருகினாள்.

அதற்கான நாளும் வந்தது.

ஒரு நடுப்பகல்!

வனப்பகுதி ஒன்றில் பதுங்கியிருக்க ஒரு திருமணக் கூட்டம் வண்டி கட்டிக் கொண்டு வந்தபடி இருந்தது.

அந்தக் கூட்டத்தில் திருமணத் தம்பதிகளாக வந்தவர்களே அந்தத் திருமாலும் அவன் மார்பணைந்த மகாலட்சுமியும்தான்!

வழி மறித்தான் பரகாலன்!

அவ்வளவு நகைகளையும் மூட்டை கட்டச் சொன்னான். ஆன போதிலும் மணமகன் காலில் ஒரு மெட்டி மிஞ்சியிருக்க அதையும் கழட்டச் சொன்னான்.

''அதை கழட்ட என்னால் முடியவில்லை. முடிந்தால் கழற்றி எடுத்துக் கொள்'' என்றான் மணமகனான மால்.

பரகாலனும் முயன்று பார்த்தான். வரமறுத்தது. வாயால் கவ்வி இழுத்தால் வந்துவிடும் என்று தோன்றியது. அதன் பொருட்டு அந்தக் காலைப்பற்றி, காலில் வாயைப் பொருத்துவது மன்னனுக்குப் பெரும் நீசமான ஒரு செயலாகும். அங்கே கௌரவம் பார்த்து 'ஒழிந்து போகட்டும் ஒரு மெட்டிதானே' என எண்ண பரகாலன் தயாரில்லை. தன்னுணர்வு, தன்மானம் என்று எதுவுமே அவனுக்குத் தோன்றவில்லை. அதை எடுத்தே தீர வேண்டும் என்று துடித்தது மனது.

மாலும் வேடிக்கை பார்த்தான்.

''ஒரு மெட்டிக்காக நீ என் காலை பிடிக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும்'' என்று சற்று கேலியாக பேசவும் செய்தான். ஆனால் உடனேயே பரகாலன் காலைப் பிடித்தான்.

''கைக்கு அகப்படாது அது. திருவாயால் தீண்ட என் திருவடி ஒன்றும் திருமாலின் திருவடிகள் இல்லை'' என்று வேண்டுமென்றே பேசினான் மால்! காலடியில் கிடந்த பரகாலன் அண்ணாந்தான். ''மாலுக்கான பொருள் தரும் யாவரும் என் வரையில் மாலர்களே...'' என்றவன் வாயாலே கவ்வி எடுக்க முனைய மாப்பிள்ளையான மாலிடமே சிலிர்ப்பு!

## 29

**ம**ங்கை மன்னனாகிய பரகாலன் ஒரு சிறு மெட்டியின் பொருட்டு மணமகனின் காலை தன் வாயால் தீண்டிய நொடி ஒட்டு மொத்த மேனியெங்கும் ஒரு மின்னோட்டம் ஓடி முடிந்தது.

அந்த ஓட்டம் பரகாலனிடம் மட்டுமில்லை. அங்கே அவனைச் சோதித்தபடி இருக்கும் அந்த மாலனிடமும்தான்.

பரகாலனின் பரவசத்தில் பக்தியும், மாலனின் பரவசத்தில் நெகிழ்ச்சியும் இருந்து ரசாயன மாற்றத்தை ஏற்படுத்தியது என்றுதான் கூறவேண்டும்.

வைணவத்தின் மேலான நோக்கே சரணாகதிதான்.

சரணாகதி அடையத் தேவைப்படுவது திருவடி.

இது எத்தனை பெரிது என்பதை உணர்த்தும் சம்பவங்கள் புராணங்களுக்குள்ளே எவ்வளவோ உள்ளன. மகாபலிச் சக்கரவர்த்தியை நினைக்கும் போது வாமானாவதாரமும், இரண்டடி அளந்துவிட்டு மூன்றாவதடிக்கு இடம் கேட்ட குறும்பும் நினைவில் வரும்.

ராமாயணத்திலோ பரதன் அரியணையில், தான் அமராமல் ராமனின் பாதக் குறடுகளை சிம்மாசனத்தில் வைத்து ஆட்சி புரிந்ததன் மூலம் திருவடிச் சிறப்புக்கு இலக்கணமே வகுத்து விட்டான்.

பாரதத்திலோ காலடியில் கிடந்த தர்மருக்கே கண்ணன் தன்னைத் தந்தான்.

மார்பில் உதைத்த துர்வாச முனிக்கும் அதே பாதத்தைப் பிடித்து அழுத்தியதன் மூலம் செருக்கைக் களைந்தான் அந்தப் பரந்தாமன்.

அதனாலேயே அந்த மகாலட்சுமியும் காலடிதான் தனக்கான நித்ய சொர்க்கம் என்று அமர்ந்திருக்கிறாள். இப்படித் திருவடி தொட்டு திவ்யமாக நினைக்க நிறையவே சங்கதிகள்.

ஆனால் இப்படி உள்ள சங்கதிகள் எதிலும் இல்லாத ஒரு சிறப்பு மங்கை மன்னனாகிய பரகாலன் பற்றிய திருவடிகளின் இருந்ததுதான் விசேடம்.

ஆம்...

இந்தத் திருவடிகள் பரகாலனைத் தேடி வந்த திருவடிகள்.

அவன் தீண்ட வேண்டும் என்பதற்காகவே மெட்டியோடு அவன் கவனத்தையும் ஈர்த்த திருவடிகள். அவனைத் தீண்ட வைத்து அவனைப் பரவசத்தில் ஆழ்த்திய திருவடிகள்...

இந்தத் திருவடி நிழலில் இளைப்பாறவே உலகின் அவ்வளவு உயிர்களும் ஏங்கித் தவிக்கின்றன. இதை அடையத்தான் எத்தனை பிறப்புகள்... அதில் எத்தனை எத்தனை எத்தனை கோலங்கள்? பலர் வரையில் திரும்பத் திரும்பப் பிறப்பெடுத்தும் இது வசப்பட்டதில்லை. பலருக்கோ இதைப் பற்றியே தெரியாத அறியாமை என்னும் மாயை... தெரிந்தவர்களிடமோ செருக்கென்னும் மாயை.

மொத்தத்தில் ஏதோ ஒன்று. 'நீ எப்படி இந்தத் திருவடியை அடைகிறாய். நானும் அதைப் பார்த்து விடுகிறேன்' என்பது போல் தான் நம்மை எல்லாம் ஆட்டி வைத்தபடி இருக்கிறது. ஆட்டி வைத்த அவ்வளவையும் பரகாலன் ஒரு ஆட்டு ஆட்டிப் பார்த்துவிட்டான் என்று தான் கூற வேண்டும்.

அவன் பார்க்காத அழகிகளா... உண்ணாத உணவா? அருந்தாத மதுவா? வெல்ல முடியாத எதிரிகளா? எல்லாம் கண்டும் அதில் உழல வழிவகை இருந்தும் அதைப் புறந்தள்ளியதோடு தன் பக்திக்காக தன்னையே ஒரு குற்றவாளிபோல் ஆக்கிக் கொண்ட தன்மை, வேறு எவரிடமும் காணப் பெறாத சிறப்பாகும்.

ஏனைய ஆழ்வார் பெருமக்கள் தம் தம் இயல்புக்கும் நோக்கத்துக்கும் ஏற்ப பக்தி புரிந்தனர். மாலவனையும் அடைந்தனர்.

சரி, பரகாலன் பற்றிய அந்தத் திருவடிகளிடம் திரும்ப வருவோம். அவனைத் தாக்கிய மின்னல் அதிர்வோடு மாலைப் - பிரமிக்க வைக்கிறது.

மாலாகிய மணமகன் உதட்டில் ஒரு மர்மப் புன்னகை!

''என்ன கழற்ற முடியவில்லையா?'' என்கிற கேள்வி வேறு. ''ஆம் முடியவில்லை'' என்று கூறிட பரகாலனுக்கும் மனம் வர மறுக்கிறது.

''சரிதான். இதையே கழற்ற முடியவில்லை. நீ எங்கே என் மற்ற நகைகளைக் கொண்ட மூட்டையை தூக்கப் போகிறாய்?'' - என்று மாலும் அடுத்த கட்ட அதிர்வைத் தொடங்குகிறான்.

அருகிலேயே அந்த நகைகளைக் கொண்ட மூட்டை!

மாலவனின் ஏளனக் குரல் மன்னன் கள்வனைக் கீறிப் பார்க்கிறது. கவனம் அதன் மேல் திரும்பிட அதை அலட்சியமாக எடுக்கவே முதலில் விழைகிறான். ஆனால் அது அசைய மறுக்கிறது.

ஆச்சரியமும் ஆரம்பமாகிறது.

ஆயிரமாயிரம் வீரர்களை தலைக்கு மேல் தூக்கிப் பந்தாடியுள்ளான். எருதுகளைத் தழுவி தோளின் மேல் தூக்கி வீசியும் எறிந்துள்ளான்.

ஆனால் அவைகளின் முன் துரும்புக்குச் சமமான மூட்டையோ மலைபோல கனக்கத் தொடங்குகிறது.

எவ்வளவு முயன்றும் முடியவில்லை.

இது என்ன மாயம்?

கேள்வியைப் புருவத்தில் வைத்து மாலவனைப் பார்க்கிறான் பரகாலன்.

''என்ன பார்க்கிறாய் - முடியவில்லையா?''

''யார் நீ?''

''நான் உன்னைக் கேட்டால் நீ என்னைக் கேட்கிறாயா?''

''யார் நீ... உண்மையைச் சொல்?''

''பார்த்தால் தெரியவில்லையா. உன் பார்வையிலுமா கோளாறு?''

''நீ மணமகனில்லை. மாயாவி...''

''மாயாவியா... நானா?'' - மாலவன் புன்னகையோடு கேட்க,

''என்ன மந்திரம் போட்டாய்?'' - இது பரகாலனின் அடுத்த கேள்வி.

''மந்திரமா... அப்பனே. இவ்வுலகில் அப்படி ஒன்றே கிடையாது. அது தெரியாதா உனக்கு?''

''உளறாதே... என்னை மந்திரங்கள் பற்றி அறியாத அறிவிலி என்று எண்ணாதே...''

''ஓ... அப்படி என்றால் உனக்கு மந்திரங்கள் தெரியும் என்று கூறு...''

''எனக்குத் தெரிந்ததெல்லாம் ஒரே ஒரு மந்திரம்தான்... அது என் வரையில் உபதேசிக்கப்படவில்லை. அதுவல்லாத பிற மந்திரத்தை நானும் அறிய விழையவில்லை.''

''ஏன் அப்படி?''

''என் விதி அப்படி...'''

''உன் விதியை மாற்ற முடியாத அந்த மந்திரம் மந்திரமேயில்லை.''

''வாயை மூடு... அதற்கு நிகரான மந்திரம் இந்த உலகில் மட்டுமல்ல எந்த உலகிலும் இல்லை...''

''என்றால் அதைக் கூறிப்பார். மூட்டை அசைகிறதா என்று பார்ப்போம்...''

''உபதேசிக்கப்பெறாத மந்திரம் பயன்படுத்த இயலாத அஸ்திரம் போன்றது. இது தெரியாமல் உளறாதே.''

''சரி. நானொரு மந்திரத்தைக் கூறுகிறேன். அதைக் கேட்டு மூட்டையைத் தூக்கப் பார்...''

''அப்படி வா வழிக்கு. இது ''மந்திரக் கட்டு'' என்கிற என் யூகம் மிகவே சரி. அதன் மூலம்தான் உன் கால் மெட்டியைத் தீண்டவும் என்னைப் பரவசப் படுத்தவும் செய்தாயா?''

''நான் அந்த மந்திரத்தை எனக்குள் சொன்னதால் இருக்கலாம்...''

''அதைக் கூறு... இல்லாவிட்டால் உன்னைப் போட்டு விடுவேன் கூரு!''

''இப்படியா மந்திரோபதேசம் பெற விரும்புபவர்கள் நடந்து கொள்வார்கள்...?''

''மாயாவி உன்னிடம் எனக்கென்ன கரிசனம்?''

''நீ கூடத்தான் கள்ளன். எனக்கு மட்டுமென்ன கரிசனம்?''

''பதிலுக்கு பதில் - பார்வைக்கு பார்வை - இடை இடையே மாயப்புன்னகை... உண்மையில் என்னை விட பெரும் கள்வன் நீதான்...''

''புரிந்தால் சரி... சரி சரி காதைக் கொடு. காலம் காலமாக நீ கேட்கக் காத்திருப்பதைக் கூறிவிட்டு நானும் புறப்படுகிறேன்.''

''என்ன... காலம் காலமாக நான் கேட்கத் துடிக்கும் மந்திரமா - உனக்கெப்படித் தெரியும் அது?''

''நான்தான் மாயாவியாயிற்றே - உன் உள்ளத்தாசைதானா தெரியாது?''

''மிகவே குழப்புகிறாய். உன் முன்னால் என் வீரமும் வழுக்கி நான் விழுவதுபோல் உணருகிறேன். ஏனென்றும் தெரியவில்லை.''

''பாசமாக இருக்கும்...''

''எந்தப் பாசம்?''

''ஆத்ம பாசம்...''

''ஆத்ம பாசமா... இது என்ன புது பதம்!''

''முதலில் காதைக் கொடு - மந்திரம் கேள் - பின் விளங்கும்.''

''உன்னை நம்பலாமா?''

''நல்ல கேள்வி கேட்டாய் போ... எல்லோரும் என்னிடம் சொல்லிக் கேட்டுத்தான் எனக்குப் பழக்கம் - நானே சொல்லப் போவது இன்றுதான்...''

''எனக்குத் தேவை மூட்டை - அதற்காக நான் எதையும் செய்வேன். உம் கூறு...''

- பரகாலன் பெரும் விவாதத்திற்குப் பிறகு காதைக் கொடுத்தான். மாலனும் அந்த மந்திரத்தை உபதேசித்தான்.

'ஓம் நாராயணாய நமஹ...' - என்று அவனே அவனை அர்ச்சித்துக் கொண்டது போல் கூறிட பரகாலனின் மேனி எங்கும் புல்லரித்து மெய் சிலிர்த்துப் போனது.

தனக்கு உபதேசமாக வேண்டிய அதே மந்திரம். உபதேசத்துக்குரியவனே உபதேசமும் செய்கிறான்... எத்தனை பெரிய பாக்யம்?

பரகாலன் சிலிர்ப்போடு நிமிர உபதேசித்த மாலனும் சரி அவன் மாலினியும் சரி மாயமானார்கள்.

பரகாலன் அடுத்த நொடி வானைத்தான் பார்த்தான். பேரொளிப் பிழம்பொன்று தோன்றியது. அதனூடே அந்த நாரணனும் லட்சுமி தேவியும் கருட வாகனம் மீது காட்சி தந்தனர்.

கண்கொள்ளாக் காட்சி... பரகாலனுக்குப் புரிந்து விட்டது... தெளிந்துவிட்டது... ஆனந்தக் கண்ணீரும் பீறிட்டது... இனி அவனிடம் பீறிடப் போகின்றன பாசுரங்கள்... அவை...

# 30

**ப**ன்னிரு ஆழ்வார்களில் மற்ற ஆழ்வார்களுக்குக் கிட்டாத ஒரு பெரும் பேறு கலியனாகிய மங்கை மன்னனுக்குக் கிடைத்தது. அதுதான் 'மந்திரோபதேசம்' என்னும் பெரும் பேறு!

புவனத்து உயிர்களிலே மனம் கொண்டு, அதனால் பேச முடிந்தவன் மனிதன் மட்டும்தான். இவனிடம் எவ்வளவோ திறமிருந்தாலும் மேலான திறம் மந்திரம்தான்.

மந்திரமல்லாத மற்ற சொற்கள் இவ்வுலக வாழ்விற்கு மட்டுமே பயன்படும். மந்திரச் சொற்கள் மட்டுமே இவ்வுலகிற்கு அப்பாலும் கொண்டு சேர்க்கப் பயன்படும். அதனாலேயே மந்திரமும் சரி, அதை போதிக்க வல்ல குருநாதர்களும் சரி, உலகில் எடைப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு பெரிதாகவும் அரிதாகவும் கருதப்படுகிறார்கள்.

இந்த மந்திரங்களிலும் எளியதும் அதே சமயம் மிக வலியதுமானது 'ஓம் நமோ நாராயணா' எனும் அஷ்டாக்ஷரம் ஆகும். இதை குருவின் உபதேசத்தோடு கூடியே நாம் நமக்குள் ஏற்று ஜெபிக்க வேண்டும்.

இவ்வேளையில், குரு உபதேசம் பெற முடியாதவர்கள் எல்லாம் பாவிகளா - அவர்களுக்குத் தகுதியில்லையா என்கிற கேள்வி எழலாம். பெற முடியாதவர்கள் பாவிகளோ - தகுதியற்றவர்களோ.. அந்தக் கேள்விக்கே செல்லாமல் இதன் அடிப்படை நுட்பத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

குருநாதர் என்று ஒருவர் இருந்தால் அவருக்கும் நிச்சயம் ஒரு குருவானர் இருந்திருப்பார். அந்த குருவுக்கும் ஒரு குரு என்று இந்தப் பட்டியல் நீண்டபடி சென்று இறுதியில் அது அந்த நாரணனிடமே முடிந்து நிற்கும்.

இதை சற்று மாற்றினால் - நாரணனில் தொடங்கி நீண்டு வருவதே குரு பரம்பரை. உபதேசம் பெறும் சாக்கில் நாம் அந்த சங்கிலித் தொடரில் இணைந்து கொள்கிறோம் என்றும் கூறலாம். இப்படி ஒரு மந்திரம் பற்றியோ, உபதேசம் பற்றியோ, குரு பரம்பரை பற்றியோ தெரியாமலே இந்த மண்ணில் வாழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர்களுக்கு விமோசனம் எப்போது? என்று ஒரு கேள்வி கரிசனத்தோடு நமக்குள் எழலாம். இது எதைப் பற்றியும் அறியாதபடி ஒருவன் வாழவும் நிச்சயம் ஒரு காரணம் உள்ளது. அந்தக் காரணத்தின் காரியம்தான் அப்படி ஒரு வாழ்வு. எந்த வாழ்வுக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் என்று ஒன்று உண்டு. அந்தக் கால அளவு முடியும்போது அதில் மாறுதல் ஏற்படும்.

ஒருநாள் அவர்களும் இந்த மந்திரம் பற்றியும் குருநாதர் பற்றியும் தெளிவடைவார்கள். பின் அவர்களும் குரு சம்பந்தம் பெற்று மந்திரோபதேசம் பெறுவார்கள்.

ஏனென்றால் இந்த மந்திரோபதேசம் உயிர்களை கடைத்தேற்றக் கூடியது. இறப்புக்குப் பிறகும் தர்மம் போல தொடர்வது. அதனால் இது மிகப் பெரியது. இப்படி ஒரு பெரியது தான் மங்கை மன்னனை தானாய் தேடி வந்து ஆட்கொண்டது.

தன்னலமின்றி தியாகத்தோடும் அச்சமின்றியும் பக்தி புரியும்போது மந்திரோபதேசம் தேடி வரும் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

சரி...

கலியனாகிய மங்கை மன்னன் மந்திரரோபதேசம் பெற்றான். ஏன் அவனுக்கு உடனடியாக வைகுண்டம் சித்திக்கவில்லை?

மாலின் தரிசனமும் அவரிடமே மந்திரரோபதேசமும் பெற்றுவிட்ட பிறகு இந்த மண்ணில் கிடந்து எதற்காக உழல வேண்டும்? வைகுண்டம் ஏகியிருக்கலாமே?

இப்படியும் கேள்விகள் எழலாம்...

ஆனால் அப்படி நிகழ்ந்திருந்தால் இந்த மண்ணில் உள்ள பல விஷ்ணு ஆலயங்களுக்கு மங்களாசாசனம் என்று ஒன்று நிகழ்ந்திருக்காது. அந்தத் திருமாலே குருவாக மாறி காதில் ஓதிய மந்திரோபதேச மந்திரமானது அந்த மங்களாசாசனப் பாடல்களின் வழி பரவியிருக்காது.

நமக்கெல்லாமும் கவிதை என்னும் கட்டமைப்பின் நாலாவிதமும் கிடைத்திருக்காது. திருவெழுக்கூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரிய திருமடல், சிறிய திருமடல் பெரிய திருமொழி என்று இவரால் மட்டுமே 1137 பாசுரங்கள் பாடப்பட்டுள்ளன.

இதெல்லாம் எதுவுமே நமக்கு கிடைத்திருக்காது. எல்லாவற்றுக்கும் மேலாக திருவரங்கம் கோயிலுக்கு இவர் செய்த திருப்பணிகள் இன்றும் பேர் சொல்லியபடி உள்ளன. கோயில் விமானம் தொட்டு மண்டபம், கோபுரம், நான்காவது சுற்றுப் பாதை, காவிரியாற்றங்கரையில் தசாவதார சன்னதி என்று இவரால் மேற்கொள்ளப்பட்ட அறச்செயல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இம்மட்டில் திருமங்கை மன்னன் திருமங்கை ஆழ்வாராக மருவி பாடிய பாசுரங்களில் சிலவற்றையாவது இவ்வேளை யில் சிந்திக்க வேண்டும்.

"கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோள் ஒன்றிலாமை யினால்
என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உரைத்தறியேன்
குன்றேய் மேகமதில் களிர் மாமலை வேங்கடவா
அன்றே வந்தடைந்தேன் அடியனை ஆட்கொண்டருளே'

- எனும் பாடலில் தான் ஒரு அரசனாய் அதிகாரம் செலுத்தி வாழ்ந்த நாளில் எதிரிகளைக் கொன்று குவித்த செயலுக்கான வருத்தம் இழையோடுகிறது.

"தெரியேன் பாலகனாய்ப் பல
தீமைகள் செய்துவிட்டேன்
பெரியேன் ஆயினபின் பிறர்க்கே
உழைத்து ஏழையானேன்."

- என்னும் பாடலில் யார் உண்மையில் பெரியவர் என்பதற்கு விடை கூறுகிறார். பிறர்க்கு உழைத்து ஏழையானதை ஒரு தகுதியாக எனக்கென்று எதுவும் வேண்டாம் - உன் திருவடி நிழல் போதும் என்கிறார்.

இவரது பாசுரங்களில் உலகோரையே வியப்படைய வைக்கும் ஒரு பாசுரம் -

"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரம் செய்யம் நீள் விசும்பருளும்
அருளோடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமமே..."

இந்தப் பாசுரத்தை பலவகையில் வியக்கலாம். மனிதப் பிறப்பெடுப்பதே பெரிது. அப்படிப்பட்ட பிறப்பில் தொண்டர் குலத்தில் பிறப்பது என்பதே பிறவிப் பெருங்கடலை கடக்க பெரிதும் துணை செய்வதாக உள்ளது.

ஒரு விவசாயியின் மகனாகப் பிறக்க நேரிட்டால் விவசாயம் சார்ந்த விஷயங்கள் வசப்படும். ஒரு வணிகனின் மகனாகப் பிறக்க நேரிட்டால் வாணிபம் வசப்படும். இறைவன் வசப்படவேண்டும் என்பதே பிறப்பின் நோக்கம் என்றால்

இறை பக்தியும் மேலான தர்ம சிந்தனையும் உள்ள தொண்டர் குலத்தில் பிறந்தாலன்றி இவை இளம் வயதிலேயே வசப்படாது.

ஆக நல்ல குலம் - பின் வாழ்வை வளமாக்கிக் கொள்ளத் தேவையான செல்வம் - இந்த இரண்டும் இருந்தும் எதிரிகளாலோ, வியாதிகளாலோ தொல்லை துயரம் என்றால் அதையும் நாரணன் அருள் தகர்த்து எறியும். பின் ஆண்டு அனுபவிக்க அடிப்படையான மனை. வயல் என்று எல்லாம் கிடைக்கும் இவை தற்காலிகமாக என்றில்லாமல் தலைமுறை தோறும் தொடரும். அனைத்துக்கும் மேலாக நல்லதை மட்டுமே எண்ணி அதைப் பற்றிக் கொள்ளும் எண்ணத்தைத் தரும் - இதையே வலந்தரும் என்கிறார்.

வழிவழி மரபுகளை பின்பற்றுவர்களை வலதுசாரிகள் என்றும் அதற்கு எதிரானவர்களை இடதுசாரிகள் என்றும் குறிப்பிடுவதை இங்கே எண்ணிப் பார்க்கலாம்.

இவைகளோடு இன்னும் என்னவெல்லாம் தேவையோ அதையும் தந்திடும்... எது தெரியுமா?

உலகிலேயே கருணைக்கும் பாசத்துக்கும் பரிவுக்கும் இலக்கணமானவள் தாய்தான். அந்தத் தாயை விட மேலான ஒன்று இருக்க முடியாது என்பார்கள்.

**யார் சொன்னது இருக்க முடியாதது என்று?**
**நான் சொல்கிறேன் இருக்கிறது.**
**அதுதான் நாராயணா என்னும் நாமம்!**

- என்று அழுந்தத் கூறுபவர் இறுதியில் கூட நமக்கு சாதகமாக அவர் கூறிய வரிகளை கவனிக்கவேண்டும். மேற்கண்டவற்றை எல்லாம் நாராயணனாகிய விஷ்ணுபதியே தருவான் - அவனே தர முடிந்தவன் என்று கூறியிருக்கலாம். அல்லது கூறியிருக்க வேண்டும்.

ஆனால் அவனை எல்லோராலும் உணர்ந்து பற்றிக் கொள்ள முடியாது போய்விட்டால்... இத்தனை பெரியவனை நம்மால் அடைய முடியாது. நாம் பாவிகள் என்கிற தாழ்வு மன்ப்பான்மை ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால் அவர்கள்

எங்கே எம்பெருமானை எண்ணாமல் விட்டுவிடுவார்களோ என்னும் அச்சத்தில் நாராயணனை கூட விட்டுவிடுங்கள் - அவன் நாமமே போதும் அதுவே இதையெல்லாம் தந்துவிடும். ''நாராயணா...'' என்று சொல்வது எத்தனை சுலபமான ஒரு வழிமுறை? நமக்குக் கருணை செய்ய அவன்தான் இப்படி ஒரு எளிய வழிமுறையை வைத்துள்ளான்.

காட்டுக்குள் போய் தவம் செய்யத் தேவையில்லை. அர்ச்சனை, ஆராதனை, அபிஷேகங்கள் தேவையில்லை. ஹோமம், யாகம் என்கிற பெரு முயற்சிகள் தேவையே இல்லை.

**மனம் இருக்கிறதா - அது போதும்.**
**நாமம் இருக்கிறது. பற்றிக் கொள்ளுங்கள்.**

- என்று திருமங்கையாழ்வார் பாடிய இந்தப் பாசுரம் நாலாயிரம் பாசுரங்களிலேயும் கரும்பின் அடிப்பாகம் போல், அமிர்தத்தில் முதல் துளி போல, கோபுரத்தில் கலசம் போல் கீர்த்திமிக்கது - நேர்த்திமிக்கது - பூர்த்தியும்மிக்கது.

இப்படிப் பொய்கையாழ்வார், பூதத்தார், பேயாரில் தொடங்கிய ஆழ்வார்கள் வரிசை திருமங்கை மன்னன் வரை நீண்டு பரவி ஓராண்டுக்குப் பன்னிருமாதம் போல, நம் ஒரு பிறப்புக்கு இந்தப் பன்னிருவர் என்பதாக பொருந்தி வந்து வழி காட்டுகிறது.

இப்பன்னிருவர் காலக்கட்டங்களும், வாழ்ந்த இடங்களும் வேறு வேறு. இன்று போல் அந்த நாளில் பேனா பேப்பர் - அதையும் விஞ்சிய அச்சுப்பதிப்பு என்கிற வசதி வாய்ப்புகள் கிடையாது. பனைமரம்தான் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டு புலவர்களுக்குத் தன் இலையையே ஏடாகத் தந்து உதவி நின்றது.

இப்படி ஒரு நிலையுள்ள காலத்தில் பிறந்த இப்பன்னிருவர் பாசுரங்களை எல்லாம் யார் வைத்திருந்தனர் - அதை ஒன்று திரட்டிக் கொடுத்து ஒட்டு மொத்தமாக்கி அதற்கு 'நாலாயிர திவ்ய பிரபந்தம்' என்கிற அற்புதப் பெயரை சூட்டியது யார் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இது குறித்து சிந்திக்கும்போது, மொழிக்குத் தாயான செந்தமிழின் சிறப்புக்கு வித்தான இந்தப் பாசுரங்களை இசைக்குத் தாயான வைணவ நாதர் ஒருவர்தான் முனைந்து திரட்டியுள்ளார்.

இதை சற்று மாற்றி அந்த மால் இவரைக் கொண்டு திரட்டச் செய்தான் எனலாம்.

அவரே நாதமுனிகளின் குமாரர் ஈஸ்வரமுனி. இவரின் குமாரர் யமுனைத்துறைவர் ஆளவந்தார் என்றும் அழைக்கப்பட்ட அரங்கநாதர் என்பவர். மிகுந்த இசைலயம் மிக்க இவருக்கு நம்மாழ்வாரின் சில பாசுரங்கள் எதேச்சையாக தெரிய வந்திட அதை அவர் இசைச் சிறப்போடு பாடி பெருமாளையும் துதித்தார். அப்படி அவர் துதித்த ஒரு இரவில் அவர் கனவில் தோன்றிய அந்தத் திருமாலும் ''உன் பாடலால் உள்ளம் குளிர்ந்தேன். ஒன்றோடு நிறுத்தி விட்டாயே, நாலாயிரம் உள்ளதே?...'' என்றிட கனவு கலைந்து எழுந்தவர் நாலாயிரம் பாடல்களையும் தேடத் தொடங்கினார் என்பது வரலாறு. அப்படித் தேடியவருக்கு அவ்வளவு சுலபத்தில் பாசுரங்கள் கிடைத்துவிடவில்லை.

இதன் பொருட்டு யாத்திரை மேற்கொண்டவர் நம்மாழ்வாரின் அவதார ஸ்தலமான ஆழ்வார் திருநகரிக்கு வந்து அவர் சன்னதியில் நின்று வருந்திட அவரே ஏடுகள் இருக்குமிடத்தைக் காட்டிக் கொடுத்தார் என்பர். அதோடு தான் பாடிய பாசுரங்களை நாதமுனி முன் அவரே ஒருமுறை பாடிட அவ்வளவும் நாதமுனிக்குள் சிரமேறி அமர்ந்து கொண்டதாம். ஆயினும் நான்காயிரம் என்கிற கணக்கு இராமானுஜ நூற்றந்தாதி உருவான பின்பே ஏற்பட்டது என்பர்.

பின் நான்காயிரத்தையும் ஒன்றிணைந்து 'நான்காயிரம் பாசுரங்கள்' என்று பெயரிட்ட போது அதில் ஒரு பலமில்லை. இவை வெறும் பாசுரங்களில்லை உலக பந்தத்தில் இருந்து ஜீவனை மீட்டெடுத்து நாரணனிடம் பந்தப்படுத்தும் பெரும் பந்தம் - ப்ரபந்தம் - எப்படிப்பட்ட ப்ரபந்தம்? திவ்யமான பிரபந்தம்...! என்று ஒரு சீரிய தலைப்புப் பெயரையும் இது பெற்றது. எனவே பன்னிருவரை எண்ணித் துதிக்கும் போது

பதிமூன்றாவதாக நாதமுனிகளை எண்ணியும் துதிக்க வேண்டியது அவசியம்.

இப்பிரபந்தங்களை தொகுக்கும் முன்வரை அரங்கநாத னாக இருந்தவர், பெரும் தவமாய் இதைச் செய்ததனால் அரங்கநாதமுனி என்றானார்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஆழ்வார்களால் பாசுரங்கள் உண்டாயின - அது நாதமுனிகளால் இசையோடு கூடிக் கலந்தது. ஸ்ரீராமானுஜ நூற்றந்தாதியால் அது 4000 எனும் நான்கு வேதங்களுக்கு நிகராக எண்ணிக்கையை அடைந்தது.

இன்றளவும் செந்தமிழிற்கே சிகரமாய் வைணவத்துக்கே மகுடமாய், உலகிற்கே ஒளியாய் திகழ்ந்தபடி உள்ளது. அந்த ஒளியின் வழியில் நடந்து நாமும் வைகுண்டவாசிகளாக நித்ய சூரிகளாக திகழ்வோம்.

**ஓம் நமோ நாராயணாய நம.**

நிறைவு





மின்நூலாக்கம்

சுபாஷ் சண்முகா

# ஆழ்வார்களை ஆராதிப்போம்

(பன்னிரு ஆழ்வார்களின் திவ்ய சரிதம்)



## இந்திரா செளந்தர்ராஜன்